உதயன்

www.onlineuthayan.com

52 பக்கங்கள் சுடர் 28 கதிர் 034 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 15 ஞாயிற்றுக்கிழமை (30/12/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00



# புனர்வாழ்வின் பின்பே மாணவர் விடுதலை

## கோத்தபாய ராஜபக்ஷ திட்டவட்டம்

கொழும்பு, டிசெம்பர் 30

கைதாகித் தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நால்வரையும் புனர்வாழ்வு வழங்காமல் விடுவிக்கவே முடியாது. இவ்வாறு அடித்துக் கூறியிருக்கிறார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு நேற்று வழங்கிய விசேட செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

புனர்வாழ்வு வழங்காமல் மாணவர்களை விடுவிக்க முடியாது என்ற விடயத்தை யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் உட்படப் பல்கலைச்

பார்க்க பக்கம் 4



### சீரற்ற காலநிலை; 40 பேர் சாவு

கொழும்பு, டிசெ 30

நாட்டின் பல பாகங்களிலும் நிலவி வருகின்ற சீரற்ற காலநிலையால் இதுவரையில் 40பேர் உயிரிழந்துள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலைய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாகவே இந்த மரணங்கள் சம்பவித்துள்ளதாகத் தெரிவித்த மேற்படி அதிகாரிகள், இவற்றில் பெரும்பாலான மரணங்கள் மாத்தளை மாவட்டத்திலேயே இடம்பெற்றுள்ளன என்றும் குறிப்பிட்டனர். (த)

### கொலையுண்ட சிறுமியின் உடற்பாகம் பரிசோதனைக்கு

யாழ்ப்பாணம், டிசெ.30

மண்டைதீவில் வன்புணர்வின் பின் கொலை செய்யப்பட்ட நான்கு வயதுச் சிறுமியின் உடற்பாகங்கள் இழையவியல் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைத் தரப்பினர் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை என்றும் விசாரணைகள் தொடர்வதாகவும் ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மண்டைதீவு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த குணசேகரம் சுதாகினி (வயது-4) என்ற சிறுமியே வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்டார்.

அவரது வீட்டுக்கு அயலில் உள்ள தோட்டக் கிணற்றில் இருந்து நேற்றுமுன்தினம் அவர் சடலமாக மீட்கப்பட்டார்.

கடந்த வியாழக்கிழமை வீட்டிலிருந்து பிற்பகல் பிரஸ்தாப சிறுமி திடீரெனக் காணாமல் போயிருந்தார். அவரை எங்கு தேடியும் காணாததால் ஊர் காவற்றுறைப் பொலிஸில் பெற்றோர் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் அவர் கிணற்றில் சடலமாகக் கிடக்கக் காணப்பட்டார். அவரது உயிரிழப்பு தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டதால் பரி

பார்க்க பக்கம் 4

### கொழும்பில் தமிழ் வர்த்தகர் கடத்தப்பட்டார்

கொழும்பு, டிசெ 30

கம்பளையில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் பிரபல வர்த்தகர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் வெள்ளை வானில் கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கண்டி முத்துமாரி ஸ்ரோர்ஸ் உரிமையாளர் கோவிந்தசாமி பிரபாகரன் (வயது-56) என்பவரே இவ்வாறு வெள்ளை வானில் கடத்தப்பட்டுள்ளார்.

குறித்த நபர் மலபார் வீதியில் உள்ள தனது வீட்டுக்கு வந்து கொண்டிருந்த வேளை கம்பளை பகுதியில் வைத்து கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாகத் தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ள்தாக சிவில் கண்காணிப்பு குழுவின் ஏற்பாட்டாளர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (த)

## மருத்துவர் சிவசங்கர் இராணுவத்தால் கைது?

யாழ்ப்பாணம், டிசெ.30

அனுராதபுரத்தில் சுகாதார வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மருத்துவர் இ.சிவசங்கர் நேற்றுக் கைது செய்யப்பட்டு கொக்காவில் இராணுவமுகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்த முடியாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட கிளிநொச்சி உருத்திரபுரத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் சாதாரண தரப் பரீட்சை எழுதுவதற்காக வீடு வந்துள்ளார். பரீட்சை முடிந்ததும் அவரை முகாமில் ஒப்படைக்குமாறு இராணுவத்தினர் வலியுறுத்தினர். எனினும் குறித்த பெண் தான் இரா

பார்க்க பக்கம் 4

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோர் தொகை 4 லட்சத்தை தாண்டியது

கொழும்பு,டிசெ 30

நாட்டின் பல பாகங்களிலும் பெய்து வரும் மழையுடன் கூடிய காலநிலையால் இதுவரை 109,672 குடும்பங்களைச் சேர்ந்த 400,003 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

40 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதோடு 7 பேர் தொடர்ந்தும் காணாமல் போயுள்ளனர்.

மேலும் வெள்ளத்தால் இடம்பெயர்ந்த 11,144 குடும்பங்களைச் சேர்ந்த 38837 பேர் இன்னும் 245 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் பெய்துவரும் தொடர்மழை காரணமாக வடமாகாணத்தில் இதுவரை 29,305 குடும்பங்களைச் சேர்ந்த 105,333 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 9,522 குடும்பங்களைச் சேர்ந்த 33,374 பேர் 195 தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மழை வெள்ளத்தால் வடக்கில் 106 வீடுகள் முழுமையாகவும் 12695 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

வடக்கில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்கள் மழை, வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

பார்க்க பக்கம் 4

## கத்திக் குத்தில் ஒருவர் சாவு

### பாசையூரில் நேற்றிரவு சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ.30

பாசையூரில் இடம்பெற்ற குழு மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு 9 மணியளவில் இடம்பெற்றது.

சம்பவத்தில் பாசையூரைச் சேர்ந்த அல்போன்ஸ் பீரிஸ் கலிஸ் தயான் (வயது-23) என்ற இளைஞர் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். மற்றுமொருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

நேற்றிரவு பாசையூர் தேவாலயத்தில் ஒளிவிழா நிகழ்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. இதன்போது இளைஞர் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாகி கத்திக் குத்தில் முடிந்தது.

கத்திக்குத்துக்கு இலக்கான இளைஞர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்

பார்க்க பக்கம் 4

### இந்திய இழுவைப் படகை கொண்டு செல்ல அனுமதி

யாழ்ப்பாணம், டிசெ 30

யாழ்ப்பாணம், மாதகல் கடற்கரையில் இயந்திரக் கோளாறு காரணமாக கரையொதுங்கியுள்ள இந்திய இழுவைப் படகை இழுத்துச் செல்வதற்காக இரண்டு இழுவைப் படகுகள் யாழ் வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி இரு படகுகளும் நேற்று இரவு இலங்கைக் கடல் எல்லைக்குள் பிரவேசிக்கலாம் என்று எதிர் பார்க்கப்பட்டது.

கரை ஒதுங்கிய இழுவைப் படகு பாறையுள்ள பகுதியில் சிக்கியுள்ளது. தற்போது குறித்த பகுதியில் நீர்வற்றியுள்ளதால் அதனை வெளியில் எடுப்பது பெரும் சிரமம் நிறைந்த ஒன்றாக உள்ளது.

இதன் காரணமாக குறித்த படகை இந்திய இழுவைப் படகுகள் இரண்டு வந்து இழுத்துச் செல்வதற்கு சம்பந்தப்பட்ட தரப்பு அனுமதி வழங்கியுள்ளதாக தெரிய வருகின்றது.

பார்க்க பக்கம் 4

### கிளிநொச்சி மாவட்டத்தில்

## 1,525 குடும்பங்கள் நலன்புரி நிலையத்தில்

கிளிநொச்சி, டிசெ.30

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 525 குடும்பங்கள் 27 நலன்புரி நிலையங்களில் தொடர்ந்தும் தங்கியுள்ளனர். மழை சற்று ஓய்ந்துள்ளபோதும் வெள்ள நிலைமை குறையவில்லை.

இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் நேற்று இரவு தகவலின்படி 34 அடியாக உள்ளது என கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் தெரிவித்தார்.

கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 10 நலன்புரி நிலையங்களும் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 15 நலன்புரி நிலையங்களும் பூநகரி பிரதேச செயலகப் பிரிவில் 2 நலன்

பார்க்க பக்கம் 4

## மகேஸ்வரனின் சகோதரர் மீது நேற்று அசிட் வீசித் தாக்குதல்

### நல்லூர் ஆலயத்துக்கு முன் சம்பவம்


யாழ்ப்பாணம், டிசெ.30

முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தியாகராசா மகேஸ்வரனின் சகோதரரும், பிரபல வர்த்தகருமான தியாகராசா துவாரகேஸ்வரன் (வயது-41) மீது நேற்று சனிக்கிழமை நல்லூரில் வைத்து அசிட் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

முதுகிலும், கழுத்துப் பகுதியிலும் படுகாயமடைந்த அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் அங்கு தனக்குப் பாதுகாப்பு இல்லை என்று கூறி வெளியேறிய அவர் கொழும்பு வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்

பார்க்க பக்கம் 4

மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது
குகன் ஸ்ரோர்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்



1. மலிவான விலையில் தரமான மளிகைப் பொருள்களைபெற்றுக்கொள்ள
2. வீட்டுக்குரிய பலசரக்கு பொருள்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
3. தைப்பொங்கலுக்குரிய பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்
4. மொத்தமாக கொள்வனவு செய்யும் வர்த்தகர்களுக்கு விஷேச கழிவு வழங்கப்படும்

குறிப்பு:- எமது நிறுவனத்துக்கு யாழ். நகரிலோ அல்லது வேறு எந்தப் பகுதிகளிலோ கிளைகள் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

குகன் ஸ்ரோர்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
இல. 180,(380) ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.
T.P.021 221 9469

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டு மதிலை மோதித் தள்ளி உள்ளே புகுந்தது வாகனம்

## மதுபோதையில் இருந்த சாரதி தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 30

வேகக்கட்டுப்பாட்டை இழந்த வாகனம் வீட்டு மதிலை இடித்துத் தள்ளியது. இதனால் வாகனத்தின் ஒரு பகுதி சிதைந்ததுடன், ஒரு சில்லும் கழன்று ஓடியது.

இந்த வாகன விபத்து யாழ். மானிப்பாய் வீதி, ஐந்து சந்திப்பகுதியில் நேற்று சனிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற குறித்த வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து தவறான பக்கத்துக்குச் சென்று கிராம அலுவலர் ஒருவரின் வீட்டு மதிலை இடித்து வீழ்த்தி உள்ளே நின்ற வாழை மரங்களையும் துவம்சம் செய்தது. வாகனத்தின் ஒரு பகுதி முற்றாகச் சிதைந்ததுடன், ஒரு சில்லும் உடைந்தது.



இரண்டு பக்க ஒளிச்சமிக்ஞைகளையும் ஒளிரவிட்ட வண்ணம் சாரதி போதை தலைக்கேறிய நிலையில் வாகனத்தைச் செலுத்திச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். விபத்து நடந்த இடத்தில் வாகனத்தை விட்டுவிட்டுச் சாரதி உட்பட அதில் பயணித்த மூன்று பேரும் தப்பியோடி விட்டனர். மூவரும் போதையில் இருந்ததாக சம்பவ இடத்தில் நின்றவர்கள் தெரிவித்தனர்.

தப்பியோடிய சாரதி யாழ். மனோகராச் சந்தியை அண்மித்து ஓர் இடத்தில் மறைந்து படுத்துவிட்டார். அவரை இனம்கண்டவர்கள் அவரை ஓட்டோவில் அழைத்துச் சென்று சம்பவ இடத்தில் நின்றிருந்த பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். பொலிஸார் சாரதியை யாழ். போதனா வைத்தியசாலையில் பரிசோதனைக்காகச் சேர்த்தனர். பரிசோதனையின் போது அவர் மதுபோதையில் இருந்தமை உறுதிசெய்யப்பட்டது. ஆனைக்கோட்டை கூழாவடியைச் சேர்ந்த ஒருவரே சாரதியாவார். விபத்துக்குள்ளான வாகனம் பாரம்தூக்கி மூலமாக அந்த இடத்திலிருந்து அகற்றப்பட்டது.

(த-4-17)

## ஏற்றுமதி வருமானம் தொடர்ந்தும் வீழ்ச்சி

கொழும்பு,டிசெ 30

இலங்கையின் ஆடை ஏற்றுமதி வருவாய் அதிகரித்த போதும், நவம்பர் மாத ஏற்றுமதி வருமானம் 6.6 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாக, இலங்கை மத்திய வங்கியின் அதிகாரபூர்வ புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் நவம்பர் மாத ஆடை ஏற்றுமதி வருவாய், 4.6 வீதத்தினால் (360 மில்லியன் டொலர்) அதிகரித்துள்ளது.

ஆனால், கடந்த ஆண்டின் நவம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டின் நவம்பர் மாதத்தில், ஏற்றுமதி வருவாய் 6.6 வீதத்தினால் (82%.6 மல்லியன் டொலர்) வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த நவம்பர் மாதத்தில் இலங்கையின் தேயிலை ஏற்றுமதி சிறியளவிலேயே, (0.6 வீதம்- 126 மில்லியன் டொலர்) அதிகரித்துள்ளது.

இருந்தபோதிலும், ஒட்டுமொத்த விவசாயப் பொருள் ஏற்றுமதி 8 வீதத்தினால் (190.2 மில்லியன் டொலர்) வீழ்ச்சி கண்டுள்ளது.

எனினும் இலங்கையின் ஆடைஏற்றுமதி வருங்காலத்தில் அதிகரிக்கும் என்று இலங்கை மத்திய வங்கி நம்பிக்கை வெளியிட்டுள்ளது.(த)

## தாய்லாந்து விடுதி முற்றுகை இலங்கையர் 64 பேர் சிக்கினர்

பட்டாயா,டிசெ 30

தாய்லாந்தில் விடுதி ஒன்றில் தங்கியிருந்த இலங்கையைச் சேர்ந்த 64 பேர் அந்த நாட்டு குடிவரவுக் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூன்றாவது நாடு ஒன்றுக்குத் தப்பிச் செல்வதற்காகத் தங்கியிருந்தபோதே பட்டாயா நகரில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாய்-யோக் விடுதியில் சந்தேகத்துக்கிடமான பெருமளவு வெளிநாட்டவர்கள் தங்கியிருப்பதாக அயலவர் ஒருவர் கொடுத்த தொலைபேசி முறைப்பாட்டை அடுத்து சோன்புரி குடிவரவுக் காவல்துறையினர் இந்தத் தேடுதலை நடத்தியிருந்தனர்.

இதன் போது கைது செய்யப்பட்ட இலங்கையைச் சேர்ந்த 64 பேரில், ஆள்கடத்தல்காரர்கள் எவரும் இல்லை என்று நம்பப்படுகிறது. இவர்கள் அனைவரும் சுற்றுலா நுழைவிசாவில் தாய்லாந்து வந்துள்ளனர்.

எனினும் இவர்களின் கடவுச்சீட்டுகளைப் பறிமுதல் செய்துள்ள தாய்லாந்து அதிகாரிகள் இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் லீம் சபாங் துறைமுகம் வழியாக மூன்றாவது நாடு ஒன்றுக்கு அனுப்பி வைக்கப்படவிருந்ததாக கூறப்படுகிறது.

அதேவேளை, மேலும் சுமார் 100 இலங்கையர்கள் இந்தத் துறைமுகம் வழியாகத் தப்பிச் சென்றிருக்கலாம் என்று நம்பப்படுவதாக ''பட்டாயா மெயில்'' செய்தி வெளியிட்டுள்ளது.(த)

## வன்னியில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 30

இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையில் வன்னிப் பாடசாலைகளில் பணியாற்றச் சென்றவர்களுக்கான விசேட பொதுக்கூட்டம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது என்று இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

யாழ். ஆனைப்பந்தியிலுள்ள நாவலர் கல்வி நிலையத்தில் இன்று முற்பகல் 9 மணிக்கு இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது. 2 வருட ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்ற வன்னிக்குச் சென்ற ஆசிரியர்களையும், இலங்கை ஆசிரியர் சங்க வலய மட்டத் தலைவர், செயலாளர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு ஜோசப் ஸ்ராலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

இடமாற்றம் தொடர்பில் மேன்முறையீடு செய்ய விரும்பும் ஆசிரியர்களும் இதில் கலந்துகொள்ளலாம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-4)

## கொழும்பு மாவட்டச் செயலகம் திட்டமிட்டே கொளுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், டிசெ. 30

நன்கு திட்டமிடப்பட்டே கொழும்பு மாவட்டச் செயலகம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜெயக்கொடி தெரிவித்தார்.

கடந்த 26 ஆம் திகதி இரவு கொழும்பு 'டாம்' வீதியிலுள்ள மாவட்டச் செயலகக் கட்டடம் திடீரெனத் தீப்பற்றி எரிந்தது.

தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முன்னரே செயலகக் கட்டடத்திலிருந்த முக்கிய ஆவணங்கள் பல தீயில் கருகி நாசமாகி இருந்தது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விபத்து தொடர்பில் கருத்துத் தெரிவித்த பொலிஸ் பேச்சாளர் இந்தத் தீ விபத்து இயற்கையாக இடம்பெற்ற ஒன்றல்ல. நன்கு திட்டமிடப்பட்ட முறையில் சிலரால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இரசாயனப் பரிசோதனைகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் விரைவில் குற்றவாளிகள் இனங்காணப்படுவரெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-16)

## இலங்கைக்கு வருகை தரும் சீனரின் எண்ணிக்கை அதிகம்

கொழும்பு,டிசெ.30

கடந்த மாதம் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட சீனர்களின் எண்ணிக்கை திடீரென 164 வீதத்தினால் அதிகரித்துள்ளதாக, சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் தகவல் ஒன்று கூறுகிறது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் இலங்கை வந்த சீனர்களின் எண்ணிக்கை, 164 வீதத்தினால் அதிகரித்துள்ளது. கடந்த மாதத்தில் மட்டும் 3,353 சீனர்கள் இலங்கை வந்துள்ளனர்.

அதேவேளை, இந்த ஆண்டின் முதல் 11 மாதங்களில் 22,156 சீனர்கள் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளனர். இது 46 சதவீத அதிகரிப்பாகும். இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு சீனர்கள் அனைவரும் சுற்றுலாப் பயணிகள் அல்ல என்றும் கூறப்படுகிறது.

இலங்கையில் சீனாவினால் மேற்கொள்ளப்படும் திட்டங்களில் பணியாற்றுவதற்காக வந்த சீனர்களும் இதில் உள்ளடங்கியுள்ளனர்.

## தோணி கவிழ்ந்து மூவர் சாவு

கொழும்பு,டிசெ 30

கலன்பிந்துனுவெவ, மானங்கட்டிய குளம் மற்றும் கஹட்டகஸ்திகிலிய யான் ஓயா ஆகியவற்றில் இரு தோணிகள் கவிழ்ந்ததில் மூவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

மானங்கட்டிய குளத்தில் மேற்படி தோணியில் கடக்க முற்பட்ட இரு விவசாயிகளும் கஹட்டகஸ்திகிலியயான் ஓயாவை கடக்க முற்பட்ட இராணுவ வீரர் ஒருவருமாக மூன்று பேரே இவ்வாறு உயிரிழந்தவர்களாவர்.

மானங்கட்டிய குளத்துக்கு மேற்பகுதியில் உள்ள தமது சேனையிலிருந்து வீடு நோக்கி தோணியொன்றில் பயணித்துக்கொண்டிருந்த போது தோணி கவிழ்ந்ததால் விவசாயிகள் இருவரும் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளனர். அதில் பயணித்த மேலும் இருவர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் மானங்கட்டிய கிராமத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான முனிதாச (வயது-58), ஒரு பிள்ளையின் தந்தையான தில்சான் ருவன் குமார (வயது-35) என்ற குடும்பஸ்தர்களே மரணமடைந்தவர்களாவர்.

இதேவேளை நொச்சியாகம லிந்தவெள இராணுவ முகாமில் சேவையாற்றிய துமிந்த சில்வா என்ற இராணுவ வீரர் தமது மனைவி, பிள்ளைகளை பார்க்கச் சென்ற போது மீமின்னாவல பகுதியில் யான் ஓயாவை கடக்க முற்பட்ட போது தோணி கவிழ்ந்து நீரில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் மரணமடைந்துள்ளார்.

சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கலன்பிந்துனுவெவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

## குமுதினி மீளச் சேவையில்

யாழ்ப்பாணம், டிசெ. 30

குமுதினிப் படகு மீண்டும் நெடுந்தீவுக்கும் - குறிகாட்டுவான் துறைக்கும் இடையிலான தனது சேவையை ஆரம்பித்துள்ளது.

கடந்த ஒரு வாரகாலமாகப் பழுதடைந்த நிலையில் இருந்த குமுதினி திருத்தப்பட்டதை அடுத்து அதன் சேவை கடந்த வெள்ளிக்கிழமை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

குமுதினி பழுதானதை அடுத்து நெடுந்தீவுக்கும் - குறிகாட்டுவானுக்குமிடையில் தனியார் படகுகளே சேவையில் ஈடுபட்டு வந்தன. (த-17)

## வடமாகாண கல்விப் பிரிவின் ஆளணி விரைவில் சீராக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 30

முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட புதிய ஆளணிக் கொள்கைக்கு அமைய வடமாகாண கல்விப்பிரிவின் நிர்வாகச் செயற்பாடுகளில் ஆளணியினர் சீராக்கம் செய்யப்படவுள்ளனர் என்று வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

இதன்படி ஆளணிவளம் சில இடங்களில் அதிகரிக்கவும், சில இடங்களில் குறைவடையவும் உள்ளது. அதாவது ஆளணியில் மாற்றம் செய்யப்படவுள்ளது. முகாமைத்துவ சேவைத்திணைக்களம் வெளியிட்ட புதிய ஆளணிக் கொள்கைக்கு அமைய அந்த மாற்றம் செயற்படுத்தப்படும். நாளை மறுதினம் முதலாம் திகதி தொடக்கம் அது ஒழுங்கமைக்கப்படும்.

வடமாகாண ஆசிரியர்களின் வருடாந்த இடமாற்றம் தொடர்பாக வன்னிப் பிரதேசத்திலிருந்து இடமாற்றம் பெறவுள்ள ஆசிரியர்களின் விவரங்களும், அவர்களுக்குப் பதிலீடாக இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ள ஆசிரியர்களின் விவரங்களும் வடமாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கு அமைய விசேட இடமாற்ற சபை மூலமாக பரிசீலிக்கப்பட்டு நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த இடமாற்ற சபை மாகாணக் கல்விப் பணிப்பாளரின் தலைமையில் ஏனைய இடமாற்ற சபை உறுப்பினர்களுடன் இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், இலங்கை முஸ்லிம் ஆசிரியர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் உள்ளடங்குவர். இந்தச் சபையின் நடவடிக்கைகள் எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் பூரணப்படுத்தப்பட்டு ஆளுநரின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் - என்று வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

(த-4)

## தனியார் நிரப்பு நிலையத்தை நாடுகின்ற இ.போ.ச. பஸ்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 30

யாழ்ப்பாணத்துக்கு எரிபொருள் எடுத்து வருவதில் தாமதம் ஏற்படுவதனால் யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் தனியார் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் நிரப்புகின்றன என்று டிப்போ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். சாலைகளுக்குரிய சில பஸ்கள் நேற்று தனியார் எரிபொருள் நிரப்பு நிலையத்தில், எரிபொருள் நிரப்பியது தொடர்பில் கேட்ட போது அந்த அதிகாரி இதனைத் தெரிவித்தார்.

மழைகாலம் என்பதால் பயணிகள் தொகை குறைவாக இருப்பதனால் வருமானமும் குறைவாகவுள்ளது. இதனால் ஒழுங்குபடுத்தல்கள் செய்யப்பட்டு பணம் அனுப்புவதில் தாமதம் ஏற்படுகிறது.

அவ்வாறு பணம் அனுப்பிய பின்னர் ஓரிரு நாள்களின் பின்னர் எரிபொருள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படுகிறது. அதில் தாமதம் ஏற்படும் பட்சத்தில் இங்கு கையிருப்பில் உள்ள எரிபொருள் தீர்ந்துவிட்டால் மாத்திரம் தனியார் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் நிரப்ப வேண்டியுள்ளது.

சில வருடங்களாக இந்த முறை இருந்துவருகிறது. இங்கு மட்டுமன்றி நாடளாவிய ரீதியில் இந்தப்பிரச்சினை உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரணி ம.வி. சுவர் மீது கழிவு ஒயில் வீச்சு

யாழ்ப்பாணம்,டிசெ.30

வரணி மகா வித்தியாலயத்தின் சுவர் மீது கழிவு ஒயில் ஊற்றப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ இடத்துக்கு அருகில் இருந்த காவலரணில் நின்ற படையினர் கழிவு ஒயில் ஊற்றிய நபரைப் பிடித்து கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கனடாவில் வதியும் வித்தியாலய பழைய மாணவர்களின் நிதி உதவியுடன் வித்தியாலயத்தைச் சுற்றி ஆயிரம் அடி நீளத்துக்கு மதில் அமைக்கப்பட்டு, அன்பளிப்பு கனடா ஒன்றியத்தினர் என்று எழுதப்பட்டிருந்தது.

அண்மைக் காலமாக வரணி, இடைக்குறிச்சி, கரம்பைக்குறிச்சி ஆகிய பகுதிகளில் விஷமிகளின் செயல்களால் வீடு ஒன்று எரிக்கப்பட்டது. திருட்டுக்களும் அதிகரித்திருந்தன.

இவ்வாறான சம்பவங்களை அடுத்து உஷார் நிலையில் வைக்கப்பட்டிருந்த படையினர் இரவு சந்தேகத்தின் பேரில் நடமாடிய நபரை பின்தொடர்ந்து சென்ற போது கழிவு ஒயிலை சுவர் மீது ஊற்றியுள்ளார்.

இதனையடுத்து ஓட முற்பட்ட வேளையில் படையினரால் துரத்திப் பிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம)

## நடுக் கடலில் பிரசவம்

யாழ்ப்பாணம், டிசெ. 30

பிரசவ வேதனையால் துடித்த பெண் ஒருவர் நெடுந்தீவு வைத்தியசாலையில் இருந்து யாழ். போதனாவைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் படகு மூலம் கொண்டு வரப்பட்ட போது நடுக்கடலில் ஆண் குழந்தை ஒன்றைப் பிரசவித்துள்ளார். நேற்று சனிக்கிழமை காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடல் கொந்தளிப்புக் காரணமாக படகு அதிக ஆட்டம் கண்டமையே பிரசவம் இடம்பெறக் காரணம் என்று கூறப்பட்டது. பிரசவ வலியால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்த குறித்த பெண், கூட வந்திருந்த மருத்துவமாது மற்றும் வைத்திய ஊழியர்களின் உதவியுடன் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார். தாயும் சேயும் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ம-7)

## சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் யாழ். ஆஸ்பத்திரிக்கு வருகை

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியகலாநிதி பி.ஜி.மஹிபால நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டார்.

வைத்தியசாலை வைத்தியர் சங்கப் பிரதிநிதிகள், வைத்திய நிபுணர்கள், வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.ஸ்ரீபவானந்தராஜா ஆகியோருடனும் பணிப்பாளர் நாயகம் கலந்துரையாடினார்.

இந்தச்சந்திப்பில் பொலிஸ் அதிகாரிகள், 512 ஆவது படைப்பிரிவு அதிகாரி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வைத்திய நிபுணர் திருமாறன் மீது வாள்வெட்டு நடத்தப்பட்டமை பற்றியும் இதில் கலந்தரையாடப்பட்டது. இதன்போது பாதுகாப்புத் தேவைப்படும் வைத்தியர்கள் கோரும் பட்சத்தில் தேவையான இடங்களில் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்படும் என்று பொலிஸ், இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து போதனா வைத்தியசாலையின் சில பகுதிகளுக்குச் சென்று பணிப்பாளர் நாயகம் பார்வையிட்டார்.

தற்போது பிரசவ விடுதிகள் அமைந்துள்ள கட்டடத் தொகுதி இடித்துப் புனரமைக்கப்பட வேண்டியுள்ளது. இதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக மேல் மாடியிலுள்ள 2ஆம் பகுதி, முன்னர் குழந்தைகள் சிகிச்சை விடுதி அமைந்திருந்த இடத்துக்கு மாற்றப்படவுள்ளது.

அதற்கான நடவடிக்கை ஏழு வாரங்களில் ஆரம்பமாகவுள்ளது என்று பணிப்பாளர் ஸ்ரீபவானந்தராஜா பணிப்பாளர் நாயகத்திடம் தெரிவித்தார். (த-4)

## வாய் பேச முடியாத யுவதியை கடத்தியவருக்குத் தர்ம அடி

பதின்ம வயது வாய்பேச முடியாத யுவதியைக் கடத்திச் சென்று தடுத்து வைத்திருந்த 37 வயது குடும்பஸ்தருக்கு யுவதியின் உறவினர்களால் தர்ம அடி கொடுக்கப்பட்டது.

சாவகச்சேரியைச் சேர்ந்த யுவதியை கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் கடத்திச் செல்வதை அறிந்த உறவினர்கள் தேடிய போது புங்குடுதீவில் வைத்துப் பிடித்துள்ளனர்.

இருவரையும் அழைத்து வந்த உறவினர்கள் குடும்பஸ்தருக்கு முறையாகத் தர்மஅடி கொடுத்தனர்.

கவனிப்புக்கு உள்ளான குடும்பஸ்தர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9)

## சிலையடியில் தேங்கியுள்ள வெள்ளத்தால் பெரும்சிரமம்

வடமராட்சி, டிசெ. 30

மந்திகை சிலையடியில் பருத்தித்துறை நோக்கிச் செல்லும் தரிப்பிடத்தைச் சுற்றி வெள்ளம் தேங்கி நிற்பதால் பயணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பஸ் தரிப்பிடக் கட்டடத்துக்குப் பின்னால் உள்ள பொது நூல்நிலையம், ஆயுள்வேத வைத்தியசாலைக்குப் பிரதான வீதியில் இருந்து செல்லும் பகுதி கற்கள், மண் போடப்பட்டு உயர்த்தப்பட்டுள்ளதால் வெள்ளம் ஓடிச்செல்ல முடியாமல் பிரதான வீதியின் கரையோரம் தேங்கி நிற்கிறது.

இதனால் பயணத்துக்காகக் காத்திருக்கும் பயணிகள் மீது பஸ்கள் தரிக்கும்போது பறக்கும் வெள்ளம் பயணிகளை நனைத்துத் தோய்ந்து விடுகின்றது.

பொது நூல்நிலையம், ஆயுள்வேத வைத்தியசாலை, கமநல சேவை நிலையம், கால்நடை வைத்திய நிலையம் ஆகியவற்றுக்கு மத்தியில் அமைந்துள்ள பஸ்தரிப்பிடத்துக்கு முன்பாக உள்ள வெள்ளத்தை அப்புறப்படுத்த அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுக்குமா என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

ஏற்கனவே குறிப்பிட்ட அரச அலுவலகங்களுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகங்களும் இந்தத் தரிப்பிடத்துக்கு அருகிலேயே அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-8)

## நாகேஸ்வரம் நாராயணன் ஆலயத்தில் நேற்று திருட்டு

அளவெட்டி, டிசெ. 30

அளவெட்டி மேற்கு நாகேஸ்வரம் நாகவரத நாராயணன் ஆலயத்தில் நேற்றிரவு பல இலட்சம் பெறுமதியான பொருள்கள் திருட்டுப் போயுள்ளன.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் ஆலயச் சூழலில் திருடர்களின் நடமாட்டம் மற்றும் சத்தம் கேட்டதை அறிந்த அயல் வீட்டார் சத்தம் போட்டுள்ளனர். இதனால் களவாடப்பட்ட பொருள்களுடன் திருடர் ஓடித் தப்பியுள்ளனர் என்று ஆலய உரிமையாளர் தெரிவித்தார்.

ஆலய மேற்கு வாசலில் அமைந்துள்ள இரும்புக் கதவின் பூட்டை உடைத்து உட்சென்ற திருடர்கள் மூலஸ்தானக் கதவை உடைத்து ஏனைய அறைத் திறப்புக்களையும் எடுத்துள்ளனர். பிரதான மூலஸ்தானக் கடவுளான நாராயண விக்கிரகத்தைப் புரட்டி அதன் அடியில் இருந்த பெறுமதி மிக்க ஐம்பொன்களையும், இதேபோல் மனோன்மணி அம்பாள் விக்கிரகத்தையும் புரட்டியும் அதன் கீழ் இருந்த ஐம்பொன்களையும் அம்பாள் மீது போடப்பட்டிருந்த தங்க நகைகளையும் திருடியுள்ளனர்.

பரிவார மூர்த்திகளும் புரட்டப்பட்டு திருடப்பட்டுள்ளன. தெல்லிப்பழை பொலிஸாருக்கு உடனடியாகத் தகவல் கொடுக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு அதிகாலை 3 மணிக்கு வந்த தெல்லிப்பழை பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸார் ஆலயத்துக்குள் எவரையும் செல்லவிடாது தடுத்தனர். பின்னர் முற்பகல் 10.30 மணியளவில் பொலிஸ் மோப்பநாயுடன் விசேட குற்றப் பிரிவும் அழைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. இது வரை எவரும் கைது செய்யப்படவில்லை என்று கூறப்பட்டது. (ம-36-4)

## காதுகுத்த வந்த பெண் தோட்டுடன் மாயமானார்

குழந்தைக்கு காது குத்துவதற்கு நகைக் கடைக்கு வந்த பெண் தோடு குத்திய பின்னர் மாயமானார். இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரி கச்சாய் வீதியில் இடம்பெற்றது. நேற்றுக் காலை நகைக் கடைக்கு குழந்தையுடன் வந்த பெண் குழந்தைக்கு காது குத்த வேண்டும் என்று நகைகளைப் பார்வையிட்டு தெரிவு செய்து கொடுத்தார்.

பிள்ளைக்கு காது குத்தி தோடு போட்ட பின்னர் குழந்தை அழுகை நிறுத்தாமல் வீரிட்டு அழுதவண்ணம் இருந்ததால் அழுகை நிற்கும் வரை வெளியே வைத்திருந்துவிட்டு வருவதாக கூறி பெண் வெளியேறினார்.

வியாபாரத்தின் நிமித்தம் கடைக்காரர் பெண்ணைக் கவனிக்காமல் விட்டதால் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தோட்டுடன் மாயமாக மறைந்து விட்டார். நகைக் கடையில் வேலை செய்வோர் நகர் பகுதி முழுவதும் தேடிய போதும் பெண்ணைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று கூறப்பட்டது. (ம-9)

## தண்ணீர்த் தாங்கி பயன்பாட்டுக்கு

வடமராட்சி, டிசெ. 30

இமையாணன் பகுதி மக்களின் குடிதண்ணீர் வசதி கருதி இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்துக்கு அருகில் நிறுவப்பட்ட தண்ணீர்த் தாங்கி அந்தப் பகுதி மக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கரவெட்டிப் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் அ.சந்திரசேகரம், இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத் தலைவர் த.பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வைத்து இதனைக் கையளித்தார். (ம-8)

## நடைபாதை வியாபாரத்தால் வர்த்தகர் பாதிப்பு

### மாநகர சபை உறுப்பினர் விந்தன் தெரிவிப்பு

யாழ்.நகரில் சட்டவிரோத நடைபாதை வியாபாரம் அதிகரித்துள்ளதால் வர்த்தகர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே வர்த்தகர்களுக்கான வாடகை மற்றும் வரியைக் குறைக்க வேண்டும் அல்லது சட்டவிரோத நடைபாதைக் கடைகளை அகற்றி வர்த்தகர்கள் சுதந்திரமாகத் தொழில் செய்ய யாழ்.மாநகர சபை நடவடிக்கையெடுக்க வேண்டும்.

இவ்வாறு யாழ்.மாநகர எதிர்க்கட்சி உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் தெரிவித்தார். யாழ்ப்பாணச் சந்தைக் கட்டடத் தொகுதிக்கும் வியாழக்கிழமை சென்று பார்வையிட்ட அவர் இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:-

பண்டிகைக் காலங்களில் பிற பகுதிகளிலிருந்து யாழ்.மாவட்டத்துக்கு வரும் நடைபாதை வியாபாரிகளது எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அங்கு அவர்கள் சட்டவிரோதமாக நடைபாதைக் கடைகளை நடத்துகின்றார்கள். இவர்களில் பலவகைகளிலும் பலருக்கு இடையூறுகள் இருந்து வருகின்றன.

இது தொடர்பில் யாழ். மாநகர சபை மாதாந்தக் கூட்டங்களில் பலதடவை சுட்டிக் காட்டியும் ஆளும்தரப்பு அல்லது மாநகர நிர்வாகமும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த நிலையில் யாழ். நகரில் நிரந்தரமாக வியாபாரம் செய்து மாநகர சபைக்கு வாடகை வரி, வணிகர் சங்கத்துக்கான சந்தா, வருமானவரி, ஊழியர் சேமலாப நிதி, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான நிதி போன்றவற்றைச் செலுத்தும் வர்த்தகர்கள் தொழில் பாதிப்பை நஷ்டத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

யாழ்.நவீனசந்தைப் பகுதியிலுள்ள மரக்கறி சந்தைப் பகுதியில் அவசர, அவசரமாக 29 கடைகள் அமைக்கப்படுகின்றன. அந்தச் சந்தையை ஏற்கனவே ஒருவர் குத்தகைக்கு எடுத்துள்ளார்.

அவ்வாறிருக்க ஆளும்தரப்பினர் அங்குள்ள நான்கு கடைகளைப் பறித்தெடுத்து வேறு நபர்களுக்குக் கொடுத்துள்ளனர். அங்கு ஏற்கனவே இறைச்சிக்கடை இருக்கும் போது அவசரமாக கடைகள் அமைக்கப்படுவது யாருக்கு வழங்குவதற்கு? இவை பகிரங்கச் சந்தையில் விற்கப்படுமா? அல்லது கறுப்புச் சந்தையில் விற்கப்படுமா? என்று கேள்வி எழுப்பினார் மாநகர சபை உறுப்பினர். (ம-4)

## நிகழ்வுகள் இன்று

**பொதுக்கூட்டம்**

நவாலி கிழக்கு, முதியோர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் பிற்பகல் 2.30 மணிக்கு சங்கத் தலைவர் கி.பவுலின் தலைமையில் முருகமூர்த்தி ஆலய கல்யாண மண்டபத்தில் இடம்பெறும்.

★ ★ ★

மானிப்பாய் ப.நோ.கூ. சங்கத்தின் வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டம் காலை 9 மணிக்கு சங்கத் தலைவர் க.திருநாவுக்கரசு தலைமையில் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும். (ம-100)

★ ★ ★

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்தப் பொதுக் கூட்டம் இன்று கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

★ ★ ★

வட்டு சிவன் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் 26 ஆவது ஆண்டு வருடாந்தப் பொதுக் கூட்டம் பிற்பகல் 3.30 மணிக்கு வட்டு. மேற்கு சின்னம்மா தையல் பயிற்சி நிலையத்தில் ஓய்வு பெற்ற ரயில்வே திணைக்கள அதிபர் அ.துரைரத்தினசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் [illegible]நாதன் கலந்து கொள்வார். (ம-14)

★ ★ ★

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் சூ.சே.குலநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-8)

**ஒன்றுகூடல் பாராட்டும்**

நல்லூர் பிரதேச செயலக வருட இறுதி ஒன்று கூடலும் சேவை நலன் பாராட்டு விழாவும் காலை 9 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும். பிரதேச செயலரும் நலன்புரிச் சங்கத்தின் தலைவருமான பா. செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் மேற்படி செயலகத்தில் பணியாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற பல தரப்பிலுமான 21 உத்தியோகத்தர்களுக்கான சேவை நலன் பாராட்டு நிகழ்வு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் உதவி திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் உரையாற்றுவார். (ம-7)

**கௌரவிப்பு**

காங்கேசன்துறை உதயசூரியன் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் கௌரவிப்பும் பிற்பகல் 3 மணிக்கு கோண்டாவில் உப்புமடம் சந்தியில் அமைந்துள்ள வேதபாராயண சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (ம-14)

★ ★ ★

நவாலியில் கலாபூஷணம் தேசிய விருது பெற்ற இருவரும் - புலமைப்பரிசில் பரீட்சையில் தேசிய மட்டத்தில் 10 ஆம் இடத்தை பெற்ற நவாலி மாணவியுமான மூவர் ஹேமலதா ஞாபகார்த்த நிதியத்தால் மாலை 4 மணிக்கு கௌரவிக்கப்படவுள்ளனர்.

நாவலி முருகானந்தா சனசமூக நிலைய தலைவர் செ.மகேந்திரன் தலைமையில் கௌரவிப்பு நிகழ்வு இன்று இடம்பெறும். கலாபூஷணம் விருது பெற்ற நவாலியூர் கனகசபை நடேசன், கந்தையா சரவணபவன் ஆகியோரும் புலமைப் பரிசில் பரீட்சையில் 192 புள்ளிகள் பெற்ற மாணவி ரமேஷ் நிதூசிக்கா ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். (ம-50)

**கருத்தரங்கு**

யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் சிற்றூர்தி, பஸ்களில் கடமையில் ஈடுபடும் சாரதி நடத்துநர்களுக்கான போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான கருத்தரங்கு காலை 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

**ஒளி விழா**

சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலய பங்கு மக்களின் ஒளி விழா நிகழ்வு மாலை 5.30 மணிக்கு ஆலய முன்றிலில் இடம்பெறும்.

ஆலய பங்குத் தந்தை அருட்பணி யோசப் பிரான்சிஸ் அடிகள் தலைமையில் நடைபெறும். விழாவுக்கு யாழ்ப்பாணம் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர் அருட்பணி போல் றொசான் விருந்தினராகக் கலந்துகொள்வார்.

பங்கு மக்களின் பல்வேறு கலை நிகழ்வுகளும் சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தம்பதியினருக்கு துபாயில் ஆறு மாத கால சிறை

## குடிவரவு அதிகாரிக்கு இலஞ்சம் வழங்க முயன்றனராம்

கொழும்பு, டிசெ.30

துபாயில் குடிவரவு அதிகாரி ஒருவருக்கு இலஞ்சம் வழங்க முயற்சித்த குற்றச்சாட்டில் இலங்கை தம்பதியினருக்கு ஆறு மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

துபாய் விமான நிலை யத்தில் பணிபுரியும் ஒருவருக்கு 10 ஆயிரம் டினார் பணத்தை லஞ்சமாக வழங்குவதற்கு குறித்த இலங்கை தம்பதியினர் முயன்றனர்.

பெண்ணை சட்டவிரோ தமாக நாட்டிலிருந்து திருப்பியனுப்ப உதவுமாறு கோரியே குறித்த லஞ்சப் பணம் வழங்கப்பட்டுள்ளது.

ஏழுமாத சிறைத் தண்டனையின் பின் குறித்த இலங்கைத் தம்பதியினரை நாடு கடத்துமாறு துபாய் குற்றவியல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

1996ஆம் ஆண்டு துபாயில் பணிபுரியச் சென்ற 39 வயதுடைய பெண் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து பணியில் அமர்த்துவதற்காக இரண்டுமாத சிறைத் தண்டனை அனுபவித்த பின் 2000ஆம் ஆண்டு நாடு கடத்தப்பட்டார்.

அதன் பின்னர் 2008ஆம் ஆண்டு சுற்றுலா விசாவில் துபாய் சென்றுள்ள குறித்த பெண் தனது 59 வயதுடைய கணவரின் உதவியுடன் டுபாயில் தங்கி வேலை செய்து வந்துள்ளார்.

ஓகஸ்ட் 12ஆம் திகதி அவர் நாடு திரும்ப வேண் டிய நிலை இருந்த போதும் போலி ஆவணங்களைக் கொண்டு அங்கேயே தொடர்ந்தும் தங்கியுள்ளார். அதன் பின்னர் தன்னை நாட்டில் இருந்து செல்ல அனுமதிக்குமாறு கோரி தனது கணவரோடு இணைந்து குடிவரவு அதிகாரிக்கு லஞ்சம் வழங்கி யுள்ளார்.

இந்த நிலையில் போலி ஆவணங்களைப் பயன் படுத்தி இலங்கைக்குச் செல்ல முற்பட்டவேளை விமான நிலையத்தில் வைத்து குறித்த பெண் கைது செய்யப்பட்டார். துபாய்க்குள் நுழைவதற்கு குறித்த பெண்ணிற்கு அனுமதி மறுக்கப்பட்டு அவர் கறுப்புப் பட்டியலில் சேர்க் கப்பட்டிருந்தார்.

இதுகுறித்த வழக்கு விசாரணையில் பெண்ணும் கணவரும் குற்றவாளிகள் என உறுதி செய்யப்பட்டதை அடுத்து இருவரும் சிறையில் அடைக்கப்பட்டனர். (வ)

### நாடகப் பயிற்சி பட்டறையும் கருத்தரங்கும்

யாழ்ப்பாணம், டிசெ.30

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நாடகப் பயிற்சிப்பட்டறையும், கருத்தரங்கும் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பத்தரமுல்லை கலாசாரத் திணைக்களத்தின் நாடகத்துறையினர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்தப் பயிற்சிப் பட்டறையில் நாடகத் தயாரிப்பாளர்கள் நாடகம் கற்பிக்கும் ஆசிரியர்கள் பல்கலைக் கழக மாணவர்கள் கலந்து கொள்வார்கள்.(7)

### முதியோர் பராமரிப்பு குறித்து கைதடி முதியோர் இல்லம் ஆராய்வு

யாழ்ப்பாணம், டிசெ.30

தனியார் முதியோர் இல்லங்களுடன் இணைந்து முதியோரைப் பராமரிப்பது மற்றும் அதன் ஊடான சேவைகளை முன்னெடுப்பது தொடர்பாக கைதடி அரச முதியோர் இல்லம் ஆராய்ந்து வருகின்றது. இது தொடர்பாகக் கைதடி அரச முதியோர் இல்லத்தின் அத்தியட்சகர் த.கிருபாகரன் கூறியதாவது:-

வடமாகாணத்தில் உள்ள 13 தனியார் முதியோர் இல்லங்களுடன் இணைந்து முதியோரைப் பராமரிப்பது வினைத்திறனான சேவைகளை மேற்கொள்வது சம்மந்தமாக ஆராய்வதற்கான விசேட கலந்துரையாடல்களை மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனவரி முதல் வாரத்தில் இந் தக் கலந்துரையாடலுக்கான ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது என்று அவர்மேலும்கூறினார். (ம-17)

# 19 பவுண் தங்க நகைகள் கத்தி முனையில் கொள்ளை

நவாலி, டிசெ.30

நவாலி ஆயுள்வேத வைத்தியர் ஒருவரின் 19 பவுண் நிறையுடைய தங்க நகைகள், ரொக்கப் பணம் என்பன அவரது வீட்டுக்குள் நுழைந்த திருடர்களால் கத்தி முனையில் பறித்துச் செல்லப்பட்டுள்ளன.

இதுகுறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை மாலை 6 மணி யளவில் நவாலி பிரசாத் வீதி சந்தைக்கு முன்பாகக் குடியிருக்கும் லியோன் புஸ்பராணி என்பவரது வீட்டில் நடைபெற்றுள்ளது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது:

நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் வைத்தியரின் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் மூவர் வந்துள்ளனர். அதில் இருவர் தலைக் கவசம் அணிந்திருந்தனர். ஒருவர் தலைக்கவசம் அணியாமல் வயிற்றைப் பொத்திப் பிடித்தவாறு தமக்கு வயிற்றுக்குத்து எனக் கூறிக் கொண்டு தலையைக் குனிந்த வண்ணம் வைத்தியரிடம் வந்துள்ளார். வைத்தியர் உடனே அவரைப் பரிசோதனை செய்துவிட்டு மருந்தை வழங்குவதற்காக மருத்து அறைக்குள் சென்றுள்ளார்.

அந்தவேளை உடனே அவரைப் பின் தொடர்ந்து சென்ற தலைக்கவசம் அணிந்திருந்த இருவரும் தாம் மறைத்து வைத்திருந்த கத்தியைக் காட்டி வைத்தியர் அணிந்திருந்த நகைகளைக் கழற்றித் தருமாறு கூறவே அவரும் அச்சத்தில் தான் அணிந்திருந்த சங்கிலி, காப்பு, தேடுகள், கையில் அணிந்திருந்த வைர மோதிரம் உட்பட அனைத்தையும் கழற்றிக் கொடுத்துள்ளார். இவற்றைப் பெற்றுக்கொண்டு வெளியே வந்த இவர்கள் அங்கு நின்றிருந்த வைத்தியரின் கணவரைத் தாக்கி முகம் குப்புறப்படுக்க வைத்துவிட்டு அங்கிருந்த வைத்தியரின் 75 வயதுடைய தாயார் அணிந்திருந்த தாலிக்கொடி உட்பட அனைத்தையும் கழற்றி எடுத்துள்ளனர். பின்னர் மற்றொரு அறைக்குள் சென்று அங்கு அலுமாரிக்குள் இருந்த அனைத்துப் பொருள்களையும் கிளறிப் பார்த்துவிட்டு வைத்தியரிடம் சென்று இருக்கும் பணம் அனைத்தையும் தரும்படி கத்தியைக் காட்டி மிரட்டியுள்ளனர்.

அவர் மறைத்து வைக்கப்பட்டிருந்த 16 ஆயிரம் ரூபா பணத்தையும் அவர்களிடம் கொடுத்தார். அவர்கள் அங்கிருந்து உடனடியாக மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றனர்.

இதுபற்றி மானிப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. இது சம்பந்தமாக நேற்றுக் காலை 8.30 மணியளவில் சம்பவ இடத்துக்கு மேப்ப நாயுடன் வந்த பொலிஸார் அங்கு உள்ள வாங்கு ஒன்றில் கொள்ளையரால் விட்டுச் செல்லப்பட்ட கத்தியை மறைத்து பையை மீட்டதுடன் விசாரணைகளையும் மேற்கொண்டனர். (4-100)

### கேபிள் தொலைபேசி இணைப்பு விஸ்தரிப்பு

நீர்வேலி, புத்தூர் பிரதேசங்களுக்கு கேபிள் தொலைபேசி இணைப்புக்கள் விஸ்தரிக்கப்படவுள்ளன. இதற்கென நீர்வேலி கந்தசாமி கோயிலடி மற்றும் புத்தூர் போன்ற பரிவர்த்தனைகள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த இம்சான் ஊடாக பிரதேசங்களுக்கு புதிதாக கேபிள்தொலைபேசி இணைப்பு விரைவில் வழங்கப்படவுள்ளதாக யாழ். பிராந்திய ரெலிக்கொம் சிறுவன வட்டாரங்கள் தெரிவித்துள்ளது. (ம-17)

## இந்தியா...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அத்துடன், செயலிழந்த படகிலிருந்து மீட்கப்பட்ட இந்திய மீனவர்கள் ஏழு பேரும் கடற்படையினரின் கண்காணிப்பில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (த)

## 1, 525...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

புரி நிலையங்களும் தொடர்ந்து இயங்கி வருகின்றன.

இந்த நலன்புரி நிலையங்களில் மேற்படி ஆயிரத்து 525 குடும்பங்களும் தங்கியுள்ளன என கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துப் பிரிவு அறிவித்துள்ளது. (ஜ-6)

## கத்திக்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கப்பட்டு அங்கு சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ்.பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரைத் தாம் கைது செய்துள்ளதாக யாழ். பொலிஸார் நேற்றிரவு உறுதிப்படுத்தினர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ஜ-16-23)

## புனர்வாழ்வின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சமூகத்துக்கு தான் ஏற்கனவே தெரிவித்துவிட்டதாகவும் அதனை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் கோத்தபாய இந்தச் செவ்வியில் தெரிவித்துள்ளார்.

அவர் அந்தச் செவ்வியில் மேலும் தெரிவித்தாவது:-

கைதாகித் தடுத்து வைக்கப்பட்டுள்ள நான்கு பல்கலைக்கழக மாணவர்களையும் புனர்வாழ்வு வழங்கிய பின்னரே விடுவிக்க முடியும். அதற்கு முன்னர் அவர்கள் விடுவிக்கப்படுவதற்கு சாத்தியமே இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாழ்.பல்கலைக் கழகத்துக்குள் ஏன் போகவேண்டும்? அவர்களுக்கு அங்கு என்ன வேலை? பல்கலைக் கழகத்துக்குள் சென்று இவர்கள் பயங்கரவாதத்தைத் தூண்டி விடுகிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இளைஞர் அணி தலைவரின் பின்னணியிலேயே கடந்த காலச் சம்பவங்கள் நடந்துள்ளன. இவற்றை நாங்கள் ஆதாரத்துடன் நிரூபிப்போம்.

மாணவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கிய பின்னரே அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்ற விடயம் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் உட்பட பல்கலைக்கழக சமூகத்திடம் நான் ஏற்கனவே தெரிவித்துவிட்டேன். அவர்களும் அதனை ஏற்றுக் கொண்டுள்ளனர். மாணவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால் நாங்கள் அவ்வாறு செய்யவில்லை. அதற்கு பதிலாக அவர்களுக்கு புனர்வாழ்வளிக்கின்றோம்.- என்றார். (த)

## வவுனியாவில் பச்சை மழை

வவுனியா மாவட்டத்தில் யக்காவெள கிராமத்தில் நேற்றுமுன்தினம் பச்சை நிறத்தில் மழை பெய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் மாலை 3.10 மணியளவில் இந்த மழை பெய்ததாகவும், ஆரம்பத் தில் இளம் பச்சை நிறத்தில் மழைத்துளிகள் விழ ஆரம்பித்ததாகவும் பின்னர் படிப்படியாகக் குறைவடைந்துச் சென்றதாகவும் பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர். பச்சை மழையின் போது சேகரித்த நீரை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (த)

## கொலையுண்ட...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சோதனை செய்யப்பட்டது. இதன்போதே சிறுமி வன்புணர்வு செய்யப்பட்ட பின்னர் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டமை தெரியவந்தது.

சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் விசாரணை, பரிசோதனையின் பின்னர் நேற்றுப் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சிறுமியின் உடற்பாகங்கள் இழையவியல் கூற்றுப் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (த-4)

## வெள்ளத்தால்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கிழக்கு மாகாணத்தில் இதுவரையில் 62446 குடும்பங்களைச் சேர்ந்த 231160 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கில் 10 மரணங்கள் பதிவாகியுள்ளதோடு ஒருவர் காணாமற் போயுள்ளனர்.

2168 வீடுகள் முழுமையாகவும் 3870 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

மத்திய மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 2731 குடும்பங்களைச் சேர்ந்த 9220 பாதிக்கப்பட்டுள்ளதோடு 478 குடும்பங்களைச் சேர்ந்த1573 பேர் 23 தற்காலிக முகாம்களில் தக்க வைக்கப்பட்டுள்ளனர்.

கண்டி, நுவரெலியா, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் 13 மரணங்கள் பதிவாகியுள்ளதோடு 7 பேர் காணாமற் போயுள்ளனர். (த)

## மருத்துவர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ணுவத்தில் இருந்து விலகப் போவதாகப் பெற்றோருக்கு தெரிவித்ததை அடுத்து மருத்துவர் சிவசங்கரின் உதவியுடன் அவர்கள் நேற்றுப் பிற்பகல் கொக்காவில் இராணுவ முகாமுக்குச் சென்றுள்ளனர்.

எனினும் சட்டரீதியாக இராணுவத்தில் இருந்து விலகவேண்டும் எனில் ஒரு மாத கால அவகாசம் தேவை என இராணுவத்தினர் தெரிவித்ததால் பெற்றோருக்கும் இராணுவத்தினருக்கும் இடையே முறுகல் ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து நேற்று மாலை குறித்த பெண்ணையும் பெற்றோரையும் வீடு செல்ல அனுமதித்த இராணுவத்தினர் மருத்துவர் சிவசங்கரைத் தடுத்து வைத்துள்ளனர். இந்தச் சம்பவத்தை குறித்த குடும்பத்தினர் உறுதிப்படுத்தினர்.

இதேவேளை, கைதான மருத்துவர் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதாகக் கிடைத்த செய்தியை அடுத்து மாங்குளம் பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அப்படி ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ 5-6)

## மகேஸ்வரனின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தத் தாக்குதல் சம்பவம் யாழ்.நல்லூர் கந்தசுவாமி கோயிலின் முன்பாக நேற்று முற்பகல் 9 மணியளவில் இடம்பெற்றது.

துவாரகேஸ்வரன் நல்லூர் கந்தசாமி கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்துவிட்டுத் திரும்பி வந்து தனது வாகனத்தில் ஏறிப் புறப்படுவதற்கு முற்பட்டபோதே அவர்மீது அசிட் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அவர் உடனடியாக தான் அணிந்திருந்த சேர்ட்டைக் கழற்றிவிட்டு அவ்விடத்தில் தேங்கியிருந்த மழைநீரில் உருண்டு புரண்டு எரிவு ஓரளவு குறைந்ததும் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இதுகுறித்து அவர் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெறுவது தனக்குப் பாதுகாப்பில்லை என்று கூறியுள்ள அவர் கொழும்பில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் நேற்றுச் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

அசிட் வீச்சால் அவரது முதுகுப் பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியின் பிரத்தியேகச் செயலாளரும் முன்னாள் இராணுவ அதிகாரியுமான ஜெயக்கொடி என்பவரே தன்மீது அசிட் வீசித் தாக்குதல் நடத்தியதாக துவாரகேஸ்வரன் 'உதயனி'டம் தெரிவித்தார். அசிட் வீசியதைத் தொடர்ந்து ஜெயக்கொடி மோட்டார் சைக்கிளில் அந்த இடத்டதில் இருந்து சென்றார். அவருடன் இராணுவத்தினர் எனச் சந்தேகிக்கும் நான்கு பேரும் உடனிருந்தனர் எனவும் துவாரகேஸ்வரன் கூறினார்.

நேற்றுமுன்தினம் காரைநகர் சிவன் கோயிலுக்குத் தான் சென்றபோது அங்கும் ஜெயக்கொடி என்பவர் என்னைப் பின்தொடர்ந்திருந்தார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் யாழ்.பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி சமன் சிகேராவுடன் தொடர்புகொண்டபோது,

அசிட் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டது தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆளுநரின் பிரத்தியேகச் செயலாளர் ஜெயக்கொடி என்பவரே அசிட் வீசித் தாக்குதல் நடத்தியதாகத் தான் சந்தேகிப்பதாக துவாரகேஸ்வரனின் முறைப்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது - என்று கூறினார்.

இதேவேளை-

ஜெயக்கொடி என்பவர் முரண்பாடு ஒன்று காரணமாகவே இவ்வாறு நடந்து கொண்டுள்ளார். முன்னரும் இவர் முரண்பட்டமையால் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதிக்கும் தெரியப்படுத்தினேன். கொழும்பு இராணுவத் தலைமையகத்திலும் முறைப்பாடு செய்தேன். தற்போது ஜெயக்கொடிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை நடைபெறுகிறது. அதனாலேயே என்மீது அவர்தாக்குதல் நடத்தினார் என்றார் துவாரகேஸ்வரன். (த-4-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மனித அவலங்களின் போதேனும் மனிதநேயம் பிறக்கலாகாதா?

பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும் என்ற முதுமொழி இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு, அதிலும் மிகக் குறிப்பாக வன்னிப் பிரதேச மக்களுக்கு அடிக்கடி பொருந்தும் துர்ப்பாக்கியம் நிகழ்ந்தேறி வருகிறது.

இயற்கையின் சீற்றத்தால், காலநிலை மாற்றத்தால், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்கள் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதனை அரசின் - அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் புள்ளி விவரங்களும் எடுத்துக்காட்டுகின்றன.

மேற்குறிப்பிட்ட நிலையத்தின் (இப்பத்தி எழுதப்படும் வரை) தரவுகளின் பிரகாரம் மழையால், வெள்ளத்தால் முல்லைத்தீவிலும் ஏனைய வன்னி மாவட்டங்களிலுமே மக்களுக்கு உண்டான பாதிப்பு மிக அதிகமாக உள்ளது.

கிழக்கு மாகாணத்தில், தமிழ் பேசும் மக்கள் வாழும் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களிலும் வெள்ளப்பாதிப்பும் அதனால் மக்களுக்கு உண்டான இடர்களும் குறிப்பிட்டுக் கூறக்கூடியன ஆகும்.

வடக்கில் மட்டும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் தமது வாழ்விடங்களை விட்டு இடம்பெயர நேர்ந்துள்ளது. கிழக்கின் மூன்று மாவட்டங்களிலும் ஒரு லட்சத்து 42,611 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

வன்னி வாழ் மக்களைப் பொறுத்தவரையில், இதற்கு முன்னரும் இயற்கையின் சீற்றத்தினால் அவர்களுக்கு பயிர் மற்றும் பொருள் அழிவுகள் உண்டாகின.

போரினால் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் சுமார் முப்பத்தையாயிரம் மக்கள் தங்கள் வசிப்பிடங்களை விட்டு இடம்பெயர நேர்ந்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் மட்டும் 20,000 பேருக்கும் மேற்பட்ட மக்கள், பெரு மழை காரணமாக இடம்பெயர நேர்ந்துள்ளது. அவர்கள் 39 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பெரும் எண்ணிக்கையான குளங்களைக் கொண்டது வன்னி மாநிலம். கனமழையால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் உள்ள மிகப் பல குளங்களில் நீர் நிரம்பி வான் பாய்வதாகவும் அவற்றில் பல உடைப்பெடுக்கும் அபாயம் உண்டு என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய பாதிப்புகளால், இப்போது அகதி முகாம்களில் தங்கியுள்ளவர்கள், தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிய பின்னரும் பல்வகைப்பட்ட கஷ்டங்களையும் இயலாமைகளையும் அவற்றினூடாக நாளாந்தம் சொல்லொணாத் துன்பங்களையும் அனுபவிக்கும் அபாயம் தோன்றியுள்ளது.

இயற்கையின் சீற்றம் தணிந்து, கனமழை குறைந்து வெள்ளம் வழிந்தோடினாலும் கூட, பாதிப்புற்ற மக்கள் முகாம்களில் இருந்து தமது சொந்த இடங்களுக்கு, இல்லிடங்களுக்குத் திரும்பினால் கூட -

அவர்கள் தமது இயல்பு வாழ்க்கைக்கு மீள்வது, இப்போதைய சோதனைகளையும், வேதனைகளையும், இயலாமைகளையும் விட, அதிகளவில் இல்லாமைகளை எதிர்கொள்ள நேரிடும் என்பது இப்போதே மிகத் துல்லியமாகத் தெரிகிறது.

அத்தகைய ஒரு 'அந்தகார' நிலையில் இருந்து அவர்களை மீட்பதற்கு அல்லது அவர்களுக்கு உதவுவதற்கு யார் முன்வருவர்?

வடக்கு, கிழக்கு மாகாணங்களைவிடவும் நாட்டின் ஏனைய தெற்கு மற்றும் மேற்கு மாகாணங்களையும் மழையும் வெள்ளமும் பெரியளவில் பாதித்துள்ளன. அங்கு வாழும் மக்களும் இயற்கையின் பாதிப்புகளில் இருந்து முன்னைய இயல்பு வாழ்க்கைக்கு மீள்விக்கப்பட வேண்டியவர்களே.

அதுவிடயத்தில் அரசு 'ஓடி ஓடி' அவர்களுக்கு உதவும் என்று சொல்லித் தெரியவேண்டியதில்லை. இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்படும் மக்களுக்கு, நிவாரணமும் சரி, ஏனைய உதவிகளும் சரி ஒரே கோட்டில் நின்று, ஏற்றத்தாழ்வு இன்றி, பாகுபாடு காட்டாமல் எல்லோரும் இந்நாட்டு மக்களே என்ற அளவுகோல் கொண்டு செயற்படுத்தப்பட வேண்டும். அதுவே உண்மையான மனிதநேயம், மக்கள் நேயம்.

உண்மையைச் சொல்லப்போனால், இந்த நாட்டில் பல தசாப்தங்களாக அத்தகைய செயற்பாடுகள் சம்பந்தப்பட்ட தரப்புகளால் மறக்கப்பட்டு விட்டது; இல்லையில்லை மறுக்கப்பட்டு வருகிறது.

ஏனைய உதவித் திட்டங்கள், வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்களில் காட்டப்படும் பாகுபாடுகள் இயற்கை அனர்த்தப் பாதிப்புகளில் இருந்து மக்களை மீள்விப்பதிலும் தொடரவே செய்கிறது.

நாட்டின் பல பகுதிகள் வெள்ள அனர்த்தத்தால் பாதிப்புற்றுள்ளன. அவை எல்லாவற்றுக்குமான அரசின் உதவிகளில் பாகுபாடும் பாரபட்சமும் காட்டாமல் உதவுவதே நல்லாட்சிக்கு அணிகலனாக அமையமுடியும்.

கடந்த பல வருடங்களாக, குறிப்பாக அண்மைக் காலங்களில் நாட்டின் சகல பிரதேசங்களுக்குமான உதவிகள் ஒரே சீராக, ஒரே வகைப்பட நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. எங்கும் எதிலும் ஏற்றத்தாழ்வு என்ற நிலையே ஓங்கி உயர்ந்து நிற்கிறது!

இத்தகைய பின்புலத்தில், இயற்கையின் சீற்றத்தினால் பாதிப்புற்ற வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மக்களுக்கு ஓர் அளவுகோலையும், ஏனைய மாகாணங்களைச் சேர்ந்த பாதிப்புற்ற மக்களுக்கு மற்றோர் அளவுகோலையும் வைத்துக்கொண்டே உதவிகள் வழங்கப்படுவதை அரசாங்கம் தவிர்க்குமா? மனிதநேயத்தின் பாற்பட்டேனும் பாகுபாட்டையும் பாரபட்சத்தையும் கைவிட்டுச் செயற்பட முனையலாகாதா?

எல்லோரும் இந்நாட்டு மக்களே என்ற நிலைப்பாட்டை அரசு கைக்கொள்ளுமா? அல்லது அவ்வாறு செய்வதான ஒரு தோற்றத்தை மட்டும் காண்பிக்குமா?

மனித அவலங்களின் போதேனும் சமன்செய்து சீர்தூக்கும் கோல் போன்று செயற்படும் பக்குவம் எப்போது வரப்போகிறது, - இந்நாட்டின் ஆட்சியாளருக்கு....?

# நீதித்துறையின் ஊடாக இலங்கைக்குள் அரபு வசந்தத்தை உருவாக்க சூழ்ச்சி

## நல்லாட்சியை வீழ்த்துவதற்கான சதி என்கிறார் கோத்தபாய

நீதித்துறையூடாக இலங்கைக்குள் அரபு வசந்தத்தை உருவாக்க சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

''ஜனாதிபதியால் நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள நல்லாட்சியை வீழ்த்துவதற்கு கடந்த காலங்களில் பல சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அவை யாவற்றையும் நாம் வெற்றிகரமாக முறியடித்துள்ளோம். எனவே, இனிவரும் காலங்களில் நாட்டுக்கு விடுக்கப்படுகின்ற சவால்கள் குறித்து மக்கள் அவதானத்துடன் இருக்கவேண்டும்'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குருநாகலில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பாதுகாப்புச் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி தலைமையில் நாட்டில் இடம்பெற்று வருகின்ற நல்லாட்சியை வீழ்த்துவதற்கு கடந்த காலங்களில் பல சவால்கள் விடுக்கப்பட்டன. இதற்காக பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழிற்சங்கத்தினர் ஆகியோரைப் பயன்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன், அரபு நாடுகளின் ஆட்சிகளை வீழ்த்திய எமக்கு இலங்கையிலும் அதைச் செய்ய முடியும் என்ற நிலைப்பாட்டில் அவர்கள் இருந்தனர். ஆனால் இலங்கையில் இருப்பது ஜனநாயக ஆட்சிமுறை. இந்த நல்லாட்சியின் காரணமாக மக்கள் பெரிய நம்பிக்கையுடன் வாழ்ந்து வருகிறார்கள். மக்கள் கொண்டுள்ள இந்த நம்பிக்கையாலேயே அவர்களுக்கு அதைச் செய்யமுடியாமல் போயிற்று.

தற்போது அதை நீதித்துறையினூடாக மேற்கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நாடு அபிவிருத்தி அடைய வேண்டுமாயின்- நாட்டில் முதலீடுகளை மேற்கொள்ளக்கூடிய வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டுமாயின்- சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வரவேண்டுமாயின் - சமாதானமும், ஸ்திரத்தன்மையும் நாட்டில் உயர்ந்த நிலையில் இருக்கவேண்டும்.

30 வருட காலமாக பல துன்பங்களை அனுபவித்து நாட்டில் உருவாக்கப்பட்டுள்ள சமாதானத்தையும் ஸ்திரத்தன்மையையும் இல்லாதொழிக்க பல சவால்கள் விடுக்கப்படுகின்றன. இந்தச் சவால்கள் தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.- எனத் தெரிவித்துள்ளார்.

# ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் வருவாய் 235 கோடி ரூபாவால் குறைவு

கொழும்பு,டிசெ.30

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு கடந்த ஆண்டு நிதியச் சபையின் கடந்த ஆண்டின் வருமானம் 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 235 கோடி ரூபா வரையில் குறைவடைந்திருப்பதாக நிதியச் சபையின் 2011 இன் வருடாந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

இந்தச் சபையின் 2011 ஆம் ஆண்டின் வருமானம் 1310 கோடி ரூபா என்பதோடு, அது 2010 ஆம் ஆண்டில் 1545 கோடி ரூபாவாக இருந்துள்ளது என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, கடந்த ஆண்டில் வருமானம் குறைவடைந்துள்ளமைக்கு முதலீடுகள் மீதான வட்டி வருவாய் கீழிறங்கியுள்ளமையே காரணமாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டின் நிகர இலாபம் 1157 கோடி ரூபா என்பதோடு வைப்புக்களுக்கான வட்டிகள் மற்றும் இலாபப் பங்குகளாக 1230 கோடி ரூபா கொண்ட தொகை அந்த ஆண்டில் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

சபையின் உறுப்பினர்களது நிதியமானது 2010 ஆம் ஆண்டில் 10 ஆயிரத்து 700 கோடி ரூபாவாக இருந்துள்ளதோடு அது கடந்த ஆண்டில் 12 ஆயிரத்து 300 கோடி ரூபா வரையில் அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டுகிறது. (ம-22)

# ஆணைக்குழுக்களின் உறுப்பினருக்கும் வரிச்சலுகையின் கீழ் வாகனங்கள்

கொழும்பு,டிசெ.30

அரசமைப்பின் விதிமுறைகளுக்கு அமைவாக நிறுவப்பட்டுள்ள ஆணைக்குழுக்களின் தலைவர்களுக்கு அந்தக் குழுக்களின் உறுப்பினர்களுக்கும் கூட வரிச்சலுகைகளின் கீழ் மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பாக அனுமதிப் பத்திரங்களை வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, ஆணைக்குழு ஒன்றில் தொடர்ச்சியாக மூன்றாண்டு கால சேவையைப் பூர்த்தி செய்துள்ள தலைவர்களுக்கு மற்றும் அவற்றின் உறுப்பினர்களுக்கு இந்த வரப்பிரசாதம் கிட்டுகிறது.

அரச அதிகாரிகளுக்கு அதிகபட்சமாக 25 ஆயிரம் அமெரிக்க டொலர்களுக்குள் வரிச்சலுகைகளின் கீழ் வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பாக அரசால் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுவதோடு அதற்குச் சமமான அனுமதிப் பத்திரம் ஒன்று இவர்களுக்கும் உரித்தாகிறது.

இத்தகைய அனுமதிப் பத்திரம் ஒன்றின் கீழ் அவசியம் எனில் 25 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் வரையிலான பெறுமதி கொண்ட வாகனங்களை இறக்குமதி செய்ய முடியும். அத்துடன் அதற்கு மேலதிகமாக அதிகரிக்கும் 5,000 டொலர்கள் தொடர்பாக மாத்திரம் மேலதிக இறக்குமதி தீர்வை வரி ஒன்றை அவர்கள் செலுத்த வேண்டி ஏற்படும்.

இது சம்பந்தமான சுற்றறிக்கை ஒன்று திறைசேரியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தரவால் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கு கடந்த மாதத்தில் அனுப்பப்பட்டுள்ளது.

இதனிடையே வரிச் சலுகைகளின் கீழ் இறக்குமதி செய்யப்படும் வாகனம் ஒன்று மூன்றாண்டுகள் கடப்பதற்கு முன்னர் வேறு தரப்பு ஒன்றுக்கு உடைமை மாற்றம் செய்யப்படக்கூடாது என்பதாக இதற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையின் விதி புதிய சுற்றறிக்கையில் நீக்கப்பட்டுள்ளது. (ம-22)

# புதுவருடம் பொங்கலுக்காக சலூன் திறப்பு

வடமராட்சி,டிசெ.30

புதுவருடம், தைப்பொங்கல் தினங்களை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமையும், 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள சலூன்கள் திறந்து தொழில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று வடமராட்சி சிகை ஒப்பனையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட தினங்கள் விடுமுறை தினங்களாக இருந்த போதிலும் பண்டிகைக் காலங்களை ஒட்டி விசேட ஏற்பாடாக சலூன்கள் திறக்கப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)

# சூளை எண்ணெய் விலை 25 ரூபாவால் அதிகரிப்பு

மின்சார சபை மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்படும் சூளை எண்ணெயின் விலையை நாளை திங்கட்கிழமை தொடக்கம் அதிகரிப்பதற்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

அந்த வகையில், ஒரு லீற்றர் சூளை எண்ணெயின் விலை 25 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மின்சார உற்பத்தி மற்றும் பெரிய உலைகளை சூடேற்றுவதற்காக இந்த சூளை எண்ணெய் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நெடுந்தீவில் 3 தினங்களாக மின் விநியோகத்தில் தடை

## மக்கள் சிரமத்தில்

யாழ்ப்பாணம்,டிசெ.30

நெடுந்தீவில் கடந்த மூன்று தினங்களாக மின் விநியோகம் தடைப்பட்டதால் மக்கள் சிரமத்துக்கு ஆளாகி வருகின்றனர்.

[illegible] மின்விநியோகம் இடம்பெறவில்லை எனவும் தற்சமயம் கடும் கொந்தளிப்புடன் கடல் உள்ளதால் டீசலை எடுத்துச் செல்வதில் சிரமங்கள் உள்ளதாகவும் கூறப்பட்டது.

தற்போது கைவசம் உள்ள டீசலைக் கொண்டு ஒரு சில மணித்தியாலங்கள் மட்டுமே மின் விநியோகம் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளக் காடாகியது வன்னிப் பிரதேசம்



முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதி வீடொன்றுக்குள் வெள்ளம்



விசுவமடு வெள்ளத்தில்



தர்மபுரம் பிள்ளையார் ஆலய வீதியில் வெள்ளம்



வெள்ளக் காடாக பரந்தன் நகர்ப் பகுதி



மாங்குளம் இலங்கை வங்கி வெள்ளத்தில்



ஊரியான் பகுதியில் வெள்ளத்தில் மூழ்கியுள்ள வீடு



முல்லைத்தீவு - முள்ளியவளை வீதியை மூடி வெள்ளம்



முரசுமோட்டை பொதுச்சந்தை



முரசுமோட்டை வர்த்தக நிலையம்

## சுகாதாரத்தை பேணுமாறு முல்லைத்தீவில் அறிவுறுத்தல்

முல்லைத்தீவு,டிசெ.30

முல்லைத்தீவில் தொடர்மழை காரணமாக தொற்று நோய்கள் பரவி வருவதால் சுகாதார வழிமுறைகளைக் கையாளுமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தி வருகின்றனர்.

அண்மைய நாள்களாக முல்லைத்தீவு மாவட்டம் முழுவதும் கனமழை பெய்து வருகின்றது. இதனால் பல்வேறு இடங்களிலும் வெள்ளம் தேங்கி நிற்பதால் தொற்றுநோய்கள் பரவி வருகின்றன.

குறிப்பாக காய்ச்சல், வயிற்றுளைவு போன்ற நோய்கள் அதிகளவில் மக்களைப் பாதித்து வருகின்றன. வைத்திய வசதிகளைப் பெறுவதிலும் மக்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனால் நீரைக் கொதிக்க வைத்து ஆறிய பின்னர் பருகுமாறும், காய்கறிகளை நன்கு கழுவிய பின்னர் சமைக்குமாறும் இயன்றவரை சூடான உணவுகளை உட்கொள்ளுமாறும் சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தி வருகின்றனர்.

(சு-500)

## நாயாற்று வழியில் இருந்து விசேட படகுச் சேவைகள்



மன்னார்,டிசெ.30

மன்னார்-சங்குப்பிட்டி பிரதான வீதி (ஏ-32) நாயாற்று வழி பகுதியில் ஆற்று நீர் பெருக்கெடுத்துள்ள காரணத்தினால் குறித்த வீதியூடான போக்குவரத்துக்கள் கடந்த 3 தினங்களுக்கு மேலாகப் பாதிப்படைந்த நிலையில் காணப்படுகின்றன.

இதனால் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விடத்தல்தீவு, சன்னார், ஈச்சலவக்கை, பெரியமடு, கோவில்குளம், சவேரியார்புரம், தேவன்பிட்டி ,வெள்ளாங்குளம் உட்பட பல கிராமங்களுக்கான போக்குவரத்துக்கள் பாதிப்படைந்த நிலையில் காணப்படுகின்றன. இதனால் பல ஆயிரக்கணக்கான மக்கள் நிர்க்கதியான நிலையில் உள்ளனர்.

இராணுவத்தின் 541 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் கடற்படையினர் படகுகள் மூலம் மக்களை ஏற்றி இறக்கும் சேவையில் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

நாயாற்று வழி பிரதான பாதை வெள்ள நீரில் மூழ்கியுள்ளமையால் குறித்த பகுதியில் இருந்து சுமார் 200 மீற்றர் வரை மக்களைப் படகுகள் மூலம் கடற்படையினர் ஏற்றி இறக்கி வருகின்றனர்.

குறித்த பகுதியில் பொலிஸார், கடற்படையினர் மற்றும் இராணுவத்தினர் மக்களுக்கான போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

(த-12)

## பரப்புக்கடந்தான்குளம் உடைப்பெடுப்பு

### அப்பகுதி மக்கள் இடம்பெயர்வு

மன்னார், டிசெ.30

மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பரப்புக்கடந்தான் குளம் உடைப்பெடுத்துள்ளமையால் குறித்த வீதியூடான போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ளன. 541 ஆவது படைப்பிரிவு இராணுவத்தின் முயற்சியில் குறித்த வீதியூடான போக்குவரத்துக்கள் தற்போது பெரும் சிரமத்துக்கு மத்தியில் இடம்பெறுகின்றன. மன்னார் - மதவாச்சி பிரதான வீதியில் தம்பனைக்குளம் பகுதியில் வீதி வெள்ள நீரில் மூழ்கியுள்ளமையால் மடு பரப்புக்கடந்தான் வீதியூடாக மன்னாருக்கும்,தென்பகுதிக்குமான போக்குவரத்துச் சேவைகள் இடம்பெற்று வந்தன.

இந்த நிலையில் பரப்புக்கடந்தான் குளம் உடைப்பெடுத்துள்ளமையால் குறித்த வீதியூடான போக்குவரத்தும் பாதிப்படைந்துள்ளது.

இந்த நிலையில் இராணுவத்தின் 541 ஆவது படைப்பிரிவு அதிகாரி பிரிகேட் கொமாண்டர் லந்திராவின் பணிப்புரைக்கு அமைவாக பரப்புக்கடந்தான் குளம் உடைப்பெடுத்துள்ள பகுதியில் இராணுவத்தினர் விசேட கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த பகுதியில் மண் மூடைகள் அடுக்கப்பட்டு வெள்ள நீர் வேகம் சற்றுக் குறைக்கப்பட்டு



மக்களின் போக்குவரத்துக்கள் இடம்பெற்று வருகின்றன. தற்போது குறித்த வீதியூடாக மட்டுப்படுத்தப்பட்ட அளவு போக்குவரத்துச் சேவைகள் மாத்திரமே இடம் பெற்று வருகின்றன.

குறித்த கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

(த-12)

### இயற்கை அழிவுகளில் இருந்து

## மக்களை காக்க வேண்டிய பொறுப்பு அரச அலுவலர்களைச் சார்ந்தது

### அறிவுறுத்தினார் கிளிநொச்சி அரச அதிபர்

கிளிநொச்சி, டிசெ.30

இயற்கை அழிவுகளிலிருந்து மக்களைக் காக்க வேண்டிய பொறுப்பு அரச அலுவலர்களைச் சார்ந்தது. இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் இடம்பெற்ற தேசிய பாதுகாப்புத் தின நிகழ்வில் தலைமையுரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இயற்கை அழிவு தொடர்பான விவரங்களை அறியாத நிலையில் மக்கள் உள்ளபோது இது தொடர்பாக மக்களுக்கு அரச அலுவலர்கள் விளக்கமாகத் தெரிவிக்க வேண்டும்.

அண்மையில் பன்னங்கண்டிப் பகுதியில் ஆலய வழிபாட்டில் மக்கள் ஈடுபட்டிருந்தனர். அப்பொழுது மக்களை வெள்ளம் சூழ்ந்து விட்டது. அவ்விடத்திற்கு அரச அலுவலர்கள் சென்றபோது மக்கள் வரப்போகும் ஆபத்தை உணராத நிலையில் இருந்தனர். மேலும் வழங்கவிருந்த உதவிகளையும் மறுத்துள்ளனர். இந்த நிலை மாற வேண்டும். இயற்கை அழிவுகள் தொடர்பாக மக்களும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். இதற்கு அரச அலுவலர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலர்கள், அரச செயலக உத்தியோகத்தர்கள், ஒக்ஸ்பாம் பிரதிநிதிகள், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சிவசுப்பிரமணியம் ஜீவரத்தினம்



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், உசன், மிருசுவிலை வசிப்பிடமாகக் கொண்ட வரும் தற்போது இல.1, வெங்கடேஸ்வரா வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்துவந்தவருமான சிவசுப்பிரமணியம் ஜீவரத்தினம் 26.12.2012 புதன்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின்(மணியம் களஞ்சியம் - கொடிகாமம்) அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான முருகேசு - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாராயணபிள்ளை - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நாகராசா மற்றும் ஜெயராசா (லண்டன்), இராஜேஸ்வரி, சாந்தினிதேவி, இரஞ்சன் (ஜீவா ஸ்ரோஸ், மல்லாகம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கார்த்திகேசு, சிவகுரு, காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை ஆகியோரின் மைத்துனியும் ராஜீவன் (நோர்வே), சுரேஸ்குமார் (Softview Computer College) விஜிதா (ஆசிரியர்.நாவாந்துறை RCS),ராஜ்குமார் (லண்டன்), சுஜாதா (சுவீடன்), ஆகியோரின் அன்புத்தாயாரும் விக்ரிஷ் (நோர்வே), சாந்தி (ஆசிரியர், கிளி/புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம்), பரம்தில்லைராஜன் (ஆசிரியர், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி),குணரேகா ,கரன் (சுவீடன் ) ஆகியோாரின் அன்பு மாமியாரும் சாமினி, கபிலா, சந்துரு, கார்முகி ,செந்தூரி ,யதுவந்தி, கபிலினி, தமிழினி, விதுஷன், ஜதுஷன், பிரதீப்ராஜ், அபிராஜ், வித்தகி, சாதனா, அதிசயன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரி யைக்காக பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் ,உறவினர்கள் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


இல. 01, வெங்கடேஸ்வரா வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

வீடு விற்பனை
யாழ்ப்பாணம்
அச்சுவேலி ஜோன் ராஜ வீதியில் 4 பரப்புடன் 5 அறை வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:-0773028402

மணமகள் தேவை
(UK Citizan)இந்து கௌரவ குடும்பம்18.10.1985 (UK.Citiz)(I.T Enginiax) கேட்டை பாவம் 27, (05.10.1973) உத்தரட்டாதி நட்சத்திரம் பாவம் 30 அரச வேலைபுரிபவர். ஆகியோர் படித்த மணமகளை எதிர்பார்கின்றார்கள்.
லண்டன்
00447833819736



ஈழத்து சிதம்பரம்
மாணிக்க வாசகர் மடாலய அன்னதான சபை
திண்ணபுரம், காரைநகர்.

மேற்படி ஆலயத்தில் நடைபெற்ற திருவெண்பாவைப் பெரு விழாவின் போது மாணிக்க வாசகர் மடாலயத்தினால் நடத்தப் பெற்ற (மாகேற்சவ பூஜை) அன்னதானத்தில் கலந்து கொண்டு சிறப்பித்த அடியார்கள், பல வழிகளில் உதவி புரிந்தோர், தொண்டர்கள் மற்றும் புலம் பெயர்ந்தவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதோடு எல்லாம் வல்ல ஈழத்து சிதம்பர ஸ்ரீ சிவகாமி சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் பூரண கிருபா கடாச்சம் எல்லோருக்கும் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

மாணிக்க வாசகர் மடாலய அன்னதான சபை
சிவன் கோயில், காரைநகர்.

மங்களா காட்சியறையில் Mega Sale
சகல பிளாஸ்ரிக் கதிரைகளுக்கும் 100/= வரை விலைக் குறைப்பு
கட்டில் - 1500/=
D - மெத்தை - 2500/=
Glass New Tepo - 4000/=
Glass New T/V Stanrd - 3000/=
மாபெரும் ஏல விற்பனை
இன்று மட்டும்
முற்பகல் 10 மணி - 12 மணிவரை, பிற்பகல் 4 மணி - 6 மணிவரை
Glass New LCD T/V Stanrd - 8000/=
Computer Table - 2500/=
Visitors Chair - 1500/=
Stell Cuberd - 7000/=
பல தளபாடப் பொருள்கள் நம்பமுடியாத விலைகளில்
காசு இல்லையா கவலையை விடுங்கள். சிறிய முற்பணம் செலுத்தியும் நீங்களும் ஏலத்தில் கலந்து கொள்ளலாம்
Mega Sale

# கண்ணீர் காணிக்கை



## திரு.ச.சபா நடேசன்

தீர்த்தத் திருநாளில் திருவடி சென்றார்
குல தெய்வம் நோக்கி கும்பிட்டுக் காவடி
ஆடிய உனக்கு
தில்லைக் கூத்தனின் திடீர் அழைப்புக்
கிடைத்ததுவோ
மங்கள வாத்தியம் முழங்க மகிழ்வோடு
காவடியாடியவனைத் தில்லைக் கூத்தன்
அழைத்தானோ
தீர்த்த நாளில் தீராத பக்தனை
நின் திருவடிக்கு அழைத்து விட்டாய்
ஆறாது கண்ணீரோடு அவன் உறவுகள் நாம்
தவிக்கின்றோம்
ஆறுதல் தா அம்பலவாணனே

அன்னாரின் ஆத்மா சாந்தி பெற ஈழத்து சிதம்பரத்தானை வேண்டி நிற்கின்றோம்.

M. குரைத்தினம்
S.V.M ஸ்தாபனம்
(கொழும்பு, யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக!

தரமான NO1 கொப்பி
களை நியாய விலையில்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்பெற்றுக்
கொள்ளலாம்.
வியாபாரிகளிற்கு விசேட
விலைக்கழிவு
ஜெயராம் களஞ்சியம்
92,K.K.S.Road Jaffna
021 222 6452, 077 3150100
**Why you Pay More?**
(C5137) (6.7.4)

## பணிப்பெண் தேவை

சிலாபத்தில் தமிழ்க் குடும்ப மொன்றுக்கு வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலைகள் செய்வதற்கு பணிப் பெண் தேவை.
சம்பளம் 10,000/=
தொடர்பு: 077 6972788
(27347) (6.7.4)

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலைகள் செய்வதற்கு பணிப் பெண் தேவை.
தங்குமிட வசதிகளுடன் சம்பளம் ரூபா10,000/=
தொடர்பு: 021 3205013
(27348) (6.7.4)

## தவறிவிட்டது

கனகாசலம் வைகுந்தன் என்பவருடைய தே. அ.அட்டை (833043200V), சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் அலுவலக அடையாள அட்டை என்பன ஆனைப் பந்திக்கும் கிராமக் கோட்டுச் சந்திக்கும் இடையில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு:077 3137210,021 226 0201
(C5141) (6.7.4)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம்
பிள்ளையார் கோயிலடியில் வீட்டுடன்
கூடிய 4½ பரப்புக் காணி
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777683030
(18098) (6.7.4)

## வாடகைக்கு

பருத்தித்துறை நகரின் பிரதான வீதியில்
1500 சதுர அடி கொண்ட 3 கடைகள்
வாடகைக்கு உண்டு.
தொடர்புக்கு:சிவா 077 1298201
(C5142) (6.7.4)

## காணி விற்பனைக்குண்டு

யாழ். கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள நாயன்மார் வீதிக்கும், மூத்தவிநாயகர் வீதிக்கும் இடையிலுள்ள ஒழுங்கையில் இல. 108/3 என்ற முகவரியுடைய 1½ பரப்புக் காணி வீடு, தனிக் கிணறு, மலசலகூடத்துடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0212226604,
0779585503
(27248)(3.8)

## கடைக்காணி விற்பனைக்குண்டு

யாழ். நகர் பிரதான வர்த்தகப்பகுதியில் முட்டாசுக்கடைச் சந்திக்கு அருகில் காங்கேசன்துறை வீதியை முகப்பாகக் கொண்ட இரண்டு கடைக்காணிகள் விற்பனைக்குண்டு. 25 அடி அகலமும் ஏறத்தாழ 120 அடி நீளமும் கொண்டது.
தொடர்பு:
0755634032

லண்டன் / கனடா / அமெரிக்கா / சுவிஸ் / ஜேர்மன் / பிரான்ஸ் / இத்தாலி / டென்மார்க் / அவுஸ்திரேலியா / நியூஸ்லாந்து ஆகிய நாடுகளுக்கு செல்ல இருப்பவர்களுக்கு

## வங்கியில் பணவைப்பு

அரச வங்கியில் 12, 6, 3 மாதங்களுக்கான முன் பின் வங்கியில் பணவைப்பு
Saving Book - FD- Statement
விசா பெற்றுக் கொள்வதற்கு தேவையான சகல உதவிகளும் எம்பசி வேலைகள் செய்து தரப்படும்.
077 4789289
077 9122334
No. 52 Davidson Road,
Colombo 04.
நேரத்தை முன்கூட்டியே பதிவு செய்துவிட்டு வரவும்.
FLEX Graphic

## வெளிநாடு செல்ல அவசியமான IELTS.ஆங்கிலக்கற்கை நெறியும் Spoken English வகுப்பும்


அதிவண.மைக்கேல்

ஆஸ்திரேலியப் பிரஜையிடம் கற்கலாம். IELTS 1மாதம் சனி, ஞாயிறு காலை 9மணிSpoken English O/L,A/L,பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு மிகவும் ஏற்றது(ஒரு மாதம்சனி ஞாயிறு பி.ப ஒரு மணி
திசைகாட்டி (பிறைவேற்)லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0212219016
(27345)(7)



## கண்ணாடி இழைப்படகு(சுப்பர்போட்) விற்பனைக்குண்டு

18’ 6” நீளமுடைய 10 கண்ணாடி இழைப்படகு (சுப்பர் போட்) பொறியியலாளரின் தரச்சான்றிதழுடன் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: நிர்வாக இயக்குநர்,
ஸ்ரார் இன்டஸ்ரியல் சேர்விஸஸ்,
பிரைவேட் லிமிடெட்
15/1,பிள்ளையார் கோயில் வீதி,
நாயன்மார்கட்டு, நல்லூர்,யாழ்ப்பாணம்.
(27404) (6.7.4)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவப்பிரகாசம் சிவபாக்கியம்



சீரணி, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிர காசம் சிவபாக்கியம் நேற்று (29.12.2012) சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவப்பிரகாசத்தின் அன்பு மனைவியும், மகாதேவன், கணேசமூர்த்தி, காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், மகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சீரணி,
சண்டிலிப்பாய். (27349)(3.8)
தகவல்:
குடும்பத்தினர்.

## இலவச திருமணசேவை

பல்லாயிரம் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பதிவுகள் தொடர்புகள் முற்றிலும் இலவசம்.
www.mailgroom.com or
www.subamangalam.com

## விற்பனைக்கு

சுவை நிறைந்த தரமான
Wedding Rich Cake ஓடர்கள்
நியாயமான விலையில் செய்து
தரப்படும்.
077 4984568,
075 2672734
(27333) (6.4)

## விற்பனைக்கு

குறைந்தளவு மணித்தியாலங்களே
பாவிக்கப்பட்ட (DSR-PD 170)
டிஜிற்றல் வீடியோ கமரா
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 5631888
(27328) (6.7.4)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த B.A,
27 வயதுள்ள, செவ்வாய் 7 இல்,
உத்திரட்டாதி 3 ஆம் பாதம் உடைய
மணமகளுக்கு மணமகன் தேவை.
மேலதிக விவரம் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு :077 630 9892
(27320)(6.11)

## நடமாடும் சேவை

கணினிகள், மற்றும் LED,LCD,TV கள்,
SCANNER,PRINTER,LAPTOP
போன்றன உங்கள் இடங்களுக்கே வந்து
உத்தரவாதத்துடன்
திருத்திக்கொடுக்கப்படும்.
(27097)(5-6-7) தொடர்பு:077 191 4725 கோப்பாய்.

## ENGLISH TEACHING CENTRE , KARANTHAN ROAD, NEERVELY

* SPOKEN& WRITTEN ENGLISH
* ஆரம்ப நிலையிலிருந்து சகலருக்கும் உரியது.
* விரிவான,விளக்கமான கற்பித்தல்
* வகுப்பு வார இறுதி நாள்கள் (சனி,ஞாயிறு) மு.ப. 10-12 வரை

புதிய பிரிவுகள் ஆரம்பம் 05.01.2013
ஆசிரியர்:ச.நவரத்தினம்
ஆங்கில விரிவுரையாளர் (பகுதி நேரம்)
தொழில் நுட்ப கல்லூரி, வவுனியா
தொடர்பு: 077 9790955.
(27451) (6.7.4)

## A/L வரலாறு - 2015

தேசிய மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் வரலாறு பாடத்தில் மாணவர்கள் சாதனை மிக்க பெறுபேற்றைப் பெற வழி காட்டிய உங்கள் ஆசான் M.பத்மன் B.A (Hons) History, M.A (History) அவர்களின் வகுப்புக்கள் 05.01.2013 (சனிக்கிழமை) ஆரம்பம்.
D.M.I,
யாழ்- நகர்- உயர் கலைக் கல்லூரி, குளப்பிட்டிச் சந்தி.
(27357)(6.11)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
05.12.1942

மறைவு
30.11.2012

திருமதி **திருநீலகண்டர் பாக்கியநாயகி**

எமது பாடசாலை ஆசிரியை திருமதி.இ.ஸ்ரீவதி அவர்களின் தாயாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.
கிளி/ பரந்தன் இந்து ம.வி. ஆசிரியர் நலன் புரி சங்கம்.


## கண்ணீர் அஞ்சலி



Dr.K.இந்திரமோகனின்
அன்புத் தந்தை
செல்லத்துரை
கெங்காதரன்
அவர்களின்
பிரிவால்
துயருற்றிருக்கும்
அவரது
குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
றோயல் மெடிக்கல் சென்ரர்,
சுன்னாகம் மெடிக்கல் கிளினிக்.
(27341)(6.11)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் யோக்கியசிங்கம் சுதர்சன்



மலர்வு : 15.12.1976
உதிர்வு : 30.12.2008

ஆண்டுகள் நான்கு
ஓடிப்போனது
ஆறாத துயர் மட்டும்
இன்னும் ஓய்ந்ததில்லை
மாறாத பந்தமும்
நீங்காத நினைவுகளும்
அலை கொண்டு
போனாலும்
அண்ணா எங்களோடுதான்
வாழ்ந்திடுவாய்
வருடங்கள் பலவானாலும்.
என்றும் நினைவுடன்:
அன்பின் தங்கை.
4 ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை.
(27250)(6-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# UK CITY&GUILDS குழுமத்தின் ஆங்கில பயிற்சிக்கான விருது




UK CITY&GUILDS நிறுவன சிறப்பு விருது பற்றி Exponet நிறுவன நிறைவேற்று அதிகாரி திரு.ச.ஸ்ரீநிமால் அவர்களை தொடர்பு கொண்டபோது அவர் பெருமையுடன் கூறியதாவது:

Exponet Overseas Consultant இனால் 2011ஆம் ஆண்டு ஆரம்ப பகுதியில் யாழ்ப்பாணத்தில் ஆங்கில கணனிக்கற்கை நெறிகளை பயிற்றுவிப்பதற்காக London Metropolitan College ஸ்தாபிக்கப்பட்டது.

இங்கு City & Guilds இன் ஆங்கில கற்கை நெறிகளான A1 (Preliminary Level), B1 (Achiever Level), B2 (Communicator Level) ஆகியன மிகவும் உயர் தொழில்நுட்ப வசதிகளுடன் நேர்த்தியாக, முழுமையான பயிற்சி விளக்கங்களுடன் கற்பிக்கப்பட்டு மாணவர்கள் உயர்சித்திகளை எய்துவதற்கு வழிகோலப்பட்டு வந்துள்ளது.

இதன் பொருட்டு 2012ஆம் ஆண்டின் City & Guilds நிறுவனத்தின் முன்னிலை கல்வி நிறுவனத் தேர்வில் தெரிவு செய்யப்பட்டு கடந்த 12.12.2012 அன்று கொழும்பிலுள்ள Srilanka Institute இன் பார்வையாளர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில் City & Guilds இனால் முன்னிலை நிறுவனத்திற்கான அங்கீகார சிறப்பு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது என்பதை தெரிவிப்பதில் பெருமை அடைகிறோம்.

(City & Guilds ஆங்கில கற்கைநெறி பற்றி A1, B1, B2 UKBA (UK Border Agency) இனால் UK Visa நடைமுறைகளுக்கு அமைவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கற்கைநெறிகள். அத்தோடு இலங்கையில் தொழில்தரும் சகல நிறுவனங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில கற்கைநெறி.

City & Guilds A1 கற்கைநெறி பற்றி எடுத்து நோக்குவதாயின் திருமணம் செய்து UK க்கு Spouse/Partner வில் செல்வோருக்கான உகந்த கற்கைநெறி. இப்பாட நெறியில் இந்த வருட ஆரம்பப்பகுதியில் City & Guilds இனால் மறுசீரமைக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கு அமைவாக எம் நிறுவனத்தினால் மிகத்துல்லியமாக குறுகிய காலத்திலேயே போதிக்கப்பட்டு வருகிறது. இதன்பேறு 100% உயர்சித்திகள் கிடைக்கப்பெற்றன. அடுத்து B1 கற்கை நெறியை எடுத்து நோக்குவோமாயின் இது Student Visa மூலம் UK செல்பவருக்கு பொருத்தமான கற்கைநெறி. அதாவது இலங்கை அரசின் பாடத்திட்டத்திற்கு அமைவாக O/L அல்லது A/L சித்தியெய்திய மாணவர்கள் தங்கள் உயர் கற்கைநெறிகளை UK ன் ஒரு கல்லூரியில் கற்க வேண்டுமாயின் அதற்கு தேவையான ஆங்கில புலமையினை இக் கற்கைநெறி மூலம் உறுதி செய்து கொள்ளலாம். இக்கற்கைநெறியை எமது நிறுவனம் மிகவும் திறம்பட மாணவர்களுக்கு போதித்து உச்ச அடைவுகளை எய்தி வருகிறது.

தொடர்ந்தும் வருங்காலத்திலும் எமது நிறுவனம் City & Guilds இன் முன்னிலை நிறுவனப்பட்டியலில் தமது நற்பெயரை தக்கவைத்துக்கொள்ளும் என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்-என்றார்.


# அரிசி ஏற்றுமதியில் இந்தியா முதலிடம்



இந்தியா இவ்வருடம் அரிசி ஏற்றுமதியில் சர்வதேசரீதியில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. இந்த வருடம் இந்தியா இதுவரை 90 இலட்சம் தொன்னுக்கும் அதிகமாக அரிசியை ஏற்றுமதி செய்துள்ளது. இதன் மூலம், இதுவரை அரிசி ஏற்றுமதியில் முதலிடத்தில் இருந்த தாய்லாந்தை பின்னுக்கு தள்ளி விட்டு முன்னேறியுள்ளது.

எனினும், நடப்பு பருவ காலத்தில் போதிய பருவமழை இல்லாததால், இந்தியாவின் நெல் உற்பத்தி குறையும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால், 2013ஆம் ஆண்டு தாய்லாந்து மீண்டும் அரிசி ஏற்றுமதியில் முதலிடத்தை பிடிக்க வாய்ப்புள்ளது என சர்வதேச உணவு மற்றும் வேளாண் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

# மைக்ரோ டிரக்டர் மலேசியாவிற்கு ஏற்றுமதி




மைக்ரோ நிறுவனத்தின் முதலாவது டிரக்டர் தொகுதி மலேசியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் ரிஷாட் பதியுதீன், மைக்ரோ ஹோல்டிங் தனியார் நிறுவனத் தலைவர் பேராசிரியர் லோரன்ஸ் பெரேரா மற்றும் அதிகாரிகள் இந்த ஏற்றுமதி நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மோட்டார் வாகன உற்பத்தித் துறையில் புதிய திருப்பத்தினை ஏற்படுத்தி போக்குவரத்து துறையை புதிய பாதைக்கு இட்டுச் சென்ற மைக்ரோ கார் நிறுவனம், பொது மக்களுக்கான தனியார் மற்றும் பொதுப் போக்குவரத்துத் தேவையை நிவர்த்தி செய்து வாகனங்களை அறிமுகப்படுத்தியது. தொழிலுக்குத் தேவையான டிரக்டர்களையும் வியாபார நடவடிக்கைகளுக்குத் தேவையான வண்டிகளையும் சர்வதேசத்திற்கும் அறிமுகம் செய்துள்ளது.

உலகில் முதல் தரமான மோட்டார் வாகனத் தொழில்நுட்பத்தை இந்நாட்டுக்கு அறிமுகப் படுத்தி தூரக் கிராமங்களில் உள்ள பிள்ளைகளுக்கும் இதன் பயன் பெற வழியமைத்து மைக்ரோ கார் நிறுவனம் தேசிய கைத்தொழில் துறையைப் பெருமைப்படுத்துகின்றது.

# சல்மானுக்கு மோட்டார் சைக்கிள் பரிசு




சுசுகி நிறுவனம் உலகின் அதிவேக மோட்டார் சைக்கிள்களில் ஒன்றான தனது ஹயபுசா சூப்பர் பைக்கை நடிகர் சல்மான் கானுக்குப் பரிசாக வழங்கியிருக்கிறது.

சுசுகியின் புதிய ஹயபுசா ஸ்போர்ட் மோட்டார் சைக்கிளின் விளம்பரத்தில் சல்மான்கான் தோன்றியதால் அந்த மோட்டார் சைக்கிளின் வெகுவாக பிரபலம் கிடைத்தது. மேலும், விரைவில் ரிலீசாக இருக்கும் தபாங் 2 படத்தில் சுசுகி இன்ட்ருடன் மோட்டார் சைக்கிளுடன் சல்மான்கான் தோன்றியிருக்கிறார்.

தனது படத்தில் சுஸுகி தயாரிப்பை பிரபலபடுத்தியதால் நெகிழ்ந்து போன சுசுகி நன்றி பாராட்டும் விதமாக ஹயபுசா சூப்பர் மோட்டார் சைக்கிளை சல்மானுக்கு பரிசாக வழங்கியிருக்கிறது.

இந்த மோட்டார் சைக்கிள் 1340 சிசி எஞ்சின், எல்சிடி திரையுடன் டிஜிட்டல் இன்ஸ்ட்ருமென்ட் கிளஸ்டர், 70மில்லி மீற்றர் புரொஜெக்டர் டைப் ஹெட்லைட் ஆகியன பொருத்தப்பட்டுள்ளன. ஒரு லீற்றர் பெட்ரோலுக்கு நகர்ப்புறத்தில்17.7 கிலோ மீற்றரும் நெடுஞ்சாலை பயணத்தில் 22.3 கிலோ மீற்றரும் இந்த மோட்டார் சைக்கிள் பயணிக்கும் என்கிறது சுசிகி நிறுவனம்.

# ரூ.47 ஆயிரம் கோடி கடனில் ஏர் இந்தியா!




ஏர் இந்தியா விமான நிறுவனம் 47,226 கோடி ரூபா கடன் சுமையில் உள்ளதாக விமான போக்குவரத்துத்துறை இணையமைச்சர் கே.சி. வேணுகோபால் தெரிவித்தார். இந்நிறுவனம் இயக்கும் விமான சேவைகளில் 95 பிரிவுகளில் விமானத்தை இயக்கும் செலவுக்குக் கூட கட்டணம் வசூலாவதில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து இந்திய அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது. விமானம் இயக்கப்படும் சேவைப் பிரிவுகளில் 12 பிரிவுகள் மட்டுமே லாபம் ஈட்டுகிறது. இந்நிறுவனத்தில் ஒரு விமானத்துக்கு 237 பேர் என்ற விகிதத்தில் ஊழியர்கள் உள்ளனர் என அவர் மேலும் கூறினார்.

# புளுஸ்கோப் லைசோற் லங்கா நிறுவனத்தின் சேவைகள் யாழில்

புளுஸ்கோப் லைசோற் லங்கா (பிறைவேற்) நிறுவனம், புளுஸ்கோப் லைசோற் (ஆஸ்திரேலியா) மற்றும் டாட்டா குறூப், (இந்தியா) ஆகியவற்றின் ஒரு துணை நிறுவனமாகும்.

இந்த நிறுவனம் உயர் தர Zincalume ரக கூரைத் தகடுகள் மற்றும் அதனோடு தொடர்புபட்ட உதிரிப் பாகங்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் இலங்கையின் முதல்தர வர்த்தக நிறுவனம். புளுஸ்கோப் லைசோற் லங்கா (பிறைவேற்) நிறுவனம் தனது சேவையை விஸ்தரிக்கும் நோக்கில் கடந்த 2012.12.28 ஆத் திகதியன்று யாழ்ப்பாணம், பிரதானவீதி, இலக்கம் 320 ஏ யில் அமைந்துள்ள கட்டடத்தில் தனது கிளை நிறுவனமொன்றை அமைத்துள்ளது.

நிறுவனத்தின் முதன்மை அதிகாரி ஜீ.ரீ.ரவீந்திரன் தலைமையில் இடம்பெற்ற கிளை நிறுவனத் திறப்பு விழா நிகழ்வில் கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் எஸ்.தங்கராசா நாடாவை வெட்டி கிளை நிறுவனத்தைத் திறந்து வைத்தார்.



இந்தக் கிளை நிறுவனத்தின் அலுவலகத்தில் சகல விதமான Zincalume ரக கூரைத் தகடுகள் மற்றும் அதனோடு தொடர்புபட்ட உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்ய இயலும். அத்துடன் அவற்றைப் பொருத்துவதற்கான தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள இயலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2013 இற்கான புதிய அனுமதிகள்

**BBC** ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை

11 வது வருடத்தில்

| வயது 2+ முதல் வயது 3+ வரை | வயது 3+ முதல் வயது 4+ வரை | வயது 4+ முதல் வயது 5+ வரை |
|---|---|---|
| Play Group | Montessori | Pre School |

இப்பொழுது பெற்றோர்களின் வசதி கருதி எமது சில வளாகங்கள் இடமாற்றப்பட்டுள்ளன.

கற்பித்தல் முறை:

★ சர்வதேச ரீதியாக அங்கிகரிக்கப்பட்ட Dr. Maria Montessori + Canadian ECE Method

★ தமிழ் கட்டாய பாடம்.

★ ஆங்கில மொழி மூல கற்பித்தல்

★ சிறார்களின் திறமைகளை வெளிக் கொணரும் நிகழ்ச்சிகளில் சகலரும் பங்கு பெறுவர்.

★ விளையாட்டுப் போட்டி. English Concert, முத்தமிழ் விழா, சித்திரக்கைவேலைக் கண்காட்சி, Graduation Ceremony.

பாலர் பாடசாலை வளாகங்கள்

தலைமைக் காரியாலயம் → யாழ்ப்பாணம் 64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் · நீர்வேலி · கோப்பாய் · சாவகச்சேரி Hindu College Primary School · மானிப்பாய் 1 · அச்சுவேலி · மானிப்பாய் 2 · சங்கானை · சுன்னாகம் Dr. சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம் · வடமராட்சி

## சனி, ஞாயிறு மற்றும் வார நாட்களில் ஆங்கில வகுப்புகள்

- Certificate in English
- Diploma in English — C.C.E (O/L), (A/L)
- ESOL A1, A2 — Sponsor Scheme
- IELTS

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள்

- ★ Pre Foundation
- ★ Foundation
- ★ Level 1,2,3,4

பாடசாலை பாடத்திட்டத்திற்கமைய ஆங்கில பாடநெறிகள்

British Business College

**BRITISH BUSINESS COLLEGE**

64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

**Tel:021 222 5796, 077 362 7055**

British Council இனால் அங்கிகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு நிலையம்.

Registered as an Education & Training Company with the Registrar of Companies - Sri Lanka. Reg. No: P 9718



# பதவி வெற்றிடங்கள்

ஸ்ரீ வெங்கடேஸ்வரா நெற்வேக்ஸ் பிறைவேற் லிமிட்டெட் உலகளாவிய ரீதியில் தகவல் தொழிநுட்ப சேவை வழங்குகின்ற பதிவு செய்யப்பட்ட உறுதிபாடு கொண்ட ஒரு நிறுவனமாகும். இவ்வலையமைப்பு நிறுவனமானது Search engine optimization, சமூக ஊடக optimization, web application development மற்றும் application out sourcing ஆகிய சேவைகளை வழங்குவதில் தேர்ச்சி பெற்று விளங்குகிறது.

எமது பெறுமதி மிக்க வாடிக்கையாளர்களுக்காக போட்டித்தன்மையுடைய மிகவும் அனுகூலமுள்ள உலகோடு எந்நேரமும் இணைந்திருக்கக் கூடிய வகையில் தொழில் ரீதியான அறிவுகளை வளர்த்துக் கொள்வதற்கான சேவைகளை உருவாக்கி வருகிறோம்.

இத்தகைய நிறுவனத்தில் கீழ் வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| Web Developers & J2E Programmers | 06 |
| UI Engineers (Web Designers) | 04 |
| Social Media Campagin Managers | 02 |
| Business Development Executives | 06 |
| Account Assistant | 01 |
| Underwriting officer | 01 |
| Project Managers | 04 |

**தகைமைகள்**

- ✱ இத்துறையுடன் தொடர்புடைய ஏதாவது டிப்ளோமா அல்லது சான்றிதழ் அல்லது அதற்கு சமமான அனுபவம் பெற்றிருத்தல்.
- ✱ குறைந்த பட்சம் 3 மாத தொழில் அனுபவம்(தொழில் அனுபவ சான்றிதழ் களை சமர்ப்பிக்கவும்)
- ✱ வயதெல்லை- 18- 45 (ஆண்/பெண்)

**இடம் :** வவுனியா (தேவைப்படின் இலவச இடவசதி உண்டு)

**விலாசம் :** ஸ்ரீ வெங்கடேஸ்வரா நெற்வேக்ஸ் பிறைவேட் லிமிட்டெட், 196, முதலாம் ஒழுங்கை, குட்செட் றோட், வவுனியா.

**தொடர்பு :** T.P - 024 222 5992, 024 222 3782


**Email :** hr@seo.lk

**இணையம் மூலம் விண்ணப்பிக்க :** http:// www.facebook.com /extremeseov3

**விண்ணப்ப முடிவு திகதி : 05.01.2013**

(27296) (6.11)


# முதலாவது ஆண்டு நினைவலைகள்



பூபாளமாய் 24 - 08 - 1947

முகாரியாய் 10 - 01 - 2012

## அமரர் இராஜா யோகராஜா(J.P)

**திதி: மார்கழி மாத அபரபட்ஷ துதியை**

காலங்களின் கசிவில் ஆண்டொன்று கடந்தாலும் -எம்
எண்ணப் படிமங்களில் வண்ணம் குன்றாத அன்பான தலைவராய்
என்றென்றும் நீங்களே!! -எம் ஒவ்வொரு முன்னெடுப்புக்களும்
உங்களையே ஞாபகமூட்ட.........
உங்கள் நினைவு நதிகளில் நீந்தும் மகவு மீன்களாய்
உங்கள் ஆசிகளை யாசித்திருக்கும்............

18ஏ,மூத்த விநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி/5129)(5.6.25)

மனைவி,மக்கள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

# ஐந்தாம் ஆண்டுக்கான ஆத்ம சமர்ப்பணங்கள்



மலர்வு 12 - 10 - 1950

உதிர்வு 30 - 12 - 2007

## அமரர் கல்யாணசுந்தரக்குருக்கள் இராமநாதன்

**(சங்கீத வித்துவான், சங்கீத வித்யா சாகரம்)**

*சங்கீத சாகரத்தில் சதுர்வேத வழித்தடத்தில்*
*சஞ்சாரம் செய்ததென்ன சங்கமம் ஆனதென்ன*
*சங்கீத வித்துவானாய் சங்கீத வித்யா சாகரமாய்*
*சங்கம் வளர்த்ததென்ன சாதனைகள் படைத்ததென்ன*
*வசந்தங்கள் இணைந்ததென்ன வண்ணமலர்த் தீபங்கள் ஒளிர்ந்ததென்ன*
*மதுவண்டு மாதங்க மலர்விழிகள் மிளிர்ந்ததென்ன*
*யதுநந்தன் திருவடியில் புது வாழ்வு கண்டதென்ன*
*அன்பின் சுடர் எரித்து பண்பின் எழில் படைக்க என்றும்*
*இசை வேள்வி இறுதிவரை வளர்த்திடுவோம்.*
*ஐந்தாண்டு நினைவலைகள் ஆத்மராகம் இசைக்கட்டும்*
*ஐயா! அன்புருவே! இசை மழையில் நனைந்திடுக!*
*ஆனந்த சாகரத்தில் அரனடியில் அமைதிகொள்க!*
*ஆத்மார்த்த உறவுகளின் பிரார்த்தனையில் நிறைவுகொள்க.*

கொழும்பு.

(27317)(5.6)

நெஞ்சை விட்டகலா நினைவுகளுடன்
உறவுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைக்கு ஆள் தேவை

தோட்டம் மற்றும் சமையல் வேலை தெரிந்த ஆண் வேலையாள்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு: 077 3361750, 077 6925193

## LONDON O/L, A/L

PHYSICS,
CHEMISTRY,
BIOLOGY,
MATHEMATICS,
ICT

6 மாதங்களில் பரீட்சைக்கு பூரணமாக தயார்படுத்தும் வகையில் பயிற்சிநெறி வகுக்கப்பட்டுள்ளது/தங்குமிட வசதியுமுண்டு.

தொடர்பு-B.T.XAVIER
WELLAWATTE
077-7804371

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நாவலர் வீதியில் மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட வீடு விற்பனைக்கு. 3 படுக்கை அறைகள், 2 விசாலமான வரவேற்பு மண்டபங்கள் மற்றும் வாகனங்கள் தரிப்பிட வசதி உண்டு. தரகர் தேவையில்லை.
மேலதிக விபரங்களுக்கு
0776-595374/0773-602815

## தவறிவிட்டது

பழைய பொலிஸ் நிலையர், ஆனைக்கோட்டை என்னும் முகவரியைச் சேர்ந்த முருகேசு நகுலராசா என்பவரது தேசிய அடையாள அட்டை (751774060V), சாரதி அனுமதிப்பத்திரம், இன்சுரன்ஸ்,ரக்ஸ் என்பன 26.12.2012 அன்று யாழ். நகரப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
T.P:- 077-6944928

## வான் விற்பனைக்கு

252- டொல்பின் வான் 12, A/C அஜஸ்மென் சீற்ஸ், அலோ வீல் கொண்ட வான் விற்பனைக்குண்டு.
(லீசிங் வசதியும் உண்டு)
தொடர்புக்கு:- 0756508660 (27355)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் நாவலர் வீதி சந்திக்கு அருகில் அடிப்படை வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு. சிறிய குடும்பங்கள் அல்லது அலுவலகங்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு-0772-598250

## காணி விற்பனைக்கு

கிளிநொச்சியில் A 9 றோட், திருநகர், கனகபுரம் பகுதிகளில் வீட்டுடன் உறுதிக் காணிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்புக்கு 0771988083

## உடனடி வேலை வாய்ப்பு

சுத்திகரிப்பாளர்கள்/ உதவியாளர்கள் 32,000, பணிப்பெண்கள் 35,000, காவலாளிகள் 42,000, தொழிலாளி 30,000.
தொடர்பு-0774-193321, 0712110764

## காணி விற்பனைக்கு

இளவாலை-கோவிந்தபுரம் 4 அறைகள், சாலை, சாப்பாட்டு அறை, கிணற்றுடன் 7 பரப்பு காணி விற்பனைக்கு. 075-5668086/077-3826207
நேரடி தொடர்பு:-ஈசன் College street, Ilavalai.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மானிப்பாய் வீதி ஓட்டுமடத்தைச் சேர்ந்த பரராஜசிங்கம் சிறீபாலகிருஸ்ணன் அவர்கள் நீதி அமைச்சால் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டு 28.12.2012 இல் யாழ். மாவட்ட நீதிவான் A.A. ஆனந்தராஜா அவர்கள் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் சிரேஷ்ட சமூக சேவையாளர் ஆவார். இவர் மேலும் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு வாழ்ந்து மக்கள் சேவை தொடர இறைவனைப் பிரார்த்தித்து மனதார வாழ்த்துகின்றோம்.

சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்,
இராமைய செட்டியார் லேன், யாழ்ப்பாணம்.

S. பாலசுப்பிரமணியம்,
திருமதி.B. பத்மாவதி.

(27344)




## கண்ணீர் அஞ்சலி



காரைநகர் இடைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் 19/27, மகாவித்தியாலய வீதி, கொச்சிக்கடையை வசிப்பிடமாகவும் கொண்ட எம் பாசத்திற்கும் அன்புக்கும் உரிய நண்பன்

### சண்முகம் சபாநடேசன்

(மாஸ்ரர்)

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப் பதோடு நாமும் இத்துயரில் பங்கு கொள்கின்றோம்.அன்னாரின் ஆத்ம சாந்திக்கு எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பரனார் அருள் புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சிறிபேப்பர் மார்ட்,
388, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

திரு.திருமதி சிறிஸ்கந்தராசா,
சிறிகண்ணன்ஸ்ரோஸ்,
திருநெல்வேலி.

(27350)

## கண்ணீர் அஞ்சலி



எமது கலாமன்ற கௌரவ உறுப்பினர் சண்முகம் சிவஞானம் அவர்களின் பாசமிகு சகோதரர்

### சண்முகம் சபாநடேசன்

அவர்களது திடீர் மறைவுச் செய்தி அறிந்து பேரதிர்ச்சி அடைவதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர தில்லைக் கூத்தன் திருவடிகள் சேர பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நிர்வாக சபையினர்,
ஆசிரியர்கள்,
மாணவர்கள், பெற்றோர்கள்

சிவன்காடு கலாமன்றம்,
காரைநகர். (27401)

## கண்ணீர் அஞ்சலி

### சிவசுப்பிரமணியம் ஜீவரத்தினம்

(ஜீவாக்கா)



உசன் மிருசுவிலை வதிவிடமாகக் கொண்ட அமரர் **சிவசுப்பிரமணியம்** அவர்களின் அன்பு மனைவி **ஜீவரத்தினம்** அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வீரபத்திர பெருமானைப் பிராத்திக்கின்றோம்.

சாவகச்சேரி வடக்கு. (சி/2656)

**பற்குணசீலன் குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## All kind of Computers & Computer items

(With warrunty,Improt branded for USA in Jaffna)
HP dualcore 1GB/80GB/DVD
19" LCD "A" GRADE Rs 21000/ Full set
IBM Pentium 4,1.6GHZ, 512MB,40GB CD 15" LCD 'A" Grade Full set. 12 000/=
15" LCD All Brand - "A" Grade - 5000/= Computer * Assoceries
17" LCD All Brand - "A" Grade - 6200/= Computer * Web cam
19" LCD All Brand - "A" Grade - 7800/= Computer * Head phone
* Toner * Keyboard * Mouse
Many Kind of Laptops
மொத்த வியாபாரிகளுக்கு விசேட சலுகை புதுவருடத்தை முன்னிட்டு விசேட விலைகுறைப்பு
(25584)(5-6)


தொ.பே:
077 724 2083, 075 660 3770
Email: hicomown@gmail.com

## வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல்ய மொத்த, சில்லறை வியாபார நிலையத்துக்கு கீழ்வரும் பணிகளுக்கு ஊழியர் தேவை.
1) களஞ்சியக் காப்பாளர் (S.K)
2) பொதிகட்டுபவர்கள் (சேல்ஸ் மன்)
3) சிட்டை எழுதுநர் (பில் கிளார்க்)
(பெண்கள் மட்டும்)
மேற்படி வேலைகளுக்கு தொடர்பு கொள்ளவேண்டியது
T.P NO: 07777 68835
(27403)(6.11)

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை கெங்காதரன்



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை கெங்காதரன் 28.12.2012 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இராசம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சாந்தகுணம் தம்பதியரின் மருமகனும், மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், இந்திர மோகனின் (வைத்தியர், யாழ்.போதனா வைத்தியசாலை) பாசமிகு தந்தையும், கஜந்தா, சுரேஸ், பிரதீஸ், லவன் ஆகியோரின் அன்பு மாமனும், சந்திரமலர், புஸ்பாஞ்சலி, பஞ் சாட்சரம் ஆகியோரின் சகோதரனும், செல்வவிநாயகமூர்த்தி, விமலானந்தமூர்த்தி, விஜயலக்ஷ்மி, திலகவனிதா, அகிலாண்டநாயகி, ஹேமாவதி, பத்மாவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(30.12.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைகள் மல்லாகம் இந்து மயானத்தில் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி மத்தி,
அளவெட்டி. 0777570177

தகவல்:
Dr.K. இந்திரமோகன் (மகன்)
(27339)(3.14)

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கில், கோணாவளை ஒழுங்கையில், குழாய்க் கிணற்றுடனும், சுற்று மதிலுடனும், உள்ள 5 பரப்பு ஒரு குளி காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 9263973,0771040992
(278..)(5.6)

## வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு

190 ஆம் கட்டையடி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி எனும் முகவரியில் (கண்டி வீதிக்கு அண்மையில்) 4 ½ பரப்புக்காணியுடன் வீடு உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு :0774443556
(27239)(6.11)

## அழகுக் கலை வகுப்புக்கள்

அழகுக் கலை வகுப்புக்கள் Diploma in Bridel Dressing and beauty Culture முதன் முறையாக வவுனியாவில் விசேட பயிற்சி வகுப்புக்கள் புத்தாண்டை முன்னிட்டு ஆரம்பம்.
0774984568,
0752672734
(27334) (6.7.4)

## போக்குவரத்து சேவை

பூநகரிப்பிரதேச ஆசிரியர்களுக்கு
தொடர்பு: 0770687621
0778445788, 0778503176
(27..6)(5.8)

## விற்பனைக்கு

கறுப்பு நிற Pleasure, இறக்குமதி செய்யப்பட்ட கண்ணாடி சாப்பாட்டு மேசை விற்பனைக்குண்டு.
175,பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்திச் சந்தி, யாழ்ப்பாணம்.
(27203) (6.7.4)

## TATA CAB விற்பனைக்கு

TATA 207 DI CAB 1700 km பாவனையில் உள்ள வாகனம் விற்பனைக்கு உண்டு.
(PR xxxx) ரூபா 15 லட்சம்
தொடர்பு: 077 5151761
(25583) (6.4.25)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

டோபர்மண், ரிச்பக் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:0770357307
அரசடி,வட்டுக்கோட்டை
(27307) (6.7.4)

## வாடகைக்கு

யாழ்.3 ஆம் குறுக்குத் தெருவில் சகல வசதிகளுடனும் கூடிய மாடிவீட்டின் கீழ்ப் பகுதி வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 1968185
(27309) (6.7.4)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1975 இல் சுவாதி நட்சத்திரத்தில் பிறந்த கொழும்பில் அரசாங்கப் பாடசாலையில் ஆங்கில மொழியில் கணிதம் படிப்பிக்கும் பட்டதாரி மகனுக்கு பெற்றோர் தகுந்த (சைவ போசனம்) மணமகளை எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு :0779892935, 011 2605578
(27226)(6.11)

## தகுதிக்கேற்ப தொழில் வாய்ப்பு

சம்பளம் 38,000/= முதல் எங்கள் பிரதான தொழிற்சாலைகள் மூலம் ஜாம், பிஸ்கட், டொபி, ரயர், கோடியல், தேயிலை, பால்மா, நுளம்புச்சுருள், பீங்கான் உற்பத்தி மற்றும் குளோஸ் உற்பத்தி பகுதியில் 100 இற்கும், லேபல் ஒட்டுதல் பிரிவுக்கும் தரம் 6 முதல் A/L வரை பயின்ற, 17 வயது முதல் 55 வயது வரையான ஆண்கள், பெண்கள் தேவை. உணவு, தங்குமிடம் இலவசம், நண்பர்கள் குழுவாக ஒரே இடத்தில் தொழில் புரியலாம். வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலிருந்து விசேடமாக இணைத்துக் கொள்ளப்படுகின்றனர்.
தொடர்புகளுக்கு: 071 3460 295
அனுராதபும்
(24386) (5.6.25)

## 2013 இற்கான உடனடி வேலை வாய்ப்பு

Innovage அமெரிக்க நிறுவனத்தின் இலங்கையின் வடக்கில் ஆரம்பிக்கப் படவிருக்கும் புதிய ஆண்டின் 5 புதிய கிளைகளுக்கு 75 புதிய வெற்றிடங்கள்
* Manager
* Asst. Manager
* Customer Service
* Administration
* Supervisor
((O/L/A/L) படித்த இளைஞர் யுவதிகளுக்கு)
பயிற்சியின் போது (10,000/= 15,000/=) பயிற்சியின் பின் 35,000/= க்கு மேல். யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கும், சாவகச்சேரி நகரத்திற்கும் முக்கியத்துவம்.
தங்குமிட வசதியுண்டு.
(27336)(6.11)
T.P : 021 7201521, 077 0308484, 077 8920777

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை சொர்ணம்



நெடுந்தீவு மேற்கு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், நெடுந்தீவு, இந்தியாவை (வலசரவாக்கம்) வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சொர்ணம் 18-12-2012 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தனுஷ்கோடி-இராமாசிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா, இராமாசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும்,வேலுப்பிள்ளை, நாகமுத்து, பூரணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சரோஜினி(இந்தியா), பரராஜசிங்கம் (கனடா), யோகராசா (பெறாமகன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தர்மராசா(இந்தியா), வசந்தகுமாரி(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்மகலாஜினி, யோகேஸ்வரன் (இந்தியா), கலாநேசன், பிருந்தா (அமெரிக்கா), யோதிபிரபா, மனோகரன் (இந்தியா), கோகிலன் (பிரான்ஸ்), சுரேணுகா (கனடா), தனுஷா (இந்தியா), சாருகா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், வர்ஷா,ஷைருஜி, கருணியா (இந்தியா) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(30-12-2012) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.00 மணியளவில் 141A, பாரதிநகர் 3ஆம் தெரு, மதுரவாயல் சென்னையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 2.00 மணியளவில் போரூர் மின்சார இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
பரராஜசிங்கம் - கனடா
செல்லிடப்பேசி: +16473414140
யோகன் - இந்தியா
செல்லிடப்பேசி: +919840794913
தருமராசா - இந்தியா
செல்லிடப்பேசி: +919597917333
நேசன் - ஐக்கிய அமெரிக்கா
செல்லிடப்பேசி: +16462668221
கோகிலன் - பிரான்ஸ்
செல்லிடப்பேசி: +33652376782

தகவல்:
பரராஜசிங்கம்(மகன்),
சரோஜினி(மகள்)
(C/5136)(5.6.25)

## நெஞ்சைவிட்டகலா நினைவலைகள்

2ஆம் ஆண்டு நினைவு

மலர்வு 06 - 12 - 1944
உதிர்வு 25 - 12 - 2010



15ஆம் ஆண்டு நினைவு

மலர்வு 16 - 05 - 1948
உதிர்வு 28 - 05 - 1997



திதி: 30.12.2012

அமரர் முருகன் சிவபுண்ணியம்

திருமதி சிவபுண்ணியம் பவளம்

அன்பும் பண்பும் நிறைந்த எம் ஆருயிர்த் தெய்வங்களே -எமை
அவனியில் சிறப்புடனே வாழ வைத்த ஆத்மாக்களே
உங்களது ஆத்மா சாந்திபெற நிதமும் நாங்கள் பிரார்த்திக்கின்றோம்.

'பவளவனம்'
நவிண்டில்.

குடும்பத்தினர்.

[27297][5-6]

## இரண்டாம் ஆண்டு ஆறாம் ஆண்டு மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலிகள்







| அமரர் ஆ.செல்லையா | திருமதி செ.சிவயோகம் | அமரர் செ.கபிலராஜன் |
| --- | --- | --- |
| தோற்றம்: 11.06.1911 | தோற்றம்: 19.02.1926 | தோற்றம்: 27.02.1946 |
| மறைவு : 30.12.2010 | மறைவு : 17.12.2006 | மறைவு : 17.04.2009 |

நிலையில்லா இவ்வுலகில் நிலைத்திருக்கும் உங்கள் உறவால்
நினைவிழக்க மாட்டாமல் நீந்துகின்றோம் கண்ணீரில்
நாமிருக்கும் நாள் வரையில் நிழலிருக்கும் பூமியிலே
நாமிருக்கும் நாள் வரையில் நீங்கள் இருப்பீர்கள் எம் மனத்திரையில்

இல. 33, 5ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.


செல்லையா நகுலராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 96

## எக்ஸிமா (ECZEMA) தோல் பராமரிப்பு

■ அன்ரூ அருணன்
மருத்துவ பீட மாணவன்,
நீரிழிவுச் சிகிச்சை நிலையம்.
யாழ்.போதனாவைத்தியசாலை.



எக்ஸிமா என்பது தோலில் ஏற்படும் ஒரு வகை ஒவ்வாமை நோயாகும். இது கிருமி தொற்றால் ஏற்படும் நோய் அல்ல. இந்நோயானது சில நபர்களுக்கு மட்டுமே ஏற்படும். இது ஒவ்வாமையை ஏற்படுத்தும் உணவுகளை உண்ணுதலும /இறப்பர் பாதணிகளை அணிதல் போன்றவற்றாலும் ஏற்படலாம்.


இந்நோயானது நபருக்கு நபர் வேறுபடும். சிலருக்கு, இது வெறுமனே தோல் கடியினை மட்டும் ஏற்படுத்தும். சிலருக்கு இது தோல் கடியுடன் சேர்த்து அந்தப் பகுதியில் நீர் போன்ற திரவம் வடிதலையும் ஏற்படுத்தும். இத் தோல் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் வைத்தியர்கள் வழங்கும் மருந்தினை பாதிப்புக்குள்ளான பகுதியில் பிரயோகிப்பதுடன் வீடுகளில் சில இலகுவான நடைமுறைகளைக் கையாளுவதன் மூலம் இந்நோயின் தாக்கத்திலிருந்து விடுபட முடியும்.

இதற்கு முதன்முதலாக உங்களுக்கு எக்ஸிமாவை ஏற்படுத்தும் மூல காரணியைக் கண்டறிந்து அதனைத் தவிர்த்து வருதல் அவசியமாகும். உதாரணமாக நீங்கள் பாவிக்கும் சலவைத்தூள் மற்றும் சவர்க்காரம், செருப்பு என்பவற்றை மாற்றிப் பாருங்கள்.

மற்றும் தோல் உலர்வாக இருப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். இதற்கு நீங்கள் இளஞ்சூட்டு நீரில் குளியல் செய்யலாம். குளிக்கும் போது குறைந்தளவு சவர்க்காரத்தைச் சருமத்துக்கு இடுங்கள்.

குளித்த பின் சருமத்தினை நன்கு உலர்வுறும் வரை துடைத்து, பின்னர் ஈரலிப்பாக வைத்திருக்கும் Skin lotion இனை உங்கள் சருமம் முழுவதும் பிரயோகியுங்கள். சருமத்தில் எரிச்சலூட்டும் பதார்த்தங்களைப் பாவிக்க வேண்டாம்.

உடலுக்கு இறுக்கமான, சொர சொரப்பான உடைகளைத் தவிருங்கள். மற்றும் எக்ஸிமா உள்ள தோல் பகுதியில் நகங்களால் சொறிவதைத் தவிருங்கள். மற்றும் சொறிவதால் ஏற்படும் தோல் பாதிப்பினைத் தடுப்பதற்கு உங்களது விரல் நகங்களை நன்கு வெட்டுங்கள்.



இரவிலே உறங்கும் போது கைகளுக்கு கையுறையினை அணிந்து கொண்டு உறங்குங்கள். வியர்வையானது எக்ஸிமா உள்ள தோல் பகுதியில் கடி ஏற்படுவதை அதிகப்படுத்தும்.

எனவே நீங்கள் எக்ஸிமாவால் பாதிக்கப்பட்டுள்ள காலங்களில் அதிகளவு உடற்பயிற்சியில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உடல், உள, உழைச்சலுக்கு உள்ளாவதைத் தவிர்த்தல், ஒவ்வாமை ஏற்படுத்தும் உணவுகளைத் தவிர்த்து சரியான உணவுகளை உட்கொள்ளுதல், போதுமான அளவு உறக்கம் போன்றவை எக்ஸிமா நோய் மீண்டும் மீண்டும் ஏற்படுவதைத் தவிர்க்க உதவுகின்றன.

இவ்வாறு செய்வதன் மூலம் எக்ஸிமாவின் தாக்கத்திலிருந்து எமது தோலினைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இந்தத் தோல் நோயானது கட்டுப்பாட்டிற்குள் வருவதற்கு காலம் தேவைப்படும்.

எனவே உடனடியான மாற்றத்தினை எதிர்பார்க்க வேண்டாம். மேற்படி விடயங்களைத் தொடர்ந்து கையாளுவதன் மூலம் நாளடைவில் மாற்றம் ஏற்படுவதை நீங்கள் அவதானிக்க முடியும்.

உங்களுக்கு இந்த நோய் மாறாமல் இருக்குமேயாகில் தோல் வைத்தியரின் உதவியை நாடி அதற்குரிய மருந்தினைப் பெற்று, இந்த நோயினைக் குணப்படுத்திக் கொள்ள முடியும்.

★★★

## பருவமடைந்த காலத்தில் பத்திய உணவு அவசியமா?

கேள்வி: எனது மகளுக்கு 15 வயது. பெரியபிள்ளையாகி விட்டார். அவருக்கு அரைத்த கறி கொடுப்பது அவசியமா?

**கௌரி,** 40 வயது, கோக்குளில்.

பதில்: நாங்கள் எங்களின் பிள்ளைகள் 'பூப்படைதல்' என்பதை மாதவிடாய் ஆரம்பிக்கும் அன்றே எய்துவதாகக் கருதுகின்றோம். அது தவறே. உண்மையில் பூப்படைதல் சார்ந்த ஏராளமான உடல் வளர்ச்சி மற்றும் தொழிற்பாடுகள் கிட்டத்தட்ட அதற்கு இரண்டு வருடங்களின் முன்னரே ஆரம்பித்து விடுகின்றன.



ஆகவே நாம் ஆரோக்கியமான உணவுகளைக் கொடுப்பதற்கு மாதவிடாய் [illegible] ருப்பது பிழை [illegible] தொடக்கம் பன்னிரண்டு வயதிலிருந்தே நாம் கீழ்வருமாறு உணவூட்டலை வழிப்படுத்த வேண்டும்.

பெண்பிள்ளை ஒருவரின் உடல் வளர்ச்சியும், இன விருத்திக்கான தொழிற்பாடுகளும் அதிகூடியளவில் 14 தொடக்கம் பதினெட்டு வயதிலேயே உடலில் நிகழ்கின்றன.

அக்காலப்பகுதியில் ஒரு நாளிற்கான அவரின் புரதத்தேவை 12 கிராமினாலும், இரும்புச்சத்தின் தேவை இரண்டு மடங்காகவும் அதிகரிக்கின்றது.

மேலும் விற்றமின்களான ஏ, பி,சி, கே, போலிக்கமிலம் போன்றவற்றினதும், கனியுப்புகளான நாகம், செம்பு, செலனியம் போன்றவற்றின் தேவையும் அதிகரிக்கின்றது.

எனவே அவற்றை நிறைவு செய்யும் உணவுகளையே நாம் தெரிவு செய்து உண்ணுதல் அவசியம். புரதத் தேவையை ஈடுசெய்ய மீன், பால், முட்டை, இறைச்சி மட்டுமன்றி போஞ்சி, பருப்பு, சோயாமீற், கௌபி, பயறு போன்றவற்றை உண்ணக் கொடுக்கவும். இரும்புச்சத்துக்காக சிவப்பு மீன்கள், கருவாடு, மேல் ஓட்டி [illegible] மீன்கள் என்பன [illegible] சேர்ப்பது விசேஷமானது.

கடும்பச்சை இலைக்காய்கறிகள், பழங்கள், முட்டை, பால், சீஸ், ஈரல், மீன் எண்ணெய் போன்றவற்றை உண்பதும் விற்றமின் ஏ, விற்றமின் சி, மற்றும் போலிக்கமிலம் என்பவை சாமத்தியப்படுதல் என்பதைத் தொடர்ந்து கொடுக்கப்படும். பத்தியக் கறியில் பல மருத்துவ குணங்களைக் கொண்ட பொருள் கள் இருப்பது உண்மையே. உதாரணமாக நற்சீரகத்தில் இரும்புச்சத்து உள்ளது. வெந்தயத்தில் இன்சுலின் எதிர்ப்புத் தன்மையை கட்டுப்படுத்தும் குணம் உண்டு. எனவே இவற்றை விரும்பும் பட்சத்தில் கொடுக்கலாம்.

எனினும் நீராகாரங்களைத் தவிர்ப்பது மிக மிகத் தவறானதே. அது மாத்திரமல்ல பல வகை மரக் கறிகள், பழங்கள் என்பவற்றைத் தவிர்ப்பது கூடாது. அதற்கு மாறாக சொக்கலேட், தேநீர், கோப்பி, மென்பானங்கள் என்பவற்றை அறவே தவிர்ப்பின் ஆரோக்கியமான எதிர் காலம் எமது கையில்!

**மருத்துவர் திருமதி**
**பிரதீபனா செல்வகரன்**
நீரிழிவு சிகிச்சை நிலையம்
யாழ். போதனா வைத்தியசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Jaffna College Institute of Technology — JCIT

Established in 1974 under the Management Council of the Board of Directors of Jaffna College.

### Courses commence in Jan 2013

Computer Certificate Courses 2/3/4 months Part time

**Microsoft Office**
Ms Word
Ms Excel
Ms Access
Ms Power point

**Computer Graphic Designer**
Page Maker
Corel Draw
Photoshop

**Web Development**
HTML,
JAVA Script,PHP
Server Connected

**Computer Hardware Technician**
Introduction (Optional). Internal & External Devices
Main body of the computer system
Software Installation. Parts Repairing
Download & Installing the software files using Internet

சுய தொழில் ஒன்றை ஆரம்பிப்பதற்கும்
வெளிநாட்டு வேலை வாய்ப்பைப் பெறுவதற்குமான பாடநெறிகள்

**Certificate Craft Course (தமிழ்மொழி மூலம்) 6மாதம் முழுநேரம்**
கல்வித் தகமைகள்:G.C.E(O/L) வரை படித்த மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

Radio,TV and Electronic Servicing Practice
ரேடியோ ரீவி,Mobile phone, இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துதல்
Computer Monitor, Power Supply, UPS DVD போன்ற உபகரணங்களில் அதி விசேட பயிற்சிகள்
Machineshop Practice லேத் வெல்டிங் பிற்றிங் பயிற்சிநெறி
Motor Cycle and light Engine Mechanism (மோட்டார் வாகனம் திருத்துதல்)
Refrigeration & Air Conditioning Mechanic (குளிரூட்டுதல் பயிற்சி நெறி)
Aluminum Fitting & Fabrication(அலுமினியம் பொருத்துதலும் இணைத்தலும்)
Domestic Electrician (மின் இணைப்பும் நிர்மாணமும்)

More Information
Director,
Jaffna College Institute of Technology
Vaddukoddai, Sri Lanka.
T.P No.021 321 3139 021 222 8275
E-Mail jcit@sltnet.lk Web: www.jcit.lk

Why we are Special
Unlimited computer practical hours are offered.
Payments could be made in 2 installments.
Individual attention by qualified Lecturers.
The computer laboratory is opened for flexible practical hours.
Facilities: Hostel, library & Sports etc.

A training Institute registered with the Tertiary and Vocational Educational Commission(TVEC) Under P25/0014



## மலேசியா வேலை வாய்ப்பு

### இலவசம்! இலவசம்! இலவசம்!

வெளிநாட்டு முகவர்களுடன் நேர்முக தேர்வு மிக விரைவில் !!!

| பதவி | தொகை | சம்பளம் |
|---|---|---|
| பணிப் பெண் Housemaid | 25 | 850RM (Rs. 36,000/-) |

சேவைகள் மற்றும் நிபந்தனைகள்.
* ஒப்பந்த காலம் 2 வருடங்கள். நாளொன்றுக்கு 12 மணி வேலை நேரம்
* உணவு, தங்குமிடம், போக்குவரத்து மற்றும் மருத்துவ வசதி அனைத்தும் இலவசம்.
* ஏனைய வசதிகள், சட்டதிட்டங்கள் மலேசிய தொழிற்சங்க சட்டத்திற்கு அமைவானது.
* ஒப்பந்த முடிவில் திரும்பி வர விமான டிக்கட் இலவசம்.

AL/1980/ADVT/ 66/12

மலேசியாவில் பிரசித்தி பெற்ற Royco நிறுவனத்திற்கு

| பதவி | தொகை | சம்பளம் |
|---|---|---|
| உற்பத்தி இயக்குநர் Production Operator | 50 | 650RM |

சேவைகள் மற்றும் நிபந்தனைகள்
* ஒப்பந்த காலம் 3 வருடங்கள். நாளொன்றுக்கு 8மணி வேலை நேரம்
* உணவு, தங்குமிடம், போக்குவரத்து மற்றும் மருத்துவ வசதி அனைத்தும் இலவசம்.
* மேலதிக வேலைநேர கொடுப்பனவு மற்றும் ஏனைய வசதிகள், சட்டதிட்டங்கள் மலேசிய தொழிற்சங்க சட்டத்திற்கு அமைவானது
* பயிற்சி காலம் 3 மாதங்கள். ஒப்பந்த கால முடிவில் திரும்பி வர விமான டிக்கட் இலவசம்.

AL/1980/ADVT/ 55/12

பான் குளோபல் — PAN GLOBAL — வெளிநாட்டு வேலை வாய்ப்பு — L/L 1980

351/1. ஆர் ஏ.டி மெல் மாவத்தை. கொழும்பு 3.
(மஹநாம கல்லூரிக்கு அருகில்)
தொலைபேசி : 011 5300100,077 3502201/ 072 2700900

FLEX Graphic


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
17 ★ 12 ★ 1940

மறைவு
30 ★ 11 ★ 2012

அமரர்


### செல்லையா மயில்வாகனம்

**30.11.2012 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் செல்லையா மயில்வாகனம் அவர்களின் அந்தியேட்டி நிகழ்வு இன்று (30.12.2012)ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். அவரின் ஆத்ம சாந்தி வழிபாட்டிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளு மாறும் அத்தோடு, அவரின் மரணச் செய்திகேட்டு அவரின் இறுதிக் கிரியையில் கலந்துகொண்டு எமக்கு சகல உதவிகளையும் வழங் கிய உறவினர்,நண்பர்கள், அயலவர் அனைவருக்கும் எமது மன மார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

376/7, தருமபுரம். [76119][S.6] குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சிவபாக்கியம் பழனியப்பா



வேலணை மேற்கு, தலைகாட்டினைப் பிறப்பிடமாகவும், கரம்பன் கொன்றை, வேலணை 9ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும், தற்போது லண்டனை வதிவிடமாகவும் கொண்ட சிவபாக்கியம் பழனியப்பா 24.12.2012 திங்கட்கிழமை காலமானார்.

# ஐங்கரன், கபில்ராஜ் கலக்கல் வென்றது சென். ஜோன்ஸ்

**ஐங்கரனின் சிறப்பான துடுப்பாட்டம் கபில்ராஜின் துல்லியமான பந்து வீச்சு, இரண்டும் கைகொடுக்க யாழ். மத்திய கல்லூரியை 152 ஓட்டங்களினால் வெற்றி கொண்டது சென்.ஜோன்ஸ் கல்லூரி.**

யாழ்ப்பாணம்,டிசெ, 30

ஐங்கரனின் சிறப்பான துடுப்பாட்டம் கபில்ராஜின் துல்லியமான பந்து வீச்சு, இரண்டும் கைகொடுக்க யாழ். மத்திய கல்லூரி அணியை 152 ஓட்டங்களினால் வெற்றி கொண்டது சென். ஜோன்ஸ் கல்லூரி.

சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி 13 வயது பிரிவு அணிகளுக்கு இடையிலான நட்புரீதியிலான கிரிக்கெட் ஆட்டம் அண்மையில் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென். ஜோன்ஸ் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதற்கமைய துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 22 ஓட்டங்களையும் சொரூபன் 24 ஓட்டங்களையும் அபினாஸ், சபிஸ் ஆகியோர் முறையே 19 ஓட்டங்களை தமது அணிசார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி சார்பில் அன்றுகன் 4 இலக்குகளையும், மதுசன் ,சுகிர்தன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

223 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 17 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குளையும் இழந்து 69 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் லோகன் 15 ஓட்டங்களையும் மதுசன் 13 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பில் கபில்ராஜ் 4 இலக்குகளையும், யதுசன், சிந்துஜன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

(த-23)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் முன்னாள் கழக வீரர்களான சாந்தன், யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தப்படும் 11 பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்றுவருகின்றது.

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி இடம்பெறவுள்ள இந்த ஆட்டத்தில் யுனிபைட் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்-இக்பால் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

(23)

## கிரிக்கெட் போட்டி இன்று

யாழ்ப்பாணம்,டிசெ.30

சரசாலை தெற்கு இயற்கைதிடல் இளைஞர் கழகத்தினரால் தென்மராட்சிப் பிரதேசத்துக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகம் மற்றும் இளைஞர் கழகங்களுக்கு இடையே 7 பேர் பங்குபற்றும் 5 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட லீக் முறையிலான மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளதாகப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(த-23)

## வென்றது துறையூர் ஐயனார்

**வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.**

யாழ்ப்பாணம்,டிசெ.30

வேலணைப் பிரதேச கடற்படையினரால் நடத்தப்பட்ட கஞ்சதேச ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுள்ளது.

அண்மையில் வேலணை மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

முதல்பாதி ஆட்டத்தில் இரு அணியினரும் தத்தமது அணிக்கான கோல்களைப் பெறவேண்டும் என்ற நோக்கோடு மோதிக்கொண்டனர். இதனால் ஆட்டம் விறுவிறுப்பான கட்டத்தை அடைந்தது.

இரு அணியினரும் எதிர் அணியினுடைய கோல் பரப்பினை அண்மித்த வண்ணம் இருந்தனர். ஆயினும் எதுவித கோல்களையும் பெற முடியவில்லை. இதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணியினரும் எந்தவித கோல்களையும் போடாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டத்தின் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் துறையூர் ஐயனார விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## வெற்றி பெற்ற அணிகள்

**ஸ்ரீகாமாட்சி 'ஏ' அணி, மணி ஸ்போஸ்ட் கிளப் அணி ஆகிய அணிகள் இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.**

யாழ்ப்பாணம்,டிசெ.30

யாழ். மாவட்டக் கரம் சங்க கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இரு பாலாருக்குமான கரம் சுற்றுப்போட்டித் தொடரில் ஆண்களுக்கான அரை இறுதியாட்டங்களில் ஸ்ரீகாமாட்சி அணி 'ஏ', மணி ஸ்போஸ்ட் கிளப் விளையாட்டுக்கழக அணி ஆகியவை வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

முதலாவது அரை இறுதியாட்டத்தில் ஸ்ரீகாமாட்சி 'ஏ' அணியை எதிர்த்து ஸ்ரீகாமாட்சி 'பி' அணி மோதிக் கொண்டது.

இதில் ஸ்ரீகாமாட்சி 'ஏ' அணி 3:1 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

இரண்டாவது அரை இறுதியாட்டத்தில் மணி ஸ்போஸ்ட் கிளப் அணியை எதிர்த்து உடுவில் மான்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் மணி ஸ்போஸ்ட் கிளப் 3:1 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

(த-23)

## மூன்றாமிடத்துக்கான ஆட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

நியூ வோறியர்ஸ் விளையாட்டுக்கழகம் தனது முதலாவது ஆண்டு நிறைவையொட்டி அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையே நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணியளவில் மின்னொளியில் இடம் பெற்றவுள்ள மூன்றாவது இடத்துக்கான ஆட்டதில் பன்னாலை கணேஷா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

(த-23)

## கைப்பந்தாட்ட சங்கம் அங்குரார்ப்பணம்


யாழ்ப்பாணம்,டிசெ.30

வடமாகாணக் கைப்பந்தாட்டச் சங்கம் ஒன்று அண்மையில் சென். ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெற்ற கைப்பந்தாட்டப் பயிற்சி முகாம் முடிவில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இதன் நிர்வாகசபை உறுப்பினர்களில் தலைவராக சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் என்.ஜே.ஞானப்பொன்ராஜா, செயலாளராக பி.பெருமாள் புவனேந்திரா, பொருளாளராக ஷாம் துஷாந்தன், நிர்வாகசபை உறுப்பினர்களாக கிருபானந்தன், நிஷாந்தன், விமல்ராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(த-23)





யாழ். மாவட்டக் கரம் சங்கத்தினால் கழகங்களுக்கிடையேயான ஆண், பெண் இரு பாலாருக்குமான கரம் சுற்றுப் போட்டி நேற்று சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமானது. போட்டியில் பங்குபற்றிய வீர வீராங்கனைகளை படத்தில் காணலாம். (த-23)

## அம்மன் வி.க. வெற்றி

யாழ்ப்பாணம்,டிசெ.30

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் முன்னாள் கழக வீரர்களான சாந்தன் யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தப்படும் 11 பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெறவிருந்த ஆட்டத்தில் பிறன்ட்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அம்மன் விளையாட்டுக்கழக அணி மோதவிருந்தது. இதில் பிறன்ட்ஸ் விளையாட்டுக்கழக அணி உரிய நேரத்துக்குள் மைதானத்தில் சமுகம் தராமையினால் அம்மன் விளையாட்டுக்கழக அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

(த-23)

## இளைஞர் கழகத்துக்கு விளையாட்டு உபகரணம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சாவகச்சேரிப் பிரதேச இளைஞர் சேவைகள் சம்மேளனத்தினால் நுணாவில் மேற்கு அம்பாள் இளைஞர் கழகத்துக்கு கரப்பந்தாட்டக் கம்பம், வலை, கரப்பந்தாட்டப் பந்து, கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு கடந்த வாரம் சாவகச்சேரிப் பிரதேச செயலக இளைஞர் கழக சம்மேளன மண்டபத்தில் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.விமலதாஸ் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா கலந்துகொண்டு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில் இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் செ.உதயமோகன் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் மயில்வாகனம் ஆகியோர் பங்குபற்றினர்.

(த-23)

## றக்பிக்கு சங்கம்



யாழ்ப்பாணம்,டிசெ.30

வடமாகாண றக்பி சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் சென். ஜோன்ஸ் கல்லூரியில் இலங்கை றக்பி சங்கத்தினால் றக்பி பயிற்சி முகாம் இடம்பெற்றது.

பயிற்சி முகாம் நிறைவில் வடமாகாண றக்பி சங்கத் தெரிவு இடம்பெற்றது.

நிர்வாக சபை உறுப்பினர்களில் தலைவராக சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் என்.ஜே.ஞானப்பொன்ராசா, செயலாளராக ஆர்.நிசாந்த், பொருளாளராக ஐ.சசிக்குமார், போட்டிச் செயலாளராக எம்.பிரதீப்குமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாகசபை உறுப்பினர்களாக ச.கிருஷாந், ரி.நாகநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்று வீரர்கள் தயார்



சிட்னியில் ஜனவரி 3ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள 3ஆவது டெஸ்ட் போட்டிக்கான இலங்கை அணியில் இளம் துடுப்பாட்ட வீரர் லஹிரு திரிமன்னே, வேகப்பந்து வீச்சாளர் சுரங்க லக்மால் ஆகியோர் இணைக்கப்பட்டுள்ளனர். இரண்டாவது போட்டியின்போது காயமடைந்த வீரர்களுக்குப் பதிலாகவே இவர்கள் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இலங்கையின் துடுப்பாட்ட வீரர் குமார் சங்ககார, இலக்குக் காப்பாளர் பிரசன்ன ஜெயவர்த்தன, வேகப்பந்து வீச்சாளர் சானக வெலகெதர ஆகியோர் மெல்பேர்ணில் இடம்பெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியின் போது காயமடைந்திருந்தனர். இதனால் இரண்டாவது இன்னிங்ஸில் குறித்த மூன்று வீரர்களும் துடுப்பெடுத்தாட முடியாத நிலையிலேயே ஆஸி அணியின் வெற்றி சுலபமானது. இரண்டாவது டெஸ்ட் போட்டியில் காயமடைந்த குமார் சங்ககார, சானக வெலகெதர இருவரும் மூன்றாவது போட்டியில் பங்குபற்ற மாட்டார்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குமார் சங்கக்காரவுக்கு இடது கை சுட்டு விரலில் என்பு முறிவும், சானக வெலகெதரவுக்கு பின்தொடைப் பகுதியில் உபாதையும் ஏற்பட்டுள்ளது. எனவே அவர்கள் குறைந்தது ஆறுவாரங்களாவது ஓய்வு எடுக்க வேண்டும். அத்தோடு பிரசன்ன ஜெயவர்தனவுக்கு கைப் பெருவிரலில் உபாதை ஏற்பட்டுள்ளது. அவரது உபாதைக்கு தீர்வு ஏற்பட்டால் மாத்திரமே மூன்றாவது போட்டியில் பங்குபற்றமுடியும். இலங்கை அணியின் இலக்குக் காப்பாளர்கள் இருவரும் காயமடைந்துள்ளதால் அணியில் மேலதிக வீரராக ஏற்கனவே இடம்பிடித்திருந்த டினேஸ் சந்திமால் மூன்றாவது போட்டியில் இலக்குக் காப்பாளராக களமிறங்குவார் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்தவருட ஆரம்பத்தில் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற இந்திய-இலங்கை- ஆஸ்திரேலிய அணிகளுக்கான முக்கோண கிரிக்கெட் தொடரில் சந்திமால் சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தது. இந்நிலையில் மூன்றாவது போட்டிக்காக லஹிரு திரிமன்ன, சுரங்க லக்மால் ஆகியோர் இலங்கை அணியில் சேர்க்கப் பட்டுள்ளனர். தற்போது இலங்கையில் தங்கியுள்ள இவர்களிருவரும் விரைவில் ஆஸ்திரேலியா நோக்கிப் புறப்படவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களைத்தவிர இலங்கை அணியில் மேலதிக வீரராக இணைக்கப்பட்டிருந்த நுவான் பிரதீப்புக்கும் மூன்றாவது போட்டியில் விளையாடும் வாய்ப்பு கிடைப்பதற்கான சாத்தியங்கள் உள்ளன. (ங)

# மோதினர்; இணைந்தனர்





அஹமதாபாத்தில் நடைபெற்ற இரண்டாவது ''20/20' போட்டிக்காக பெங்களூரில் இருந்து விமானத்தில் சென்ற போது, இஷாந்த் சர்மாவும், கம்ரன் அக்மலும் சிரித்து பேசிக் கொண்டே சென்றார்கள்

மைதானத்தில் மோதிக் கொண்ட இஷாந்த் சர்மாவும் கம்ரன் அக்மலும் இப்போது நல்ல நண்பர்களாகி விட்டார்களாம்.

பெங்களூரில் நடந்த இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதலாவது ''20/20' போட்டியில் இந்தியாவின் இஷாந்த் சர்மா, பாகிஸ்தானின் கம்ரான் அக்மல் ஆகியோருக்கு இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இந்தப்பிரச்சினையால் போட்டியில் கிடைக்கும் சம்பளத்திலிருந்து இஷாந்த்துக்கு 15 சதவீதமும், கம்ரன் அக்மலுக்கு 5 சதவீதமும் அபராதம் விதிக்கப்பட்டது.

இந்தச்சம்பவம் குறித்து பாகிஸ்தானில் இருந்து வெளியாகும் ''தி எக்ஸ்பிரஸ்' பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-


போட்டி முடிந்தவுடன் இந்திய வீரர் இஷாந்த் சர்மா, பாகிஸ்தான் வீரர்கள் அறைக்கு சென்றார்.

அங்கிருந்த கம்ரன் அக்மல், இஷாந்த் சர்மா! ஏன் இப்படி நடந்து கொண்டீர்கள்? எனக் கேட்டார்.

இதற்கு பதில் தெரிவித்த இஷாந்த் சர்மா, நான் எவ்விதமான தகாத வார்த்தையும் பேசவில்லை. இதைத் தவறான முறையில் புரிந்து கொண்டுவிட்டீர்கள் எனக் கூறினார். இதன் பின் அங்கு வந்த சில மூத்த வீரர்கள், இருவரையும் நட்பாக இருக்குமாறு தெரிவித்தனர்.

தற்போது இந்தப்பிரச்சினையை மறந்து இருவரும் நண்பர்களாகிவிட்டனர். அஹமதாபாத்தில் நடைபெற்ற இரண்டாவது ''20/20' போட்டிக்காக பெங்களூரில் இருந்து விமானத்தில் சென்ற போது, இஷாந்த் சர்மாவும், கம்ரன் அக்மலும் சிரித்து பேசிக் கொண்டே சென்றார்கள் -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ங)





# ஒரு சகாப்தத்தின் முற்றுப்புள்ளி...

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவரும், பிரபல கிரிக்கெட் வர்ணனையாளருமான ரொனி கிரேய்க் தனது 66 ஆவது வயதில் ஆஸ்திரேலியாவின் சிட்னியில் நேற்று முன்தினம் காலமானார்.

இங்கிலாந்து அணி சார்பில் 1952 ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகமான ரொனி கிரேய்க், தன்னுடைய சகலதுறை ஆட்டத்தின் மூலம் குறுகிய காலத்திலேயே அணியின் தலைமைப்பொறுப்பைக் கையேற்றார். இவரது தலைமையில் இங்கிலாந்து அணி மிகச்சிறப்பான வெற்றிகளைப் பதிவு செய்தது. 5 வருடங்கள் மாத்திரமே கிரிக்கெட் உலகில் பிரகாசித்த ரொனி கிரேய்க், 1955 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியுடன் தனது ஓய்வை அறிவித்தார். 58 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 8 சதங்கள், 20 அரைச்சதங்கள் என்பற்றை ரொனி கிரேய்க் பதிவு செய்துள்ளார். அத்தோடு டெஸ்ட் போட்டிகளில் அவர் 141 இலக்குகளைச் சாய்த்துள்ளார்.

22 ஒருநாள் சர்வதேசப்போட்டிகளில் பங்கேற்ற ரொனி கிரேய்க், துடுப்பாட்டத்தில் பெரிதாக சோபிக்கவில்லை. ஒருநாள் போட்டிகளில் அதிகபட்சமாக ஒரு இன்னிங்ஸில் 48 ஓட்டங்களையும், மொத்தமாக 269 ஓட்டங்களையும் எடுத்துள்ளார். ஆயினும் பந்துவீச்சில் 19 இலக்குகளை ஒருநாள் போட்டிகளில் அவர் கைப்பற்றியுள்ளார்.

கிரிக்கெட் விளையாடுவதில் இருந்து ஓய்வு பெற்றாலும், கிரிக்கெட் உலகை விட்டு முற்றாக ஒதுங்கிவிடவில்லை. கிரிக்கெட் வர்ணனையாளராக உருவெடுத்தார். எல்லோரையும் மயங்க வைக்கும் தன் வர்ணனை மூலம், பலரின் மனதில் இடம்பிடித்தார்.

நுரையீரல் புற்றுநோயினால் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பாதிக்கப்பட்டிருந்த ரொனி கிரேய்க், நோயின் தாக்கம் தீவிரமடைந்த நிலையில் நேற்று முன் தினம் உயிரிழந்தார். ஆஸ்திரேலிய அணிக்கெதிராக கிரிக்கெட்டில் அறிமுகமாகி அந்த அணிக்கெதிரான போட்டியிலேயே தனது கிரிக்கெட் வாழ்வை முடித்துக் கொண்ட ரொனி கிரேய்க், தனது வாழ்வையும் ஆஸ்திரேலிய மண்ணிலேயே முடித்துக் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ங)

# பந்துகள் நழுவியதால் படுதோல்வி கிடைத்தது

## - புலம்புகிறார் மஹேல



இலங்கை அணி இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பிடியெடுப்பு வாய்ப்புக்களை தவறவிட்டமையே அதிகமான பாதிப்புக்களை ஏற்படுத்தியது என்று இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

மெல்பேர்ணில் இடம்பெற்ற இந்தப்போட்டியில் இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடி 156 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி ஒரு கட்டத்தில் 3 இலக்குகளை இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அதன் பின்னர் ரங்கன ஹேரத்தின் பந்துவீச்சில் மைக்கல் கிளார்க் வழங்கிய கடினமான பிடியொன்றை திலகரட்ண டில்ஷானும், ஷேன் வொட்சன் வழங்கிய கடினமான பிடியொன்றை குமார் சங்ககாரவும் தவறவிட்டிருந்தனர்.

ஆட்டத்தின் முதல் நாள் இலங்கை அணிக்கு மோசமானதாக அமைந்திருந்தது. இலக்குகளை வேகமாகப் பறிகொடுத்தோம். ஆனால் முதல்நாளின் பிற்பகுதியில் நாங்கள் போராடினோம். ஆனால் 2 பிடிகள் தவறவிடப்பட்டது இலங்கை அணிக்குப் பாதிப்பை ஏற்படுத்தி விட்டது. அந்த 2 பிடிகளின் மூலம் மைக்கல் கிளார்க்கையும், வொட்சனையும் வீழ்த்தியிருந்தால் நிலைமை மாறியிருக்கலாம் என்று மஹேல தெரிவித்துள்ளார்.

இந்தப்போட்டியில் மைக்கல் கிளார்க் 106 ஓட்டங்களையும், ஷேன் வொட்சன் 83 ஓட்டங்களையும் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ங)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அக்கராயன் குளத்தின் கீழ் மேம்பாலம் அமைக்கப்பட வேண்டிய இடத்தில் குளத்திலிருந்து வான் பாயும் வெள்ளம் வீதியைக் குறுக்கறுத்துப் பாய்கின்றது. (கு-18)



ஒட்டறுத்தகுளம் நிரம்பியதால் அதிலிருந்து வெளியேறும் மேலதிக நீர் மாங்குளம் - வெள்ளாங்குளம் வீதியிலுள்ள ஒட்டறுத்தகுளம் சந்தியை அண்மித்த பகுதிகளில் தேங்கி நிற்கின்றது. (கு)



முல்லைத்தீவு முள்ளிவாய்க்காலில் இன்னமும் அகற்றப்படாது குவித்து வைக்கப்பட்டுள்ள வாகனங்கள். (கு-400)




வவுனியா சமணங்குளம் வான் பாய்ந்து செல்லும் அதேவேளை பூந்தோட்டம் பகுதி வெள்ளக் காடாகக் காட்சியளிக்கின்றது. (கு-421)



வவுனியா குளத்திலிருந்து வெளியேறும் நீரில் நின்று குதூகலிக்கும் சிறுவர்கள் சிலர். (கு-421)



கிளிநொச்சி அரச செயலகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு அல்லாத பொருள்களை வழங்குவதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. (கு-18)




அக்கராயன் கோணாவில் பகுதியிலுள்ள வீதியொன்றில் அக்கராயன் குளத்திலிருந்து வான் பாய்ந்து செல்லும் வெள்ளம் மேவிக் காணப்படுகின்றது. (கு-18)



வவுனியா தமிழ் சங்கத்தில் முத்தமிழ் விழாவில் முத்தமிழில் தலைமை தாங்க வல்லது இயல், இசை, நாடகம் எனும் தலைப்பில் நடைபெற்ற பட்டிமண்டபத்தில் சொல்வேந்தன் எஸ்.எ.எஸ். வாஸன் இசையே எனும் அணி சார்பில் வாதிடுகிறார். (கு-400)



கிளிநொச்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் நிவாரணப் பொருள்களை வழங்குகின்றார். (கு-18)



புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க பாடசாலையின் இடம்பெற்ற ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கண்காட்சியை விருந்தினர்கள் பார்வையிடுகின்றனர். (கு-400)



[illegible] வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன் காணப்படுகின்றனர். (கு-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# STUDY IN UK

உங்கள் **LONDON** செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

**GCE(O/L)** தகமை போதுமானது

**Jan/Feb Intake** ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

நடைமுறைகள் மாறினும் எவ்வித மாற்றமும் இன்றி **London** செல்லுங்கள்

**நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்**

- ஆகக் கூடுதலான விசாக்களைப் பெற்றுக்கொடுத்து சாதனைபடைத்துக் கொண்டிருப்பதால்
- பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் VISA தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன
- 4 வருட visa உத்தரவாதம்
- ஒரு மாதத்தில் பயணம்
- 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி(per week)
- GCE(O/L) தகமை போதுமானது
- இலவச IELTS வகுப்புகள்

**HOTLINE : 021 7538395 / 021 2227230 011 7 555511/14**

EXPONET
379 - ½, Galle Road, Colombo 06.
197,Arasady Road, Jaffna.
E-mail:nimal@expogroup.lk
Web:www.expogroup.lk

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayam.com
0215671111

# New Economics College

மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.

**A/L 2015**

கலை, வர்த்தகப் பிரிவு
ஜனவரி 05 சனி 8.00மணி
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

**N.E.C. கல்வி நிலையம்**

**A/L2015**
ஆனந்தபுரம் கிளிநொச்சி
கணிதம், விஞ்ஞானம்
வகுப்புக்கள் எமது
தனித்துவமான ஆசிரியர்களால்
02/01/2013
ஆரம்பம்:
புதன்
பி.ப.
3.00மணிக்கு

# Basic English with spoken

**G.C.E(O/L)** பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேட ஆங்கில கற்கை 3 மாத கால பயிற்சி

- English vocabulary
- Reading Skills
- ஆங்கிலம் சரளமாக பேசுவதற்கான நவீன கற்பித்தல் வழிமுறைகள்
- English Writing skills with basic Grammar
- பயிற்சி நெறியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
- கொழும்பு ஆசிரியர்களால் விரிவுரைகள் வழங்கப்படும்

**இலவசம் சான்றிதழுடன்**
Diploma in Information Technology
Office Application,Graphics Applications
Hardware & Network &Basic IT Concepts

**பயிற்சி நெறிகள் நடைபெறும் இடம்**
**International Knowledge Pool**

19,ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம் (மக்கள் வங்கி 3வது மாடி)

இளந்தொண்டர் சபை மண்டபம் இணுவில் கந்தசாமி கோவில்

வதிரி வீதி, உடுப்பிட்டி
உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அருகில்

மேலதிக விபரங்களுக்கு: ☎2221864 / 0771895164

# கபிலா காலணியகத்தில் அதிரடி கழிவு

**Bata DSI**

புத்தாண்டை முன்னிட்டு பாடசாலை மாணவ மாணவிகளின் காலணி வகைகள் விசேட விலைக்கழிவில் பொறிக்கப்பட்ட விலையிலிருந்து எங்கும் எதிர்பாராத மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்



பொறிக்கப்பட்ட விலையிலிருந்து குறைவான விலையில்

# KABILA SHOE PALACE

24, Kasthuriyar Road, Jaffna.

Branch:
No: 13,
Power House Road,
New Market,
Jaffna.

# Vajira House


## 97 Years 4 Generations

97 ஆண்டுகள் வரலாற்றுடன் 4 தலைமுறைகளாக சேவையாற்றி வருகின்ற வஜிர ஹவுஸ் நிறுவனத்தினரின் மகோன்னதம் பல தலைமுறைகளாகத் தொடர்கின்றது

வஜிர ஹவுஸ் நிறுவனத்தினர் தற்போது வெளிநாட்டில் தொழில்புரிபவர்களுக்கு இலங்கைக்கு வருகை தரவேண்டிய தேவையின்றி வெளிநாட்டில் இருந்துகொண்டே பணத்தை செலுத்தி தமக்கென ஆடம்பரமான ஒரு வீட்டை குறைந்த செலவில் நிர்மாணித்து குடிபுகுவதற்கு இலகுவாக மாதாந்த தவணைக் கொடுப்பனவு முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஒரு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்துவதன் மூலம், ரூபா 20000 ஐ செலுத்தி, எங்கள் பொறியியளாளரை உங்கள் காணிக்கு வரவழைத்து, ஆடம்பரமான வீட்டின் பணியை ஆரம்பிக்க இப்பொழுதே அழையுங்கள்.

**40 லட்சம்**



10 லட்சம் செலுத்தி வேலையை ஆரம்பியுங்கள்

**Ruban**
**0716500800**
**24 Hours Services**
**Vajira House**
Housing Specialist
No 04, Vajira Road,
Bambalapitiya, Colombo 04
www.vajirahouse.net

**48 லட்சம்**



12 லட்சம் செலுத்தி வேலையை ஆரம்பியுங்கள்

**64 லட்சம்**



16 லட்சம் செலுத்தி வேலையை ஆரம்பியுங்கள்

**92 லட்சம்**



23 லட்சம் செலுத்தி வேலையை ஆரம்பியுங்கள்

**120 லட்சம் Apartments**



30 லட்சம் செலுத்தி வேலையை ஆரம்பியுங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

வெள்ளம் வருமுன் அணை



02

'இம்' என்றால் சிறைவாசம்
'ஏன்' என்றால் வனவாசம்




22

இருட்டறை
விளக்கு



04

பெஞ்சடிக் காலம்



03

எங்கள் ஐயாமாருக்கு......



21


# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பமசம்
01

உதயன் 30 டிசெம்பர் 2012 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்துநான்கு


ஔண்யன்

# அங்கும் இங்கும்

மழைச்சாரல்கள் மெலிதாக விசிறிக் கொண்டிருந்தன. வழக்கத்தை விடவும் அன்றைக்கும் குளிர் ஏனோ அதிகமாக இருந்தது. அவளுடைய முகத்தில் கலவர ரேகைகள் படியத்தொடங்கியிருந்தன. நேரம் நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்தது. நிச்சயம் இன்றைக்கு விடுதிக்காப்பாளரின் கர்ணகடூரமான சொற்களைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்ற நினைப்பு வந்தவுடனேயே முகம் இன்னும் இருளடைந்தது. ஆயினும் பக்கத்திலேயே நின்றிருந்த அவளின் ஆண் நண்பன் ஆறுதல் சொல்வதை நிறுத்தவில்லை.

எதற்குப் பயம்? இன்னும் சிறிது நேரத்தில் பஸ் வந்துவிடும். எதற்கும் ஒரு போனில் ஒரு தகவலை அனுப்பிவிடு என்று நம்பிக்கையூட்டினான். அவன் சொல்லி முடிப்பதற்கிடையில், அவர்களருகே வந்து நின்றது அந்தச் சொகுசு பஸ்.

நல்லவேளையாக சனக்கூட்டமில்லை என்று சொல்லிக் கொண்டே அவனும், அவளும் பஸ்ஸில் ஏறினர். பஸ்ஸில் ஆறு பேர் மட்டுமே இருந்தனர். முன் ஆசனத்தில் இருக்கப்போனவர்களை தடுத்து, பின்னால் உள்ள ஆசனத்தில் போய் அமருங்கள். அதுதான் வசதியாக இருக்கும் என்று அனுப்பினான் சாரதி. அவர்களும் தலையாட்டிவிட்டு, பின்புற ஆசனமொன்றில் அருகருகே அமர்ந்து கொண்டனர்.

கொஞ்சநேரம் தமக்கிடையேயான உரையாடலில் ஈடுபட்டிருந்த அவனும், அவளும் என்ன இன்னும் விடுதி வரவில்லையே? என்ற எண்ணம்எழ எட்டி வெளியே பார்க்க முற்பட்டபோது தான், வழமையான பாதையிலிருந்து விலகி, இன்னொரு திசைக்கு பஸ் செல்வதைக் கண்டனர். நாங்கள் போக வேண்டிய இடத்துக்கு இந்த வழியால் செல்ல முடியாது என்று கூறிக்கொண்டே இறங்க முற்பட்டவர்களைத் தடுத்தன பன்னிரு கரங்கள்.

கண்களில் மின்னும் காம வெறியோடு ஆறு மிருகங்கள் அவர்கள் மீது பாய்ந்தன. பெண்ணின் ஆண் நண்பன் அடித்து வெளியே கடாசப்பட்டான். இப்போது அவள் மட்டும். துணைக்கு யாருமே இல்லை. உதவி கோரி கூக்குரலிட்டாலும் வெளியே கேட்காது. குளிரூட்டப்பட்ட பஸ் அது. பயணித்தவர்களுடன் சேர்ந்து சாரதியும் வெறித்தனமாகச் சிரித்தான்.

தமிழ் சினிமாக்களில் பார்த்துப் புளித்துப்போன ஒரு கோரக்காட்சி எந்தவொரு நாயகர்களின் வருகையுமின்றி நடந்து முடிந்தது. பஸ் ஓடிக்கொண்டேயிருக்க அந்தபெண் - மருத்துவ மாணவி- கதறக் கதற - ஆறு கயவர்களாலும் நுகரப்பட்டாள். அவர்களின் வெறி அடங்கிய கணத்தில் கசக்கப்பட்டு, பஸ் ஜன்னலூடாக வீதியில் வீசப்பட்டாள்.

இரத்தவெள்ளத்தில் குற்றுயிராகக் கிடந்தவள் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டாள். அங்கு அவள் கொடுத்த வாக்குமூலமே ஓடும் பஸ்ஸில் ஆறு மிருகங்கள் நடத்திய வெறியாட்டத்தை வெளிச்சத்துக்கு கொண்டு வந்தது.



★ ★ ★

உலக வல்லரசுகளில் ஒன்றெனக் கொள்ளப்படும் இந்தியாவின் தலைநகரில், புதுடில்லியில்தான் இந்தக் கோரம் நிகழ்ந்தேறியது. காமுகர்களால் குதறப்பட்ட மாணவிக்கு சிகிச்சை வழங்கப்பட்டுக் கொண்டிருக்கையிலேயே, அந்த மாணவிக்கு நீதி வழங்கக்கோரி குரல்கள் உயரத் தொடங்கின. சுவர்களுக்குள் எழுந்த இந்தக்குரல்கள், வீதி வரை வந்தன. புதுடில்லி கலவரங்களின் பூமியானது. பதாகைகளையும், நீதிக்கான குரல்களையுமே கொண்டு போராடியவர்கள் மீது ஏன், எதற்கு என்றே தெரியாமல் பாய்ந்தது பொலிஸ். ஆர்ப்பாட்டக்காரர்கள் பலர் காயமடைந்த போதும் ஓயவில்லை நீதிக்கான போராட்டம். இங்கிலாந்து அணிக்கெதிரான போட்டியில் கிடைத்த ஆட்ட நாயகன் விருதை அந்த மாணவிக்காக கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங் அர்ப்பணிக்குமளவுக்கு இது தேசியப்பிரச்சினை என்ற எல்லையையும் தாண்டி சர்வதேச நாடுகள் வரை பேசு பொருளானது. அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் வரிந்து கட்டிக் கொண்டு கண்டனங்களை வெளியிட்டன. பெண்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டுமென இந்திய அரசுக்கு உபதேசம் செய்தன. மெழுகுவர்த்திப் போராட்டம், உண்ணாவிரதப்போராட்டம் என்று நாளொரு போராட்டங்களில், மகளிர் அமைப்புகள் பலவும் குதித்தன. ஆர்ப்பாட்டக்காரர்களின் நெருக்குதல்கள் அரச இயந்திரத்தை விழிப்பு நிலைக்கு கொண்டுவந்தன. கும்பலாக ஒரு தேவதையைச் சிதைத்த கயவர்களின் பதுங்குமிடங்கள் தோண்டப்பட்டன. காமவிலங்குகள் பிணைக்கப்பட்டன கைவிலங்குகளால். டில்லியின் வழிபாட்டிடங்கள் எல்லாவற்றிலும் பேதங்கள் கடக்கப்பட்டு எல்லாக் கடவுளர்களிடமும் மாணவியைக் காப்பாற்றுமாறு பிரார்த்தனைகள் தொடர்ச்சியாக விடுக்கப்பட்டன.

எல்லாக் கடவுளர்களின் காதுகளும் சொல்லிவைத்தாற் போல செவிடாகியிருக்க வேண்டும். பிரார்த்தனைகளையும் வேண்டுதல்களையும் அர்த்தமற்றதாக்கி, 13 நாள் சிகிச்சையின் பின் சிங்கப்பூர் வைத்தியசாலையில் உயிரைத் தொலைத்தாள் 23 வயதேயான மருத்துவ மாணவி. அநியாயமாக ஒரு பெண்ணை சிதைத்த கயவர்களை தூக்கில் போடுங்கள் என்ற குரல் டில்லியில் இன்றைக்கு இன்னும் உச்சஸ்தாயியில் ஒலிக்கத்தொடங்கியிருக்கிறது.


கண்களில் மின்னும் காமவெறியோடு ஆறு மிருகங்கள் அவர்கள் மீது பாய்ந்தன. பெண்ணின் ஆண் நண்பன் அடித்து வெளியே கடாசப்பட்டான். இப்போது அவள் மட்டும். துணைக்கு யாருமே இல்லை. உதவி கோரி கூக்குரலிட்டாலும் வெளியே கேட்காது. குளிரூட்டப்பட்ட பஸ் அது. பயணித்தவர்களுடன் சேர்ந்து சாரதியும் வெறித்தனமாகச் சிரித்தான். தமிழ் சினிமாக்களில் பார்த்துப் புளித்துப்போன ஒரு கோரக்காட்சி எந்தவொரு நாயகர்களின் வருகையுமின்றி நடந்து முடிந்தது. பஸ் ஓடிக்கொண்டேயிருக்க அந்தபெண் – மருத்துவ மாணவி– கதறக் கதற – ஆறு கயவர்களாலும் நுகரப்பட்டாள். அவர்களின் வெறி அடங்கிய கணத்தில் கசக்கப்பட்டு, பஸ் ஜன்னலூடாக வீதியில் வீசப்பட்டாள்.


★ ★ ★

ஒரு மாணவியின் கற்பு கூட்டாக களவாடப்பட்டமைக்காக ஒட்டுமொத்த இந்தியாவே பொங்கியெழுந்தது. ஆனால் அங்கு இது போன்ற சம்பவங்கள் நிகழ்வது இதுதான் முதல்முறையல்ல. தமிழகத்தில் கூட இதைவிடமிக

(23ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளம் வருமுன் அணை

■ விசேஷம்

உலக அழிவு பற்றிய வதந்திகள் உலகெங்கிலுமே பிரபல்யம் பெற்றிருந்தன. சிலரது திட்டமிட்ட வியாபாரத் தந்திரம் இந்தச் செய்தியை பிரபல்யப்படுத்தியிருந்தது. கடவுள் மீது நம்பிக்கை கொண்டோரும் விஞ்ஞானத்தின் மீது நம்பிக்கை கொண்டோரும் உலகத்தின் அழிவு பற்றிய புரிதலில் தெளிவாக இருந்தார்கள் என்பதற்கு எந்த சான்றுகளும் இருக்கவில்லை. கிட்டத் தட்ட மனிதப் பிறப்புக்கள் அனைத்துமே அழிவு பற்றிச் சிந்திக்காமல் இருந்திருக்க முடியாது.



மனித நடவடிக்கைகள் காரணமாக மாசுச் சூழல் உருவாக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறது. இற்றைக்கு புவியின் தன்னியக்க சுற்றில் மனிதனே மாற்றங்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றான். குறிப்பாக இயற்கை சார் தத்துவங்களில் மனிதக் குறுக்கீடு ஆபத்துக்களையும் விளைவுகளையும் தந்துகொண்டே இருக்கிறது.

விஞ்ஞானத் தொழில்நுட்ப வளர்ச்சி பல புதுவித நற்காரியங்களை ஆற்றினாலும் அவை ஏதோ ஒரு பக்கத்தில் மனிதனுக்கு பாதகமாக திரும்பிவிடுகின்றன.

இருந்தாலும் ஆண்டுதோறும் ஏதோ ஒரு மூலையில் அழிவுகள் நடந்தவண்ணமே இருக்கின்றன. விஞ்ஞானத்திலும் தொழில்நுட்பத்திலும் வளர்ச்சி கொண்ட நாடுகள் அழிவுகளில் இருந்து மீண்டெழ தயாராக இருக்கின்றன. உள்நாட்டு மக்களின் வாழ்வியல் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குக் கூட நெருக்கடிகளை சந்தித்திருக்கக்கூடிய சில நாடுகள் வளர்ந்த நாடுகளின் தத்துவங்களுக்காகவும் விளக்கங்களுக்காகவும் காத்திருக்கின்றன.

இலங்கையில் சில நாள்களாக மழை கொட்டித் தீர்க்கிறது. கிட்டத்தட்ட 21 மாவட்டங்களில் வெள்ள நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதுவரைக்கும் 40 இற்கும் அதிகமானவர்கள் மழை வெள்ளம் மற்றும் மண் சரிவு காரணமாக உயிரிழந்து இருக்கிறார்கள்.

அதிகளவு மழை பெய்யாத மாவட்டத்திலும் வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது. வறட்சியைத் தாங்கக் கூடிய மாவட்டங்களில் பெருமளவான குளங்கள் உடைப்பெடுத்துள்ளன.

மக்கள் இடப்பெயர்வு, இயல்பு நிலை பாதிப்பு, வீதிப் போக்குவரத்து பாதிப்பு, பயிரழிவு, தொற்றுநோய்கள் என்று மக்களுக்கு தொடர் சோதனைகளை இயற்கை வழங்கிக் கொண்டிருக்கிறது.

### வருடந்தோறும் வெள்ளம்

இலங்கையில் இரண்டு பருவப் பெயர்ச்சிகளின் போது மழை வீழ்ச்சி கிடைக்கிறது. இதில் வடகீழ் பருவக் காற்றின் மூலம் கிடைக்கும் மழை வீழ்ச்சி வடக்கு கிழக்கில் உள்ள மாவட்டங்களுக்கு அதிகமாக பதிவாகின்றது.

ஒவ்வொரு பெயர்ச்சிக் காலத்தின் போது மக்கள் இடப்பெயர்வு, இயல்பு நிலை பாதிப்பு, வீதிப் போக்குவரத்துத் தடை போன்ற எல்லா நெருக்கடிகளும் ஏற்படுகின்றன. அப்பொழுது 'கூலை ஞானம்' பிறந்து விழித்துக் கொள்ளும் அதிகாரிகள் அடுத்த மழையை எதிர்கொள்ள நாம் அனைத்து வழிகளிலும் தயாராக இருக்கிறோம் என்று கூறுரைக்கின்றன.

ஆனால், மழை வந்ததும் மக்கள் வருடந்தோறும் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தவறாமல் எதிர்நோக்குகின்றனர். அதில் எந்த குறைபாடும் இருப்பதில்லை.

அதிகாரிகளால் இயற்கையை வரையறுத்துவிட முடியாது. அடுத்த வருட வெள்ளம் இவ்வளவுதான் என அச்சொட்டாக கணித்துவிடவும் முடியாது. இதனால், அவர்கள் தப்பித்துக் கொள்வதற்கு, சாட்டுச் சொல்வதற்கு ஏதுவாக அமைகிறது.

இருந்தாலும் ஒரு பெரு வெள்ளம் ஏற்பட்டால் வெள்ள நிலைமை ஏற்படக் கூடிய தாழ் நிலப் பிரதேசங்களை ஏற்கனவே அடையாளப்படுத்த முடியும். அங்கு வெள்ள நிலைமை ஏற்பட்டால் தோன்றக் கூடிய எல்லா வகையான பிரச்சினைகளையும் அடையாளப்படுத்த முடியும். இதில் அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகள் முக்கியமாக அமைகின்றன. அதாவது வெள்ளப்பெருக்கு ஏற்பட்டால் வெள்ளத்தின் முன்னதான நிலை வெள்ளத்தின் போதான நிலை, வெள்ளத்தின் பின்னதான நிலை என்ற நிலைகளில் ஒவ்வொரு செயற்பாடுகளும் அமைதல் வேண்டும்.

### அடையாளப்படுத்த வேண்டிய இடங்கள்

உதாரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் மழை பெய்ய முன்னரே வெள்ளம் ஏற்பட்டுவிட்டது. வவுனியா மற்றும் தென் பகுதிகளில் பெய்த மழை காரணமாக கனகராயன் ஆறு பெருக்கெடுத்து இரணைமடுக் குளத்தை நிரப்பியிருந்தது.

குறிப்பாக 28.12.2012 அன்று குளத்தின் நீர் மட்டம் 34 அடி 7.5 அங்குலமாக இருந்தது. இத்தனைக்கும் குளத்தின் அனைத்து வான் கதவுகளும் முழுமையாகத் திறக்கப்பட்டு நீர் வெளியேறிக்கொண்டிருக்கையில் இந்த நீர் மட்டம் பதிவாகியிருக்கிறது.

குளத்தின் கொள்ளளவு 34 அடி மட்டுமே. இதுவரை 30 அடிக்கு மேல் நீரை அந்தக் குளத்தில் பேணியது கிடையாது. கடந்த 2005 ஆம் ஆண்டு குளத்தின் நீர் மட்டம் 34 அடி 7 அங்குலத்தை எட்டியிருந்தது. அதன் பின்னர் 31, 32 அடிகள் நீர் கொள்ளளவு உயர்ந்தாலும் 30 அடியுடனேயே பராமரிக்கப்பட்டு வந்தது. இதன் மூலம் இரணைமடுக் குளம் தனது கொள்ளளவு ஆற்றலையும் நிரூபித்திருக்கிறது.

### வீதிகள் தடை

மழை வெள்ளம் காரணமாக வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் பிரதான வீதிகள் உட்பட பல வீதிகள் தடைப்பட்டன.

மன்னார் மாவட்டத்துக்கான தரை வழிப் போக்குவரத்து கடந்த இரண்டு தினங்களாக முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தது. குறிப்பாக வன்னியில் உள்ள சிற்றாறுகள் (பருவகால ஆறுகள்) அந்தந்தப் பருவத்தின் போது அளவு கணக்கின்றி மழை நீரை கடலுக்கு அள்ளிச் செல்கின்றன. இந்த ஆறுகள் பெருக்கெடுக்கும் போது குறுக்கறுக்கும் வீதிகள் தடைப்படுகின்றது. பறங்கியாறு, பாலியாறு, குடமுறுட்டி ஆறு, முடக்கன் ஆறு, பேராறு, மூங்கிலாறு, வெலிக்கண்டல் ஆறு உட்பட பல ஆறுகள் மழைக் காலத்தில் பெருக்கெடுக்கின்றன.

இந்த முறையும் ஆறுகள் பெருக்கடுத்து வீதிப் போக்குவரத்துகளை தடைசெய்திருந்தன. இதனால் மக்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டனர். இடம்பெயர்ந்த மக்களுக்கான உடனடி நிவாரணப் பணிகளைக் கூட வீதித் தடைகள் பாதித்திருந்தன.

### அகற்றப்படா மண் அணைகள்

போரின் போது விடுதலைப் புலிகளும் இராணுவத்தினரும் பெரும் மண் அணைகளை உருவாக்கியிருந்தனர். மக்கள் மீள் குடியமர்ந்த பகுதிகளை விட கண்ணிவெடிகள் அகற்றப்படாத பிரதேசங்களில் மண் அணைகள் இப்போதும் இருக்கின்றன. இதனால் அதிக மழை வீழ்ச்சி காரணமாக பெருக்கெடுக்கும் வெள்ளம் வழிந்தோட முடியாது [illegible] காட்டுப் பகுதிகளில் வழிந்தோடக்கூடிய மழை வெள்ளம் மண் அணைகள் காரணமாக கிராமங்களுக்குள் பெருக்கெடுக்கின்றது. முதலில் இந்த மண் அணைகள் அகற்றப்பட்டு தடைப்பட்டிருக்கக் கூடிய நீர் வடிமானப் பாங்குகள் சீர் செய்யப்பட வேண்டும். இதன் மூலமே குடிமனைக்குள் புகும் வெள்ளத்தை குறைத்துக்கொள்ள முடியும்.

### மாற்றுக் காணிகள் வழங்கல்

இரணைமடுக் குளத்தின் கீழான பன்னங்கட்டி கிராமம் ஒவ்வொரு வருடமும் மழையால் பாதிக்கப்படுகிறது. இந்தக் கிராமத்தில் உள்ள குடும்பங்கள் ஒவ்வொரு வருடமும் இடம்பெயர்கின்றன. இதனைக் கருத்திற்கொண்டு இந்தக் குடும்பங்களுக்கு வேறு இடத்தில் மாற்றுக் காணி வழங்கினால் அவர்களது நெருக்கடி நிலைகளை தீர்த்துக்கொள்ள முடியும். இது போன்ற அடையாளப்படுத்தப்பட்ட தாழ் நிலப் பிரதேசங்கள் பல வன்னிப் பிரதேசத்தில் இருக்கின்றன. அந்தப் பகுதி மக்களையும் இது விடயத்தில் கவனம் செலுத்தி அதிகாரிகள் திட்டங்களை வகுக்க வேண்டும்.

### தப்பிக்கொண்ட யாழ்ப்பாணம்

வன்னிப் பகுதியில் மழை வெள்ளம் காரணமாக பயிர்கள் அழிந்துபோக யாழ்ப்பாணத்தில் மழை இன்றி நெற் செய்கை பாதிக்கப்பட்டிருக்கின்றது.

மழை பெய்த போதும் அது வெள்ள நிலைமையை ஏற்படுத்தவில்லை. மக்களது இயல்பு வாழ்வு பாதிக்கப்படவில்லை எனலாம்.

### வருட ஆரம்பத்திலே வறட்சி

வவுனியா மாவட்டத்தின் ஏழு குளங்கள் முற்றாக உடைப்பெடுத்துள்ளன. 51 குளத்துக்கும் மேல் மழையால் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் மழை முடிந்து சிறிது காலத்திலேயே நீர் நிலைகள் முற்றாக வற்றிவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது. நீர் வரத்து அதிகரித்ததால் குளங்களின் துரிசுகளும் திறந்துவிடப்பட்டுள்ளன. இதனால் சரியான நீர் முகாமைத்துவத்தைப் பேண முடியாமல் போகலாம்.

தற்போது பெரும்போக நெற்செய்கையில் நெற் பயிர்கள் கதிராக்கும் வயதில் உள்ளன. மழை காரணமாக பயிரின் கதிராக்கல் திறன் குன்றலாம். நெற் பயிர்கள் நிலத்தில் சாயும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. இதனால் நெல் உற்பத்தியும் பாதிக்கப்படும் என்பதுடன் சிறுபோக நெற் செய்கைக்கும் குளங்களில் இருந்து நீரைப் பெறுவதற்கு இடர் ஏற்படக் கூடும். இந்த நிலையில் அடுத்த வருடம் கடும் வறட்சி ஏற்படும் அபாயமும் தோன்றியிருக்கிறது.

இந்த நீண்ட நெருக்கடியை தீர்த்துக்கொள்வதற்கு வெள்ளம் வருமுன் அணை கட்ட வேண்டிய தேவை தவிர்க்க முடியாததாகிறது. வருடத்தில் ஒரு முறை தான் குளத்தின் நிலைமையை அவதானிப்பதை விடுத்து வருடம் முழுவதும் சிந்திக்க வேண்டும். இதன் மூலமே இயற்கையின் இடர்களையும் சவாலுடன் எதிர்கொள்ள முடியும்.

> “
> வைகையாற்றில் வெள்ளம் கரை புரண்டோடிய நேரம். அதனால் ஆற்றின் கரையை அடைக்க வீட்டுக்கு ஒருவர் வரவேண்டும் என அரசர் ஆணையிட சிவபக்தராகிய பிட்டு விற்கும் வந்தியக் கிழவி தனக்கு ஆள் இல்லையே என வருத்தமடைந்தாள்.
>
> இதையடுத்து இறைவனே கூலி ஆளாக வந்து, பிட்டு தந்தால் மண் சுமப்பதாகக் கூறி வந்தியக்கிழவி சார்பில் கூலியாளாக சென்றார். ஆனால், சரிவர வேலைசெய்யாமல் அங்கு கூலியாள் தூங்குவதைக் கண்ட அரசன், பிரம்பால் கூலியாளை முதுகில் அடித்தார்.
>
> அப்போது அரசர் உள்ளிட்ட அனைவருக்கும் முதுகில் பிரம்படிபட்டது போல வலித்தது. இதன் பிறகே, கூலியாளாக வந்தவர் இறைவன் என்பதை உணர்ந்த அரசர் இறைவனை வணங்கினார். அப்போது, வந்தியக்கிழவியை வாழ்த்திய இறைவன், மாணிக்கவாசகர் பெருமையையும் கூறி அருளியதாக புராணம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெஞ்சடிக் காலம்

ஜெரா

இந்தக் காலம் அங்கு அமைதியை இழந்திருக்கும். பெரும் புரட்சியோ அல்லது இராணுவ ஆக்கிரமிப்போ அந்த அமைதிக் குலைப்புக்குக் காரணமாக இருக்காது. பரீட்சையும், அதற்கான படிப்பும், இன்னபிற தேவைகளுக்கான துடிப்பும் அந்தக் கலவரத்தை உண்டாக்கி விடும். படிப்பது இந்தக் காலத்தில் மட்டும் தான் அங்கு புரட்சிகரமானதாக இருக்கும். ஏனெனில் இது இறுதி மாதம். அனைவரது இறுதி இலக்குகளும் இந்த மாதத்தில் தான் பல்வேறு முனைகளில் நீண்டு முடிவைக் காணும். எனவே தான் இந்தக் கதகதப்பை அந்தக் கல்லிருக்கைகள் உணரும்.

### பிள்ளைகளைத் தேடும் பெஞ்ச்

அங்கிருக்கும் பெஞ்சுக்கும் ஆயிரத்துக்கு மேற்பட்ட காதுகளும், கண்களும் உண்டு. எனவே தான் அவைகளிடம் இருக்கும் கதைகள் அதிகம். அதனருகில் வந்து போகும் ஒவ்வொருத்தனின், ஒவ்வொருத்தியின் கிசுகிசுப்பும் அதற்கு மட்டுமே தெரியும். நட்பு, பிரிவு, துரோகம், உடைந்த காதல் உடையாத காதல், சொன்ன காதல் சொல்லாத காதல், என ஆயிரத்தெட்டுக் கதைகளைக் கேட்டு இரத்தமிழந்து செத்துக் கிடக்கும் பெஞ்சுகள். இந்தக் காலத்தில் அவற்றுக்குத் தற்காலிக விடுப்பு வழங்கப்பட்டிருக்கும். அவற்றைச் சூடாக்குமளவுக்கு யாருக்கும் ஓய்வு கிடைக்காது. எங்கும் பரீட்சைப் பரவசம்.

### வெறித்தனமாய் படிக்கிற நேரம்

இது இறுதி அரையாண்டுப் பரீட்சைக் காலம். முதலாம் வருட மாணவர்களுக்கும், நான்காம் வருட மாணவர்களுக்கும் சோதனை மேல் சோதனை வந்து விழும். முதலாம் வருடத்தவர்க்கு சிறப்புக் கற்கையா, பொதுக் கற்கையா என்ற பிரிப்பை இந்தப் பரீட்சை தான் தீர்மானிக்கும். இறுதி வருடத்தவர்க்கு கிளாஸ் பிரச்சினைகளை அம்பலப்படுத்தும் பரீட்சை. அத்தோடு பலரின் அந்த வருடத்தினரின் எதிர்காலத்தை தீர்மானிப்பது இந்தத் தடை தாண்டல் தான். டெமோ- டிமோ (உதவி விரிவுரையாளர்) ஆகும் கனவு மெய்ப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் தென்கயிலாயத்தான் காதுகளில் அதிகமாகவே ஒலிக்கும். ஆனாலும் அவரின் காதுகள் எப்போதும் போல செவிடாகவே இருக்கும். பேராசான்களின் கடைக்கண் பார்வைகள் தென்கயிலாயத்தானின் பார்வையை மங்கச் செய்து விடும். இறுதி இலக்கை நோக்கி விடுதியின் ஒவ்வொரு அறையிலும் இரவு பகல் ஓய்வில்லாமல் மின்குமிழ்கள் ஒளிரும். அதைத்தான் படித்துக் கிழித்தல், நெருப்பெடுத்தல் எனச் செல்லமாக அழைப்பார்கள். பாடமாக்கி ஒப்பித்துப்பும் மகா கெட்டிக்காரர்கள் விடுதிப் படிகளில் யாத்திரை செய்வர். தனியே இருந்து அறைக் கதவை பூட்டிவைத்துக் கொண்டு கதிரை மேசைகளுக்கு கற்பித்துக் கற்கும் ரெக்னிக் கையாளும் மகா வித்துவான்கள் விடிந்தது தெரியாமல் கற்பித்துக் கொண்டிருப்பர். எழுதி எழுதி எழுத்துப் பாடம் எடுத்துக் கொள்பவர்களின் மேசைகள் குப்பைகளால் நிரம்பியிருக்கும். இவையெல்லாவற்றையும் விட கேள்வி ஞானத்தில் கற்றுத் தேறும் தொகுதியினர் நல்லா படிக்கும் வர்க்கத்தினரின் அறை வாசலில் காவலிருப்பர். அவர் படித்துத் தெளிவாகியதும் தொடங்கும் பரீட்சைக்கான இறுதி விரிவுரை. அந்த விரிவுரை முடிந்ததும் பலருக்கு இரத்தம் ஏற்றவேண்டிய தேவையிருக்கும். இதனால் பலருக்கு மண்டை விறைத்துப் போய் இராமநாதன் பரீட்சை மண்டபத்தில் மயக்கம் போட்டு விழுந்த வரலாறுகளும் இந்த மாதத்துக்கு உண்டு. ஆனாலும் 'மொங்குறவன் புக்கய விட தெண்டுறவன் புக்க தான் கூட' என்ற பழமொழி பரீட்சை பெறுபேறுகளில் தத்துவமாகும்.

### தமிழ் பெரியவரின் வீதியில் டெசிக் கலாட்டா

அந்தத் தமிழ் பெரியவரின் வீதி அதிகம் தாங்கிய துடம் அங்கு வந்து தோற்றுப் போனவர்களினுடையதாகத்தான் இருக்கும். பரபரப்பான எதிர்பார்ப்புக்களுடனும், எதையாவது சாதித்து விட வேண்டும் என்ற இலட்சிய வெறியுடன் தான் ஒவ்வொருவரும் இந்தத் தெருவுக்குள் நுழைகின்றனர். ஏனெனில் பல்கலைக்கழக அனுபவிப்பு தொடர்பில் ஒவ்வொருவருக்கும் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் தரும் விளக்கங்கள் பரவச நிலையை ஏற்கனவே ஏற்படுத்தியிருக்கும். ஆகவே அது இதுவல்லோ சொர்க்கமாக முதலாம் வருடம் தேறும் வரையிருக்கும்.

இறுதி வருடத்தவரின் நடைகள் இந்தக் காலத்தில் அதிகம் தடம் பதிக்கும். டெசி இறுதி சத்திரசிகிச்சைக்காக லோயன், அன்ரி கடைகளின் ஆய்வுகூடங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கும். அவற்றை வெற்றிகரமாக மீட்பதற்கான பயணம் பல்பரிமாணம் கொண்டது. அந்தக் கொம்பியூட்டர் கடைகள் டெசினால் கொதிக்கும். அவசரம், பரீட்சைப் படிப்பு, மற்றயவர் டெசி மீதான காய்ச்சல் போன்ற விடயங்கள் டெசனுக்காக காரணம் எனச் சொல்லப்படும். கடைக்காரர்களின் பொறுமைக்கு இந்தக் காலத்தில் இறுதிப் பரீட்சை நடக்கும். இவ்வாறான உளக் கொதிநிலையிலும் மாணவர்களின் போட்டோக் கொப்பி உதவி நிவாரணம் மாணவிகளை நோக்கி நீளும். அன்றைய தினத்தில் முற்பகல் பத்து மணிக்கு நடைபெறவுள்ள பரீட்சைக்கான நோட்ஸ் போட்டோக் கொப்பியை அன்றைய நாள் காலை ஆறு மணிக்கு கொண்டு வந்து இந்தத் தெருவில் வைத்துத் தான் வழங்கிக் கொண்டிருக்கும் ஆண் நெஞ்சங்கள்.

### காதல் கண்டறியும் காலம்

இங்கு முளைக்கும் காதல்கள் அபரிமிதமானவை. ஆச்சரியமானவை. யாருக்கு, யார் மீது காதல் வரும் என்பதெல்லாம் இங்கு கண்டுபிடிக்கவே முடியாது. அதற்கான தகுதியும் தேவையில்லை. காதல் பொதுவான பாடமாக பெஞ்சுகளில் கற்பிக்கப்படும். அதன் பயனாக ஒவ்வொரு முதலாம் வருட மாணவிகளின் வருகையின் போதும் மொக்குக் காதல், முரட்டுக் காதல், என்ஜோய் காதல் எல்லாம் பரவலாக முளைக்கும். அந்தக் காதல் மையத்தியங்கள் இறுதி நிலையை இந்தக் காலப்பகுதியில் தான் எட்டியிருக்கும். சேரும் காதல், சோரும் காதல், உடைந்த காதல், உடையாத காதல் என அனைத்துக் காதலின் திருமுகங்களும் திரைவிலக்கும் காலம் இது தான். அங்கு குவிந்திருக்கும் ஆயிரம் காதல் முகங்களுக்குள் எங்காவது ஒரு மூலையில் மறையும் மெய்க் காதல். பல்கலைக்கழக அனுபவிப்பு என்ற மெய்ப் பொருள் இந்தக் காதல் விடயத்தில் மட்டும் பலருக்கு அறிவைப் போதிக்கும். இனி எங்கே சந்திப்போம், எப்படி பிரிந்து வாழ்வோம், எப்படித் தொடர்பு கொள்வோம் என்ற கேள்விகளுக்கு தாராளமான தீர்வுத் திட்டங்கள் அந்த மைதானத்து பெஞ்சுகள், மரத்தடிகள், கன்ரீன், வெல்வெயார் மண்டபம், வகுப்பறை முடக்குகள், சந்து பொந்துகள் போன்ற இடங்களில் முன்வைக்கப்படும். அவற்றுக்குள் ஆழமாகத் தேடினால் எங்காவது ஒரு சந்தில் கொஞ்சக் கண்ணீரோடு நிறையக் காதல் கசிந்து கொண்டிருப்பதைக் காண முடியும். சொல்லாத காதலின் பெறுமதியைப் பல மாணவர்கள் இந்தத் தருணத்தில் தான் உணர்வர்.

### நட்பின் இறுதி ஊர்வலம்

அந்த வெளி நட்பால் சூழ்கியது. நான்கு வருடம் பெருகிபோடிய துயரம், கவலை, துன்பம், சந்தோஷம், குடி, வெறி, தோல்வி, துரோகம், பழிவாங்கல், காதல் முறிவு, கொண்டாட்டம் என வாழ்வின் அனைத்து வகையறாக்களுக்கும் முற்றுப் புள்ளி கிடைக்கும் காலம் அது. சின்னச் சின்ன சண்டைகள், குறும்புகள், பெருஞ் சண்டைகள் என அனைத்தும் ஏற்படுத்திய மன முறிவுகளுக்கு மன நல்லிணக்கம் இப்போது தான் கண்ணீரோடு எட்டப்படும். இனி சந்திப்போமா எனத் தெரியவில்லை. எல்லாம் மறந்து, மன்னித்து பேசி விடலாம் என்ற பொதுப்புத்தி மடைதிறக்கும். பெஞ்ச் காலத்தின் இறுதிப் பொழுதுகளை கஞ்சத்தனத் தோடு ஒவ்வொருவரும் செலவழிக்கத் தொடங்குவர். ஆனாலும் நேரம் வழமை போலவே தன்னை வேகமாக முடித்துக் கொள்ளும். எங்காவது சந்திப்போம் என்ற நம்பிக்கையில் பிரிவை சுமந்து கொண்டு ஒவ்வொருத்தனும், ஒவ்வொருத்தியும் அறை திரும்புவர்.

**'அடுத்து என்ன செய்யப் போகின்றோம்?**
**வேலை கிடைக்குமா?**
**கற்பனை செய்து வந்ததெல்லாம் கிடைத்ததா?**
**இலட்சியம் நிறைவேறியதா?'**

இது போன்ற பல கேள்விகள் விடையற்றுக் கிடக்க ஒவ்வொருவரும் அந்த பெருவெளியிலிருந்து வெளியேறும் காலம் இது.

அதே காலம் தான் இப்போதும் அங்கு நிலவுகின்றது. மழை பெய்கின்றது. உள்வீதிகள் துப்புரவாகக் கிடக்கின்றன. மரத்தடிகள் உதிர்ந்த இலைகளால் நிரம்பி வழிகின்றன. விரிவுரை மண்டபங்கள் பேயறைந்த அமைதியில் மூழ்கிக் கிடக்கின்றன. எப்போதாவது பேராசான்கள் மட்டும் நடந்து வரும் குழம்பொலிகள் கேட்கின்றன. சில வகைப்பட்ட பேச்சரவமும் கேட்கின்றது. கல்லிருக்கைகள் பாசியால் மூடுண்டு, நிரந்தரமாகவே குளிரில் நடுங்குகின்றது. காதல் பேச்சுக்கள், நட்பின் துரோகங்கள், தாங்கல்கள் எதனையுமே அங்கு காணமுடியவில்லை.

ஆனாலும் அந்தக் காலம் தான் இப்போதும் அங்கு நிலவுகின்றது. கல்லறை அமைதியில் கல்லிருக்கைகள் நனைகின்றன.



**சில வருடங்களின் பின்**

**பல வருடங்களுக்கு முன்பு இந்த இடத்தில் பெரிய தமிழ் பல்கலைக்கழகம் இருந்தது. அது சீரும் சிறப்பும் பெற்றிருந்தது. ஆயிரக்கணக்கானவர்கள் இங்கு தங்கியிருந்து கல்வி பயின்றனர். தெற்கிலிருந்தோ, வெளிநாட்டிலிருந்தோ வரும் சுற்றுலாவிகளுக்கு இப்படித்தான் அந்தத் தெருவோர் விளங்கப்படுத்திக் கொண்டிருப்பர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ செந்தூரி

# இருட்டறை விளக்கு 2012




அடுத்த வெறும் இரண்டு இரவு பகல்களுக்குள்ளாக "போன வருஷத்தை" சோம்பல் முறித்து, புரண்டு படுக்கத் தயாராகிக் கொண்டிருக்கிறது பூமி! 'அழியப் போகும் உலகத்தை' அவசரமாக விற்றுக் காசாக்கிவிட, யாரோ ஒரு வடபுல வாசி தன் காணிகளை விலை பேசியதாக உலாவும் நகைத் துணுக்குகள், "காணியைக் கொண்டு போக முடியாதெனில், காசை…" பட்டினத்தாரின் உலகியல் மெய்மைகளை பகிடி பண்ணிச் சிரிக்கின்றன. எல்லாம், எக்குத் தப்பாக, சூடேறிக் கிடக்கும் பிரபஞ்சக் கோடியொன்றில், சவர்க்காரப் பெட்டியைக் கவிழ்த்து மேசையாக்கி, ஈரச்சாக்கினைப் புரட்டிப்போட்டு நான்காய் மடித்து, 'சுகாசனமிட்டு'க் குனிந்து, 22ஆம் திகதிப் பரீட்சைக்கு படித்துக் கொண்டிருக்கின்ற எவனோவொரு குழந்தை தான், ஒட்டுமொத்த உலகின் "நம்பிக்கை"க் கடவுளின் துகள் இல்லையா? ஓட்டுநர் இருக்கையில் கிருஷ்ணன் இல்லாமல், கையில் காண்டீபம் இல்லாமல், காலடியில் குருஷேத்திரம் இல்லாமல், அரணாக ஆள், அம்பு, சேனை இல்லாமல் "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" என்கின்ற இவ்வுலகின் கலியுக ஆர்முடுகல் தத்துவத்தை பதின்மவயதுத் தமிழ்க் குடியொன்று பிரயோகித்துப் பார்க்கும், பரிசோதனைக் கணங்களாகவும் பார்க்கலாம். ஆனால் அவன் முன்னால் எண்ணற்ற துரியோதனாதிகள் நிச்சயம்.

"எனக்கு முன் செல்லாதே- என்னால் பின் தொடர முடியாது, என்னைப் பின்தொடராதே-எனக்கு தலைவனாகத் தெரியாது, என்னோடு நடக்காதே-எனக்குள்ள நண்பர்கள் போதும், என் முன்னால் நில்லேன்-எனக்கொரு எதிரி தேவை அவசரமாய்"-தமக்கான வாய்ப்புக்களை வெளிப்படுத்திக் கொள்வதற்காக, ஒவ்வொரு மனிதனும் தனக்கான எதிரியை, தனக்கான போட்டியாளனை, தனக்கான 'எதிர்க்-கீரைக்கடையை'- "கூகிள், கூகிள்" பண்ணித் தேடிக் கொண்டிருக்கின்றான். எவருக்குமே இலகுவில் வாய்த்துவிடாமல், வெற்றியோ, தோல்வியோ அந்த நேர ஆச்சரியத்தை, தனக்குள் புதைத்து முன்னே நிற்கின்ற 'எதிரியை', சுலபமாக சம்பாதித்து விட்ட 'தமிழ்ச்சாதி' எத்துணைப் பெரும் அதிர்ஷ்டசாதி. எங்கே, எண்ணுங்கள் பார்ப்போம், தமிழனின் எதிரிகளை? 'கடனெடுத்துக் கழித்தல்', 'மிச்சம் கடந்து கூட்டல்' கற்பிக்கப்பட்ட இரவுகளில் தன் வலதுகையில் பத்து விரல், இடது கையிலும் பத்து விரல் சேர்த்தபடி களைத்துப் போகும் மூன்றாம் வகுப்புப் பிள்ளைக்கு நிகராய், மூச்சிரைத்துப் போவீர்கள். எமது ஏகப் பெருந்தலைவன் சொல்லிக் கடந்தது போலும், இவ்விடத்தில் அடிக்கடி நிறைவேற்றுவதுமான "இயற்கையும், துரோகமுமே எம்மினத்தின் மிகப்பெரிய எதிரிகள்" என்பதற்குக் கீழாய் எண்ணற்ற இன்னும்பல எதிரிகளின் முன் இன்னமும் இறக்கிவிடாத தோள்களும், இளைத்துவிடாத நெஞ்சமும் தாங்கி நிற்கின்ற நாம் "வலுவுள்ள வாழுமினம்" இல்லையா என்ன?

ஆற்றொணா வலிகளை வரமாகக் கொடுத்து வீழ்ந்து போனதன் பின், கடந்துபோன வேகமான மூன்று மடங்கு 365 நாள்களின் வரிசையில், இறுதிக் கணங்களை எண்ணியபடி பெருமூச்செறிந்து கொண்டிருக்கின்ற 2012, எமக்கு அணைத்ததை, மற்றும் அணைந்ததையே இவ்வாறு கொறித்தல். ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டத்தின் இரு பெரும் புலப்பாடு களங்களான "புலம்பெயர்' மற்றும் 'தாயக' சமர் வயல்களில் எம்மினம் கடந்து வந்த பன்னிரு மாதங்களுக்குரிய பாய்ச்சல்கள், பதுங்கல்கள் முறையே கவர்ச்சியும், கனதியுமானவை.

முதல்கால் வருடத்தின், சம்பவங்களுக்கான எதிர்பார்ப்பு, போதுமான விளம்பரங்களுடன் முன்னைய வருடத்தின் இறுதிக் காற்பாகத்திலேயே தொடங்கி விட்டிருந்தது. ஜெனிவாவில் சமர்ப்பிக்கப்படுகின்ற மனித உரிமைகள் கூட்டப் பேரவையின் போது இழுபறிப்பட்டிருக்கின்ற பிரேரணைக்கான சகல தரப்பு பல்தேசியங்களின் பேரம் பேசல், பின் விலையூட்டல்களுக்கு எதிராக தமிழர் தரப்புக்கு காத்திரமான உலக அனுதாபத்தை சனல்-4 பெரும்பெடுத்திருந்தது. அற்பாயுசில் போனது, அன்புக் காதலியே ஆயினும், மிடுக்கான கறுப்புடையலங்காரத்தில், கைகளில் விரித்துப் பிடித்த கறுப்புக் குடையோடு, பிடிமண்ணள்ளிப் போட்டு விட்டு, கைகுலுக்கியபடி கல்லறைத் தோட்டத்து வெண் பூவொன்றை, வரவழைத்த விரக்தியோடு வருடியபடி நடக்கும், வெள்ளைக்காரன் கூட, இசைப்பிரியாவின் சாவுக்கு குலுங்கி அழுதான். பாலச்சந்திரன் செத்துக் கிடந்ததை பார்த்து இத்தாலிச் சொக்கத் தங்கம் (சோனியா) கூட கொஞ்சம் மௌனித்தாளாம். மரணத்தின் கொடூரத்தை கறுப்புத் துணிகளில் மறைத்த கண்பார்வையற்ற இருட்டுக்குள்ளும், பெருவிரல்கள் பின்கோர்த்துப் பிணைக்கப்பட்ட இறுக்கத்திலுள்ளும், ரத்தச் சேற்றுக்குள் வீசியெறிந்திருந்த வெற்றுடல்களை, வெறும் ஒரேயொரு "வாக்கு விந்தியாசத்தினால்" மட்டுமே அனுதாபிக்கத் [illegible] பொல்லாதவுலகம். இவன் கொலைஞன் - இவனைத் தண்டியுங்கள், இவன் என் வேரை வெட்டியெறிய முயற்சிக்கின்றான். என் பூக்களுக்கு வாசனை கொடுங்கள்" என்று எல்லாத் தூதரகக் கதவுகளையும் தட்டிய தமிழனின் கைக்காய்ப்பு மாற முன்னரே, "இனி மேல் இப்படியெல்லாம் செய்யக் கூடாது" என்று செல்லமாய்க் கண்டித்து அனுப்பப்பட்டது இலங்கை!

பதில்தெரியாத "சமனின்" தலையில், தில்லெனன "கீதை" குட்டச் சொன்ன வாத்தியார் போன பின்னால், தலையைத் தடவி மன்னிப்புக் கேட்கும் கனவான் நட்பை - தனது தென் மாநிலத்து தேசிய இனமொன்றின் ஆர்ப்பாட்டங்களையும் மீறி கவனமாகப் பாதுகாத்துக் கொண்டது பாரதம். "ஆன்", "ரஹோ", "முறா" எல்லோரும் ஆளாளைப் பார்த்து "பந்தலிலேயே பாவற்காய் காய்ச்சிருக்கு பாத்தியா" என்று ஆரோகணத்தில் ஒப்பாரி இட்டு, மூக்குச் சிந்திப் பூசிக் கொண்டதோடு, எல்லாமே சுபம். மேற்கூறிய பாத்திரப் படைப்புக்களை அடையாளம் கண்டுகொள்ளத் திணறுபவர்கள் கவனத்திற்கு, "இவர்கள் ஆரம்பக் கல்வி ஆங்கிலப் புத்தகத்தில் முறையே இலங்கை, இந்தியா, இங்கிலாந்து, ஜப்பான், நைஜீரியா நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி படைக்கப்பட்டு, படங்களில் மட்டும் "கைகோர்த்து" நிற்கும் பாக்கியம் பெற்ற குழந்தைகள்."

"எங்கெங்கு போயினும், என்னிடமே வர வேண்டும்" என்கின்ற பரப்பிரம்ம மிரட்டல்,தீவுக்குள்ளான தமிழர் பிரதிநிதிகளின் "பாஸ்போர்ட்"களை முறைத்துப் பார்த்ததுடன், நினைத்ததையும் சாதித்தது! "ஐக்கிய இலங்கைக்குள், பயங்கரவாதத்தினால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு தீர்வு காணும் மும்முரத்தில்" எம்மவர்கள், "கட்டுநாயக்க" போகும் பாதையை சட்டென்று மறந்து போனதுடன், சர்வதேசத் தமிழர்களிடம் வாங்கிக் கட்டியும் கொண்டனர். மனிதவுரிமைப் பேரவையில், வாக்கெடுக்கப்பட்ட தீர்மானத்தில் இலங்கைக்கு எதிரான வெற்றி, தமிழர்களுக்கான தற்காலி ஆறுதலொன்றைக் கேளாமலே, வீசிப்போன மென்வருடலில்- எல்லோரும் மன்னிக்கப்பட்டார்கள். நிபந்தனைகளுடன்.

தமிழகத்திலிருந்து குறுகிய காலத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு முன்வரிசையில் உட்கார்ந்து கொண்ட "புதிய தலைமுறை" எனும் 24 X 7 மணித்தியால நாள் தொலைக்காட்சி, பூரண ஜெனிவாக் களத்தை உடனுக்குடன் தமிழாக்கம் செய்து தர, புலத்தமிழர்களின் சட்டமுறைமையல்லாத அணுகுமுறைகளையும், "நாடற்றவர்களுக்கு" சர்வதேசச் சந்தைகளில் கிடைக்கும் தீர்வுத் தேக்கத்தையும் பார்த்துக் கொஞ்சம் கண்ணீரும், நிறைய எண்ணுறும் கொண்டான் ஈழத் தமிழன்.

புரட்சி, போராட்டம் என்ற சொற்களைச் சொல்வதெழுதலுக்கு உச்சாடனம் செய்வதற்குக் கூட, "நியாயமான காரணங்களால்" பயந்தேயாக வேண்டிய நெருக்கத்திற்குள் தள்ளப்பட்டுள்ள தீவுக்குள்ளான தமிழ் மக்களையும், "அமர்வு"களை யாவது துணிச்சலாக ஆமோதிக்கும், ஆங்காங்கே ஆட்சேபிக்கும் "தன்வலு"வுடைய பிரதிநிதிகளையும் தாண்டி இவ்வருடத்தின் "பாடுகளுக்கான" பெரும்பங்கு வழக்கம்போல புலத்தமிழர்களையே சார்ந்து நிற்கின்றது. ஜெனிவாவுக்கு ஆதரவான போராட்டங்கள் தொடங்கி, கொடியை மறைத்து விட்டு புகைக்கண்ணாடி பூட்டிய நீளக்"காரில்" ஏறி, தப்பியோடச் செய்யுமளவுக்கு தன்னாள் கைக்குட்பட்ட, தமிழர்களை நீளக்கயிற்றில் ஆடவிட்டு, இலங்கைக்கு எதிரான தத்தமது கண்டனங்களுக்கு, மறைவடி காலைத் தேடியிருந்தன சிற்சில ஐரோப்பிய தேசங்கள். மாகாண இணைப்புக்களின் பின்னான வருடகாலப்பகுதிக்குள், கிழக்கு மாகாண மக்களின் விருப்பத்தை தெரிந்து கொள்ளும்படியான வாக்கெடுப்பை நடத்தி விட முடியாதபடி எம் நிழல் போல பின்தொடர்ந்த பயம், தன் கோரப் பற்களைக் காட்டிச் சிரித்ததும் இவ்வருடத்தின் நடுப்பகுதிக்குள் கடந்து போனது, மாற்றின வாக்கம் மூலம், தமிழர் தாயகத்தின், தலைநகரத்தை தன்னுள் தாங்கிய கிழக்கு மாகாணத்தில், முதலமைச்சர் மற்றும் பெரும்பான்மையை, " தமிழ் பேசும் "

> "
> அற்பாயுசில் போனது,
> அன்புக் காதலியே ஆயினும்,
> மிடுக்கான கறுப்புடையலங்
> காரத்தில்கைகளில் விரித்துப்
> பிடித்த கறுப்புக்
> குடையோடு,
> பிடிமண்ணள்ளிப் போட்டு
> விட்டு, கைகுலுக்கியபடி
> கல்லறைத் தோட்டத்து
> வெண் பூவொன்றை,
> வரவழைத்த விரக்தியோடு
> வருடியபடி நடக்கும்,
> வெள்ளைக் காரன் கூட,
> இசைப்பிரியாவின் சாவுக்கு
> குலுங்கி அழுதான்.

(23 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்விகளும் உறவுகளும்

## காலம் சிதைக்கும் குடும்பங்கள் பற்றிய ஒரு பார்வை

வினயன்

நம்மையே நாம் கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்விகளின் வரிசையில் இந்தப் பத்தியின் தலைப்பும் இணைத்துக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகிவிட்டது.



கலாசாரக் கட்டமைப்பின் அடித்தள வலிமைக்குத் துணை நிற்கின்ற சமூகக் காரணிகளுள் குடும்பம் என்கிற அலகு மிகப் பிரதானமானது. 'திருமணம்' என்கிற மரபுசார் நிகழ்வினைத் தொடர்ந்து கணவன் - மனைவி ஆகின்ற ஓர் ஆணும், பெண்ணும் அடிப்படையில் இரண்டு 'நான்'கள் என்பதை யாரும் ஒப்புக்கொள்வார்கள். அந்த நான்கள் இயற்கை அமைப்பின் உந்துதலோடு ஒவ்வொன்றும் 'தன்'னைத்தாண்டி - தனக்குத்தானே நகரும் முதன்மையையும் முக்கியத்துவத்தையும் தாண்டி (அல்லது துறந்து) தாம்பத்தியம் 'குடும்ப ஒருமை' என்ற கருத்தியலுக்கு அமைவான ஒரு 'வாழ்க்கை'யை முன்னெடுப்பதே குடும்ப வாழ்க்கையாகிறது. ஆணும், பெண்ணும் ஒருவருக்கொருவர் வேண்டப்படும் இயற்கையின் தேவை. இவர்களின் உடனிருப்பை இணக்கத்தை தவிர்க்க இயலாததாக்குகிறது. தொடர்கின்ற வம்சவிருத்தி குடும்ப பந்தம் - பாசப்பிணைப்பு என்கிற விடயங்கள் குடும்பத்தின் கட்டமைப்பை இறுக்கமாக்குகின்றன. இதுவே குடும்பத்தின் அடிப்படை.

துரதிர்ஷ்டவசமாக இன்று இந்தக் குடும்பப் பிணைப்பு அல்லது பந்தம் சோதனைக்குள்ளாக்கப்படும் துயரங்கள் ஆங்காங்கே பரவலாக ஏற்பட்டு வருகின்றன. பெருகிவரும் விவாகரத்துக்கள் - ஈர்ப்பற்ற வெறும் பெயரளவிலான கூடி வாழ்தல்கள் - அடிக்கடி ஏற்பட்டுவரும் முரண்பாடுகளும் மோதல்களும் பிரிவுகளும் வெளிப்படையான குடும்பச் சண்டைகள் பிரிந்து போதல்கள் - பொறுப்பற்ற கணவன் - பொறுப்பற்ற மனைவி இத்தகைய நிகழ்வுகளும் - நிலைமைகளும் குடும்ப வாழ்வைத் தொலைந்துபோக வைக்கின்றன.

இதிலுள்ள ஒரு வேடிக்கையான துயரம் என்னவெனில் பெற்றோர்களால் ஒழுங்கு செய்யப்பட்டு மேற்கொள்ளப்படும் திருமணங்கள் மட்டுமன்றி தாமே 'முடிவு' செய்கின்ற காதல் திருமணங்களும் இவ்வாறான 'முறிவு'களுக்கு உள்ளாவது தான்.

எமது திருமண நடைமுறையில் தவிர்க்க இயலாப் பிரதானத்துவத்தை வகிக்கின்ற சீதன முறை பெரும்பாலான திருமணங்களைக் கேலிக்குரிய விடயங்களாக்கி வெறும் 'உடமைக் கைமாறுதல்'களுக்கான வியாபார நடவடிக்கைகள் போல ஆக்கிவருவதனை நாம் நன்கறிவோம்.

காணி, பூமி, நகைநட்டு, காசுபணம் இவற்றைக் குறியாகக் கொண்டு அவற்றின் பொருட்டாகவே ஒரு பெண்ணைத் துணையாக்கிக்கொள்ளும் காரியங்கள் தான் இன்றைய பெரும்பாலான கலியாணங்கள்.

இதே நோக்கும் நடைமுறைகளும் முன்பிருந்தே வழக்கிலிருந்து வருகின்ற போதும் முன்னைய நாள்களில் குடும்ப முறிவுகள் இன்றிருக்கிற அளவுக்கு இருந்திருக்கவில்லை. ஆண், பெண் இருவருமே தம் குடும்பத்தில் இருக்கின்ற முரண்பாடுகளுக்கு அப்பால் ஒருவகை இணக்கத்தைத் தோற்றுவித்துக் கொண்டார்கள். இரண்டொரு பிள்ளைகள் பிறப்பதுடன் குடும்பத்தின் பற்றும் பிடிப்பும் திசைமாறி ஒன்றித்துப் போயின. தாலி, பொட்டு, சுமங்கலித்துவம் அதனோடு கிடைக்கின்ற சமூக அங்கீகாரமும் முக்கியத்துவமும் என அமைந்த காரணிகள் குடும்ப ஒருமைப்பாட்டைக் காப்பாற்றும் அடிப்படைகளாயிருந்தன. அக்காலத்தில் பொருளைக் காப்பாற்றுதல், பெருக்குதல் மேலும் சம்பாதித்தல் என்கிற காரியங்கள் குடும்பத் தலைவர்களுக்கேயுரிய தனித்த பெருங் கடமைகளாகவும் அவர்களின் 'பொருளாக்க வல்லமை' அவர்களின் தனித்த பெருமையாகவும் விளங்கிவந்தது. எனவே மனைவி என்பவள், பெண் என்பவள்- ஒரு வகையில் ஆணிலேயே தங்கியிருப்பவளாகவும் அடிப்படையில் இரண்டாந்தரப் பிரஜையாகவும் கருதப்பட்ட நிலைமையொன்றிருந்தது.

இந்தக் காரணங்களால் குடும்பத்தில் தோன்றக் கூடிய முரண்பாடுகளும் வேறுபாடுகளும் பொதுவாகப் பெண்களால் சகித்துக் கொள்ளப்பட வேண்டிய கட்டாயமும் தவிர்க்க இயலா ஒரு நிலைமையும் காணப்பட்டது. கல்வியறிவு, சம்பாதிக்கும் திறன் இந்த விடயங்களிலும் பெண் இரண்டாம் பட்சத்தில் இருந்த காரணத்தால் முரண்பாடுகள் பற்றி முணுமுணுக்கக் கூட அவளுக்கு உரிமை இருக்கவில்லை. எல்லாவற்றையும் சகித்துப் போகிற 'சகி'யாக அவள் பிம்பப்படுத்தப்பட்டிருந்தாள்.

இன்றோ நிலைமை அப்படியில்லை. ஆணுக்கு இணையாக பெண்ணுக்கு கல்வி கற்கும் உரிமை, தொழில் புரியும் உரிமை இருக்கிறது. சம்பாதிக்கும் திறன் இருக்கிறது. தவிரவும் ஒரு குடும்பத்தில் இருவரும் சம்பாதித்தால்தான் குடும்பத்தின் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க முடியும் என்கின்ற கருத்தியலும் உறுதிப்பட்டுப் போயுள்ளது. ஒருவகையில் ஆணுக்குப் பெண் சமமாக, இணையாக ஆகிவிடுவது காலத்தின் ஒரு கட்டாய தேவையாகிப் போயுள்ளது. வெளிநாடுகளில் உழைக்கும் நோக்கோடு போய்ச் சம்பாதித்துக்கொள்கிற ஆண்கள் இன்றெல்லாம் தொழில் பார்க்கும் பெண்ணையே திருமணம் செய்ய நாடி நிற்கிற நிலைமை உருவாகியிருப்பதையும் நாம் அறிவோம்.

இங்ஙனமான ஒரு சூழல் கனிந்துள்ள ஒரு காலகட்டத்தில் மணமுறிவுகள் தோன்றுவதும் விவாகரத்துகளும் சாதாரண நிகழ்வாகிப் போயிருப்பதும் பலரையும் யோசிக்க வைத்திருக்கிறது. காதலின் பெயரால் ஒன்றுபடுகின்ற இருவர்கூட 'ஆளை விட்டால் சாமி என [illegible] விலகிவிடும் [illegible] உறவின் முறிவுகளும் சம்பவிக்கின்றன.

இங்கேதான் நாம் ஒன்றைப் பற்றி மிகத் தீர்க்கமாக யோசிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். திருமணம் பெரியோரால் தீர்மானிக்கப்படுவது அல்லது மணம் செய்து கொள்ளும் இருவரால் காதலின் பெயரால் முடிவு செய்யப்படுவது என்பது பெரிய விடயமல்ல.

திருமணபந்தத்தால் இணைந்து கொண்ட இருவர், ஒருவர்மீதொருவர் காட்டும் அன்பின் தன்மையே அவர்களின் உறவின் சாசுவதத் தன்மையை முடிவாக்குகிறது. பேராசிரியர் ஒருவர் ஒரு சமயம் குறிப்பிட்ட ஒரு கருத்து இப்போது நினைவுக்கு வருகிறது.

திருமணம் என்பது இரண்டு 'ஈகோ'க்களின் (நான்களின்) இணைவுதான். அந்தத் திருமண உறவின் மூலம் நான் என்னும் தனித்த ஒன்று மற்றையதில் தன்னை இழந்து கரைந்து ஒன்றித்துப் போக முடியும்போதுதான் அந்தத் திருமணம் என்னும் பந்தம் அர்த்தம் கொள்கிறது என்ற அவரது கருத்தின் உண்மை மனதைத் தொடுகிறது. அவ்வாறில்லாமல் அந்த நான் இரண்டும் தம் தனித்துவங்களை முதன்மைப்படுத்தி நிற்கும் வரை முரண்பாடுகள் தொடரத்தான் செய்யும். உடைவும் விலகலும் நிகழத்தான் செய்யும்.



நம்மை நாம்...

இந்த நிலைமைக்கு மாறாக அமையக் கூடிய சூழலை உருவாக்க வாய்ப்புக்கள் ஏதுமில்லையா? என்று பார்த்தால் இருக்கின்றன - நிச்சயமாக இருக்கின்றன என்றே சொல்லத் தோன்றுகிறது. ஆனால் அத்தகைய சூழலைத் தோற்றுவிப்பதற்கு எமது அடிப்படை நோக்குகள், அணுகுமுறைகள் என்பவற்றில் மாற்றம் தேவைப்படுகிறது. எமது சிந்தனைப் போக்குகளும் உறைந்து நிலைத்துப்போன சில முன்முடிவுகளும் பரிசீலனை செய்யப்பட்டு மாற்றியமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

மனித வாழ்வுக்கு வேண்டிய அடிப்படையான பல விழுமியங்களும் பண்பு சார் சிந்தனைகளும் எமது இளைய தலைமுறையினருக்கு [illegible] கொடுக்கப்பட வேண்டும். [illegible] யாக எமது சமூகம் பொருள் முதன்மைச் சிந்தனைகளுக்கு முன்னிடம் தரத் தொடங்கியிருக்கிறது. திரவியம் தேடும் முயற்சியில் திரைகடல் ஓடுதல், மிகச் சாதாரணமாகிப் போய்விட்டது.

வர்த்தகசிந்தனை மேலோங்கிக் கிடக்கும் இன்றைய நிலையில் நேர்மையீனமாகவெனினும், பொருளுக்கு உடைமையாளனாகிவிடுவதனைச் சரியென்று சொல்லும் ஒருகாலத்தில் நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த நோக்கிலேயே இன்று திருமணங்கள் சார்ந்த முடிவுகளும் எடுக்கப்படுகின்றன.

பெரும் செல்வத்தை உடையவர்களாக இருப்பவர்கள் கூடப் பெண்ணெடுக்கும் போது, கௌரவம் கருதி உயர்ந்த சீதனத்தைக் கேட்டு நிற்பதும் ஒரு நிர்ப்பந்தமாகிப் போனது.

இந்தக் கண்ணோட்டம் இன்றைய இளைய தலைமுறையை, பொருளை உடைமையாக்கும் முயற்சியில் எந்த உறவையும் தூக்கி எறிந்துவிட முடிவெடுக்கும் நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளது. கிட்டத்தட்ட ஒருவருடத்துக்கு முன்னர் ஓர் இளைஞன் தனது தந்தையாரிடம் உள்ள பெருந்தொகையான பணத்தை தனக்கு உடைமையாக்கிக் கொள்ளும் நோக்குடன் தனது தந்தை, தாய், தங்கை ஆகிய மூவரையும் நஞ்சூட்டிக் கொலைசெய்த சம்பவம் மலையகப் பகுதியில் நடைபெற்றது. பலருக்கு இது இன்னும் நினைவிருக்கலாம்.

இந்த நிகழ்விலுள்ள கொடூரத்தன்மை ஒருபுறமிருக்க அந்த இளைஞனின் மனதில் தன்னைச் சார்ந்த தனது சொந்தப் பெற்றோரையும், தங்கையையும் கொலை செய்துவிட்டு எடுத்தபொருளோடு தனக்கொரு வாழ்வை அமைத்துக் கொள்ளும் முடிவு இருந்திருக்கிறது என்பதை அறியும் போது, பொதுவாகவே நமது இளைய சமூகத்தினரின் நோக்கினையும் போக்கினையும் பற்றி ஓர் அச்சமும், துயரமும் மேலிட்டு நிற்பதைத் தவிர்க்க இயலவில்லை. தர்மம், நியாயம், பாசம் போன்ற உயர்ந்த விழுமியங்கள் வெறும் சொற்களாகக் கருதப்படும் நிலைமைதான் இன்றைய இளையோர் மத்தியில் தலையெடுத்து நிற்பதனையும், யாந்திரிகத் தன்மையுடனான போகங்களை மட்டும் நாடி நிற்கும் போக்குக்கு அவர்கள் இரையாகி வருவதையும் வெறும் சமூக மாறுதல்களாக மட்டும் கண்டுகொள்ள முடியாமலிருக்கிறது.

இளைய தலைமுறையினரை எமது அடுத்த பரம்பரையை - எமது பிள்ளைகளைக் காப்பாற்றி, மனிதர்களாக வாழவைக்க நாம் என்ன செய்யப்போகிறோம்?


பிள்ளைகளின் முதல் ஆசான்கள் பெற்றோர்களே என்றும், முதற்பாடசாலை குடும்பமே என்றும் சொல்கின்ற அறிஞர் வாக்குப் பொய்யானதல்ல. இந்த வாக்கினை ஒப்புக்கொள்வதில் யாருக்கும் தயக்கம் இருக்கமுடியாது. அப்படியானால் முதல் ஆசான்களாக பெற்றோர் அமைகின்ற குடும்பம் என்னும் பாடசாலையில் எத்தகைய சூழலை இனி ஏற்படுத்தப் போகிறோம்? இது ஒவ்வொரு பெற்றோரும் தம்மைத் தாமே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி அல்லவா? ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் 30/1/20

# மழை

நா. ராசா இராமநாதன்



மூன்று நாள்களாகத் தொடர்ந்த மழை இன்னமும் பெய்துகொண்டே இருந்தது. கார்த்திகையின் அடை மழை... இன்னும் விடுவதாய் இல்லை. 'என்ன மழையிது' என்று எல்லோரும் கூறுமளவுக்கு மழையின் தாண்டவம் அதிகரித்திருந்தது. அந்தச் சிற்றூரின் குளம் நிரம்பியிருந்ததால் வெள்ளம் போக இடமின்றி ஊருக்குள்ளேயே தங்கிவிட்டது.

கூலித்தொழிலாளர்களை அநேகமாகக் கொண்ட ஊர் அது. பெருமளவு குடிசைகளும் ஆங்காங்கே சிறிய சிறிய கல்வீடுகளும் எனக் குடியிருப்புகள் செம்மண் தரை என்பதால் செம்மை கலந்த நீர் எங்கும் தேங்கிநின்றது.

காலை விடிந்து நேரம் எட்டு மணியாகியிருந்த போதும், மழையிருள் மூடிக்கொண்டேயிருந்தது. பேரிரைச்சலோடு மழை வருவதும் போவதுமாய் அவ்வூரில் உள்ளோர்க்கு ஏக்கத்தைத் தோற்றுவித்துக்கொண்டிருந்தது.

மேசன் தறுமுவுக்கு உறக்கம் வரவில்லை. போர்வையை இன்னும் விலக்காமல் எழுந்து திண்ணையில் இருந்தபடியே வாசலுக்கு மூடிச்சாத்திய தட்டியின் ஊடாக வெளியே பார்க்கிறான். மேற்கே எங்கும் ஒரே வெள்ளக்காடாக இருந்தது. வானொலிப் பெட்டி ஒன்று சக்தி மிகக் குறைந்த ஈனஸ்வரக் குரலில் பாடிக்கொண்டிருந்தது.

பெருமூச்சொன்றை விட்டபடியே, காதுக்குள்ளிருந்த குறைபீடியை, நெருப்புப் பெட்டியைத் தட்டி வைத்து மூட்ட முனைந்தபோதும், முடியாமற்போனதால், வீட்டுக்கூரையில் கம்பியில் கொழுவியிருந்த 'லாம்பை'த் தீண்டி அதன் 'சிமினி'யை உயர்த்தி கடதாசியை எடுத்துப் பற்றவைத்து மூட்டி, ஒரு தரம் புகையை இழுத்த போதுதான் தறுமுவுக்கு 'உயிர்' வந்ததுபோல் இருந்தது. அலுப்பு முறித்துக்கொண்டு போர்வையை இறுகப் போர்த்தபடி வீட்டுக்கு வெளியே நோட்டம் விடுகிறான். சில வீடுகளின் குசினிக் கூரைகளுக்கு மேலால் புகை வருவது தெரிகிறது. பல வீடுகளின் கூரைகளில் மழையின் தெறிப்பே தெரிந்தது. 'ம்...' மீண்டும் ஒரு பெருமூச்சு தறுமுவின் அடிநெஞ்சில் இருந்து வெளியேறியது.

... இப்படி மழை பெய்தா எப்படிச் சீவியம் நடத்திறது... கவலைகள் தேங்கிய நெஞ்சோடு அவன் வீட்டின் உள்ளே பார்க்கிறான். தறுமுவின் பிள்ளைகள் ஒரு பாயில் சுருண்டு படுத்திருக்கின்றனர். மனைவி கமலா படுத்த பாயில் எழுந்திருந்தபடி போர்வையை விலக்காது, 'விடாது' கொட்டும் மழையைச் சபித்தபடி இருக்கிறாள்.

... இப்ப எத்தன நாளா பிள்ளையள் பட்டினி. கடவுளே நான் என்ன செய்ய. இந்த மழை எப்பன் விட்டாலாவது அவர் போய் எங்கையெண்டாலும் வேலை செய்து பிள்ளையளுக்குச் சாப்பாடு குடுக்கலாம்.

கமலாவின் எண்ணங்கள் கவலை தோய்ந்து உதித்து மறைந்தன. கமலாவைப் பார்க்க தறுமுவுக்கும் கவலையாயிருந்தது. கமலா ஒருபோதும் இப்படி நீண்டதாய் காலை உறக்கம் கொள்வதேயில்லை. அதிகாலையில் எழுந்து வீட்டு வேலைகளை என்ன கச்சிதமாய்ச் செய்வாள். சுறுசுறுப்பெண்டதை எறும்புகள் கூட இவளிடந்தான் கற்க வேண்டும் என்று சொல்லுமளவுக்கு... அவ்வளவு சுறுசுறுப்புக் கொண்டவள்.

"இந்தா கமலா இண்டைய என் சம்பளம்" என்று தனது நாள் சம்பளத்தைக் கமலாவின் கைகளிற் கொடுத்ததோடு தறுமுவின் பொறுப்பு முடிந்துவிடும். அந்தச் சம்பளப் பணத்தில் வீட்டு நிர்வாகம் எப்படி எப்படி எல்லாமோ ஓப்பேறும்.

தறுமுவுக்கு இவையெல்லாம் சில வேளைகளில் பெரும் ஆச்சரியமாகவே இருக்கும். சிறுகச் சிறுகச் சேமிப்பதும், சீட்டுக்கட்டுவதும் எனவான அவளது கெட்டித் தனம், தறுமுவின் தங்கைகள் இருவரினதும் திருமணச் சடங்குகளை நடத்தி முடிக்க முடிந்தது.

"என்னடா தறுமு", உன்ர மனுசி வலு கெட்டிக் காரிபோல கிடக்கு. ஏதோ அவையளுக்குக் குடுக்க வேண்டியதைக் குடுத்து, உன்ர தங்கச்சிமாரின்ர கலியாணத்தை வலு கெட்டித்தனமா ஒப்பேற்றிப்போட்டாள்... அ..."

"ஓம் சரசக்கா, அம்மாவும் செத்தப்பிறகு தங்கச்சியாக்கள் என்னோட தானே இருந்தவை. அதால கமலா பொறுப்பாக் கவனிச்சு அவையளுக்குக் கலியாணமும் செய்து வைச்சவ."

தன் மனைவி பற்றி பெருமையோடு தயவாகக் கூறினான் தறுமு.

"எண்டாலும் தறுமு உப்பிடிப் பொம்பிளை எல்லோருக்கும் வாய்க்காது. தானும் தன்ர குடும்பமும் எண்டு வாழுற இடத்தில கமலா... சா... நல்ல ஒரு பிள்ளையடா தறுமு..."

தறுமு சரசு அக்காவுக்கு என்ன சொல்வது என்று தெரியாமல் பெருமையில் விக்கித்துப் போய் நின்றான்.

"கமலா"

"ம்"

"கமலா இண்டைக்கு என்னோட மேசன் ஆக்களும் கூலி ஆக்களுமாக ஒரு ஆறுபேர் வருவினம். கணேசப் பிள்ளையர் வீட்டில நிலம் இழுக்கப் போறம். அது முடிய இரவு பத்துப் பன்னிரெண்டு மணியெண்டாலும் செல்லும். அதால அவையளுக்கு இரவு இஞ்சதான் சாப்பாடு குடுக்க வேணும்."

தறுமு, மனைவி கமலாவுக்கு உத்தரவு ஒன்றைப் போட்டான்.

"... பேந்து கேளுங்கோவன் கமலா... அவையளில ஒரு பெடியன் மச்சம் சாப்பிடுறேல்ல. அதோட புட்டும் தின்னுறேல்ல. மற்றாக்களுக்கு புட்டும் இறைச்சிக்கறியும் சமைப்பம். அந்த ஒராளுக்கு அது தான் மரக்கறிக் காரனுக்கு இடியப்பமும் உருளைக் கிழங்குக் குழம்பும் காய்கவும் என்னப்பா..."

தறுமு அடுக்கிக்கொண்டே போனான்.

"அதுக்கென்னப்பா, வேலை செய்யிற ஆக்களுக்குச் சமைச்சுக் குடுக்கத்தானே வேணும், நீங்க போட்டு வாங்கோ, சொன்னபடி சமைச்சு மனங்குளிர, வயிறு நிரம்பச் சாப்பாடு வழங்குவம்..."

அந்தக் கமலாதான் நித்திரைப் பாயில் இருந்து எழும்பாமல், காலைச் சாப்பாட்டுக்கு என்ன வழி என்று முடிவு காணாது யோசனையில் மூழ்கிக் கிடக்கிறாள்.

மாரி பிறந்தாலே மேசன் வேலை என்பது பெரும் இடர்ப்பாடான ஒன்றுதான்.


... ஓ ... எவ்வளவு வெய்யிலையுந் தாங்கலாம், ஒரு நேர மழையைத் தாங்கேலாது.

மேசன் தொழிலாளர்களது ஆதங்கமாக எழும் சுலோகம் இது. "மாரி வரப்போகுது. இந்த முறை வேலையளும் இல்லை. என்ன செய்யப் போறமோ..."

மேசன் வேலையாள்களின் ஒட்டுமொத்த ஏக்கம் இது. எல்லோருக்கும் வீடு கட்டிக் கொடுக்கும் மேசன் ஆள்களின் கொட்டில் வீடுகள் ஒழுகி, ஊறி, பாறி வீழ்வதும், வெள்ளத்தில் மிதப்பதும் ஒவ்வொரு மாரியின் போதான செயற்பாடாகவே இருப்பது வழக்கம்.

கோடையிற்கூட வெயில் முழுவதும் காய்ந்து, நொந்து போனபோதும், அந்த வேலையைச் செய்து முடித்துப் பார்த்து இரசிக்கும்போது ஏற்படும் திருப்தி...

# மீண்டுமொரு கனவு



தூரத்தில் நெற்கதிர்கள்
முற்றி தலைசாய்கின்றன
பொன் விளைந்தது பூமி!
இந்தமுறை வெற்றிதான்!
கிட்டச் செல்ல
சீ... சீ... இதுவும் கோழிச்சூடன்தான்
போன முறை
பற்றிப்பிடித்து என்ரை
நெல்லை அழித்தது இதுதான்
இவ்வளவு மருந்தடித்தும்
இன்னும் அழியவில்லை பார்
விறைப்புடன் நிமிர்ந்து தான் நிற்கிறதே!
நெல்லுக் கிறைத்த நீரில்
புற்கள் மட்டும் ஓங்கி வளர்கிறதே!
நெற்பயிர் மட்டும்
இன்னும் பரட்டையாய்!
மஞ்சளடித்து தவிக்கிறதே!
நாளும் இப்படித்தான்!
பாடுபட்டவன் இன்னும்
பயன்பெறவில்லை



முற்பிறவி ஊழோ
கண்டறியத் தெரியவில்லை.
ஆனாலும் விடாது பாடுபடுகை
இந்த முறை பிழைத்தாலும்
மீண்டும் விதை
வைரமனம் சொல்லுகிறதே!
சிறுபிள்ளை வேளாண்மை
விளையும் வீடுவந்துசேராது
கற்றறிந்தார் கண்டிப்பு
ஒருமுறை உண்மையானதே!
இந்தமுறை
நெல்லு வெட்டி வீடுவரை
கொண்டு போகின்றேன் பார்
வளமாய் கற்பனை செய்கிறது மனம்
என்ரை நிலத்தில்
விளையும் நெல்லில்
கஞ்சி குடித்தால்
பாடுபட்ட களைப்பெல்லாம்
சூரியனைக் கண்ட பனியாய் நீங்காதோ!
நயினை ஆச்சி துணையாய் வாராயோ!
செல்லப்புரத்தானே சக்கரத்தை ஒருமுறை
சுழற்றிவிடு நல்லூரானே தேரெடுக்கும் நேரமிது
வற்றாப்பளையானே வயலைக் காப்பாற்று
ஓயாத வேண்டுதல்கள்
எந்தத் தெய்வமும் பதிலளிக்கவில்லை!
எந்த நம்பிக்கையும் பிறக்கவில்லை!
எது நடக்க இருக்கிறதோ!
அதுவும் நன்றாகவே நடக்கும்.
கீதாசாரத்தின் நம்பிக்கையுடன்
காத்திருப்பு ..............

சிவஞானி
உரும்பிராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



“இப்ப எத்தன நாளா பிள்ளையள் பட்டினி. கடவுளே நான் என்ன செய்ய. இந்த மழை எப்பன் விட்டாலாவது அவர் போய் எங்கையெண்டாலும் வேலை செய்து பிள்ளையளுக்குச் சாப்பாடு குடுக்கலாம். கமலாவின் எண்ணங்கள் கவலை தோய்ந்து உதித்து மறைந்தன. கமலாவைப் பார்க்க தறுமுவுக்கும் கவலையாயிருந்தது.

அதை மற்றவர்கள் பாராட்டும்போது ஏற்படும் திருப்தி. சா... என்ன சந்தோசம்.

பத்திரிப்பைப் பூசி, படிகள் எல்லாம் பூசி, ‘கூட்’டுக்குக் கீழ் நிலமிழுத்து, எல்லாத்தின்ர முனைகளையும் மட்டக்கம்பால் ஒரே அளவாக உருட்டி, சிவப்புச் சிமெந்து கலந்து கரைச்சு ஊத்தி மினுக்கிப்போட்டு, பார்த்துப் பார்த்து ரசித்து... ஆ... அதில வாற சந்தோசம்...

பெறுகிற ஊதியத்தைவிட பெரியதல்லவா...

வேலை முடிச்சு வரேக்க பிள்ளையளுக்குத் தேவையான சின்னதாய் தின்பண்டங்கள் வாங்கிவந்து குடுத்து, அவர்களின் மகிழ்ச்சியிற் திளைப்பது... ஆ... சொல்லமுடியாத இன்பம். இப்ப தொடர்மழை, அடைமழை... அவையளுக்கு பிள்ளையளுக்கு வயிறார உணவு குடுக்க முடியாத நிலை. தறுமுவின் நெஞ்சை ஏக்கம் இறுக்கிப் பிடித்துக்கொண்டது.

கமலாவின் கண்கள் கணவர் தறுமுவின் முகத்தைப் பார்ப்பதும் பின் தரையைப் பார்ப்பதுமாய்...

‘அந்தாளும் என்ன செய்யிறது’, உந்த வெயிலில் எல்லாம் அடிச்சு, மழையெல்லாம் நனைஞ்சு உழைச்சுத் தந்தவர் தானே...

அன்பான குடும்பத்தில் ஒருவரை ஒருவர் மானசீகமாகப் போற்றும் செயற்பாடுகள் நிகழ்ந்தேறிக் கொண்டிருந்தன.

“இண்டைக்கும் மழை விடுமாப்போல இல்லையப்பா...”

“இல்லையப்பா, மழை இண்டைக்கு வெளிக்கும் எண்டு ரேடியோவில சொன்னது...”

தறுமு மனைவியை ஆறுதற்படுத்தினான்.

மிதிவண்டி மீன்வியாபாரி ஒருவரின் ‘ஹோன்’ ஒலி காதிற் கேட்கிறது.

... சே, பிள்ளையளுக்கு நல்லதாய் ஆக்கிப்போட வழியில்லையே...

அந்த ஏக்கம் நெருஞ்சி முள்ளாய் இருவரின் இதயங்களையும் குத்துகிறது.

“கமலா... எப்பன் தண்ணி சுடவையுமன், தேத்தண்ணி குடிப்பம்...”

“சீனி இல்லையப்பா...” கமலாவின் குரல் கம்மியிருந்தது.

“மழை எப்பன் விடுமாப்போல கிடக்கு. நான் ராணி கடையில கேட்டுக்கொண்டு வாறன்...”

சிரட்டையை எடுத்து, சொட்டுச் சாம்பலையிட்டு, அடிப் போத்தலுக்குள் இருந்த மண்ணெண்ணையை ஊற்றி தாழ்வாரத்தில் இருந்த சுள்ளி விறகுகளை எடுத்து...

படுத்திருந்த பாயைச் சுருட்டி, ஓரமாக வைத்து விட்டு, வாயைக் கொப்பளித்து, குடையை எடுத்து விரித்து மழை வெள்ளத்தைக் கால்களால் வலித்து வலித்து, வீதிக்கு வருகிறான் தறுமு. பலமாகப் பெய்த மழை தூறிக்கொண்டிருந்தது.

ராணி கடையை நோக்கிய தறுமுவின் பயணம் தொடர்ந்தது. ராணியைக் கேட்டுப் பாப்பம். சீனியும், வேற ஏதாவது சாப்பாட்டுச் சாமானும்... தருவா, இல்லையெண்டு சொல்லமாட்டா... எண்ணங்கள் காற்றடித்த பலூனாக எம்பிப் பறந்தன.

இடையில் வாசிகசாலை வாசலில் தறுமுவின் சக தொழிலாளர்கள் வாடிய, சவரம் செய்யாத முகங்களுடன் அவர்கள்.

சா... என்னமாதிரி வேலைகாரர்கள். பஞ்சி, அலுப்புப் பாராமல் பாரந்தூக்குவார்கள். நேர காலம் பாராது வேலைகளைச் செய்வார்கள். வயோதிபத்திலும் உயரங்களில் ஏறி, இறங்கி, ஆலோசனைகள் கூறி, புனிதமாகப் பணி செய்பவர்கள். கற்பனைத் திறன் கொண்டவர்கள். கதிர்காமண்ணா, இராசு, சிறீ, தவம், ஜெயம், பாலன்.

எல்லோரது ஏக்கமும், மழை எப்போது விடும் என்பதாகவேயிருந்தது. ஏனைய நேரங்களில் எல்லோரது பிரச்சினைகளும் வேறு வேறாக இருந்தாலும் இப்போது மேசன் தொழிலாளர்களின் பிரச்சினை ஒன்றாகவே... அது மழையாகவே இருந்தது.

“என்ன தறுமு... எங்க வெளிக்கிட்டாச்சு?”

கதிர்காமண்ணா அன்போடு கேட்டார்.

“இல்லை அண்ணா, மழையும் விடுகுதில்லை. நெடுக வீட்டுக்க படுத்துக்கிடக்க ஏலுமா... அதுதான் கடைப்பக்கம் போட்டு வருவம் எண்டு வெளிக்கிட்டனான்...”

மழை பற்றிய பேச்சுகள், கதைகள், பம்பல்கள் என மணித்துளிகள் சில கடந்தன.

மழைத்துளிகளும் மெல்ல மெல்ல ஓய்ந்தன. தனது பழைய மிதிவண்டியில் வேகமாக வந்த மேசன் பரமு தன் கூட்டாளிகள் எல்லோரும் ஓரிடத்தில் நிற்பதைக் கண்டு வேகமாக வந்த மிதிவண்டியை நிறுத்த தன் இரண்டு காற்பாதங்களாலும், பின்சில்லைப் பக்கப் பாடுகளில் நெரித்து ‘பிறேக்’ போட்டான்.

கடும் மழையும், வேலை இல்லாததும் என ஒவ்வொருவர் துன்பங்களும் ஒவ்வொருவரின் முகங்களிலும் ஒட்டப்பட்டிருந்தன.

“அ... இப்ப வரேக்க சின்னத்துரை முதலாளியைக் கண்டனான். சோமடுவில பள்ளிக்குடம் வேலை மொண்டு செய்ய வேணுமாம். பூச்சு வேலைதான். ஒரு பதினைஞ்சு இருபது நாள் செய்யலாமாம். தங்கு வேலை. ஆக்களிருந்தாக் கூட்டிக்கொண்டு வாறியோ எண்டு கேட்டவர். அதுதான் உங்கள் எல்லாரையும் கேப்பம் எண்டு வந்தனான். என்ன சொல்லிறியள்?”

மேசன் பரமு ‘வேலை’ என்ற அந்தச் சந்தோசமான செய்தியை எல்லோர் முன்னிலையிலும் மகிழ்வோடு கொட்டினான்.

“தங்கு வேலை எனக்குச் சரிவராது தம்பியவை” என்ற கதிர்காமண்ணா தவிர்ந்த மற்றைய அனைவரும் சம்மதித்தனர்.

“எப்பவாம் போறது...?” ஒரு குரல்.

“நாளைக்குப் போவம்” மேசன் பரமு உறுதியாகச் சொன்னான். அனைவரும் அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

குடையைச் சுருக்கி ஓரமாக வைத்து விட்டுக்கொண்டு வந்த ‘சொப்பிங் பாக்’கை மனைவி கமலாவிடம் கொடுத்துவிட்டு, நாளைக்குத் தங்கு வேலைக்குச் சோமடுவுக்குப் போகும் விடயத்தைச் சந்தோசமாக முக மலர்ச்சியோடு சொன்னான் தறுமு.

‘சொப்பிங் பாக்’கைத் திறந்து பார்த்தபோது, சீனி, மரவள்ளிக்கிழங்கு, அரிசி, கருவாடு என்பன இருந்தன.

“சின்னத்துரை முதலாளியோட தான் நாளைக்குச் சோமடுவுக்கு வேலைக்குப் போறம். எல்லாருக்கும் கொஞ்சக் கொஞ்சக் காசு தந்தவர். அதிலதான் உதுகள வாங்கினனான்.” கதைத்துக் கதைத்தே மரவள்ளிக்கிழங்கை உரிக்கத் தொடங்கினாள் கமலா.

முதல்ல கிழங்கை அவிச்சு பிள்ளையளுக்குக் குடுப்பம். பிறகு சோத்தைக் காச்சுவம்... கமலாவின் கரங்கள் வேகமெடுத்தன. மழை விட்டிருந்தது. பொலபொலவென விடிந்திருந்தது. தன் வேலைச் சாமான்களையெல்லாம் கட்டி, உடுப்புகளைப் பிரயாணப் பை ஒன்றினுள் திணித்து, உறக்கத்தில் இருந்த பிள்ளைகளைத் தட்டி எழுப்பி முத்தங் கொடுத்து, “பிள்ளையள் கவனங்கமலா” அன்பு கலந்த எச்சரிக்கை கொடுத்து விடைபெற்றான் தறுமு.

கூலியாள்கள், மேசன்மார் என ஆறு பேர் கொண்ட குழு, பேருந்துப்பயணம் தொடர்ந்து நீண்ட தொலை நடைபயணம் என்று வேலைத் தலம் வந்து சேர பொழுது இருட்டி விட்டது. மழை முற்றாக நீங்கவில்லை என்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன. மழை இருட்டு மூடிக்கிடந்தது.

எல்லோர் முகங்களும் கவலையில் இருட்டி விட்டதனால் பாடசாலைக் கட்டடத்துள் எல்லோரும் முடங்கிக்கொண்டனர். போத்தல் விளக்கொன்று தூங்கித் தூங்கி ஒளியைக் கொடுத்துக் கொண்டிருந்தது. முதலாளி சின்னத்துரையார் வாங்கிக்கொண்டு வந்த பாண் எல்லோருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. பாணையுண்டு விட்டு படுக்கையில் குப்புற விழுந்தபோதும் உறக்கம் வர மறுத்தது. நடு இரவு, மின்னல் வெட்டியது. வானம் பிளக்குமாப்போல் இடிமுழக்கம், ‘சோ’ என மழை. கடும் மழை. பலத்த காற்று. அடைக்காத யன்னல் வெளிகளுக்குள்ளால் தூவானம் தெளித்தது. காலை புலர்ந்தும் மழை விடவில்லை. பகல் முழுவதும், இரவும் மழை தொடர்ந்தது. எங்கும் வெள்ளம். சோகந்தழுவிய ஒவ்வொருவர் முகங்களையும் ஒவ்வொருவர் பார்த்து...

மூன்று நாள்களாகியும் மழை ஓய்ந்தபாடில்லை. வீட்டு நினைவுகள் இதயங்களைப் பிழிந்தன. மீண்டும் எல்லோரும் ஊர் நோக்கிய பயணம்.

மழை இன்னமும் பெய்து கொண்டேயிருந்தது.

# அம்மணமாய்





பறந்த
வான் வெளியில்
நீண்ட நிலவுப் பொழுதுகள்
மலிந்த
மரணங்களின்
கொடிய இரவுகளை
விழுங்கிக் கொண்ட
வேளை
எழுந்த வேதனை
எண்ண அலைகள்
இதயச் சுவரை
கரைத்துக் கொண்டது.

உறவுகளை
பிணங்களாய்
மண்மடி சுமந்து
களைத்த வேளை

மனம் மட்டும்
உயிர்ப் பிச்சைக்காய்
ஓடும் கால்களை
விரைவுபடுத்தியது

இரத்தம் தோய்ந்த
பாதச் சுவடுகள்
மரணம் இல்லா
மண்ணை நோக்கி
மறுபிறவிக்காய்
சுதந்திர ஆடை தொலைத்து
அம்மணமாய்
ஓடியபடி ......

—ரமணன்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆட்டம் காணும் தலைமை

"தோல்விகளால் துவண்டிருந்த இலங்கை அணியை மீட்டெடுத்தவர் மஹேல ஜெயவர்த்தன. ஆஸ்திரேலியத் தொடருடன் அணித் தலைமைப் பதவியிலிருந்த மஹேல வெளியேறுவதாகத் தெரிவிக்கப்பட்டது. பின்னர், மஹேல மீதான இவ்வாறான களங்கங்கள் அவரின் அணித் தலைமைத்துவத்தையே கேள்விக்குறியாக்கியுள்ளது.

தொடர் தோல்விகளால் துவண்டிருந்த இலங்கை அணியை வெற்றிப் பாதையில் அழைத்துச் சென்ற மஹேலவின் அணித் தலைமை தற்போது கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. அணித் தலைமைப் பதவியிலிருந்து விலகவுள்ளதாக மஹேல அறிவித்த பின்னரே அவரது அணித் தலைமை கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது.

இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்த்தனவுக்கும், இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கும் இடையிலான மோதல் அணியை முற்றாகப் பாதித்துள்ளது. ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்கின்றது. முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணி தோல்வியடைந்திருந்தது.

அதன் பின்னர் அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தனவுக்கும் இலங்கை கிரிக்கெட் சபைக்கும் இடையில் மோதல் வெடித்தது. மஹேல உட்பட இலங்கை அணியின் வீரர்களினால் இலங்கை கிரிக்கெட் சபைக்கு அனுப்பப்பட்ட இரகசிய ஆவணங்கள், கிரிக்கெட் சபையினால் வீரர்களுக்கு தெரியாமல் பகிரங்கப்படுத்தப்பட்டிருந்தது.



இது தொடர்பில் மஹேல ஜெயவர்த்தன பகிரங்கமாகவே தனது எதிர்ப்பினை வெளியிட்டுள்ளதுடன், இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மீது நம்பிக்கையற்றுப் போய்விட்டதாகத் தெரிவித்திருந்தார்.

மஹேலவின் இந்த நடவடிக்கை இலங்கை கிரிக்கெட் சபையை விசனமடையச் செய்தது. அத்துடன் மஹேல மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. இந்தப் பிரச்சினைகள், ஆஸ்திரேலியாவுடனான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தை எந்த விதத்திலும் பாதிக்காது என்று மஹேல தெரிவித்திருந்தார்.

இருப்பினும் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணி மிகமோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தது. கிரிக்கெட் சபை, வீரர்கள் மோதலின் வெளிப்பாடாகவே இலங்கை அணி இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தது என்பதுதான் நிதர்சனமான உண்மை.

தொடர் தோல்விகளால் துவண்டிருந்த இலங்கை அணியை மீட்டெடுத்தவர் மஹேல ஜெயவர்த்தன. ஆஸ்திரேலியத் தொடருடன் அணித் தலைமைப் பதவியிலிருந்த மஹேல வெளியேறுவதாகத் தெரிவிக்கப்பட்டது. பின்னர், மஹேல மீதான இவ்வாறான களங்கள் அவரின் அணித் தலைமைத்துவத்தையே கேள்விக்குறியாக்கியுள்ளது.

சிறந்த அணித் தலைவராக விளங்கிய மஹேல, அணியை மீண்டும் பொறுப்பெடுத்து ஒழுங்காக வழி நடத்தியிருந்தார். ஆனால் அவர் அந்தத் தலைமையை மீள ஒப்படைக்கும் போது அவர் மீது இவ்வாறான களங்கங்களை உருவாக்குவதும், அதனால் அணி தோல்வியைச் சந்திப்பதும், மஹேலவின் கிரிக்கெட் வாழ்வின் கறுப்புப் பக்கங்களே.

# காலம் கடந்த முடிவு



இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர், ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டங்களிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். சச்சினது ஓய்வு தொடர்பல் பல்வேறுபட்ட விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஒரு நாள் அரங்கில் அதிகூடிய ஆட்டங்களில் விளையாடியமை, அதி கூடிய சதங்கள் விளாசியமை உள்ளிட்ட பல்வேறு சாதனைகளை தன்னிடத்தே கொண்டுள்ளார் சச்சின்.

இந்தியக் கிரிக்கெட்டின் சகாப்தம் என்று அழைக்கப்படும் சச்சின், இளைய வீரர்களுக்கு வழி விட்டு ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். 2015 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை கருத்தில் கொண்டு தனது ஓய்வினை அறிவித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

சச்சின் டெண்டுல்கர் கடந்த 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடருடனேயே ஓய்வினை அறிவித்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு ஓய்வு அறிவிக்காமல் அணியில் தொடர்ச்சியாக இடம்பிடித்திருந்தார். ஆனால் அவரால் சரியான திறமைகளை வெளிக்காட்ட முடியவில்லை. இருப்பினும் அவர் தனது ஓய்வு முடிவை அறிவிக்கவில்லை. சச்சினது துடுப்பாட்டம் தொடர்பில் முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் உட்பட கிரிக்கெட் விமர்சகர்கள் பலராலும் கேள்விக்குட்படுத்தப்பட்டு வந்தது. அப்போதும் ஓய்வு தொடர்பில் எதுவித அறிவிப்புக்களையோ சச்சின் விடுக்கவில்லை. மாறாக தனது ஓய்வு குறித்து யாரும் அறிவுறுத்த தேவையில்லை என்றும் தன்னால் எப்போது விளையாட முடியாமல் போகின்றதோ அப்போதே ஓய்வை அறிவிப்பேன் என்று விடாப்பிடியாக இருந்தார்.

சச்சினின் விடாப்பிடி காரணமாக தெரிவுக் குழுவினரும் வேறு வழியில்லாமல் சச்சினை அணியில் இணைத்து வந்தனர். இந்த நிலையில் இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடருக்கு சச்சினை கடுமையான நெருக்குவாரத்தின் மத்தியில் தெரிவிக்குழு அணியில் இணைத்துக் கொண்டது.

இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடரில் சச்சின் சோபிக்காமல் விட்டதுடன், இந்திய அணியும் தனது சொந்த மண்ணில் படு தோல்வியைச் சந்தித்தது.

இதனையடுத்து தெரிவிக்குழு கடுமையான முடிவுகளை எடுத்தது. அதனடிப்படையில் பாகிஸ்தான் அணியுடனான ஒரு நாள் தொடர், இங்கிலாந்து அணியுடனான ஒரு நாள் தொடர் என்பவற்றுக்கு சச்சின் இணைக்கப்படமாட்டார் என்பதை அவரிடம் தெரிவித்தது. இதன் பின்னரே சச்சின் தனது ஓய்வு முடிவை அறிவித்தார். ஒரு சிறந்த கிரிக்கெட் வீரர் தெரிவுக் குழுவின் மிரட்டலுக்குப் பணிந்து ஓய்வை அறிவித்தார். இது அவரது கிரிக்கெட் வாழ்வையே நாறடித்து விட்டது.

உண்மையில் கடந்த உலகக் கிண்ணத்துடன் கௌரவமாக ஓய்வை சச்சின் அறிவித்திருக்கலாம். இறுதியில் இறுதி ஒரு நாள் ஆட்டத்தில் ரசிகர்கள் முன் தோன்றாமல் "ரூமிலிருந்தே" ஓய்வை அறிவிக்க வேண்டி ஏற்பட்டிருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி பெறலாம் வாங்க! 30

உங்கள் வாழ்க்கையை மாற்றப்போகும் தொடர்....

> ஒவ்வொரு நிறுவனத்திலும் ஒவ்வொரு வகையான பண்பாடு இருக்கும. அந்தப் பண்பாட்டில் நீங்கள் மட்டுமல்ல ஒவ்வொருவருமே தாக்கம் ஏற்படுத்தலாம். பணியாளர்கள் அனைவரும் ஒருவரோடு ஒருவர் இணைந்து பணியாற்றும் படியான நிலையை ஏற்படுத்தி விடலாம். அது உங்கள் தொழில் வாழ்க்கையை மேம்படுத்துதாக இருக்கும்.



ராகவன் அல்பி

**முதலாளியின் பார்வையில் விடயங்களைப் பார்த்தல்** நாணயத்துக்கு இரண்டு பக்கங்கள் உண்டு. சில சமயங்களில் முதலாளி தோல்வியை மநேரிடும். சில சமயங்களில் முதலாளியின் பார்வையிலேயே பார்க்க வேண்டியிருக்கும். உங்களின் முதலாளியும் ஒரு வகையில் பணியாளர் தான். நீங்கள் எவ்வாறு வருமானத்துக்கும், வேலை திருப்திக்காகவும் நிறுவனத்தைச் சார்ந்துள்ளீர்களோ அது போன்றே அவரும் சார்ந்திருக்கிறார்.

நிறுவனம் நிர்ணயிக்கும் இலக்கை ஏற்றுக்கொண்டு சாதித்துக் காட்டுவது மேலாளரின் பொறுப்பு. இதைத் திறன்படச் செய்வதற்குச் செயலை எப்போது செய்ய வேண்டும் எப்போது செய்ய வேண்டும், எப்போது சரியாக அமையும் என்பதை முன்கூட்டியே தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். செயல் திட்டங்கள் குறித்த ஆலோசனைகளுக்காக அவர்கள் உங்களையும் சார்ந்து தான் இருக்க வேண்டும்..அது போன்ற சமயங்களில் என்னென்ன மாற்றங்கள் செய்ய வேண்டுமென்று நினைக்கிறீர்களோ அதை மற்றவர்களிடம் சொல்லிக் கொண்டிருப்பதை விட உங்கள் பாஸிடம் சொல்வது அக்கபூர்வமான பயனளிக்கும்.

**வேலை செய்யும் சூழல்** ஒவ்வொரு நிறுவனத்திலும் ஒவ்வொரு வகையான பண்பாடு இருக்கும. அந்தப் பண்பாட்டில் நீங்கள் மட்டுமல்ல ஒவ்வொருவருமே தாக்கம் ஏற்படுத்தலாம். பணியாளர்கள் அனைவரும் ஒருவரோடு ஒருவர் இணைந்து பணியாற்றும் படியான நிலையை ஏற்படுத்தி விடலாம். அது உங்கள் தொழில் வாழ்க்கையை மேம்படுத்துதாக இருக்கும். இது போன்ற செயற்பாடுகளில் நீங்கள் முன்னின்று செய்வது உங்களின் திறன் மேம்பட உதவும்.

**சந்தோஷமாக வேலை செய்வது** ஒரு சில, குதூகலம் நிறைந்ததாகவும் இருக்கும். அதே சமயம் இன்னும் சில நிறுவனங்களில் சோர்வுற்ற நிலையில் இருப்பார்கள். இது எதனால் என்றால் சந்தோஷமான இடங்களில் அவர்கள் வேலை செய்வதோடு மட்டுமல்லாமல், அலுவலகத்தின் முன்னேற்றத்தையும் கருத்தில் கொண்டு முழு ஈடுபாட்டுடன் பணி புரிகிறார்கள்.

நாம் எங்கு வேலை செய்தாலும் என்ன செய்தாலும் நாம் அனைவருமே வேலை செய்யுமிடத்தில் சந்தோஷமாக இருக்க வேண்டுமென நினைப்போம். பின்வரும் அத்தியாயத்தில் அதற்கான ஆலோசனை தரப்பட்டுள்ளன.

**உங்களுக்கான இடம்** அலுவலகத்தில் உங்களுக்கான இடம் ஒன்று இருக்க வேண்டும். அது அலுவலகத்தின் ஒரு மூலையாகக் கூட இருக்கலாம். அங்கு நீங்கள் விரும்பியதைச் செய்யலாம்

**பசுமை** உங்கள் அணியினருடன் சேர்ந்து பூஞ்செடிகளை வளருங்கள். சுற்றிலும் பசுமையாக இருப்பது மனதுக்கு உற்சாகத்தை ஊட்டும். அதைப் பார்க்கும் உங்கள் பாஸ் அதற்கான பாதிச் செலவைக் கூடத் தந்துவிடுவார்.

**விளக்குகள்** நாள்தோறும் பளிச்சென்று இருக்கும் ஃப்ளோரசண்ட் விளக்குகளின் அடியில் வேலை செய்வது கடினமானது. மென்மையான விளக்குகளையோ மேசை விளக்குகளையோ பயன்படுத்தலாம்.

**யன்னலைத் திறந்து வையுங்கள்**- தூயகாற்று மூளைக்கு நல்லது. குளிர்காலத்தில் கூட அடைத்த அறைக்குள் அமர்ந்திருக்காதீர்கள்.

வசதியாக உடை உடுத்துங்கள்- நீங்கள் சௌகரியமாக உணரும் வகையில் உடை உடுத்துங்கள். நீண்ட நேரம் அமர்ந்து வேலை செய்ய வேண்டியிருப்பதால் இறுக்கமில்லாத தளர்வான உடைகளையே அணியுங்கள்.

**இடை வேளை எடுத்துக் கொள்ளுங்கள்**- ஏன் புகைப்பிடிப்பவர்கள் மட்டும் தான் மேசையிளை விட்டு எழுந்து போய் வெளியில் காற்று வாங்க நிற்க வேண்டுமா என்ன? நீங்களும் வேலையிலிருந்து ஐந்து நிமிடம் இடைவேளை எடுத்துக் கொண்டு வெளியில் போய் காற்றோட்டமாக நிற்கலாம்.

நாம் ஒவ்வொருவரும் ஒருவிதம் என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள்- நம் வாழ்க்கைத் திட்டத் தேர்வுகள் நாம் ஒவ்வொருவரும் எவ்வளவு வித்தியாசமானவர்கள் என்பதைக் காட்டும். உலகத்தைப் பற்றிய பார்வை உங்களைவிட வேறானதாக மற்றவர்களுக்கு இருப்பதால் நீங்கள் எரிச்சல் அடைய வேண்டியதில்லை.

**நெட்வொர்க் உருவாக்குதல்**- உங்களுக்கென்று பணி சார்ந்த ஒரு அணி இருப்பது போன்ற பணி சாராத அணியும் தேவை. உங்களுக்கு உதவும் வகையிலான ஆள்களைக் கொண்ட ஒரு அணியை உருவாக்குங்கள். இது கூடுதலாகச் செயற்பட உதவும்.

விடுமுறை- ஒருவேளை நீங்கள் விடுமுறையில் செல்லத் திட்டமிட முடியாத போது உங்கள் கணினி திரையில் தென்னை மரங்கள் அடர்ந்த கடற்கரையின் படமிருப்பது ஒன்றும் தவறானதல்ல.

**நேர்மையாகச் சிந்தியுங்கள்**- ஒவ்வொரு சூழ்நிலையையும் நாம் வெவ்வேறு விதமாகப் பார்க்கலாம். எதிர்மறையாக இல்லாமல் நேர்மறையாகப் பார்க்க முயற்சிக்க வேண்டும். எதிர்மறையானது எளிதில் தொற்றிக் கொண்டு நம்மைப் பாதிப்படையச் செய்துவிடும். அதனால் எதிர்மறையானவர்களிடமிருந்து தள்ளியே இருங்கள்.

**செயலைச் செய்து முடித்தல்** மனிதர்களுடன் நன்கு தொடர்பு கொள்வது பற்றிக் கற்றுத் தர ஏகப்பட்ட நிபுணர்கள் உள்ளனர். அது பற்றிப் பேச நூற்றுக்கணக்கான புத்தங்கள் உள்ளன. ஆனால் நல்ல திறன்மிகு தொடர்புக்கு சில அடிப்படை விடயங்களைப் பின்பற்றினால் மிக எளிதானதாகிவிடும். நீங்கள் மற்றவர்களிடம் என்ன எதிர்பார்க்கிறீர்கள், எப்போது முடியும் என எதிர்பார்க்கிறீர்கள் என்பதையெல்லாம் மிகத் தெளிவாகச் சொல்லிவிட வேண்டும்.

## அவளா ? முதியோர் இல்லத்தில்



பலமாதம்
உட்சுமந்தும் - பின்
வெளியும் சுமந்தவள்

கருப்பையில் எனை வளர்க்கவே - தன்
இரைப்பையை நிரப்பியவள்

பிரசவத்தின் போது
இறுக்கக் கத்தியே
இடுப்புவலி பொறுத்துக் கொண்வள்

இடப்பெயர்வின் போது
இடுப்புடைய
இருப்புக்களுடன் - என்னை
இடுப்பில் இருத்தியபடி இடம்பெயர்ந்தவள்

அப்பருடன் சண்டை போட்டும்
அடிக்கடி பிரிந்து கொண்டும்
எனக்காகவே வாழ்ந்தவள்

சிறுநீர்க் கழிவும்
மலக் கழிவும்
அகற்றியே எனை ஆளாக்கிவிட்டவள்

பயிரை வளர்ப்பது போல
பார்த்துப் பார்த்து வளர்த்தவள்
பட்டம் பெறும்வரை
பக்கத்தில் இருந்தே பார்த்துக்கொண்டவள்
அவளா? இப்போது அந்த முதியோர் இல்லத்தில்?

- கு.மது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாரம் காப்பது பெண்களின் கைகளில்...



“தன் கல்வியாலும் தன்னம்பிக் கையாலும் ஆளுமையாலும் மனிதப் பண்புகளாலும் ஒரு பெண் நிமிர்ந்து நிற்பாளேயானால் அதுதான் சமூகத்தில் அவளுக்கு பெருமை தரும் விடயம்.

ஒரு சமூகத்தின் மீது சுமத்தப் பட்ட அல்லது இணைக்கப்பட்ட வாழும் முறை, அரசியல், கலைகள், ஆடை ஆபரணங்கள் போன்றவற்றிலுள்ள தனித்தன்மை அந்த சமூகத்தின் கலாசாரமாகக் கொள்ளப்படுகிறது. வாழும் காலங்களில் ஒரு இனம் அடை யாளம் காட்டப்படுகிற தன்மையை இந்த கலாசாரம் பிரதிபலிக்கிறது. சமூகத்தில் உள்ள பெண்களின் நடைமுறை பாவனையே இதில் முக்கியத்துவம் பெறுகிறது.

ஆனால் பெண்களது எண்ணங்கள், உணர்வுகள், செயற்பாடுகள் மனித வாழ்வை அவள் எவ்வாறு வடிவமைக்க விரும்புகிறாள் என்பவற்றை அவளால் முழுமையாக சரியான விதத்தில் வெளிப்படுத்த முடிகிறதா என்பது பெரிய கேள்விக்குறியாகவே எம் கண்முன் நிற்கிறது. எந்த அளவுகோலுடன் இவள் இதைத் தீர்மானித்துக் கொள்கிறாள் என்பது இங்கே முக்கியமாகிறது.

இன்று சமயம், கலை, பொருளாதாரம், இலக்கியம், தொடர்பூடகம், எனப் பல்வேறுபட்ட சகல கலாசாரச் செயற்பாட்டுத் தளங்களிலும் பெண்கள் ஈடுபட்டு வருவதை நாம் காண்கிறோம். ஆண்களால் மட்டுமே செய்ய முடியும் எனக்கருதப்படும் அபிவிருத்தி வேலைகள், தீர்மானம் எடுத்தல், ஒழுங்கமைத்தல், நிர்வகித்தல், தலைமை ஏற்றல் போன்ற செயற்பாடுகளில் இன்று பல பெண்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் தாம் சார்ந்த துறைகளின் செயற்பாடுகளில் இந்தக் கலாசாரத்தை எந்த வகையில் பிரதிபலிக்கிறார்கள் என்பதைப் பொறுத்தே இந்தக் கலாசாரத்தின் பெறுமதி கவனத்தில் கொள்ளப்படுகிறது. பெண்களின் செயற்பாடுகளினூடாக கணிக்கப்படுகின்ற இந்தக் கலாசாரத்தை தீர்மானிக்கின்ற பொறுப்பும் பெண்களிடமே உள்ளதை நாம் ஒப்புக்கொண்டேயாகவேண்டும. இந்தப் பொறுப்பை எத்தனை பெண்கள் சரியாகப் புரிந்துகொள்கிறார்கள். ஏதோ ஒரு அதிகார வர்க்கத்தால் பெண்கள் மீது திணிக்கப்பட்ட இந்தக் கலாசாரத்தின் தன்மை சரியானதுதானா என்று எத்தனை பேர் சிந்திக்கிறார்கள். இந்த விதமாக அமைந்து விட்ட இந்தக் கலாசாரத்தின் ஆடம்பரங்கள் பெண்களுக்குத் தேவையா? என்ற கேள்வி இன்று பலராலும் முன் வைக்கப்படுகின்ற கருத்தாகிறது.

பட்டாடைகளும் நகைகளும் ஆடம்பரமான சடங்குகளும்தான் எமது கலாசாரம் என்பதை ஏற்றுக் கொள்ளும் அறியாமையிலிருந்து நமது பெண்கள் விழித்துக் கொள்ள வேண்டும். நகையும் பட்டாடையும் ஆடம்பரமான வாழ்வும்தான் தனக்குப் பெருமை தரும் என்று பெண் நினைப்பாளேயானால் அது போன்ற முட்டாள்தனம் வேறு இல்லை. தன் கல்வியாலும் தன்னம்பிக்கையாலும் ஆளுமையாலும் மனிதப் பண்புகளாலும் ஒரு பெண் நிமிர்ந்து நிற்பாளேயானால் அதுதான் சமூகத்தில் அவளுக்கு பெருமை தரும் விடயம் குறைந்த பட்சம் இந்த விதமாய் நிமிரும் பெண்கள் என்றாலும் தமது வாழ்வை எளிமையானதாகவும் ஆடம்பரமற்றதாகவும் ஆக்கிக்கொண்டால் சமூகத்தில் மற்றவர்கள் பின்பற்றக் கூடிய முன் உதாரணமாக திகழ்பவர்களாக இருக்க முடியும்.

சமூகத்தில் எந்தப்பிரச்சினை என்றாலும் அதற்கு முகம் கொடுக்கும் பெரும் பொறுப்பு பெண்களுக்கே உள்ளது. அநேகமான பெண்களின் வாழ்நிலை சராசரிக்கும் கீழாகவே அமைந்துள்ளது. போரின் நடுவேயான பல இழப்புக்களை தாங்கியவர்களாகவே இவர்களில் பலர் இருக்கிறார்கள். இத்தகைய நிலைமையில் எமது கலாசாரங்களின் ஆடம்பரங்கள் சுமைகளாக அழுத்துவதை பெண்கள் அனுமதிக்கக் கூடாது. எமது இயற்கை வளங்களுக்கு பொருந்தக்கூடிய விதத்தில் எமது கலாசாரத்தை அமைக்கத் தவறினால் எமது இனம் பெரிய அழிவை எதிர் நோக்குவதை தவிர்க்க முடியாமல் இருக்கும்.

பொதுவாகவே பெண்கள் ஆடம்பரமோகம் கொண்டவர்கள் என்று சொல்லப்படுவதுண்டு இதில் ஓரளவு உண்மையும் இருக்கிறது என்பதை பல பெண்கள் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய சமூகத்தில் பலவிடையங்களில் பெண்களே பெண்களுக்கு எதிரிகளாகவும் தம்மை அடையாளம் காட்டுகிறார்கள். பெண்ணே பெண்ணிடமிருந்து விடுதலை பெறவேண்டும் பெண்ணே பெண்ணை சமமாய் நடத்த முன்வரவேண்டும்.

சகமனிதரை நேசிக்கும் மனிதப் பண்பையும் எளிமையான வாழ்வை ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தையும் எமது கலாசாரமாக பெண்கள் ஏற்றுக் கொள்வதே இன்றைய காலத்தின் தேவையாகிறது.

சு.சுபா
4ஆம் கட்டை,
மானிப்பாய்.

# பெண்மையை மதிப்போம்



பெண்மை என்று சொல்லப்படுகின்ற பெண்மை நிறைந்த தன்மையானது பெண்களுக்குரிய ஒரு பெரும் பொக்கிஷமாகும். ஒவ்வொரு பெண்ணுக்குள்ளும் அடங்கியிருக்கும் பெண்மை என்பது புனிதமானது. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனப்படுகின்ற நாற்குணமும் அன்பு பரிவு, இரக்கம், அடக்கம், விட்டுக்கொடுப்பு, சகிப்புத் தன்மை, கபடமற்ற நடத்தை எனப்படுகின்ற பண்பு நலன்களினதும் ஒருமித்த சேர்க்கையாகவே பெண்தன்மை இலங்குகின்றது. சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பார்கள்.

அதுபோல அமைதியும் அடக்கமும் அதனுள் ஆயிரம் அந்தரங்கங்களும் கொண்ட பெண்மை மிரண்டுவிட்டால் இவ்வுலகில் யாராலும் எதுவும் செய்யமுடியாத தன்மைக்கு அது இட்டுச் செல்லும், உண்மையிலேயே பெண்கள் என்று சொல்லப்படுகின்ற வர்க்கத்தினர் இவ்வுலகிற்கு கிடைத்த ஒரு மிகப்பெரிய வரப்பிரசாதமாகும்.

ஒரு பெண்ணால் மட்டும்தான் நல்லதொரு தாயாகவும் சிறப்பான மனைவியாகவும் உயிர் கொடுக்கும் உத்தமியாகவும் பாசமிகு நண்பியாகவும் பரிவு காட்டும் தாதியாகவும் விளங்க முடியும். அது மட்டுமல்லாமல் ஒரு குடும்பத்தை எடுத்துக் கொண்டால் அதன் குலவிளக்காகவும், அந்தக் குடும்பத்தின் தலைமைத்துவத்தை வழிநடத்திச் செல்லும் சிறந்த தலைமைத்துவம் நிறைந்த தலைவியாகவும் சகல வழிகளிலும் திகழ வல்லவர்கள் பெண்கள். இதனின்றும் சற்று விலகி ஒரு சமுதாயத்தை எடுத்து நோக்கி அந்தச் சமுதாயத்தில் எத்தனையோ விதமான உப்பில்லாத கதைகளுக்கும், உ[illegible] பூர்வமற்ற வார்த்தைகளுக்கும் புரிந்து கொ[illegible] முடியாத சமூகத்தில் மானிட வடிவில் வாழும் மிருகங்களுக்கும் சரியான தருணத்தில் சரியான பாடத்தைப் புகட்ட வேண்டியவர்களாக திகழ்பவர்களும் பெண்களே!

சமுதாயம் என்ற நிலை கடந்து நாடு என்று சொல்லப்படுகின்ற தன்மை நோக்கின், ஒரு நாட்டின் தலைமைத்துவத்தின் பின்னணியாக திகழ்பவர்களும் பெண்களே என்று கூறினால் அது மிகையாகாது. இந்த நாடு என்னும் நிலை கடந்து சர்வதேசம் என்ற பார்வையில் கூட பெண்கள் தான் அதன் சுடர்விளக்கு.

ஏனெனில் சர்வதேசத்தின் அனைத்து நடவடிக்கைகளின் முடிவுகளுக்கும் வெளிப்படையாகவோ, அந்தரங்கமாகவோ அமைபவர்கள் பெண்களே!. இத்தகைய பலம் பொருந்திய பெண்களை யாரேனும் சீண்டிப் பார்க்க முனையும் போது அப்பெண்மை தனக்கேயுரிய பெண்மைத் தன்மையினின்றும் தீப்பிழம்பாய் கனன்று எழும் சக்தி வாய்ந்தது. அவ்வாறு அவை கனன்று எழும்போது அதனுள் அடங்கியிருக்கும் அன்பு வன்பு நிலைப்படும். பாசம் மோசம் போய்விடும். பரிவு கருகி வாடிவிடும். இரக்கம் இல்லாமல் சென்றுவிடும். அடக்கம் அனல் பிழம்பாய் கொதிக்கும். சகிப்பு சாக்கடைக்குள் வீழ்ந்து எழும். விட்டுக் கொடுப்பு வீறு கொண்டு எழுந்து நிற்கும்.

மொத்தத்தில் பெண்மையே மிரண்டு எழுந்துவிடும். எனவே பெண்களையும் பெண்களுக்கேயுரிய பெண்மையையும் என்றும் மதிப்போமாக! பெண்களின் உயரிய தன்மையைப் பேணி அதன் உணர்வுகளைப் போற்றி வாழ்வோமாக!

எம்.சுகா
அச்சுவேலி.



திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் “திலகம்”, உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணிவு

ஓர் ஊரில் அதிவாணன் எனும் விவசாயி இருந்தான். அவனுக்கு ஒரு மகள் இருந்தாள். அந்த மகளின் பெயர் சுந்தரி.

அவள் மிகவும் அழகானவள். அவளை மணம் முடிக்க அவ்வூரில் இருந்த இளைஞர்களுக்கு மிகவும் ஆசை. அதனால் அதிவாணனிடம் பல இளைஞர்கள் வந்து சுந்தரியை மணம் முடிக்கலாமா? என்று கேட்டனர். அதற்கு அதிவாணன் அவளுக்கு மணம் முடிக்க பல ஆண்டுகள் உள்ளன என்று கூறினான்.

ஒருநாள் சுந்தரியை ஒரு பூதம் பிடித்துக் கொண்டு சென்றுவிட்டது. இதனை அறிந்த அதிவாணன் தன் மகளை காப்பாற்றுபவருக்கே அவளைத் திருமணம் செய்து வைப்பேன் என்றான். இளைஞர்கள் அவளைத் தேடி தோல்வியடைந்தனர். இதை அறிந்த அந்த நாட்டு இளவரசன் சுந்தரியை கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்கினான். சுந்தரியை கண்டுபிடித்து அந்தப் பூதத்திடம் இருந்து மீட்டான்.

அவள் அப்பாவான அதிவாணனிடம் கொண்டு சென்று ஒப்படைத்தான். அதிவாணன் சொன்னபடி அவளை திருமணம் செய்து கொண்டான். சுந்தரி அந்த நாட்டுக்கு இளவரசி ஆனாள். அதிவாணனும் அவன் மனைவியும் பெரு மகிழ்ச்சியால் ஆனந்தக் கண்ணீர் வடித்தனர்.

செ.அகனீதா
யா/இ/ஆ/பாடசாலை

# நட்பு

நட்பு என்பது மூன்றெழுத்து சோலை
அந்த நட்பில் அடங்கியது நண்பர் எனும் உறவுச் சோலை
ஆண்டவன் எமக்களித்த நட்பு ஓர் அருள்கொடை
இன்றும் உலகில் நிலைத்திருக்கும் நட்பு ஓர் அழியாக் கொடை
இதற்கு உயிர் ஊட்டிய நண்பர் நாம் ஒரு இறைகொடை
வாயால் சொல்வது எளிது அந்த நட்பு கிடைப்பது கடிது
ஐயம் இல்லா நட்பு உலகில் நிலைத்திருக்கும்
நாம் சேர்ந்து வாழ வேண்டும்-நட்பில் நாமும் சேர்ந்து
வாழ வேண்டும்

நட்பிற்கு இடையேயான தொடர்பாடல் வெளிப்படையான
தொடர்பாடலாக இருக்க வேண்டும்
நண்பன் எம்மை வழிநடத்துபவனாகவும் நமது தவறான
நடத்தைகளின் போது எமக்கு அறிவுரை வழங்குபவனாகவும்
இருக்க வேண்டும்
எமது நட்பு சோதனைகளுள்ளாவது ஆபத்து நேரத்திலாகும்.
நம்பிக்கை
கட்டுப்பாடு
புனிதம்



அ.விஜயராம்,
தரம் 9, யா/புனித பத்திரிசியார் கல்லூரி.

# புத்திசாலித்தனம்

ஓர் ஊரில் சலவைத் தொழிலாளி ஒருவர் இருந்தார். அவரிடம் வயதான கழுதை ஒன்று இருந்தது. அதற்கு வயதாகிப் போனதால் பொதி சுமக்க சிரமப்பட்டது. நடக்கவும் சிரமப்பட்டது. ஒருநாள் தொழிலாளி தன் கழுதையுடன் சென்று கொண்டிருந்தபோது கழுதை வழியில் இருந்த பாழடைந்த கிணற்றுக்குள் விழுந்து விட்டது.



எப்படியாவது அந்தக் கழுதையைத் தொலைத்து விட நினைத்திருந்த தொழிலாளி இதுதான் சமயமென்று நினைத்தார். கழுதையை மேலே தூக்கிவிடாமல் அப்படியே கிணற்றில் புதைத்து விடுவோம் என அருகில் இருந்தவர்களைக் கூப்பிட்டார்.

கழுதை அப்படியே புதைந்து போகட்டும் என்று எல்லோருமாகச் சேர்ந்து மண்வெட்டி கொண்டு வந்து அருகிலிருந்த மண்ணை வெட்டிக் கிணற்றுக்குள் தள்ளினர்.

ஆரம்பத்தில் தன் மீது விழும் மண்ணைக் கண்டு திகைத்த கழுதை பின்பு சுதாரித்துக் கொண்டது.

தனக்கு நேரும் துன்பத்தை எண்ணி வருந்திக் கொண்டிருந்தால் பயனில்லை.ஏதாவது செய்து தப்பிக்க வேண்டும் என நினைத்தது.

தன் மீதும் விழும் மண்ணை உடம்பைச் சிலிர்த்து உதறியபடியே கொஞ்சம் கொஞ்சமாக அடி எடுத்து வைத்து வெளியே வர முயற்சித்தது.

மேலே இருந்தவர்களும் மண்ணை வெட்டிப் போட்டுக் கொண்டேயிருந்தனர்.தப்பிக்க வேண்டுமென்ற குறிக்கோளே பிரதானமாக இருந்ததால் கழுதையும் வேகமாக மண்ணை உதறி விட்டபடி மேலே ஏறி வந்து விட்டது.

தொழிலாளியும் கழுதையின் விடாமுயற்சியில் வியந்து மனமிரங்கி தன்னுடன் அழைத்துச் செல்ல முடிவு செய்தான்.

மனிதர்களாகிய நமக்கும் பல விதங்களில் சோதனைகளும் துன்பங்களும் வந்து சேரலாம்.அதையே நினைத்து உழன்று கொண்டிராமல் அதை எல்லாம் உதறித் தள்ளி விட்டு மீண்டு வர முயற்சி செய்வதே புத்திசாலித்தனம்.


## எதிர்ச்சொற்கள்

1. ஆயுதபாணி-நிராயுதபாணி
2. ஈதல்-ஏற்றல்
3. இல்லை-உண்டு
4. மடமை-புலமை
5. ஆவேசம்-சாந்தம்
6. ஏகம்-அனேகம்
7. மடு-மலை
8. கீர்த்தி-அபகீர்த்தி
9. அனுகூலம்-பிரதிகூலம்
10. நன்று-தீது


கு.அஸ்வினி

## பழமொழிகள்


1. பாடின்றி பட்டமில்லை
2. பெற்றமனம் பித்து பிள்ளை மனம் கல்லு
3. தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறு
4. சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
5. அவனின்றி அணுவும் அசையாது
6. குற்றம் பார்க்கின் சுற்றமில்லை
7. கடனில்லாக் கஞ்சி கால்வயிறு போதும்
8. உண்மை சொல்லிக் கெட்டவரில்லை
9. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி
10. சிறுதுளி பெருவெள்ளம்




**லி.பபிதா**, தரம்-7சி,
அக்கராயன் மகா வித்தி.



**செல்வ சந்தோஸ்**, தரம்-1,
வட்டு ஆரம்பப் பாடசாலை




**ம.அபிதாசன்**, தரம்-8சி,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி



**செ.விஜித்தா**, தரம்-8,
கிராஞ்சி அ.த.க.பாடசாலை



**பா.டர்சிகன்**, தரம்-1,
வலந்தலை தெற்கு அ.மி.த.க.பா.



**அ.சோபிகன்**, தரம்-10சி,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி



**சீ.அகல்யா**, தரம்-11எ,
யா/இ.ம.க.

## விடை தெரியுமா? 192

### உங்களுக்கும் பரிசில்கள்

1. உலகின் மிக நீளமான கடற்கரை உள்ள நாடு எது?
2. தங்க உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நாடு எது?
3. குட்டி போடும் மீனினங்கள் எவை?
4. உலகின் மிகப் பெரிய பாலைவனம் எது?
5. யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னன் யார்?

## விடைகள் 189

1. மலேசியா
2. நாவலியூர் சோமசுந்தரப்புலவர்
3. பேரிங் நீரிணை
4. மஞ்சள் கொடி
5. நீர் யானை

## வெற்றி பெற்றோர் விவரம் (188)


* கோ.தமிழினி, தரம் -7, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
* செ.விஜித்தா, தரம் -8, கிராஞ்சி அ.த.க.பாடசாலை
* சு.தரண்யா, தரம்-7ஜி, கொக்குவில் இந்துக் கல்லூரி

## விடை தெரியுமா?

தெரிந்தால் 05 .01.2012 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அடிமைகளின் மீட்பர்

## ஆபிரஹாம் லிங்கன்

31

நெடுந் தொடர்

பா.உண்மை

அதற்கு, "நான் அப்படிச் சொல்லவில்லை. கறுப்பின மனிதன் எனக்குச் சமமானவன் இல்லை. ஆனால், வாழ்க்கை, சுதந்திரம், மகிழ்ச்சியோடு இருத்தல், தன் உழைப்பால் கிடைத்த வருவாயைக் கொண்டு தன் உணவைப் பெறுதல் ஆகிய உரிமைகளில் எனக்கும் டக்ளஸுக்கும் அவன் சமமானவன். மற்ற எல்லோருக்கும் சமமானவன்" என்று பதில் சொன்னார் லிங்கன்.

அடுத்து, "லிங்கன், நீக்ரோ பெண்களை மணமுடித்துக் கொள்ள விரும்புகிறார்" என்று ஒரு போடு போட்டார் டக்ளஸ்.

லிங்கன் அதற்கும் பதில் சொன்னார். "ஒரு கறுப்பினப் பெண் அடிமையாக இருக்கக் கூடாது என்று நான் கூறுவதை, நான் அவளை மனைவியாக்கிக் கொள்ள விரும்புகிறேன் என்று அர்த்தப்படுத்திக் கொள்ளக் கூடாது. எனக்குக் கிட்டத்தட்ட ஐம்பது வயதாகிறது. இதுவரை நான் ஒரு கறுப்பினப் பெண்ணைக் கூட அடிமையாகவோ, மனைவியாகவோ ஆக்கிக் கொண்டதில்லை. வெள்ளையினத்தைச் சேர்ந்த ஆண்கள் திருமணம் செய்து கொள்ளப் போதுமான வெள்ளையினப் பெண்கள் இருக்கிறார்கள். கறுப்பினப் பெண்களை மணந்து கொள்ளவும் போதுமான அளவுக்குக் கறுப்பின ஆண்கள் இருக்கிறார்கள்." என்று பதிலடி கொடுத்தார் லிங்கன்.

"ஒரு வெள்ளையனுக்கும் நீக்ரோவுக்கும் இடையே சண்டை நடக்கும்போது, நான் வெள்ளையனுக்கு ஆதரவாக இருப்பேன். ஒரு நீக்ரோவுக்கும் முதலைக்கும் இடையே சண்டை நடக்கும் போது, நான் நீக்ரோவுக்கு ஆதரவாக இருப்பேன்" என்று சொற்சமரை இன்னொரு முனையில் திறந்தார் டக்ளஸ்.

"ஒரு கறுப்பின மனிதன் முதலையைப் பிராணி என்று கருதுவது போல, ஒரு வெள்ளையன் நீக்ரோவை பிராணியாகக் கருதலாம் என்று இதன் மூலம் டக்ளஸ் சொல்கிறார்" என்று அந்த முனையிலும் தாக்கினார் லிங்கன்.

பேச்சு அடிமை முறை, மிசௌரி ஒப்பந்தம், கான்ஸாஸ்நப்ரஸ்கா சட்டம், டிரெட் ஸ்காட் வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு இவற்றைச் சுற்றியே இருந்தது. இப்படியாக டக்ளஸின் ஒவ்வொரு பேச்சுக்கும் சரியான பதிலடி கொடுத்தார் லிங்கன். சம்மட்டி அடி. லிங்கன் பேசி முடிக்க வேண்டிய நேரம் நெருங்கியது.

"மிஸ்டர் லிங்கன்! உட்காருங்கள். உங்களுடைய நேரம் முடிந்துவிட்டது" என்றார் டக்ளஸ்.

"ஆமாம். நான் பேசி முடிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. முடித்துவிடுகிறேன்" என்று பதில் சொன்னார் லிங்கன்.

"பேச்சை முடித்துக்கொள்ளுங்கள் லிங்கன். டக்ளஸுக்குக் கொடுத்த வாய்ப்பும் போதும். இனிமேல் அவரால் வாயைத் திறக்கவே முடியாது" என்று கூட்டத்தில் ஒரு குரல் எழுந்தது. சனம் சிரிப்பால் அலறியது.

இந்த வாதப் போர் நடந்த ஏழு ஊர்களுக்கும் பத்திரிகையாளர்கள் வந்தார்கள். வாதப் பிரதிவாதங்களைக் குறிப்பெடுத்தார்கள். அடுத்தநாள் தங்களது பத்திரிகையில் செய்தி வெளியிட்டார்கள். சில பத்திரிகைகள் இருவரது பேச்சுக்களையும் முழுவதுமாக வெளியிட்டன. சில, சுருக்கத்தை வெளியிட்டன. அதே போல், குடியரசுக் கட்சியைச் சேர்ந்த பத்திரிகைகள் "லிங்கன் டக்ளஸைப் பிளந்து கட்டிவிட்டார்" என்று எழுதின. ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த பத்திரிகைகள், "டக்ளஸின் பேச்சில் லிங்கன் மண்ணைக் கவ்விவிட்டார்" என்று எழுதின.

ஓட்டாவா நகரில் வாதப் போர் முடிந்ததும், லிங்கனை அவருடைய ஆதரவாளர்கள் தங்களது தோளில் தூக்கி வைத்துக் கொண்டு ஊர்வலமாகப் போனார்கள். இதை எதிர்க்கட்சிப் பத்திரிகைகள், "லிங்கனுக்கு வயதாகிவிட்டது. அவரால் நடக்க முடியவில்லை. அதனால், அவரைத் தூக்கிக் கொண்டு போனார்கள்" என்று கிண்டல் செய்தன. ஆனால் இருவரும் மேடையில் இப்படிச் சொற்போர் புரிந்தது அமெரிக்காவில் பெரும் புயலைக் கிளப்பிவிட்டது.

லிங்கன், டக்ளஸ் இருவருமே மேடையில் தத்தமது அரசியல் கோட்பாட்டு ரீதியாகத் தாக்கிக் கொண்டார்களே தவிர, தனிநபர் தாக்குதலில் இறங்கவில்லை. டக்ளஸ்கூட ஓரிருமுறை உணர்ச்சிவசப்பட்டு, லிங்கனை 'இழிவானவர்', 'புறங்கூறுபவர்' என்று திட்டினார். ஆனால், லிங்கன் கடைசிவரை தமது கண்ணியத்தைக் கொஞ்சம்கூடக் கைவிடவில்லை.

இந்தத் தொடர்வாத போர் கூட்டங்களில் லிங்கனுக்கு எதிர்ப்பு குறைவாக இல்லை. ஓர் ஊரில் பேசும்போது ஒரு பெண் அவர் மீது ஒரு நீக்ரோ பொம்மையை வீசியெறிந்தார்.

இன்னொரு ஊரில் ஒருவன் தனது குதிரையை ஓட்டிக் கொண்டு மேடைக்கருகில் வந்தான். "மிஸ்டர் லிங்கன்! நீங்கள் ஒரே படுக்கையில் ஒரு நீக்ரோவோடு உறங்குவீர்களா?" என்று கேட்டான். லிங்கன் பதில் எதுவும் சொல்லாமல் அவனை ஒரு பார்வை பார்த்தார். அவரது பார்வையைத் தாங்கமாட்டாமல் அவன் தலையைக் குனிந்து, குதிரையைத் திருப்பிக் கொண்டு போனான்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சொற்போர் இரண்டு முக்கிய விளைவுகளை அமெரிக்காவில் ஏற்படுத்தியது. ஒன்று, ஆபிரஹாம் லிங்கன் புகழ்மிக்கத் தலைவரானார். இரண்டு, அமெரிக்காவின் தென்பகுதியில் உள்ள தீவிரசிந்தனை கொண்டவர்கள் டக்ளஸுக்கு எதிராகத் திரும்பினார்கள். அதனால் ஜனநாயகக் கட்சியில் பிளவு உண்டானது.

லிங்கனைப் பொறுத்தவரை இந்த வாதப் போர் அவருக்கு ஒரு திருப்புமுனைதான். என்றாலும் முழு வெற்றி அவருக்குக் கிடைக்கவில்லை. இல்லினாய்ஸ் செனட் உறுப்பினருக்கான அந்தத் தேர்தலில் டக்ளஸ் 54 வாக்குகள் பெற்று மீண்டும் செனட்டராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். லிங்கன் 46 வாக்குகளைப் பெற்று வெற்றி வாய்ப்பை இழந்தார். தேர்தல் முடிவுகள் வெளியான நாளன்று லிங்கன் தந்தி அலுவலகத்தில் அமர்ந்திருந்தார். தமக்கு வரும் தந்திகளைப் பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அது இரவு நேரம். அவருக்குத் தாம் தோற்றுவிட்டோம் என்று தெரிந்தது. மெதுவாக வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தார். அன்று நல்ல மழை பெய்திருந்தது. லிங்கன் நடந்து போய்க் கொண்டிருந்தபோது , தரை வழுக்கியது. கீழே விழ இருந்த லிங்கன் சமாளித்துக் கொண்டார். அப்போது லிங்கன் தனக்குள் சொல்லிக் கொண்டார். "இது சாதாரண வழுக்கல்தான். வீழ்ச்சியல்ல."

(மீட்பர் வருவார்)

## கவிதையே போதும்!

இரசனை என்று
என்
எண்ணங்களை,
கவர்ந்தவளே,
என் கவிதைகளை
வாசிக்கத்
தெரிந்த
உனக்கு
என் - இதயத்தை
நேசிக்க
தெரியவில்லையே
எம்மை இணைக்க
காதல் - அல்ல
கவி
இலக்கியமே
போதுமடி!



சிந்து சிவதாஸ்

## ஏக்கம்...

கண்களின் அனுமதி
கேட்டா நான்
உன்னைப் பார்த்தேன்
இதயத்தின் அனுமதி
கேட்டா நீ
உள்ளே வந்தாய்
இப்போது யார்
அனுமதி கேட்டு நீ
என்னை பிரிந்தாய்...



எஸ்.வினோஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஜீவிதம்: தானா விஷ்ணுவின் மூன்று நட்சத்திரங்கள்






ந.மயூரரூபன்

தானா விஷ்ணுவின் இயற்பெயர் தம்பித்துரை விஜயசங்கர். 'கறுப்புருவம் சுமக்கும் ஆந்தைகள்' இவரது இரண்டாவது கவிதைத் தொகுதி.

ஒரு எழுத்தாளனின் படைப்பு, வெறும் செய்திக் கட்டுரைபோல், அல்லது ஆய்வுக்கட்டுரை போல் செய்தியை - அறிவை நேரடியாகத் தருவதில்லை. ஏனெனில் அதில் அறிவைத் தரும் பொருள் இல்லை. ஆனால் எழுத்தாளனின் எழுதும் செயல், அறிவு ஆய்வுக்கான பொருளாக விளங்கமுடியும். இலக்கியம் என்ற உற்பத்தியின் விளைவுப் பொருளை விமர்சனம் விளக்குவதில்லை. அதேபோல் படைப்பும் சிலர் மட்டுமே நுகருவதற்கான சந்தைப்பண்டமும் அல்ல.

விமர்சனங்கள் எப்போதும் படைப்பொன்றை நல்லது கெட்டது என தீர்ப்பிடுவதாக அமைவனவல்ல. உண்மையில் விமர்சனத்தின் செயல் இலக்கியத்தை வளர்த்தல் என்பதே.

இத்தகைய ஒரு முற்குறிப்பினை நான் இங்கு தருவதற்கான காரணம், விஷ்ணுவின் எழுத்துமுறை பின்நவீனத்துவ வாசிப்புக்கான வாசல்களைக் கொண்டுள்ளன என்பதுதான். பின் நவீனத்துவம் தொடர்பாக அண்மையில் இருவரின் பதிவுகள் என்னை ஆச்சரியப்படவைத்தன.

ஒருவர் 'கலாநிதி கலாமணி', வடமாகாண தமிழ் விழா 2012 இல் ஆய்வுக்கட்டுரை வாசிக்கும்போது இவர் ஒரு விடயத்தைக் குறிப்பிடுகிறார். "யாழ்ப்பாணத்தில் பின் நவீனத்துவ எழுத்துகள் இல்லை" என்பதே அவரது ஆய்வு முடிவு.

இன்னொருவர் 'ச.இராகவன்'. இவர் வாசிப்புப் பரிச்சயம் நீக்கம் செய்யும் எழுத்துகளால் அறியப்படுபவர். பின் நவீனத்துவ வாசிப்பு அனுபவம் தரும் பல சிறுகதைகளை எழுதியவர்.'

"பெருவெளி குழுமமும், றியாஸ் குரானாவும் மட்டுமே பின்நவீனத்துவ அனுபவம் கொண்டவர்கள். இவர்களைத் தவிர இங்கு வேறொரு கொம்பனும் இல்லை" என்கிறார் இவர்.

இவர்கள் இருவரும் நியாமமற்ற கருத்துக்களையே முன்வைக்கின்றனர். எந்த எழுத்துக்கும் பதிலியாக தாம் நம்பும் அல்லது தாம் பெரு விருப்புக் கொண்டிருக்கும் மாதிரிகளையே இவர்கள் முன்வைக்கிறார்கள். இதில் இவர்கள் தங்களுக்கான மாதிரிகளை அனைவருக்கும் பொதுவில் வைக்கிறார்கள். அதைப்போல பிறரைப் படைக்க / எண்ணத்தூண்டும் செயலாக இது அமைந்து விடுகிறது.

இது பின்நவீனத்துவ கருத்துருவத்துக்கு எதிரானது, சிந்தனையின் நோய்க்கூறும் இதுதான்.

தானா விஷ்ணுவின் கவிதைகளில் அன்பு, நம்பிக்கையின்மை, வலி, ஏக்கம், வாழ்வின் மீதான பற்றுத் தொலைந்த கணங்கள் பேசப்படுகின்றன.

*"நிர்க்கதியற்ற மனிதக் குரங்கொன்றின்*
*வாலைப்பற்றியபடி பறக்கிறேன்*
*பிரபஞ்சப் பந்தின் நுனிகளில்"*
*(தீப்பிடித்தெரியும் வார்த்தைகள்)*

அதீத வெளிகளை வாசிப்பில் திறந்துவிடும் கவித்துவ வரிகள் இவரது மொழிதலில் நிறைந்திருக்கின்றன.

விஷ்ணுவின் கண்முன் விரிந்த வாழ்க்கை, அதன் ஏமாற்று கணங்கள் வஞ்சனை அரசியல், வலி, ஏக்கம், மரணபயம் என்பன கவிதைகளாகிறபோது அவை தமக்கான அமைப்புக்களையும் கட்டமைத்துக்கொள்கின்றன.

இதனைக் கவிதைகளுக்கான காலமும் கவிதைகளுக்கான தளமும் தீர்மானித்துக் கொள்கின்றன. இவரது கவிதைகள் காலப்பிரக்ஞை யற்றவர்களுக்கு எதிரானது.

*"நிரந்தரமின்மையால் பின்னப்பட்ட*
*சிலந்தி வலைகளில்*
*நிறைகின்றன*
*பகலின் வெளிச்சம் பொட்டுப் பூச்சியின்*
*நிறம்,*
*பலியாடுகளின் விழிகள்"*
*(சிலந்திவலை)*

*"தீப்பிடித்தெரியும் அழகிய புல்வெளியை*
*பார்த்து ரசிக்கும்*
*வல்லூறொன்றின் விம்பத்தைத் திருடி*
*வைத்திருக்க*
*எப்படி முடிகிறது"*
*(தணலடங்காக் கோடம்)*

விஷ்ணுவின் சயத்துடன் அருண்ட வார்த்தைகள், பிரக்ஞையை, வாசிக்கும் கணங்களில் உறாய்ந்து போவன.

விஷ்ணுவின் கவிதை மொழிதலில் மொழிக்கிடங்கு மிக முக்கியமானது. இதனைப் பேச்சற்ற மொழி என்கிறார் 'பார்த்'. ஒழுங்குபடுத்த முடியாத குழப்பத்திலிருந்து ஒரு சமூகப் பொருளாக, பிறருக்கு உணர்த்துவதற்கேற்ற ஒழுங்குபடுத்தப்பட்ட ஒன்றே மொழிக்கிடங்கு. இது செயல் அல்ல. சமூகம் எமக்குத் தந்த ஒன்று. சாதி, குடும்பம், அரசியல் என்பவற்றை விட சிறந்ததே அது.

இவரது கவிதைகளில் பன்முக வாசிப்புக்கான படிம மொழிதல் மிக அழகாகவும் தனித்துவமாகவும் வெளிப்படுகிறது.

*"பூனைகளின் விழிகளிலிருந்து*
*தப்பிக்கும் எலிகளின் விம்பம் மனது"*
*"தவிக்கும் பிணக்குவியலுக்குள்*
*இரத்தம் உறைந்த தங்க வாள்*
*கண்டெடுத்தென்ன பிரயோசனம்"*

விஷ்ணுவின் தொகுப்பின் 'மூன்று நட்சத்திரங்கள்', எனும் கவிதையைத் தனித்தெடுத்து, இவருக்குத் தனித்துவமான ஒரு விடயத்தைக் கூறுவது பொருத்தமானது.

இங்கு இரண்டாம் ஜீவிதம் (Second Life) என்பது அதிகாரத்தால் கட்டுண்ட உலகப் பார்வை என்பது நேர்தலைகீழால் கிராம மக்களின் நாட்டுப்புறவியல் பார்வையில் மாற்றம் பெறுகிறது. கிறிஸ்தவ அதிகாரவர்க்கப் பார்வையின் குறியீடாகிய யேசுநாதர், கிராம மக்களின் நாட்டுப்புறவியல் பார்வையில் கழுதையாக விளங்குகிறார். யேசு என்கிற மனப்படிமம், அந்தக் கிராம மக்களின் சடங்குகளின் கழுதையாக மாற, யேசுவின் துயரங்கள் கழுதையின் துயரங்களாகச் சொல்லப்படுகின்றன. இவற்றை நாட்டுப்புறவியல் ஆய்வில் 'பக்தின்' விளக்குகிறார். அம்மக்களின் பார்வைதான் இரண்டாவது ஜீவிதம். இங்கு வாசிப்பில் தொன்மமும் ஒத்தவகை மாதிரி வாசிப்பும் கொண்ட படிமங்கள் மொழிதல் முறையிலிருந்து விஷ்ணுவின் மூன்று நட்சத்திரங்கள் இரண்டாவது ஜீவிதத்தைத் தருகிறது.

'பக்தின்' இதனை அதிகாரமற்ற இரண்டாவது ஜீவிதம் என்கிறார்.

இங்கு எழுத்திலும் வாசிப்பிலும் தங்களுக்காக உருவாக்கப்பட்ட பார்வை - அதிகாரப் பார்வை சிதைந்து மக்களின் சுதந்திரமான பார்வை (வாசிப்பு) வருகிறது.

*"மீதமான மனிதர்களும்*
*சிலுவையில் அறையப்படுமொரு நாளில்*
*மீண்டுமொரு முறை*
*மூன்று நட்சத்திரங்கள்*
*வானத்தில் தோன்றக்கூடும்"*

இந்த மூன்று நட்சத்திரங்களை வழக்கமான பார்வையிலிருந்து விலக்குகிறார் விஷ்ணு.

*"மகிழ்வுறு கதைகளின் குறியீடாகிப்போன*
*மூன்று நட்சத்திரங்கள்*
*என் மகிழ்வுலர்ந்த வாழ்வுப் பெருவெளியில்*
*அனல் அருந்திச் செல்லும் கொடுமை*
*உணர்தல், உணர்த்தல் அரிது"*

என்று இறுதிப் போரின் கோரத்தைத் தன் மனவெளியின் ஊறலாகத் தரும் விஷ்ணு நம்பிக்கைகளைக் கேள்விகளுக்குட்படுத்துகிறார்.

*"எனதன்பே!*
*அந்த மூன்று நட்சத்திரங்கள்*
*எதன் குறியீடென நீ அறிவாயா?*
*நான் அறியேன்!"*

என கவிதை முடிகிறது.

பிரஸ்ட் சொல்லுகின்ற கூறுகாண் வாசிப்பு (Symptomatic Reading) எங்களுக்குத் தேவைப்படுகிறது. ஆழமற்ற, மேலோட்டமான பார்வைக்குத் தெரியும் கூறுகளை மட்டும் வாசிக்காமல் ஆழமாக எழுதியவனின் நனவிலி மனதை அவன் எழுத்துக்களில் வாசிக்கும் உழைப்பு எமக்குத் தேவைப்படுகிறது. அதைவிடுத்து, ஒற்றைத்தன வாசிப்புத் தரும் அல்லது ஏற்கனவே எங்கள் மனதில் இடம்பிடித்துவிட்ட பிரதிபோல் இன்னொரு பிரதியை எதிர்பார்த்து வாசிப்பது என்பது எங்களைப் பிரதியுடன் தோற்கச் செய்யும். இன்று பல விமர்சகர்களும், வாசகர்களும் இதனைத்தான் செய்கிறார்கள்.

விஷ்ணுவின் கவிதைபோல் வாசிப்பனுபவத்துக்கும் இரண்டாம் ஜீவிதம் தேவைப்படலே செய்கிறது.

## விதி விலக்கா ?

விருந்தும் மருந்தும்
மூன்று நாளாம்
மதுவிற்கும் புகைக்கும்
இது விதிவிலக்கா!
வீதியோரத்தில்
கூடி நின்று
அக்கம் பக்கம் பார்த்து
பக்க வாத்தியங்களுடன்
தினம் தினம் கிண்டல்
கேலிப் பேச்சுடன்
நடைபெறும்
விளையாட்டுத்திறன்
வாய்ந்த நாடகங்களுக்கு
ஆப்பு வைத்து
வாயடைக்க
யார் முன்வருவார்?
பண்பாடும் ;
பங்கம் வராமல்
பாதுகாக்கும்
சட்டுத்தானப்பா

சிரங்கன்

## விடியாத இரவுகள்

நீண்ட இரவின் நடுவே
விடியலுக்காய்க்
காத்திருந்தேன்
விடியும் நேரம்
வரும் பொழுது
என் விழிகள்
பார்வை இழக்கின்றன.

தாவடியூர் தே.செல்வக்குமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரம்பன்

# நீதியரசரின் அனுபவம் பேசியது....



**நீதிவான்கள் சுயாதீனமாக செயல்பட வேண்டும் என்பது அதிகாரத்துக்கு எதிராகச் செயற்பட வேண்டும் என்று அர்த்தமாகாது. ஆனால் அப்படிச் செய்ய நேரும் போது அச்சம் கொள்ளாமல் இருக்க வேண்டும்.**

அசை போட ஒரு விடயம் 59

கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் கடந்த வாரம் இடம்பெற்ற நீதித்துறை சேவையாளர்கள் சங்கத்தின் வருடாந்த கூட்டத்தில் ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய போது சில சுவையான அனுபவங்களையும் அங்கு இருந்தவர்களுடன் பகிர்ந்து கொண்டார் அவைகளில் ஒரு சிலவற்றை இன்று அசைபோடலாம்.

நீதிவான்கள் சுயாதீனமாக செயல்பட வேண்டும் என்பது அதிகாரத்துக்கு எதிராகச் செயற்பட வேண்டும் என்று அர்த்தமாகாது. ஆனால் அப்படிச் செய்ய நேரும் போது அச்சம் கொள்ளாமல் இருக்க வேண்டும். நீதித்துறையில் நிறைவேற்றுத்துறை தலையீடு செய்கிறது என்பதற்காக மட்டும் எதிராக செயல்படுவதின் விளைவானது நிறைவேற்றுத்துறையைக் கண்டு அச்சம் கொள்வது அல்லது அவர்களிடமிருந்து ஆதாயத்தை எதிர்பார்ப்பது போன்றவற்றைப் போலவே மிகமோசமாக இருக்கும். உயர் நீதிமன்றத்துக்கு நியமனம் பெற்று பதவியேற்ற வேளையில் நான் வரவேற்கப்பட்டதையடுத்து மூன்று மொழிகளிலும் உரை நிகழ்த்தினேன். அதன் பின்னர் ஒரு சிரேஷ்ட சட்டத்தரணி என்னை பெரிதாக விமர்சித்திருந்தார். அது பத்திரிகைகளிலும் வந்திருந்தது. இது என்னுடன் நெருக்கமாக இருந்த நண்பர்களுக்கு நெருடலாகவிருந்தது. ஒரு வாரம் அளவில் சென்ற பின்பு குறித்த சிரேஷ்ட சட்டத்தரணி என்முன் தோன்றினார். அவர் சம்பந்தப்பட்ட வழக்கை முதல் இரவே படித்து அவருக்குச் சார்பாக வழக்கு இருப்பதை அறிந்து கொண்டிருந்தேன். நான் இருதரப்பினரையும் சமர்ப்பணங்களை செய்யும் படி அனுமதித்து தீர்ப்பை என்னை விமர்சித்திருந்த அந்த சிரேஷ்ட சட்டத்தரணிக்கு சார்பாக வழங்கினேன். எனது நண்பர்கள் பலர் கோபமுற்றார்கள். அவர்களில் ஒருவர் அந்த ஆளுக்கு நல்லதொரு பாடம் படிப்பிக்க வேண்டிய சந்தர்ப்பத்தை நழுவவிட்டுவிட்டேன் என்று கடிந்துகொண்டார். வழக்கை அவருக்கு எதிராக முடிவு செய்து அந்த நபருக்கு நல்ல ஒரு பாடத்தை படிப்பித்திருக்க வேண்டும் என்று கூறினார் அந்த நண்பர்.

''இது அர்த்தமற்ற கதை, சட்டத்தரணியானவன் தன் கட்சிக்காரருக்காக வாதிடுகின்றார். அவர் நீதிபதிக்கு பிடிக்காதவர் என்பதற்காக ஒரு தலைப்பட்சமாக தீர்ப்பளித்தால் பாதிக்கப்படும் சட்டத்தரணியுடன் எனக்குள்ள பிரச்சினையானது வேறுவிடயம். இப்படிப் பேசாதீர்கள் என்று நண்பரைக் கடிந்து கொண்டேன்.

சட்டத்தரணியின் நடத்தை எனக்கு விரோதமானதாக இருப்பதை எனது தீர்ப்பில் பிரதிபலிக்க நான் விடவில்லை.

இன்னொரு வழக்கையும் நீதியரசர் நினைவு கூர்ந்து கூறியதாவது:

ஒரு வழக்கை நீதிபதி ஒருவர் விசாரிக்கும்போது தனது மனப்பிரதிபலிப்புகள் தொடர்பாக விழிப்பாக இருக்க வேண்டும். நாம் எல்லோரும் மனிதர்கள் தாம். ஆனால் நம்மை நாமே அறிந்து கொண்டிருந்தால் எமது மனச்சார்புகள், தவறான எண்ணங்கள் முதலியவற்றை முன்னதாகவே தெரிந்து கொண்டிருப்போமானால் அது எமக்குப் பெரிதும் உதவியாக இருக்கும். பால்நிலை வேற்றுமை, இனம் மற்றும் அரசியல் பாகுபாடுகள் எல்லாம் சமீப காலத்தில் அவதானிக்கப்பட்டுள்ளன.

பெண் நீதிவான் ஒருவரை நான் அறிவேன். ஒரு பாலியல் வல்லுறவு வழக்கில் முறைப்பாட்டாளருக்கு ஆதரவாக உறுதிப்படுத்தும் சாட்சியங்கள் இருக்க வேண்டும் என்பதை அவர் முக்கியமாகக் கருதியதில்லை. கீழ்நிலை நீதிமன்ற நீதிவான் ஒருவர் தன் முன்னிலையில் சட்டத்தரணி ஒருவரால் உயர்நீதிமன்றத் தீர்ப்பொன்று முன்வைக்கப்பட்டதை வாசிப்பதற்கும் மறுத்து விட்டார். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வந்த இந்த வழக்கில் குற்றப்பத்திரிகை தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டவரால் அளிக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்துக்கு உறுதிப்படுத்தும் சாட்சியமும் இருக்க வேண்டும் என்பதாக உயர் நீதிமன்றம் பரிந்துரை செய்திருந்தது. இதில் உள்ள அடிப்படைக் கொள்கை என்னவென்றால் ஒப்புதல் வாக்குமூலமானது தன்முனைப்பாக செய்யப்பட்டிருந்தாலும் கூட ஒப்புக் கொள்ளப்பட்ட சம்பவம் நடைபெற்றிராதவிடத்து குற்றம் சாட்டப்பட்டவர் எங்ஙனம் குற்றவாளியாக்கப்பட முடியும் என்பதே. அந்த நீதிவான் உயர் நீதிமன்ற தீர்ப்பை கவனத்தில் எடுக்காமல் குற்றவாளியென தண்டனை வழங்கவேண்டும் என்றஆர்வத்தில் அளித்த தீர்ப்பு இன்று மேன்முறையீட்டில் இருக்கிறது.

இவ்வாறு பல விடயங்களை விரிவாகவும் சுவையாகவும் தொட்டுக்காட்டிய நீதியரசர் விக்னேஸ்வரன் தம் உரையின் இறுதியில் பின்வருமாறு குழுமியிருந்தவர்களைப் பார்த்துக் கூறினார்.

உங்கள் கடமைகள் எந்த அளவில் சவால்விடுப்பதாக இருந்தபோதிலும் சமநிலையில் செயல்பட வேண்டும் என்பதை மனதில் கொண்டு நீங்கள் தொடர்ந்து பணியாற்ற வேண்டும். நீங்கள் தொடர்ந்தும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் ஏனென்றால் உங்கள் ஒற்றுமையைக் குலைத்து விடுவதற்கு முயற்சிகள் நடைபெறும் என்பதை நிச்சயம் உணர்ந்திருப்பது அவசியம். உங்களின் வெளித்தள சுயாதீனத்துக்காக நடத்தப்படும் இந்த வரலாற்றுப் போராட்டத்தை தொடர்ந்து நடத்த வேண்டும். அது நீதித்துறைக்கு மாத்திரமானதன்று ஜனநாயகத்துக்கும் உரிய போராட்டமே, என்று கூறினார் நீதியரசர்.

## விளக்குத் தூண்கள்

மிறர் பத்திரிகையில் வெளியான ஒருவாசகர் கடிதம் இது,

முன்னொரு காலத்தில் சிறப்புத் தகுதிகளைப் பெற்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் இருந்தார்கள் என்று பெருமையடித்துக்கொண்டோம். அவர்கள் உயர்கல்விமான்களாகவும், அறிஞர்களாகவும் உலகில் போற்றப்பட்டார்கள். இன்றோ அந்த நிலையில் இருந்து இறங்கி வந்து படிக்காத கோமாளிகளையும் நாடக ராணிகளையும் ஓய்வுபெற்ற படக்கலைஞர்களையும் விளையாட்டு வீரர்களையும் தெரிவு செய்துள்ளோம். சட்டம் இயற்றுபவர்கள் என்ற முறையில் தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அறியாதவர்களாகவே இருக்கின்றார்கள் இவர்கள். கொழுத்த சம்பளம் பெறுவதற்காக இவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகின்றார்கள். பல்வேறு கொடுப்பனவுகளையும் பெற்றுக்கொள்கின்றார்கள். அவசியமானால் தமது எஜமான் கூறுவதின்படி இரண்டு கைகளையும் ஏந்தி நிற்கிறார்கள். இன்னொரு வகையில் சொன்னால் வெறும் விளக்குத் தூண்கள் இவர்கள்.

எழுதியவர்-கலிஸ்டஸ் ஜயதிலக்க

## உயிர்ப்புறும் ஞாபகங்களில் சமையும் கணங்கள்

விட்டுப்போன குடிவளவை
எண்ணித் தேய்ந்த,
நாள்களின் .... நம்பிக்கைகள் ...
உடைந்து நொருங்கியது

கறையான்களுக்கு
உணவளித்தபடி,
உருக்குலைந்து போகும்
வளவு வேலிக் கம்பிக் கட்டைகள்.

எனைக் குடிபெயர்த்த
இறுமாப்பில் ......
மனை நிலத்தின் மையத்தில்
இயந்திரத் தகடாய் .....



ஒரு பேய்க்குடில்.

அதில் பல்லிளித்தபடி
தெரிகிறது
கோரமுகம்
பேய்கள் தின்ற வாழ்வின்
ஞாபகங்களை

உயிர்ப்பிக்கிறது;
என் குடிமனை முற்றத்து
அத்திமரக் கொப்பில்
தொங்கும்
வெளிறிக் கிடந்த
உடுதுணி.

எல்லாமே மாறிற்று.
நேற்றுப்போல் இன்னும்
மணம் வீசியபடியிருக்கும்
காட்டு மல்லியைத் தவிர.

பொலிகையூர் சு.க.சிந்துதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் மன்றத்தின் தந்தை

## இன்னிசை வேந்தர் பொன்.சுந்தரலிங்கம்





சாதனைக் கலைஞரைச்
சந்திப்போம் சிந்திப்போம்

74

வயாவிளான்
தவமைந்தன்

ஆற்றுகைத் திறன் கொண்ட கலைஞன் ஒருவனின் ஆற்றுகையை மக்கள் முன்னே கொண்டு வருவதற்குத் தகுந்த களம் அமைக்கப்படும் போதே கலைகள் வளருகின்றன, கலைஞனும் வளமுற்று உயர்வடைகின்றான். அத்துடன் புதிய கலைஞர்களின் உருவாக்கமும் இடைவெளியின்றி நிகழ்கின்றது.

ஈழதேசத்தின் இசைத்துறை வரலாற்றில் எண்ணற்ற கலைஞர்களின் உருவாக்கத்துக்குக் காரணமாகவும் துறைதோய்ந்த கலைஞர்களின் களமாகவும் விளங்கி வரலாறு காணாத பல நாள் இசைவிழாக்களை, அரங்கேற்றங்களை 1995 ஆம் ஆண்டு வரை வெற்றிகரமாக நிகழ்த்திப் பெரும் சாதனைகளைப் படைத்த இளங்கலைஞர் மன்றத்தை வானுயர்ந்த புகழ் கொண்ட நிறுவனமாக வளர்த்தெடுத்த பெருந்தகையாகவும் தமிழ் மக்களின் அடி மனதில் இடம்பிடித்த தேனினும் இனிய குரலிசையின் சொந்தக்காரராகவும் எண்ணற்ற மாணவர்களை உருவாக்கிய இசைப் பேராசானாகவும் விளங்குபவர் சுருதிலய மாமணி பொன்.சுந்தரலிங்கம்.

மறைந்த இசைக்கலைஞர் பொன்னம்பலம் - கனகம்மா தம்பதியின் மகனாக 28.06.1943 இல் புங்குடுதீவில் இவர் பிறந்தார். புங்குடுதீவு கணேச மகாவித்தியாலயம், புங்குடுதீவு மத்திய மகா வித்தியாலயம், சுந்தரோதய ஸ்ரீசுவாமி ரோதயக் கல்லூரி போன்ற பாடசாலைகளில் கல்வி கற்று எஸ்.எஸ்.சியில் சித்தியடைந்த இவர் சிறுவயதில் இருந்தே திருமுறைகளை மனமுருகிப் பாடும் இசைத்திறன் கொண்டவராகவும் பாடசாலை நிகழ்வுகளில் முத்திரை பதித்து வந்த சிறு வயதுக் கலைஞனாகவும் திகழ்ந்து வந்தார்.

இசைப்பரம்பரையில் தோன்றிய இவர் 1961இல் தமிழகம் சென்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இசைத் துறையில் இணைந்து நான்காண்டுகள் கற்று சங்கீதபூஷணம் எனும் பட்டத்தைப் பெற்றார். இந்தக் காலத்தில் இசையரசு எம்.எம்.தண்டபாணி தேசிகர், ர்.கே.ரங்காச்சாரியார், மயிலம் வஜ்ரவேல் முதலியார், திருப்பாம்புரம் சிவசுப்பிரமணிய பிள்ளை, வேணுகோபால் ஐயர் போன்ற இசை மேதைகளிடம் செவ்விசையையும் பண்ணிசையையும் தெளிவுறக் கற்று ஒப்பற்ற பாடகனாய் 1966 இல் தாயகம் திரும்பினார்.

1967 இல் யாழ். நகரில் தனது குரலிசை அரங்கேற்றத்தை ஏராளமான இரசிகர்கள் முன்னிலையில் நிகழ்த்தி, இனிய குரலாலும் குழைந்து பாடும் பக்குவத்தாலும் எடுப்பான ஓசையாலும் சுருதி, லயம் சற்றும் பிசகாமல் நிதானத்தின் வழி நின்று வழுவாத தன்மையினாலும் அனைவரையும் கவர்ந்த இவர் மிக விரைவாகப் பெரு வளர்ச்சி கண்டு ஈழத்தின் நட்சத்திரப் பாடகராக உயர்வு பெற்று நம் நாட்டின் ஆலயங்கள் அனைத்திலும் தமிழிசை மழை பொழிந்து பாமர மக்களிடையேயும் பெரும் புகழ் பெற்று வந்தார்.

மிருதங்க, நடன அரங்கேற்றங்களின் பாடகராகப் பல ஆண்டுகளாக அணிசெய்து வந்த இவர் 1968 இல் திருமுறைப் பாடல்களை ஒலிப்பதிவு செய்து பதின்மூன்று ஒலிப்பேழைகளாக வெளியிட்டார். 1975 இல் இசை ஆசிரிய நியமனத்தைப் பெற்று, வவுனியா, வேலணை, உரும்பிராய், நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயங்களில் பணியாற்றியதுடன் அந்தக் காலத்தில் மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, தாய்லாந்து போன்ற வெளிநாடுகளுக்கும் சென்று பல மாதங்கள் அங்கேயே தங்கியிருந்து இசைக் கச்சேரிகளையும் இசை வகுப்புக்களையும் சிறப்புடன் வழங்கி ஈழத்துக்குப் பெருமை சேர்த்தார்.

இவ்வாறு தேசியப் புகழ் கொண்ட செவ்விசைப் பாடகராக விளங்கிய இவரால் 1971இல் நிறுவப்பட்ட யாழ்.இளங்கலைஞர் மன்றமானது தமிழகத்தின் மார்கழி மாத இசை விழாக்களையே தோற்கடிக்கும் அளவில் வரலாறு காணாத இசைவிழாக்களை 1995இற்கு முன்னர் எம் மண்ணில் நிகழ்த்தியது. இலை மறை காயாக இருந்த ஈழத்தின் கலைத் திறன் கொண்ட இளம் கலைஞர்களை வெளிக் கொணர்ந்து இசை, நடன ஆற்றுகைத் துறையில் பெரும் விழிப்புணர்ச்சியை அந்தக் காலத்தில் தோற்றுவித்து ஏனைய இசை மன்றங்களுக்கெல்லாம் எடுத்துக் காட்டாக விளங்கித் தமிழரின் பண்பாட்டை ஊரறிய, உலகறிய வளர்த்தெடுத்த புனிதமான இடமாகவும் இளங்கலைஞர்மன்றம் விளங்கியது.

1982 இல் சீர்காழி கோவிந்தராஜனுடன் இணைந்து புங்குடுதீவு சிவன் கோயிலில் மாபெரும் இசைவிருந்தளித்த இவர் 1996 இல் இருந்து கனடாவில் வசித்து வருவதுடன் ஈழத்தமிழர்கள் வாழும் அனைத்து நாடுகளிலும் இசைப்பணியாற்றி வருகின்றார். தமிழிசையமுதம், நாதசங்கமம், முத்துச்சிரிப்பு, யோகர் சுவாமிகள் பாடல்கள் போன்ற இறுவட்டுக்களையும் காணாம்ருதம் எனும் அழகுறு காணொலியும் இவரால் வெளியிடப்பட்டுள்ளன.

இளங்கலைஞர் மன்றமே எனது உயிர் மூச்சு. இந்தப் பயிரைத் தண்ணீர் விட்டு வளர்க்கவில்லை. கண்ணீர் விட்டுத் தான் வளர்த்தோம். நான் ஒரு தனி மனிதனாக நின்று இம் மன்றத்தை உருவாக்கவுமில்லை. எத்தனையோ கலைஞர்கள், நண்பர்கள், வர்த்தகர்கள் எனப் பலரும் என்னை நம்பி என் பின்னே வந்தார்கள், அள்ளி அள்ளித் தந்தார்கள்.

யாழ்ப்பாணத்திலேயே சிறந்த கலையரங்காக இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபம் நிமிர்ந்து நின்றதை நாம் அனைவரும் கண்டு களித்தோம், பூரித்தோம், மன நிறைவு கண்டோம். மின்சாரம், எரிபொருள் போன்றவை யாழ்ப்பாணத்தில் கிடைக்காத காலத்தில் கூட மாபெரும் இசை விழாக்களை ஆயிரக்கணக்கான இரசிகர்கள் முன்னிலையில் சிறப்புற நடத்தினோம்.

இம் மன்றத்தின் ஊடாக ஈழத்தின் இசைக் கலைஞர்கள் புதுப் பொலிவு பெற்றனர் என்பதை எவராலும் மறுத்து விட முடியாது. இந்த நிலை மீண்டும் யாழ்ப்பாணத்தில் ஏற்பட வேண்டும் என்பதே எனது கனவு, இது நனவாக வேண்டும்.

தனிப்பட்ட முறையில் என்னோடு முரண்பாடு கொண்டிருந்த கலைஞர்களுக்கே எமது மன்றத்தின் இசை விழாக்களில் அந்தக் காலத்தில் முக்கிய இடமளித்து மதிப்பளித்தோம். எனவே எனது அன்பான கலைஞர்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு ஒற்றுமையாய் நின்று பகைமைகளை மறந்து மிகச் சிறந்த இசை விழாக்களை எதிர் காலத்தில் நடத்த மனமுவந்து ஒத்துழைக்க வேண்டும் எனத் தனது அடி மனத்தின் அதிர்வலைகளை வெளிப்படுத்துகின்றார் சங்கீத பூஷணம் பொன்.சுந்தரலிங்கம்.

# உடற்சூட்டைத் தடுக்கும் வெட்டிவேர்

நலம் தரும்
தெய்வீக
மூலிகைகள்

### வெட்டிவேர்

**வேறுபெயர்:** குருவேர்
**தாவரவியற் பெயர்:** ...
**வெட்டிவேரியா சிசனொய்ட்ஸ்**
**குடும்பம்:** ... (போயேசியே)
**சிங்களப் பெயர்:** சவேந்ரா
**சமஸ்கிருதப் பெயர்** உஷீரா
**ஆங்கிலப் பெயர்** cuscus grass

இது புல் வகுப்புக்குரியது. பல தண்டுகள் சேர்ந்து காணப்படும். அடிப்பாகம் தடித்தும் அழுத்தமாகவும் இருக்கும். இலைகள் ஒடுங்கி தடித்திருக்கும்.

இதன் நார் போன்ற நீண்ட வேர்களே வெட்டிவேர் எனப்படுகின்றது. இதன் வேரையும், மேற்பாகத்தையும் வெட்டிய பின் நடுவில் உள்ள தண்டை மீண்டும் நடுவதால் (வெட்டி நடுவதால்) வெட்டி என்று பெயர் ஏற்பட்டதாகக் கூறுவர்.

**உடற்சூட்டுக்கு**

வெட்டி வேரை நீரில் ஊற வைத்து அந்த நீரை குடித்து வர உடற்சூடு, தாகம், தேக எரிவு என்பன நீங்கும்.

வெட்டி வேரில் விசிறி செய்து பயன்படுத்துவதாலும் குளிர்ச்சி உண்டாகும்.

வெட்டிவேரில் பாய் அல்லது தடுக்கு செய்து அதற்கு நீர் தெளித்து தொங்கவிட்டால் சுற்றாடல் குளிர்ச்சியாக இருக்கும். கடும் வெய்யிற் காலத்துக்கு இது பிரயோசனமானது.

**காய்ச்சலுக்கு**

வெட்டிவேர், இலாமிச்சை வேர், வேர்கொம்பு, வெண்சந்தனம், சாரணை வேர், கொத்தமல்லி இவற்றைச் சம அளவில் எடுத்துக் குடிநீர் செய்து காலை, மாலை பருகிவர காய்ச்ச[illegible] வறட்சி [illegible]





வெட்டிவேர்



Dr. சே.சிவசண்முகராஜா M.D. (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

30.12.2012 முதல் 05.01.2013 வரை

தருபவர் - வித்தியா

**மேடம்**- இடம், பொருள் உணர்ந்து பேசி சமூகத்தில் பெற்ற நற்பெயரைப் பாதுகாப்பீர்கள். எதிரியிடம் விலகுவதால் நேரத்தையும் நற்பெயரையும் பாதுகாக்கலாம். இல்லறத்துணை அன்பு, பாசத்துடன் நடந்து குடும்ப நலம் பேணுவர். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பால், திட்டமிட்ட இலக்கை அடைவீர்கள். பணவரவு சீராகும். உத்தியோகத்தர், பணியாளர்களைக் கண்டித்து வேலை வாங்குவதில் நிதானமான நடைமுறையைப் பின்பற்றவும். பணவசதி திருப்திகரமாக இருக்கும். மாணவர்கள், படிப்பில் அதிக கவனம் தேவை.

**இடபம்**- அதிக பணச்செலவும், சிலரது பொறாமையையும் சந்திக்க வேண்டியதிருக்கும். கவனம் தேவை. எதிரியால் தொந்தரவு அணுகாத, சுமுக வாழ்வியல் சூழ்நிலை உருவாகும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை செழித்து உபரி பணவருமானம் கிடைக்கும். பணியாளர்கள், கூடுதல் வேலைவாய்ப்பு, கிடைத்துசம்பள உயர்வு, சலுகைப்பயன் பெறுவர். மாணவர்கள் கல்வி, உடல்நலம் பேணுவதில் கூடுதல் கவனம் பின்பற்ற வேண்டும்.

**மிதுனம்**-பேச்சில் நிதானமும், போக்குவரத்தில் தகுந்த கவனமும் பின்பற்றுவது அவசியம். எதிர் மனப்பாங்கு உள்ளவர்களிடம் விவாதத்தைத் தவிர்க்கவும். இல்லறத் துணை, குடும்பத்தேவை நிறைவேற தாமதம் ஆவதால், அதிருப்தி மனப்பாங்குடன் செயற்படுவர். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பினால் எதிர்பார்த்த பணவரவை பெறுவீர்கள். பணியாளர்கள், நிர்வாகத்தின் வழிகாட்டுதலை பொறுப்புணர்வுடன் பின்பற்றுவதால் சிரமத்தைத் தவிர்க்கலாம். மாணவர்கள், தகுந்த பயிற்சியால் மட்டுமே நல்ல தேர்ச்சி இலக்கை அடைய முடியும்.

**கடகம்**- பேச்சு, செயலில் உங்கள் குடும்ப எதிர்கால நலன் குறித்த அக்கறை பிரதிபலிக்கும். சமூகப்பணியிலும் ஓரளவு ஈடுபடுவீர்கள். எதிரி வியக்கும் அளவில், உங்களின் வாழ்க்கைத்தரம் உயரும். இல்லறத்துணை கூடுதல் பொறுப்புணர்வுடன் நடந்து குடும்ப வாழ்வை மகிழ்ச்சிகரமாக்குவர். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனத்துடன் அபிவிருத்தி பணிபுரிவீர்கள். உத்தியோகத்தர் சிறப்பாகச் செயற்பட்டு நிர்வாகத்திடம் பாராட்டு, வெகுமதி பெறுவர்.

**சிங்கம்**- சமூகத்தில் அதிக மதிப்பு, மரியாதை கிடைக்கப்பெறுவீர்கள். பூர்வீக சொத்தில் எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். எதிரி தன் அபத்தமான செயல்களால் சமூகத்தில் அவமானம் அடைவர். உங்கள் உடல் நலம் ஆரோக்கிய பலம் பெறும். தொழில், வியாபாரம் செழித்து ஆதாய பணவரவு கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு கூடுதல் கௌரவம், அதிக பொறுப்பு ஆகியன வந்து சேரும். மாணவர்களுக்கு, கல்விக்கான பணவசதி திருப்திகரமாகக் கிடைக்கும்.

**கன்னி**-பிறர்குறைகளைச் சரிசெய்வதில் ஆர்வம் கொள்ளாமல், சொந்தப் பணிகளை நிறைவேற்றுவதால் உங்கள் செயல் சிறப்பானதொரு இடத்தைப் பிடிக்கும். பூர்வீக சொத்தில் கிடைக்கிற பணப்பலன்களை, தகுந்த கவனமுடன் வீடுகொண்டு வந்து சேர்ப்பது நல்லது. எதிரியின் கெடுசெயல் உங்களைப் பாதிக்காத வகையில், விழிப்புணர்வுடன் செயற்படுவது அவசியம். உத்தியோகத்தர் இலக்கு நிறைவேறும். பணியாளர்கள் ஒத்துழைப்பு மனதுடன் நடந்து கொள்வர். மாணவர்கள் கவனமுடன் படித்து நல்ல தேர்ச்சி பெறுவர்.

**துலாம்**- பேச்சில் கவித்துவமும் வசீகரமும் நிறைந்திருக்கும். சமூகத்தில் புதியவர்களின் அறிமுகமும் பாராட்டும் பெறுவீர்கள். இல்லறத்துணையின் அதிருப்திக்கு உட்படாத வகையில் நடந்து கொள்வதால், வாழ்வியல் நடைமுறை சீராகும். தொழில், வியாபாரத்தில் சராசரி உற்பத்தி, விற்பனை இருக்கும். நிலுவை பணவரவு தகுந்த முயற்சியால் வந்துசேரும். பணியாளர்கள் நிர்வாகத்தின் வழிகாட்டுதலை கூடுதல் கவனமுடன் பின்பற்றுவர். மாணவர்கள் விளையாட்டுப் பயிற்சியில் தகுந்த கவனம் வேண்டும்.

**விருச்சிகம்** - கடந்த தினங்களில் நிறைவேற்றத் தவறிய பணிகளை உத்வேகமுடன் செயற்படுத்துவீர்கள். தாராளமான பணவசதி உறுதுணையாக இருந்து, தகுந்த வெற்றியைப் பெற்றுத்தரும். தொழில், வியாபாரத்தில் சுணக்கமும், சுறுசுறுப்பும் சம அளவில் கலந்திருக்கும். பணவரவு எதிர்பார்த்த வகையில் கிடைக்கும். உத்தியோகஸ்தர் பணியாளர்களை ஊக்கப்படுத்தி, வேலை வாங்குவதால் இலக்கு உரிய காலத்தில் நிறைவேறும். மாணவர்கள் வெளி வட்டார பழக்கத்தைக் குறைத்து, படிப்பில் கவனமுடன் ஈடுபடுவர்.

**தனுசு** - மனதில் உருவாகும் தாழ்வு மனப்பான்மையை கடந்தகால வெற்றியைக் கவனத்தில் கொண்டு மாற்றுவதால், வாழ்வில் பல நலமும் கிடைக்கும். எதிரியின் கெடு செயல் கூட அதிர்ஷ்டவசமாக நல்ல பலனை பெற்றுத்தரும். அரச உதவி கிடைப்பதில், தாமதம் இருக்கும். இல்லறத்துணையுடன் தேவையற்ற வாக்குவாதத்தைத் தவிர்க்கவும் பேசவேண்டாம். எளிமையான வாழ்வைப் பின்பற்றுவதில் ஆர்வம் வளரும். தொழில், வியாபார நடைமுறை கூடுதல் உழைப்பினால் சராசரி நிலைமை அடையும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பதால்சிறந்த தேர்ச்சியைப் பெறலாம்.

**மகரம்** - சிலர் சொல்லும் தவறான ஆலோசனையால், தகுதிக்கு மீறிய செயல்களில் ஈடுபட ஆர்வம் வளரும். இருப்பினும், உரிய நேரத்தில் இஷ்ட தெய்வத்தின் கருணையால் விலகும் மனப்பான்மை பெறுவீர்கள். எதிரி விஷப்பிராணிகள் குறித்து விழிப்பாக இருக்கவும். இல்லறத்துணை ஆறுதல் தருகிற மனப்பான்மையுடன் நடந்து கொள்வர். உத்தி யோகத்தர்கள் சிலருக்கு இடமாற்றம் பெறுகின்ற நிலைமை ஏற்படும். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை தேவை.

**கும்பம்** - மனதில் ஆன்மிக நம்பிக்கை வளர்ந்து செயல்கள் வெற்றி பெற உறுதுணையாக இருக்கும். எதிரியால் தொல்லை வராத சுமுக வாழ்வியல் சூழ்நிலை இருக்கும். பிணி, கடன் தொந்தரவு குறையும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணிகளை நல்லவிதமாக நடத்துவீர்கள். அரசு தொடர்பான உதவி பெற அனுகூலம் உண்டு. உத்தியோகத்தர்களுக்கு கூடுதல் பொறுப்பு, சலுகைப் பயன் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் நல்ல தேர்ச்சி பெற தகுந்த பயிற்சியைப் பின்பற்றவும்.

**மீனம்**- முக்கிய செலவுகளுக்கு எதிர்பார்த்த பணம் கிடைக்கும். உங்களின் சமூக அந்தஸ்தை இயன்றளவில் பாதுகாத்துக் கொள்வீர்கள். இல்லறத்துணை விட்டுக் கொடுக்கும் மனப்பாங்குடன் நடந்து குடும்ப வாழ்வு முறையை இனிதாக்குவர். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணியாளர்கள், கூடுதல் வேலைவாய்ப்பு எதிர்பார்த்த சலுகைப்பயன் கிடைக்கப்பெறுவர். மாணவர்கள் நல்லவிதமாக படித்து, உயர்ந்த தேர்ச்சியைப் பெறுவர்.

## உனக்கென்ன பயம்...?

கவிஞர்:க.பருத்தி: தாசன்




அழிந்து போகட்டும்
இந்தப் பிரபஞ்சம்
அதனால் உனக்கென்ன பயம் ...?
ஆண்டாண்டு காலங்களாக
அடிமையாக்கி
அகதியாக்கி
அல்லல் படுத்திய இந்தப் பிரபஞ்சம்
அழிந்து போகட்டும்
அதனால் உனக்கென்ன பயம் ...?
ஆளுமை சிதைத்து
தோழமை பிரித்து
அரங்கேறிய அடக்கு முறையோடு
வல்லரசெனச் சொல்லி
வந்தேறு குடிகளென்றெமை
கொல்லைப் புறத்திலே
கொன்றுகுவித்த இந்தப் பிரபஞ்சம்
அழிந்து போகட்டும்
அதனால் உனக்கென்ன பயம் ...?
ஆழிப்பேரலை
அள்ளிக் கொலை செய்ய
தீச்சுவாலை தெருவுக்குள் புகுந்து
கொத்துக் குண்டுகளால்
குடல் கிழித்துப் போட
பார்த்துக் கொண்டிருந்த
பகுத்தறிவாளர்களைச்
சுமக்கின்ற இந்தப் பிரபஞ்சம்
அழிந்து போகட்டும்
அதனால் உனக்கென்ன பயம் ...?
காட்டிக் கொடுப்போடு
கற்பழிப்போடு
கப்பம் வாங்கி, கன்னிக் கொலை செய்து
தாயும் தெரியாமல், சேயும் தெரியாமல்
தாரமும், தங்கையும் தெரியாமல்
ஆகாரமாக்கி அழிக்கின்ற காமுகருக்கு
அடைக்கலம் கொடுக்கின்ற
இந்தப் பிரபஞ்சம்
அழிந்து போகட்டும்
அதனால் உனக்கென்ன பயம் ...?
குருவை மதிக்காதவரை
குலத்தை மதிக்காதவரை
கருவை சிதைப்பவரை
கடைத் தெருவில் சிசுவை விதைப்பவரை
கல்லறையை உடைப்பவரை
ஏழ்மையை ஏமாற்றி
ஏழ்மையென்று ஏமாற்றி
ஊமையாய் காட்டி
மானத்தை விற்பவரை
மடியினிலே தாங்கும் இந்தப் பிரபஞ்சம்
அழிந்து போகட்டும்
அதனால் உனக்கென்ன பயம் ...?
"இன்னுமொரு நாடு" பிறக்க
எல்லைக் கற்களை எழுந்து நடக்க விடு
எது நடக்கவிருக்கிறதோ
அது நன்றாகவே நடக்கும்
கீதையிலே கண்ணன்
கவிதையாய் வகுத்து விட்டான்.
அதனால் உனக்கென்ன பயம் ...?
எழுந்து நில் ...!
எதிர்த்து நில் ...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீவப்போவது தலைகளையா? பென்சில்களையா?




த.அஜந்தகுமார்

எமது இலக்கியப் பரப்பில் 'விமர்சனம்' தொடர்பாக உள்ள கருத்துக்கள் ஆரோக்கியமாக இல்லை என்பதை ஒவ்வொரு சந்தர்ப்பமும் கூறி நிற்கிறது. ஒரு படைப்பில் உள்ள நிறையை மட்டும் கூறி படைப்பாளிக்கு ஆசீர்வாதம் வழங்குவதா விமர்சனம்? இல்லையென்றால் குறையை மட்டும் கூறி படைப்பாளி இனிமேல் பேனையே தூக்காத அளவுக்குத் துவம்சம் செய்வதா விமர்சனம்? ஏனென்றால் இவ்வாறு 'வந்தனமாக' அல்லது 'கண்டனமாகவே' எமது விமர்சனம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

ஒரு கட்டுரையிலோ அல்லது படைப்புகளிலோ உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டி எழுதினாலோ, பேசினாலோ குறித்த படைப்பாளியின் 'எதிரொலி' என்று 'கன்னை' பிரித்து விடுகிறார்கள்.

'அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான் குற்றமே கூறி விடும்'

என்று வள்ளுவன் கூறியதை விமர்சனப் பரப்பில் நாம் நினைத்துப் பார்த்தால் அது தான் சிறுமையாகிவிடும்.

விமர்சனம் என்பதே படைப்பைக் கூர்மைப்படுத்தும் ஆக்கபூர்வமான விடயமாகும். விமர்சனக் கத்தியை தலைசீவப் பயன்படுத்தாமல் பென்சில் சீவுவதைப் போல் கூர்மைப்படுத்தப் பயன்படுத்தினால் நன்மையே விளையும்.

இன்றைய நூல் வெளியீடுகளில் 'நயப்புரை' என்பதே பெரும்பாலும் இடம்பெறுகிறது. ஏனெனில் படைப்புப் பற்றிய ஆழமான விமர்சனம் இடம்பெற்றால் விழாவுக்கு நூல் வாங்க வந்தவர்களுக்கு அது தடையாக அமைந்துவிடும் என்பதே காரணம். அதன் பிறகான ஆழமான சிறந்த விமர்சன உரையாடலுக்கு நாம் இடமளிப்பதில்லை.

இதற்கும் பல காரணங்கள் :-

1. குறித்த ஒரு நூலை முழுமையாக வாசித்த 'கூட்டத்தை' கேட்பது கடினம்.

2. கேள்விச் செவியர்களாகவும், குறை வாசிப்பவர்களாயும் இருந்து கொண்டு தம்மை மேதாவிகளாய் எண்ணும் பாசாங்கு.

3. 'ஆள்' பார்த்து உண்மையான விமர்சனத்தை முன்வைக்க அஞ்சுதல்.

4. விமர்சனத்துக்கு என்று இன்று வருவோர்களும் அங்கு வந்துதான் பதட்டத்தோடு புத்தகத்தைப் புரட்டுகிறார்கள்.

5. கவிதைகளுக்கும், புனைகதைகளுக்கும் 'பொழிப்பு' சொல்வதையே விமர்சனம் என்று நினைக்கிறார்கள்.

இதனால் நிகழ்வது என்ன?

1. குறித்த படைப்பாளி அதிலும் இளம் படைப்பாளி தனது படைப்புகள் பற்றிய மிகை மதிப்பீட்டால் ஒளிவட்டம் சுழல அடுத்த நூலை பெரும் விளம்பரத்துடன் வெளியிடுகின்றான்.

2. குறை காண்பது என்பது தன்மீதுள்ள 'பொறாமை' என்று மனக்கணக்கில் போடுகின்றான்.

3. தன்னைப் போற்றும் கூட்டம் ஒன்றை வைத்துத் தன்னைப் படைப்புலகில் தக்க வைக்கப் பழகுகிறான்.

4. மாறி மாறி தமது பெயர்களைச் சொல்லிப் 'புளுகம்' அடைந்து இலக்கிய வரலாற்றின் 'யுகபுருஷர்களாய்' தங்களைப் பிரகடனப் படுத்துகின்றார்கள்.

படைப்புக்கான விமர்சனம் என்பதே ஒரு படைப்புத்தான் என்பதை மனங்கொள்ளாத ஆபத்தின் கிடங்கில்தான் நாம் விழுந்துவிடுகின்றோம்.

விமர்சனம் அதலபாதாளத்தில் விழுத்தினால் அதில் இருந்து எழுந்து வரவும், மலைக்கு ஏற்றினால் அதில் நிலைக்கப் பழகவும் படைப்பாளி தயாராக இருக்க வேண்டும்.

எழுத்தாளர் சுந்தரராமசாமி அவர்கள்,

'என் விமர்சனக் கருத்துக்களை என் வாசகன் சரிவரப் புரிந்து கொள்கின்றபோது அவனிடமிருந்து முதல் ஆபத்து எனக்கு வருகிறது. என் விமர்சனக் கருத்துக்களைத் தெரிந்து கொண்ட நிலையில் சிறந்த உலக நாவல்கள் போலவோ, சிறந்த இந்திய நாவல்கள் போலவோ ஒன்றை ஏன் உங்களால் படைக்க இயலவில்லை என்று அவன் என்னிடம் கேட்டு இருக்கிறான். என்னை நிராகரிக்க நான் அவனுக்குக் கற்றுத் தந்து, நான் எழுதவிருக்கும் படைப்புகள் மூலம் என்னை அவனால் நிராகரிக்க முடியாமல் ஆக்குவதே நான் ஏற்றுக் கொண்டிருக்கும் சவால்.'

என்று கூறியிருக்கின்றார். இங்கு சுந்தரராமன் ஏற்ற சவாலை எத்தனை பேர் ஏற்கத் தயாராக இருக்கிறார்கள்.

விமர்சனத்துக்குப் பயந்த படைப்பாளிகளும் அதைக் கண்டனமாக நினைக்கும் படைப்பாளிகளும் உள்ள சூழலில் படைப்பாளி விமர்சனத்தை உள்வாங்கி தன்னை இன்னும் உன்னதமாக்க வேண்டும். புகழ்ச்சி விரும்பி பெயரில் நாட்டம் கொள்ளாமல் ஆழமான படைப்புக்கான சவாலை விமர்சனங்கள் வழி அடைய வேண்டும்.

எனக்குத் தெரிந்த எழுத்தாளர் ஒருவர், 'தான் வாசிக்க விரும்புவதில்லை' என்றார். ஏனென்றேன், 'தான் எழுத நினைப்பதை யாரும் எழுதி இருந்தால் எழுத முடியாமல் போய்விடுமே' என்றார்.

இவ்வாறு தான் விமர்சனம் விரும்பாத படைப்பாளிகளும் இருக்கிறார்கள்.

# மன்னித்துவிடு அண்ணா!

கு.நிலாநிதி
ஆரம்பக் கல்வி
யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரி.

கடற்கரை மணலிலே அமர்ந்திருந்து தனது இரு கால்களையும் அணைத்துக் கொண்டு முழங்கால்களில் முகம் பதித்த வண்ணம் அமர்ந்திருந்தாள் ரேகா. அவள் கண்களில் கண்ணீர் பொலபொலவென்று கொட்டியது. தனது சேலைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்துவிட்டு எழுந்து மணலைத் தட்டிவிட்டு கடற்கரை ஓரமாக நடக்கலானாள்.

அவளுக்கு கடலலைகள் தன்னைப் பார்த்து சிரிப்பது போன்று தோன்றியது. ''அலைகளோ கடலைவிட்டுப் பிரிய மனமில்லாமல் கடல் வெளியே தள்ளித் தள்ளிவிடவும் மீண்டும் கடலுக்குள்ளேயே செல்கிறது. ஆனால் நானோ என் சொந்தங்களை விட்டுவிட்டு தனியாக வந்துவிட்டேனே'' என்று நினைக்கையில் அவளுக்கு லேசாக தலை சுற்றியது. அவளது எண்ண அலைகள் பின்னோக்கிச் சென்றன.

ரேகா தாய், தந்தை, பாட்டன், பாட்டி அனைவருக்கும் செல்லப்பிள்ளையாக வளர்ந்தவள். அதனால் குறும்பும் பிடிவாதமும் கொஞ்சம் அதிகம்தான். ரேகாவின் தமையனான கண்ணன் மிகவும் கெட்டிக்காரன். பாட்டனும் பாட்டியும் எப்பொழுதும் ரேகா, கண்ணன் மீது அதிக அக்கறை காட்டுபவர்கள்.

''அலைகளோ கடலை விட்டுப் பிரிய மனமில்லாமல் கடல் வெளியே தள்ளித் தள்ளிவிடவும் மீண்டும் கடலுக்குள்ளேயே செல்கிறது. ஆனால் நானோ என் சொந்தங்களை விட்டுவிட்டு தனியாக வந்துவிட்டேனே''

ரேகாவிற்கு தான் எப்பொழுதும் சுதந்திரப் பறவையாக இருக்க வேண்டும் என்ற நினைப்பு. அதோடு தமையனை மட்டந்தட்டுவதில் அவளுக்கு ஓர் இன்பம்.

கண்ணன் படித்து பொறியியல் மாணவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறியியல் துறைப் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்தான். ரேகா கல்வியியற் கல்லூரியில் கல்வி கற்றுக்கொண்டிருக்கிறாள். ஒவ்வொரு தவணை விடுமுறைக்கும் ரேகா வீட்டுக்கு வருவது வழக்கம்.

ஒருமுறை மார்கழி மாத விடுமுறையின்போது ரேகா வீட்டுக்கு போனாள். வழக்கம் போல குடும்பத்தினரிடமிருந்து அன்பான வரவேற்புக் கிடைத்தது. ஆயினும் ரேகாவுக்கு தனது அண்ணன் வீட்டிலிருந்தும் தன்னை வரவேற்கவில்லை என்ற கோபம். எப்படியாவது அவனுக்குத் தாய் தந்தையிடம் ஏச்சுவாங்கிக் கொடுக்க வேண்டும் என்ற ஆசை.

அன்றிரவு மெதுவாகக் கண்ணனது அறைக்குச் சென்றாள். அவனுடைய கணினியின் மேல் கழற்றி வைக்கப்பட்டிருந்த அவனது மோதிரத்தை எடுத்துக் கொண்டு போய்விட்டாள்.

விளையாட் [illegible] ரத்தைக் காணவில்லை எனக் காலையில் கண்ணன் தேடினான். ரேகா எதுவும் தெரியாதவள் போல இருந்தாள். கண்ணனைக் காலையில் எழுப்புவதும், அவனுடைய அறையைச் சுத்தம் செய்வதும் அவனது பாட்டிதான். கண்ணனுக்குப் பல்கலைக் கழகம் போக நேரமாகிவிட்டது. அதனால் அவன் கோபத்தில் என்ன பேசுகிறோம் என்பதை அறியவில்லை.

அறையைச் சுத்தம் செய்த பாட்டியை [illegible]னான். இடையில் ரேகா [illegible]ம் ரேகாவை அடிக்கக் கை ஓங்கினான். ஓங்கிய கையைத் தடுப்பதற்காக இடையில் புகுந்தாள் பாட்டி. கண்ணனின் கரங்கள் பாட்டியின் கன்னங்களில் பதிந்தன. கண்ணனுக்கோ என்ன செய்வது என்றே புரியவில்லை. தனது மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு சென்று விட்டான். அவசரத்திலும் பாட்டியை அடித்துவிட்டோமே என்ற குற்ற உணர்விலும் சென்ற கண்ணன் அந்தநினைப்பில் எதிரே வந்த வாகனத்தைக் கவனிக்கத் தவறிவிட்டான். அவ்வளவுதான்! சில நொடிகளில் அவன் இரத்த வெள்ளத்தில் மிதந்தான்.

★ ★ ★

கண்ணன் இறந்து விட்டான் என்பதை அறிந்து குடும்பமே இரத்தக் கண்ணீர் வடித்தது. தான் செய்த தவறை மறக்கவோ ஏற்றுக்கொள்ளவோ அவளால் முடியவில்லை. அடுத்த சில நாள்களின் பின் ஒரு கடிதம் குடும்பத்தினருக்கு எழுதி வைத்து விட்டு அநாதை இல்லம் ஒன்றில் சேர்ந்து கொண்டாள். அழுதழுது வீங்கிய முகத்துடன் வெளியே செல்ல மனமற்று மூன்று நாள்கள் அங்கேயே அடங்கிக்கிடந்தாள். மூன்றாவது நாள்தான் மனதை ஆற்ற நினைத்தே இந்தக் கடற்கரைக்கு வந்தாள்.

திடீரென அவளது தோள்களில் சில கரங்கள் பதிந்தன. அவள் சுய நினைவுக்கு மீண்டாள். எழுந்து பார்க்கையில் அவளது தாய், தந்தை, பாட்டன், பாட்டி அனைவரும் நின்றனர். ஆனால் அண்ணனை மட்டும் காணவில்லை.

அவர்கள் அனைவரது பாதங்களையும் தனது கண்ணீரினால் கழுவினாள். அவர்களும் அவளை மன்னித்து ஏற்றுக் கொண்டனர். அந்த மோதிரம் அவளின் அண்ணனை நினைவூட்டிக் கொண்டே இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழிவுகளுக்கு இல்லையா விடிவு?

எப்போதும் எங்களுடைய வீடுகள் குப்பை கூளமற்று, பார்ப்பதற்கு 'பளிச்' என்று இருக்கவேண்டுமென்றே அனைவரும் விரும்புகிறோம். நாளும், பொழுதும் வீட்டையும், வளவையும் கூட்டிப் பெருக்கி குப்பைகளை எங்காவது போட்டுவிடுகிறோம். இதுதவிர எமது சூழலின் அழகுக்கும், ஆரோக்கியத்துக்கும் கேடாகும் 'பிளாஸ்ரிக்' பொருள்கள், பழைய பாவனைப் பொருள்கள் என்பவற்றையும் ஒரு உரப்பைக்குள் போட்டு, இரவோடு இரவாக எங்காவது ஒரு காணிக்குள் எறிந்துவிட்டு ஓடுவோரும் சிலரும் உண்டு.

வீட்டையும், சூழலையும் சுத்தமாக வைத்திருப்பது நல்லதுதான். ஆனால் எமது வீட்டை சுத்தமாக வைத்திருப்பதற்காக அடுத்தவரின் காணியையோ, பொது இடங்களையோ அசிங்கப்படுத்துவது ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றல்ல. நகரப் பகுதிகளில் தினமும் வீடுகளில் குவியும் குப்பைகளை கூட்டி அள்ளி ஒரு பையில் போட்டு வாசலில் வைத்துவிடுவார்கள். அதனை எப்போதாவது வரும் மாநகரசபை வாகனம் அள்ளிச் சென்றுவிடும். அத்தோடு போன குப்பையை மறந்துவிடுகிறோம். குறித்த கழிவுப் பொருள் உரிய வகையில் அகற்றப்பட்டதா, பொது மக்களுக்குப் பங்கம் வராத இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதா, அங்கு குறித்த கழிவு பிரிகையாக்கம் செய்யப்பட்டதா என்பது குறித்தெல்லாம் நாங்கள் யோசிப்பதே இல்லை. மாறாக மறுநாளும் குப்பையைக் கட்டி வாசலில் வைத்துவிடுகிறோம்.

உண்மையில் குப்பைகள் என நாங்கள் நினைக்கும் சில பொருள்கள் மீள்சுழற்சி மூலம் மீண்டும் பயன்படுத்தக்கூடியவை. அதைவிட விலங்குக் கழிவுகள், தாவரக்கழிவுகள் என்பவற்றை உரிய முறையில் வீடுகளிலேயே கிடங்கு வெட்டிப் புதைப்பதன் மூலம் மண்ணை வளமாக்க முடியும். ஆனால் அப்படியெல்லாம் செய்வதற்கு நாங்கள் தயாராக இல்லை. 'வேலைப் பஞ்சி' இவற்றைச் செய்ய விடுவதில்லை. எப்படியாவது கழிவை அகற்றிவிட்டால் போதும் என்ற நினைப்பே முன்னிலை பெறுகிறதே தவிர, குறித்த கழிவுகளை ஆக்கபூர்வப் பொருள்களாக மாற்றும் வழிபற்றிச் சிந்திக்கத் தவறிவிடுகிறோம்.

நாங்கள் தினமும் பெருக்குகின்ற கழிவுகள் உலகின் சூழலுக்கு அச்சுறுத்தலை விடுக்கின்றன. பூமியை நிரந்தர நோயாளியாக்குவதில் அவை குறியாக இருக்கின்றன. உலகில் ஒரு புறம் அபிவிருத்தி ஏற்பட்டு வருகின்ற போதிலும் மறுபுறம் சுற்றாடல் மாசடைவினால் அபிவிருத்தி அதிருப்தியாக மாறும் நிலை ஏற்படுகின்றது. இதனால் பாதிக்கப்படுவது சூழல் மட்டுமல்ல நாமும்தான். இதனை மனிதர்கள் இன்னமும் உணரவில்லை. அதனாலேயே நூறு ஆண்டுகள் வாழவேண்டிய மனிதன் பல்வேறு நோய்களுக்கு ஆளாகி மிகக் குறுகிய வயதில் மாண்டுவிடுகின்றான். பூமி இடமளித்தாலும் மனிதனால் தொடர்ச்சியாக நிலைத்து நிற்க முடிவதில்லை. எனவே நமது உடலில் நாம் காட்டும் அக்கறையை எமது சுற்றுப்புறச் சூழலிலும் காட்ட வேண்டும்.

சமூகம், பொருளாதாரம், அரசியல், அறிவியல், தொழில்நுட்பம், கலாசாரம் எனப் பல்வேறு துறைகளில் மேல்நாட்டவரை அடிபொற்றி அபிவிருத்தி அடைய வேண்டும் எனும் இலக்கினை நோக்கியே இலங்கை பயணித்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் இந்தப் பயணத்தில் மேற்கத்தையவர்கள் பிரதானமாகக் கொள்ளும் சுற்றுப்புறத் தூய்மையை இலங்கை பின்பற்ற பின்னடிக்கிறது.

இலங்கையின் நகர்ப்புறங்களில் முறையான கழிவகற்றல் இன்மையால் அசுத்தமான சூழலே காணப்படுகின்றது. பல்வேறு தேவைகளின் நிமித்தம் வளமான வாழ்வைத்தேடி அதிக மக்கள் நகரில் ஒருங்கிணைகின்றனர். இதன்போது சனத்தொகை அதிகரிப்பு, இட நெருக்கடி, மக்களின் ஆடம்பர வாழ்வு என்பவற்றின் காரணமாக சனத்தொகையின் இரட்டிப்பு மடங்காக கழிவுகளும் பெருகுகின்றன.

உதாரணமாக 82 ஆயிரத்து 293 பேர் யாழ். மாநகரப் பகுதிக்குள் வசிக்கின்றனர். இதேவேளை நாளாந்தம் 56.25 மெற்றிக்தொன் கழிவுகள் யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் வெளியேற்றப்படுகின்றன. இந்தக்கழிவுகளை அகற்றுவதற்கு வசதியாக மாநகர சபை 24 வட்டாரங்களாகவும், பின்னர் 7 வலயங்களாகவும் பிரிக்கப்பட்டு கழிவகற்றல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இருந்தபோதிலும் இந்தக் கழிவகற்றலில் சரியான பொறிமுறை, உரிய முகாமைத்துவம் என்பன பிரயோகிக்கப்படுகின்றனவா என்பது கேள்விக்குறியே. ஏனெனில் நாள்கள் பல கடந்தபோதும், சுற்றுவட்டாரத்தையே நாறடிக்கும் துர்நாற்றத்தோடு வீடுகளின் வாசல்களில் கழிவுகள் காத்திருப்பதை இன்னமும் பல பகுதிகளில் காண முடிகிறது.

எனினும் இத்தகைய நிலைக்கு எடுத்த எடுப்பில் மாநகர சபையை மாத்திரம் குற்றம் சுமத்த முடியாது. பொதுமக்களது ஒத்துழைப்பின்மையும் இதற்கொரு காரணம். எனவே இருபக்கங்களிலும் உள்ள பிரச்சினைகளை நிவர்த்திக்க வேண்டியது அவசியமாகும்.

மக்கள் தமது சுற்றுப்புறச் சூழலைப் பேணுவது தொடர்பான அக்கறையின்மை, அல்லது விழிப்புணர்வின்மை என்பன காரணமாக கழிவுகளை கைவிடப்பட்ட குளங்களிலும், வீதியோரங்களிலும், ஆளரவமற்ற காணிகளிலும் கொட்டுவதால் சூழல் சமநிலை தளம்புகிறது. நகரப் பகுதியில் மாநகரசபைப் பணியாளர்கள் குறிப்பிட்ட தினத்தில் கழிவுகளை சேகரிக்க வருவதற்கு முன்னர் மக்கள் தமது வீடுகளுக்கு முன்பான கழிவுப் பொருள்களைப் பைகளில் போட்டு வைத்துவிட்டு காத்திருக்கின்றனர். ஆனால் மாநகர சபைப் பணியாளர்களின் வருகை தாமதிக்கும் ஒவ்வொரு தினமும் குறித்த கழிவுகளும் பெருக்க மடைகின்றன. காய்கறிகள், பழங்கள், உணவுப்பண்டங்கள் என்பவற்றின் கழிவுகள் வீதிகளில் போடப்படுகின்றன. அவற்றை நாய், பூனை போன்ற கால்நடைகள் காவிச்சென்று சந்தை, பஸ்நிலையம், கோயில், கடை என்று பேதம் பாராமல் அவற்றை சிந்திச் சிதறியே உண்கின்றன. இவ்வாறு சிந்தப்பட்ட கழிவுகள் குறித்த பகுதியை அசுத்தமாக்கி, மூக்கைப் பொத்த வைக்கிறது.

நகரில் உள்ள உணவகங்கள், ஏனைய வர்த்தக நிலையங்கள், அலுவலகங்கள், வீடுகள் என்பவற்றிலிருந்து தினமும் சேகரிக்கப்படும் அனைத்துக் கழிவுகளும் காலை வேளையில் உழவு இயந்திரங்களில் அளவுக்கதிகமாக திணிக்கப்படுகின்றன. வாகனங்களிலிருந்து கழிவுகள் பிதுங்கப் பிதுங்கக் கொண்டு செல்லப்படுகின்றன. வீதி எங்கும் கழிவுநீர் கோலம் போடும். அந்த வாகனத்திலிருந்து எழும் துர்நாற்றம் வீதியில் பயணிப்போரையும், வீதியோரங்களில் குடியிருப்போரையும் மயக்கமடையச் செய்யாத குறையாக அவஸ்தைக்குள் தள்ளும். மாநகரசபையால் நாளாந்தம் காலை 6 மணி தொடக்கம் மாலை 2 மணி வரை கழிவுகள் அகற்றப்பட்டு கொண்டுசெல்லப்படுகின்றன. அவை கொண்டு செல்லப்படும் வாகனங்கள் மூடப்படாத நிலையிலேயே காணப்படுகின்றன. சிலநேரங்களில் இந்த வாகனங்கள் வீதியோரங்களில் நீண்ட நேரம் தரித்து நிற்கும் சந்தர்ப்பத்தில் கழிவுகளை காகங்கள் போன்ற பறவைகள் வெளியே எடுத்து விளையாடுகின்றன. இந்த விளையாட்டு பொதுமக்களுக்கே வினையாகிவிடுகிறது.

எமது நாட்டிலுள்ள திண்மக்கழிவு தொடர்பான பிரச்சினைகளில் முக்கியமானது, வீதிக் கழிவுகள் பற்றிய உரிய முகாமையின்மையாகும். குறிப்பாக உடற்கூற்றியல் கழிவுகள், மருந்துக்கழிவுகள் என்பன 100 சதவீதம் தொற்றுநீக்கப்பட்டு அகற்றப்படுவதில்லை. அவற்றை உரிய முறையில் கிடங்கில் போட்டு எரியூட்ட வேண்டும். ஆனால் அதற்கு மாறாக இத்தகைய உடல் அவயங்களின் கழிவுகள் எந்தவித விஞ்ஞான செயன்முறைக்கும் உட்படுத்தப்படாமல் நேரடியாகக் கொண்டு



சென்று காக்கைதீவுக் கடற்கரைப் பகுதியில் கொட்டப்படுவதே வழமையாக இருக்கிறது. இதனை அந்தப் பகுதி மீனவர்கள் விசனத்துடன் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு கடலுக்குள் கொட்டப்படும் உடல் அங்கங்களின் கழிவுகள் கடல்வாழ் உயிரிகளுக்கு நல்ல விருந்தாக அமைகின்றன. பின்னொரு பொழுதில் வலைகளில் சிக்கும் குறித்த கடல்வாழ் உயிரிகள் மனிதர்களுக்கு விருந்தாகின்றன. இதன்போது ஏற்கனவே குறித்த கடல்வாழ் உயிரிகளில் மனித உறுப்புகளின் கழிவுகளால் ஏற்பட்டிருந்த நோய்க்கூறுகள் மனிதர்களை ஆரத்தழுவுகின்றன. நோய்கள் மனிதர்களை விழுங்கத் தொடங்குகின்றன.

உடல்நலத்துக்குக் கேடான தன்மையையே அநேக கழிவுகள் கொண்டுள்ளன. இவை பிரிகையாக்கம் செய்யப்படுவதற்காகவோ அல்லது மனிதர்களின் அலட்சியத்தாலோ எங்காவது குவிந்து கிடக்கும்போது அவை கால்நடைகளின் கண்களைக் கவர்கின்றன. இந்தக் கவர்ச்சி அந்தக் கழிவுப் பொருள்களை உண்ணுமளவுக்கு கால்நடைகளைத் தூண்டுகின்றன. எனினும் கேடான கழிவுப்பொருள்களின் இரசாயன விளைவுகள் காலப்போக்கில் அந்தக் கால்நடைகளைக் கொன்ற பின்னரே ஓய்கின்றன. பெரும்பாலான கழிவுகள் விலங்குகள் மூலமும் வெள்ளம், காற்று போன்ற இயற்கைக் காரணிகள் மூலமும் காவிச் செல்லப்பட்டு அயல் பகுதிகளில் பரவலடைகின்றன. அதன் பின்னரே நாம் காவிவந்த நோய்க்கூறுகளை சகட்டு மேனிக்கு ஏற்கின்றன.



இதற்கு நல்ல உதாரணம் யாழ். நகரிலுள்ள புல்லுக் குளம்தான். இந்தக் குளத்திலுள்ள கழிவு வாய்க்கால்களில் கொட்டப்படும் கழிவுகளாலும், பரவலடையும் கழிவுகளாலும் நுளம்புத்தாக்கம் அதிகமாகின்றது. இது டெங்கு, மலேரியா போன்ற நோய்களைப் பெருக்கவும், அதன் மூலம் மனித உயிரிழப்புகள் நிகழவும் வழிவகுக்கின்றது.

இதுதவிர மலக்கழிவுகள், இறந்த ஆடு, மாடு என்பவற்றின் எச்சங்கள் சண்டிலிப்பாய் பகுதியில் ஒதுக்கப்பட்டுள்ள இடமொன்றில் கொட்டப்பட்டு தீமூட்டப்படுகின்றன. இதன்போது துர்நாற்றத்தைச் சுமந்தபடி எழும் புகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயத்ரி விஜயரட்ணம்
(புவியியல்துறை
யாழ்.பல்கலைக்கழகம்)



மண்டலம் சுற்றுவட்டாரம் எங்கும் பரவுகிறது. "இதனால் வெளி மாசடைவதுடன், சுவாசப் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன." என்று வேதனை தெரிவிக்கின்றனர் குறித்த பகுதிக்கு அருகிலுள்ள நவாலி மக்கள்.

இன்று நம் நாட்டில் புதிதாக உருவெடுத்திருக்கும் இலத்திரனியல் கழிவுகளும் இலேசுப்பட்டவை அல்ல. இலங்கையில் தினமும் 5 தொன் இலத்திரனியல் கழிவுகள் குவிவதாக ஆய்வுகள் சொல்கின்றன. இலத்திரனியல் பொருள்களின் மித மிஞ்சிய பாவனையின் வெளிப்பாடே இத்தகைய இலத்திரனியல் கழிவுகளை அபரிமிதமான வேகத்தில் உற்பத்தி செய்கின்றன. ஆண்டுதோறும் இலங்கையில் கைத்தொலைபேசிப் பாவனை 8 வீதமும், கணினிப் பாவனை 10 வீதமும் அதிகரிக்கின்றன. இதைவிட 20 மில்லியனுக்கும் அதிகமான இறுவட்டுக்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இவையெல்லாம் ஆய்வுகளின் முடிவுகள் மாத்திரமே. உண்மையில் இந்தத் தொகை இன்னும் அதிகமாக இருக்கலாம் என்பதே யதார்த்தம். இவ்வாறு வகைதொகையற்ற இலத்திரனியல் சாதனங்களை வாங்கிக் குவிக்கும் இலங்கையர்கள் - குறிப்பாக யாழ்ப்பாணத்தவர்கள்

அத்தகைய இலத்திரனியல் பொருள் நுகர்வு மூலம் உருவாகும் கழிவுகளை உரிய முறையில் அகற்றுவது பற்றி அக்கறை காட்டுவதில்லை. ஆனால் அபாயகரமான விடயம் என்னவென்றால் இலத்திரனியல் கழிவுகளில் 70 சதவீதமானவை நச்சுத்தன்மை வாய்ந்தவை. அது பற்றிய புரிதல் இன்றி சர்வ சாதாரணமாக வீசியெறிகிறோம். நம்முடைய சூழலை நாமே நச்சுச் சூழலாக மாற்றவைக்கிறோம்.

ஏனைய கழிவுகளைப்போல் இலத்திரனியல் கழிவுகளையும் குழி தோண்டிப் புதைக்கவோ, எரியூட்டவோ முனைந்தால், அது எதிர்மறையான விளைவையே ஏற்படுத்தும். இத்தகைய இலத்திரனியல் கழிவுகளை மண்ணில் புதைக்கும்போது அதிலுள்ள ஈயம், கட்மியம், பாதரசம் போன்ற நச்சுப் பொருள்கள் மண்ணிலும், நீரிலும் நிரந்தரமாகக் கலந்து விடுகின்றன. பின்னர் மண்ணில் பதுங்கியிருந்து மனிதர்கள் மீதும் ஏனைய உயிரினங்கள் மீதும் சத்தமின்றி ஊடுருவி உயிர் குடிக்கின்றன. எரியூட்டப்படும்போதும் இந்த இரசாயனப் பதார்த்தங்கள் கு எளிதாக வளிமண்டலத்தோடு சங்கமமாகி துரிதமாகவே ... விடுக்கும் ... லத்தைத் தொடங்கிவிடுகின்றன.

மனிதனுக்கும் சூழலுக்கும் தீங்கு விளைவிக்கும் இவைபோன்ற திண்மக்கழிவுகளை உரிய வகையில் அகற்றுவதற்கு ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக பொருத்தமான முகாமைத்துவத்தையும், பொறிமுறையையும் பயன்படுத்துவதன் மூலமே ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்தலாம். அந்தவகையில் பின்வரும் திண்மக்கழிவு முகாமைத்துவ வழிமுறைகள் பொருத்தமானவையாக ஏற்றுக்கொள்ளக்கூடியவை.

★ வீட்டுக் கழிவுகள், வர்த்தக நிலையக்கழிவுகள், சந்தைக்கழிவுகள் என்பன எந்தெந்த நாள்களில் எங்கெங்கு அகற்றப்படும் என்பதை ஊடகங்கள் மூலம் மக்களுக்கு அறிவிக்க வேண்டும். இதன்போது கழிவுகளை மக்களே பிரிகையடையும் கழிவுகள், பிரிகையடையாக் கழிவுகள் என்று தரம்பிரிக்க வேண்டும். அவற்றை இரு வேறு பைகளில் பொதி செய்து வீதியோரங்களில் மக்கள் வைத்த பின்னர் அவற்றை வாகனங்கள் மூலம் அகற்றல் வேண்டும். எனினும் இவையெல்லாம் குறித்து பொது மக்களுக்கு தெளிவான அறிவுறுத்தல்களை வழங்குவது அவசியமானது.

★ வீட்டுக்கழிவுகளில் உக்கக் கூடிய கழிவுகளை இலகுவாக பசளையாக்கி பயிர்களுக்கு உரமாக்கலாம். இது தொடர்பான விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தினால் பெருகும் கழிவுகளின் அளவைக் கட்டுப்படுத்தலாம்.

★ கழிவுகளை அகற்றுவதற்கு போதிய வாகன வசதியை ஏற்படுத்திக் கொடுக்க உள்ளூராட்சி அமைப்புகளும், அரசும் முன்வரவேண்டும். அத்தோடு குறித்த கழிவகற்றும் வாகனங்களில் பாதுகாப்பான முறையில், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில் கொண்டு செல்லக்கூடிய வசதிகளை வடிவமைக்க வேண்டும்.

★ கழிவுகள் அகற்றப்பட்டுக் கொண்டு செல்லப்படும் நேர ஒழுங்கில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். மக்கள் நடமாட்டம் அதிகமாகவுள்ள நேரங்களை கழிவகற்றலின்போது தவிர்க்கலாம். காலை 6 - 9 மணி வரையும், மாலை 4 - 7 மணிவரையும் உள்ள பொழுதுகளில் வழமையாகவே வீதிகளில் சனநடமாட்டம் அதிகமாகவே இருக்கும். காலையில் பாடசாலை, அலுவலகம், தொழில்முயற்சி என்பவற்றுக்குச் செல்வோர் மீண்டும் தம் இருப்பிடத்துக்கு மாலையிலேயே வருவார்கள். எனவே இதற்கிடைப்பட்ட மதிய நேரத்திலோ அல்லது ஆளரவமற்ற இரவுப் பொழுதிலோ கழிவுகளை அகற்றலாம். இதனால் பயணிப்போருக்கு ஏற்படக் கூடிய அசௌகரியங்கள் குறைவடையும்.

★ வைத்தியசாலைக் கழிவுகள் முறையாகத் தொற்று நீக்கப்பட்டு, நியமமுறைப்படி வெட்டப்பட்ட குழிகளில் இடப்பட்டு, எரியூட்டிய பின்னர் அவற்றுக்கு சுண்ணாம்பு போட்டு மூட வேண்டும். இதற்கான நிலத்தெரிவு குடியிருப்புக்கு அப்பாற்பட்டுக் காணப்பட வேண்டும்.

★ குடியிருப்புப் பகுதிகள், நீர்நிலைகள், போக்குவரத்துப் பாதைகளுக்கு அப்பாற்பட்ட அரச நிலப்பகுதியிலேயே கழிவகற்றலுக்கான இடம் தெரிவுசெய்யப்பட வேண்டும். குறித்த இடத்தின் பாவனை நீண்ட ஆயுள் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறான இடத்தெரிவின்போது புவியியல் தகவல் ஒழுங்கு முறைகளைப் பயன்படுத்துவது அவசியம்.

★ மலக்கழிவுகள் எரியூட்டப்படுவதனால் ஏற்படும் பிரச்சினையைத் தவிர்க்க மாற்று வழிகளைப் பின்பற்ற வேண்டும்.

அபிவிருத்தி அடைந்த நாடான சீனாவில் கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலை மூலம் செயன்முறைக்கு உட்படுத்தப்பட்டு எஞ்சும் மலக்கழிவுகளின் திண்மப் பகுதிகள் உருளைக்கிழங்கு உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகின்றன. திரவக் கழிவு நீர்நிலைகளுடன் கலக்கவிடப்படுகின்றது. இலங்கையிலும் குறிப்பாகக் கொழும்பில் இவ்வாறு மலக்கழிவுகள் சுத்திகரிக்கப்பட்டு கடலுடன் கலக்கவிடப்படுகின்ற போதிலும் அவை 100 சதவீதம் வெற்றியளிக்கவில்லை. ஆனால் வறிக்கடுவையில் கழிவுநீர் சுத்திகரிப்பு ஓரளவு வெற்றியளிக்கப்பட்டு விவசாயத்துக்கும், குடிநீருக்கும் பயன்படுத்தப்படுகின்றது.

★ கழிவகற்றல் தொழில் இழிவானது என்ற எண்ணப்பாங்கே அநேகரிடம் உண்டு. இதேவேளை சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கான ஊதியமும் மிகக் குறைவு. இதனால் கழிவகற்றும் தொழிலில் ஈடுபட அக்கறை காட்டுபவர்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகிறது. இது ஓர் அபாய நிலையின் குறிகாட்டி. கழிவகற்ற எவரும் முன்வராவிட்டால் நாடே சாக்கடையில் மூழ்கி அழிவடைந்து போகும். எனவே சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு, ஊக்குவிப்புப் படிகள் என்பவற்றை வழங்கவேண்டும். கழிவுகளை கைகளால் அகற்றும் நிலையை மாற்றி, அதற்குப் பிரதியீடான உபகரணங்களை வெளிநாடுகளிலிருந்து வருவித்து வழங்க வேண்டும். சுத்திகரிப்புத் தொழிலாளர்களும் சமூக அந்தஸ்து உள்ள பிரஜைகளே என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும்.

★ டெங்கு, மலேரியா போன்ற நுளம்புத் தாக்கம் அதிகமுள்ள இடங்கள் சுகாதாரப் பிரிவினால் அடையாளப்படுத்தப்பட்டு, உரிய மருந்துகள் விசிறப்பட வேண்டும். அத்துடன் குறித்த நோய்த்தாக்கங்கள் குறைவடைந்து செல்கின்றனவா என்பது குறித்து அடிக்கடி மதிப்பிட வேண்டும். இவை பற்றி மக்களுக்கும் உரிய விழிப்புணர்வை உண்டாக்குதல் அவசியம்.

★ மீள்சுழற்சிக்குரிய கழிவுகள் முறையாக அகற்றப்பட்டு, அவற்றைச் செயன்முறைக்குட்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். சாவச்சேரி, கல்லுண்டாய் பகுதிகளில் இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. ஆயினும் அந்த நடவடிக்கைகளின் விரைவுத் தன்மையும், விளைவும் போதாமையாகவே உள்ளன. எனவே இந்தத் திட்டத்தை இன்னும் மேம்படுத்த நிதியுதவியையும், தொழில்நுட்ப வசதிகளையும், நிபுணத்துவ அறிவையும் பெறவேண்டும்.

★ கழிவுப்பொருள்களிலிருந்து சேதனப்பசளை தயாரிப்பதன் மூலம் கழிவுகளின் அளவை குறைக்க முடியும். தற்போது காக்கைதீவில் சேதனப்பசளை தயாரிக்கப்பட்டு, ஒரு டிரக்டர் அரித்த பசளை 5000 ரூபாவாகவும், அரிக்காத பசளை 3000 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. இதற்கான கேள்வி அதிகமாக உள்ளபோதும் சேதனப்பசளை உற்பத்தி அதற்கேற்ற வகையில் அமையவில்லை. தொழிலாளர் பற்றாக்குறை, அரைக்கும் இயந்திரங்களின் போதாமை, நிறுவன உதவியின்மை, நிதிப்பற்றாக்குறை என்பனவே இதற்குக் காரணம். எனவே அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் உதவிகளை மேற்கொள்ளும் பட்சத்தில் அதிக பசளைகளை உற்பத்தி செய்வதுடன் வருவாயை பெறமுடியும். அத்துடன் கழிவுகளையும் கட்டுப்படுத்த முடியும்.

இத்தகைய நடவடிக்கைகளே கழிவகற்றலை ஒழுங்குமுறைப்படுத்துவதுடன், சூழலின் சுத்தத்தையும் நிரந்தரமாக்கும். எமது சூழலை மாசடையச் செய்யும் செயலானது எமது உடலில் ஓடும் இரத்தத்தில் விஷம் கலப்பதற்குச் சமனானது. இதனை அனைவரும் உணர வேண்டும். சுற்றுப்புறத் தூய்மையின் அவசியத்தை உதட்டளவில் மாத்திரம் ஒப்புவிக்காது, ஒவ்வொருவரும் உணர்வு பூர்வமாகவும் நடக்க வேண்டும். வீட்டைப்போல நாட்டையும் தூய்மையாக வைத்திருப்போம். ஆசியாவிலேயே 'சூழல் நலமான நாடு' எனும் பெருமையை எட்டுவோம். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்ளை போனதே கோயில் சொத்து

எஸ்.எம்.கோபாலரத்தினம்

கன்னாதிட்டிச் சந்தியிலிருந்து நேரே மேற்குத் திசையில் சென்றால் (கூப்பிடு தூரம் என்று பேச்சு வழக்கில் இருந்த சிறிய தூரம்) செட்டியார் சிவன் கோயில் என்றும், வண்ணார் பண்ணைச் சிவன் கோயில் என்றும் அழைக்கப்படும் வைத்தீஸ்வரன் கோயில் இருக்கிறது. சிவன் கோயிலிருந்து தெற்கே சில யார் தூரத்தில் கதிரேசன் என்று அழைக்கப்பெறும் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில், நகரத்தார் என்றழைக்கப்படும் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களால் அமைக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வந்தது. நாட்டுக்கோட்டை செட்டிமார் உலகில் எந்த நாட்டுக்குப் போனாலும், எந்த ஊருக்குப் போனாலும் கதிரேசன் கோயில் அமைத்து விடுவார்கள். இலங்கையில் கதிரேசன் கோயில்கள் எங்கிருந்தாலும் அங்கு நாட்டுக்கோட்டைச் செட்டிமார் இருந்திருக்கிறார்கள் என்று இப்போது சுலபமாகச் சொல்லிவிடலாம்.

யாழ். நகரில் சிவன் கோயிலிருந்து கதிரேசன் கோயிலுக்குச் செல்லும் சிறிய தூரத்துக்குள் தாமோதர விலாஸ், தில்லைப்பிள்ளை கிளப், உயர்ந்த படிக்கட்டுகளில் ஏறிச்செல்ல வேண்டிய பரமசாமிக் குருக்களின் பரமேஸ்வராக் கபே என்ற 'சுத்த பிராமணாள் காபிகிளப்' போன்ற ஹோட்டல்களிலிருந்து நெய் வாசனையும் பலகார வாசனையும் (கேசரி, போளி, மைசூர்பாகு, லட்டு, அல்வா, பால்கோவா) எனப் பல சேர்ந்து காங்கேசன்துறை வீதியில் மணம் பரப்பிக் கொண்டிருந்த காலம் ஒன்றிருந்தது. பரமேஸ்வராக் கபே மறைந்து பல்லாண்டுகளாகிவிட்டன. அந்த உயர்ந்த படிக்கட்டுக்கள் அந்த வீதியிலேயே இல்லை. சுத்த பிராமணாள் காபி கிளப்பும் இல்லை.

சில வருடங்களுக்கு முன் இதே வீதியில் சிவன் கோயிலுக்கு எதிர்த் திசையில் மலையாள முறிவு நெறிவு வைத்தியர் ஒருவர் 'பரீட்சித்து விலாஸ்' என்று ஒரு ஹோட்டலைத் தொடங்கினார். முறிவு நெறிவு



33 அந்த நாள் ஞாபகம்..

வைத்தியம் செய்த பின் நிமிர்ந்து நிற்க சக்தி தேவை யென்பதற்காக ஹோட்டலையும் அருகில் அமைத்தும் கொண்டாரோ தெரியாது. தாமோதர விலாஸும் தில்லைப்பிள்ளை கிளப்பும் அக் காலத்திலேயே பெயர் பெற்று விளங்கியவை. சூரிய விலாஸ் என்ற ஹோட்டல் வடக்கு வீதியைப் பார்த்தபடி இருந்தது.

சாப்பாட்டுக்கு மட்டும் இந்தத் தெரு பெயர் பெற்றது என நினைத்து விடக்கூடாது. ஸ்ரீ சுப்பிரமணியம் புத்தகசாலை, ஸ்ரீலங்கா புத்தகசாலை, ஸ்ரீகாந்தா அச்சகமும் புத்தகசாலையும், இப்பொழுது ஸ்ரீ காந்தா புத்தகசாலை காந்தளகம் என்று பெயர் பெற்றுவிட்டது. காந்தளகம் அதிபராக இருந்த கணபதிப்பிள்ளை மாஸ்ரர் அமைதியான அடக்கமான அறிஞர். இவரது மகன் மறவன்புலவு சச்சிதானந்தன் தமிழ் நாட்டின் தலைநகர் சென்னையில் அண்ணாசாலையில் 'காந்தளகம்' என்ற பெயரில் பதிப்பகம், அச்சகம், நூல் விற்பனை நிலையம் என்பவற்றை வைத்திருக்கிறார். செசல்ஸ் தீவில் மீன்வள ஆராய்ச்சி மையத்தில் பணியாற்றிய சுத்தசைவர். ஆழ்ந்த ஞானமுற்ற மிக எளிமையான இனியவர். விடுதலை விரும்பி. தமிழ் நாட்டில் பழம்பெரும் அரசியல் தலைவர்களும் இன்றைய அரசியல் தலைவர்களும் இவரை நன்கறிவர். சில தினங்களுக்கு முன்னர் தான் இவர் எழுபத்தி ஓராவது வயதில் கால் பதித்தார். இவர் நூலாசிரியரும் கூட.

ஸ்ரீ காந்தா அச்சகத்துக்கு எதிர்த் திசையில் ஸ்ரீ லங்கா புத்தகசாலையும் அச்சகமும் இருக்கிறது இதன் அருகே உள்ள ஒழுங்கையில் பொம்மினிக் ஜீவாவின் 'மல்லிகை' அலுவலகம் இருந்தது. இப்பொழுது மல்லிகை கொழும்பு கதிரேசன் வீதியிலிருந்து மணம் வீசுகிறது. இப்பொழுது இதே ஒழுங்கையிலிருந்து தினப் பத்திரிகையொன்றும் வெளிவந்து கொண்டிருக்கிறது. ராஜா திரையரங்கில் படம் பார்த்த பின் துவிச்சக்கர வண்டிகளில் வந்தவர்கள் இந்த ஒழுங்கை வழியாகத்தான் தமது வண்டிகளை எடுத்துக் கொண்டு வெளியேறுவார்கள். இந்த ஒழுங்கையில் அழகர்சாமியின் சாராயக் கடையும் சாப்பாட்டுக்கடையும் பிரசித்தம்.

கதிரேசன் கோயிலுக்கு எதிரே முன்பு பி.கு. நாவன்னா என்ற வட்டிக்கடையும் வேறு சில வட்டிக் கடைகளும் இருந்தன. நாட்டுக்கோட்டைச் செட்டிமாரின் புடைவைக் கடைகள் சிலவும் இருந்தன. சீ.அ.சுந்தையா செட்டியாரின் புடைவைக் கடையும் இங்கு இருந்தது. இவர் நண்பன் ஸ்ரீ ரங்கனின் மாமா - மனைவியின் தந்தை.

இடையில் இதே வீதியில் 'தமிழ்ப்பண்ணை' என்ற கடையில் பத்திரிகைகள், கல்கி, ஆனந்த விகடன், குமுதம் போன்ற சஞ்சிகைகளும் திரைக்கு வந்து ஓடிக் கொண்டிருக்கிற சினிமாப்பாட்டு புத்தகங்களும் விற்பனை செய்யப்பட்டன. தமிழ்ப்பண்ணையை நடத்தியவரின் பெயர் ராமசாமி என்று நினைவு.

இதே போல் கச்சேரியடியில் தம்பித்துரை அன் சன்ஸ் புத்தகக்கடை, பத்திரிகைகள், சஞ்சிகைகள் விற்பனை செய்யப்பட்டன. சிவன் கோயிலின் வடக்கு வீதிக்கு காங்கேசன் துறை வீதியிருந்து வந்துதிரும்பும் மூலையில் எஸ். எஸ். சண்முகநாதன் அன் சன் புத்தக கடை, பள்ளிக்கூடப் புத்தகங்கள், உபகரணங்கள் விற்பனைக்குப் பெயர் பெற்று விளங்கியது. இதே வீதியிலிருந்து கஸ்தூரியார் வீதிக்குச் செல்லும் உதயன் ஒழுங்கைக்கு நேர் எதிரே பழைய புத்தகங்கள் - பெரும்பாலும் பாடப் புத்தகங்கள் - வாங்கி விற்கும் தியாகராஜா புத்தகசாலை ஒன்று இருந்தது. என்னோடு படித்த தியாகராஜாவின் தகப்பன் செல்லையாவின் புத்தகக் கடை இது.

கதிரேசன் கோயிலிருந்து தெற்கே சென்றால் சிறிது தூரத்தில் ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் வீதியுடன் காங்கேசன்துறை வீதி சந்திக்கும் சந்திக்கு முட்டாசுக்கடைச் சந்தி என்று பெயர்.

ஆட்சிக்கு வந்த அரசுகள் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளும் சில தீர்மானங்களும், கொண்டு வரும் சட்டங்களும் இந்திய வம்சாவளியினர் இலங்கையில் தொழில் புரிந்து வந்த இந்தியர்கள், இலங்கையில் வணிகத்தில் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்தவர்களை இலங்கையிலிருந்து வெளியேற்று வதாகவே அமைந்தன. இந்தியர்களிலும் குறிப்பாகத் தமிழர்களை வெளியேற்றுவதே குறிக்கோளாக இருந்தது. இந்திய வம்சாவளியினரான மலையகத் தமிழர்களின் குடியுரிமை, வாக்குரிமைகளைப் பறித்தது தான் இலங்கை சுதந்திரமடைந்த பின் இலங்கை அரசு செய்த முதல் வேலை.

"இன்று மலையகத் தமிழரின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. நாளை இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் பறிக்கப்படும்." என்று தந்தை செல்வா தீர்க்க தரிசமாகச் சொன்னது இதைத்தான்.

இந்திய வம்சாவளியினரான மலையகத் தமிழர்களின் குடியுரிமை, வாக்குரிமைகளைப் பறித்தது தான் இலங்கை சுதந்திரமடைந்த பின் இலங்கை அரசு செய்த முதல் வேலை. "இன்று மலையகத் தமிழரின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. நாளை இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் பறிக்கப்படும்." என்று தந்தை செல்வா தீர்க்க தரிசமாகச் சொன்னது இதைத்தான்.

அரசின் சட்டங்கள் காரணமாக, வணிகத்தில் ஈடுபட்டிருந்த இந்தியர்கள் தாய்நாடு திரும்பினர். கன்னாதிட்டியில் பெரும் நகைக்கடைகள் நடத்திப் பெரும் பெயர் பெற்றிருந்த இந்தியாவின் தென் கரையோரத்திலுள்ள காயல் பட்டினத்தைச் சேர்ந்த இஸ்லாமியர்களும், தமிழ் நாட்டில் காரைக்குடியைச் சேர்ந்த நகரத்தார் என்ற நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களும், எண்ணெய் வணிகத்தில் ஈடுபட்டிருந்த வாணியச் செட்டிமார்களும் தாய்நாடு திரும்பினர்.

யாழ். நகரில் ஸ்ரீ கதிரேசன் கோயிலை நிறுவி நிர்வகித்து வந்த நாட்டுக்கோட்டைச் செட்டிமாரும் தங்கள் வட்டிக்கடைத் தொழிலை முடித்துக் கொண்டு நாடு திரும்பினர். யாழ். நகரைச் சேர்ந்த சொத்து வருமானமும், தொழில் வர்த்தக வருமானமும் உள்ள மக்களின் நம்பிக்கையும் செல்வாக்கையும் பெற்ற சிலர் கதிரேசன் கோயில் பரிபாலகர்களாகத் தெரிவு செய்யப் பெற்றனர். இவர்கள் பயபக்தியுடையவர்கள். கதிரேசன் கோயில் இவர்களின் நிர்வாகத்தில் தொடர்ந்து சிறப்பாக நடந்து வருகிறது. மூலவராக கதிர்வேல் தான் இருந்தது. புதிய நிர்வாகம் செந்தில்குமரன் போல் ஒரு விக்கிரகம் மூலவராக நின்று இன்றுள்ள கதிர் வேலைத் தாங்கி நிற்கக்கூடிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று தீர்மானித்தது. அறங்காவலர் சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பெற்ற பயபக்தியும் நேர்மையும் சொத்து வருமானமும் வடக்கிலும் கிழக்கிலும் பல திரையரங்குகளின் உரிமையாளரும் யாழ். மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான எஸ்.பி.ஆர். என்றழைக்கப்படும் தியாகராஜா, செந்தில் குமரனைப் போலவே ஒரு முருகனைக் கொண்டு வந்தார். யாழ்.நகரில் கதிரேசன் கோயிலில் இந்த முருகனே இன்று கதிர்வேல் தாங்கிநின்று அருள் பாலித்து வருகின்றார். நகரத்தார் என்றழைக்கப்பட்ட கோயில் நிர்வாகிகள் நாட்டை விட்டு வெளியேறியபோது இரும்புப் பெட்டியைப் பற்றித் தகவல் சொல்லாமல் போனார்களோ தெரியாது. ஆலய புதிய நிர்வாக சபை நீண்ட நாள்களின் பின்னரே அந்த இரும்புப் பெட்டியை கவனித்தது. அதனுள் பெறுமதி வாய்ந்த ஆபரணங்கள், சாதனங்கள் இருந்ததாம். இவற்றை பாதுகாப்பதற்காக நம்பிக்கைக்குரிய வங்கியில் இவை வைக்கப்பட்டன. ஆனால் ஆயுதப் போராட்ட காலத்தில் ஆயுதம் தாங்கிய குழுவொன்று வங்கியைக் கொள்ளையடித்தது. கதிரேசன் கோயில் சொத்தும் கொள்ளை போயிற்று!

(நினைவுகள் நீளும்...)

## உறவுகளே உதவுங்கள்

எங்கள் வாழ்விலும்
ஏற்றம் வேண்டும் - உங்கள்
பார்வை ஒன்றே போதும்
பலர் வாழ்வு பசுமையாகும்

வன்னி வரப்புகளுக்கு
வாழ்வு கொடுங்கள் - உங்கள்
எண்ணம் ஒன்றே போதும்
விளையும் இங்கு விண்ணகம் வரை

பால்தரும் பசுக்கள் வாங்க
பாங்குடன் உதவுங்கள் - உம்மால்
பலர் வீட்டுப் பிள்ளைகளின்
பசி போகும் இங்கு

கழிப்பறை ஒன்று
[illegible]
[illegible]
காலையில் அடிக்கல்லு

முன்பள்ளிகள் வாழ்வில்
முன்னேற்றம் வேண்டும் - உங்கள்
நேசக் கரம் பட்டால் போதும்
போசாக்கு தினம் தினம் இங்கு

அழிந்து போனது
அன்றாடங்கள் எத்தனை - எமக்கு
அடுக்கு மாடிகள் வேண்டாம்
ஆனந்த இல்லம் ஒன்றே போதும்

கைத்தொழில் ஒன்றால்
கவலை நீக்கலாம் - உங்கள்
கனிவான பார்வை போதும்
கரைந்திடும் எம் கருமேகங்கள்

நல்ல தண்ணீருக்கு
நாளும் அலைச்சல் - உங்கள்
நல்ல எண்ணம் போதும்
நடுச் சந்தியில் நன்னீர்க் குழாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் ஐயாமாருக்கு.....



“ ஜனாதிபதியின் ஆலோசகர்களாக வலம்வரும் இந்து மத குருக்கள்மாரும், பிரமுகர்களும் ஜனாதிபதிக்கு இத் தீபத்திருநாள் பற்றி விளக்கிக் கூறியிருக்க வேண்டும். இதனைத் தெளிவாகத் தெரிவித்திருந்தால் “தேசிய ஒருமைப்பாட்டுக்கு” இந்த ஒளிவழிகாட்டும் என்று வாழ்த்துச்செய்தி அனுப்பியிருப்பார். அலரிமாளிகையிலும் குருக்கள்மாரின் ஆலோசனையைக் கேட்டு சொர்க்கப்பனையும் கொளுத்தியிருப்பார். இளைஞர்களின் கைதுகளும் தாக்குதல்களும் நடந்திரா!

■ எஸ்.எம்.ஜி

எங்கள் ஐயாமாருக்கு அதாவது எங்கள் இந்து மதகுருக்கள் அல்லது மதத் தலைவர்களுக்கு சமூக நலனில் அக்கறையிருக்குமாயின் இப்பொழுது மீண்டும் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக மாணவர்களும் தமிழ் இளைஞர்களும் கைது செய்யப்படவும் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை என்ற பெயரில் சித்திரவதைக்குள்ளாக வேண்டியும் ஏற்பட்டிருக்காது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டிருக்கும் பல நூறு பேர்களில் எங்கள் இந்து மத குருக்கள்மாரும் இருக்கின்றனர். சைவ சமயக் குருக்கள்மார் மட்டுமல்ல சைவசமயப் பிரமுகர்களும் கூட ஆலோசகர்களாக இருக்கின்றனர்.

நவம்பர் 27ஆம் திகதி கார்த்திகைத் தீபம் அன்றும் மறுநாளும் மட்டுமல்ல சர்வாலய தீபம், குமாராலய தீபம், விஷ்ணுவாலய தீபம் என இரண்டு மூன்று தினங்களுக்கு இந்துக்களின் வீடுகளிலும், வீடுகளின் வாசல்களிலும் தீபம் ஏற்றுவதுடன் ஆலயங்களிலும் தீபம் ஏற்றுவார்கள். ஆலயங்களின் முன்றிலில் பனை ஓலை, தென்னை ஓலைகள் கொண்டு மலை (வடிவில்) போல் அமைத்து தீமூட்டி எரிப்பார்கள். ஆலயங்களில் பூசைகள் நடைபெறும். இப்படி எரிப்பதை சொர்க்கப்பனை என்பார்கள். இவ்வருடமும் கார்த்திகைத் தீபம் வந்தது. நவம்பர் 27ஆம் திகதி கார்த்திகைத் தீபத்துடன் மாவீரர் நாளும் சேர்ந்தே வந்தது?

ஜனாதிபதியின் ஆலோசகர்களாக வலம்வரும் இந்து மத குருக்கள்மாரும், பிரமுகர்களும் ஜனாதிபதிக்கு இத் தீபத்திருநாள் பற்றி விளக்கிக் கூறியிருக்க வேண்டும். இதனைத் தெளிவாகத் தெரிவித்திருந்தால் “தேசிய ஒருமைப்பாட்டுக்கு” இந்த ஒளிவழிகாட்டும் என்று வாழ்த்துச்செய்தி அனுப்பியிருப்பார். அலரிமாளிகையிலும் குருக்கள்மாரின் ஆலோசனையைக் கேட்டு சொர்க்கப்பனையும் கொளுத்தியிருப்பார். இளைஞர்களின் கைதுகளும் தாக்குதல்களும் நடந்திரா!

எங்கள் இந்து மத- சைவ சமய குருக்கள்மார் ஆலோசனை சொல்லியிருப்பார்களா? சொல்லும் ஆலோசனைகளைக் கேட்பதும் கொடுப்பதை வாங்குவதற்குத் தயாராக இருப்பதும் தானே பழக்கம்!

யாழ். பல்கலைக்கழகத்தில் தீபத்திருநாளான கார்த்திகைத்திருநாளில் மாணவர்கள் மீது நடந்த தாக்குதல்கள் பற்றியோ, கைது செய்யப்பட்டமை பற்றியோ இந்து மதகுருமார்களோ அவர்களின் அமைப்போ கண்டனம் தெரிவித்தார்களா அல்லது கவலையாவது தெரிவித்தார்களா?

1974ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலை வளாகம் தொடங்கி வைக்கப்பட்டது. இதனை ஆரம்பித்து வைப்பதற்காக அன்று பிரதமமந்திரியாக பதவி வகித்த திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா யாழ்ப்பாணம் வந்திருந்தார். பழைய பரமேஸ்வராக் கல்லூரி (இன்றைய பல்கலைக்கழகம்) மைதானத்துக்கு முன்பாக மேடை அமைக்கப்பட்டிருந்தது. மேடைக்கு எதிரே இந்த வைபவத்தில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டிருந்தவர்கள் அமர்ந்திருந்தனர். மேடையின் ஒரு பக்கத்தின் ஓரமாகச் சைவக் குருமார்கள், கிறிஸ்தவ மத குருமார்கள், முஸ்லிம்மௌலவி, புத்த பிக்குகள் ஆசனங்களில் அமர்ந்திருந்தனர். பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் சகிதம் யாழ். பல்கலைக்கழகத் தலைவர் பேராசிரியர் கலாநிதி கைலாசபதி, பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அம்மையாரையும் அழைத்துக்கொண்டு மிக மெதுவாக மேடையை நோக்கி பவனியாக வந்து கொண்டிருந்தார்கள். மேடையை நெருங்குவதற்கு முன்பாகவே மேடையில் முதலில் அமர்ந்திருந்த இந்து (சைவ) குருக்கள்மார் எழுந்து நின்றார்கள். இவர்கள் எழுந்து நின்றதும் மற்றைய மதத்தலைவர்களும் எழுந்து நின்றனர். புத்த பிக்குகளும் எழுந்து நின்றனர். இதனைக் கவனித்த சமய விவகார அமைச்சர் (சோமவீர சந்திரசிறி என்றுதான் நினைவு) விரைந்து வந்து பிக்குமாரைப் பார்த்தபடி எல்லோரையும் அமரும்படி அவசர அவசரமாக அமரச்செய்தார்.

புத்தபிக்குமார் முன் காலில் விழுந்து வணங்குவதுதான் அவர்கள் பழக்கம். பிக்குமாருக்குத் தானம் கொடுத்து காலில் விழுந்து வணங்க வேண்டும். தானம் கொடுக்கும் முடிச்சு அவர்கள் முன்வைக்கப்படும். அதையும் கூட பிக்குமார் கைநீட்டி வாங்கியதாகக் காணோம். எங்கள் ஐயர்மார்கள் பற்றிச் சொல்லித் தெரியவைக்க நான் விரும்பவில்லை! ஆனால் இலங்கைப் புத்தபிக்குமார் உடல்பருத்துத் தொந்தியும் சிலருக்கு வருவதால் தானம் வழங்குவதில் பரிசீலனை செய்யவேண்டியிருப்பதாக ஒரு செய்தி சமீபத்தில் பார்த்ததாக ஞாபகம்.

தமிழ்ச் சமூகத்திற்கு பாதிப்பு ஏற்படும் சமயங்களில் கிறிஸ்தவ மதகுருமார் குரல் கொடுத்த செயற்பாடுகளிலும் ஈடுபட்ட பின்னராவது சைவகுருமார் குரல்கொடுக்க முன்வரக்கூடாதா? கார்த்திகைத் தீபத் திருநாளையொட்டி யாழ்ப்பாணத்தில் நடந்த தாக்குதல், கைதுகள் சம்பந்தமாக அகில இலங்கை இந்துமாமன்றம் கண்டனமும் கவலையும் தெரிவித்திருந்தது சற்றே ஆறுதலளிக்கிறது!

நாடுமுழுவதையும் பிரதிநிதித்துவப் படக்கூடிய விதத்தில் இந்து மதகுருமார்களையும் அறங்காவலர்களையும் அலரிமாளிகைக்கு அழைத்து ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ உரையாற்றும் புகைப்படம் தமிழ்ப் பத்திரிகையில் பார்த்தேன். அவர் உரையைக் கேட்பதற்காகத்தானே இவர்கள் அலரிமாளிகைக்கு அழைக்கப்பட்டார்கள். இதில் சொல்வதற்கு என்ன இருக்கிறது. ஏற்கனவே கண்டி தலதா மாளிகைக்கு சென்ற ஜனாதிபதி மல்வத்தை, அஸ்கிரிய பீட மகாநாயக்கர்களையும் தரிசித்து ஆசிபெற்று வந்திருக்கிறார். கொழும்பில் கங்காராம விகாரைக்கும் தரிசித்து விகாராதிபதியிடம் ஆசி பெற்றிருக்கிறார். பிரதம நீதியரசர் திருமதி ஷிராணி பண்டாரநாயக்கவும் கண்டிக்குச் சென்று தரிசித்து திரும்பியிருக்கிறார். கடவுள்தான் இனி வழிகாட்ட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இம்' என்றால் சிறைவாசம் 'ஏன்' என்றால் வனவாசம்

■ சந்திரசேகர ஆஷாத்



ஞாயிறு காரம்

'இம்' என்றால் சிறைவாசம். 'ஏன்' என்றால் வனவாசம் என்பது ருஷ்ய நாட்டில் ஜார் மன்னன் நடத்திய கொடுங்கோல் ஆட்சி கண்டு கொதித்தெழுந்த மகாகவி சுப்பிரமணிய பாரதி எழுப்பிய அனல் கக்கும் கவிதை வரிகள். மனித சுதந்திரத்தின் குரல்வளையை நெரித்து குமுறி இடித்த கொடியவர்களின் காட்டாட்சி பாரதியை மட்டுமல்ல ருஷ்யத் தொழிலாளி வர்க்கத்தையே திரண்டெழ வைத்து மாபெரும் புரட்சியை வெடிக்க வைத்து ஜார் மன்னனையே அரியணையிலிருந்து தூக்கியெறியும் நிலையை உருவாக்கியதுடன் ஒரு புதிய சுதந்திர ஆட்சியையும் தோற்றுவித்தது.

இலங்கையிலும் தமிழ், முஸ்லிம் மக்கள் மீது இம் என்றால் சிறைவாசம் ஏன் என்றால் வனவாசம் என்ற வகையிலான ஒரு காட்டாட்சி கட்டவிழ்த்து விடப்பட்டதை அண்மைக்கால சம்பவங்கள் வெளிப்படுத்தி வருகின்றன. கடந்த மாவீரர் தினத்தன்று பொலிஸாரும் இராணுவத்தினரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குள் புகுந்து சோதனை என்ற பேரில் வன்முறைகளில் ஈடுபட்டனர். அடுத்தநாள் அதைக் கண்டித்து மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது பொலிஸாரால் அவர்கள் மீது தடியடிப் பிரயோகம் நடத்தப்பட்டது. அதில் பல மாணவர்கள் படுகாயமடைந்தனர்.

அந்தச் சம்பவத்தை அடுத்து சில மாணவர்கள் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களில் மூவர் புனர்வாழ்வு என்ற பேரில் வெலிகந்தை இராணுவத் தடுப்பு முகாமுக்கு அனுப்பப்பட்டு விட்டனர். அவர்கள் விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டது. அவர்களை விடுதலை செய்யக் கோரி பல்கலைக்கழக மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்துப் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் நாளொன்றுக்கு 3 மாணவியர் வீதம், வவுனியாவுக்கு வரவழைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்படி மாணவர்கள் மீது தொடர்ச்சியான பயங்களும் கட்டவிழ்த்து விடப்படுவதற்கான ஒரே ஒரு காரணம் அவர்கள் பல்கலைக்கழகத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியமை மட்டும்தான். போர்க் களத்தில் போர்க் களத்தில் போராடி வீழ்ந்த வீரர்களுக்கு உயர் மதிப்பளித்து போற்றி வழிபடுவது என்பது உலகம் முழுவதுமே புனிதமாகப் பேணப்பட்டு வரும் ஒரு மரபு. இலங்கையின் ஆட்சியாளர்களைப் பொறுத்தவரையில் தமிழர்களுக்கு அந்த உரிமையைக் கூட வழங்கத் தயாரில்லை. அது மட்டுமன்றி அப்படி அஞ்சலி செலுத்துவது ஒரு பாரதூரமான குற்றமாகவே அவர்களால் கொள்ளப்படுகிறது.

இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூட ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசனுக்குப் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்த போது நாட்டின் ஆட்சியைக் கவிழ்க்கப் புரட்சி செய்த ஜே.வி.பியின் மரணித்த போராளிகளுக்கு அஞ்சலி செலுத்த உரிமை உண்டெனவும் நாட்டைப் பிரிக்கப் போராடிய விடுதலைப் புலிகளை அஞ்சலிக்க அனுமதிக்க முடியாதெனவும் தெரிவித்துள்ளார். முழுநாட்டையும் பிடிக்க முயன்றவர்கள் போற்றுதலுக்குரியவர்கள் என்பதும் நாட்டில் தாங்கள் வாழும் பகுதிக்கு மட்டும் விடுதலை கோரியவர்கள் பயங்கரவாதிகள் என்பதும் அவரின் வியாக்கியானம்.

ஆனால் அவர் அந்தக் கூற்றின் மூலம் சொல்லாமலே வெளிப்படுத்திய ஒரு செய்தியைத் தமிழ் மக்கள் நன்றாகப் புரிந்து கொண்டுள்ளனர். அதாவது இந்த நாட்டில் சிங்களவருக்கு உள்ள உரிமை தமிழ் மக்களுக்கு இல்லை என்பதுதான் அது.

அதேவேளையில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் வடபகுதியின் இராணுவக் கட்டளைத் தளபதியைச் சந்தித்து தடுப்பிலுள்ள மாணவர்களை விடுவிக்கும்படி கோரியபோது அவர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்ட பின்பே விடுவிக்கப்படுவர் எனவும் அவர்களை விடுவிக்கும்படி மாணவர்கள் போராட்டம் நடத்துவதில் எவ்வித பயனுமில்லை எனவும் தெரிவித்திருந்தார். அதுமட்டுமன்றி அவர்களை வகுப்புகளுக்குச் செல்லுமாறு ஆலோசனை சொல்லும்படி பெற்றோரிடமும் விரிவுரையாளர்களிடமும் வலியுறுத்தியிருந்தார். இவற்றிலிருந்து இலங்கையின் ஆட்சியாளர்களும் படையினரும் தமிழ் மக்களுக்கும் தமிழ் மக்களின் உணர்வுகளுக்கும் எத்தகைய மதிப்பளிக்கிறார்கள் என்பதையும் எவ்வாறு ஒரு கொடிய அடக்கு முறையின் கீழ் தமிழ் மக்களை கையாள்கின்றனர் என்பதையும் நாம் புரிந்துகொள்ள முடியும்.

ஆனால் மாவீரர் நாளையொட்டி ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கைது வேட்டை மாணவர் மட்டத்துடன் நின்றுவிடவில்லை. இது மேலும் மேலும் விரிவடைந்து சிறுவர்கள், இளைஞர்கள், பெண்கள், முதியோர் என எல்லா மட்டத்தினர் மேலும் பாய ஆரம்பித்துள்ளது. இதுவரை யாழ்.குடாநாட்டில் 45 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினராலேயே கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் ஆணைக்குழு உறுதி செய்துள்ளது.

இது தொடர்பாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாத் ஜெயக்கொடி கருத்து வெளியிடும் போது இவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகள் அமைப்பின் தீவிர உறுப்பினர்கள் எனவும் அவர்கள் தலைமறைவாக இதுவரை காலமும் இருந்து வந்தவர்கள் எனவும் கூறியுள்ளார். மேலும் இவர்களைப் பற்றிப் புலனாய்வுப் பிரிவினர் பல மாதங்களாகத் தகவல் சேகரித்ததன் அடிப்படையில் இவர்கள் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் என்பது உறுதி செய்யப்பட்ட பின்னரே கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் அவர்களிடம் தற்சமயம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் சிலர் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர் எனவும் ஏனையோர் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படுவர் எனவும் அவர் கூறியுள்ளார்.

அவரின் கூற்றிலிருந்து இவர்களில் எவரும் விடுதலை செய்யப்படமாட்டார்கள் என்ற விடயம் தெளிவாகிறது. இப்படியான ஒரு நிலையில் இங்கு ஒரு முக்கியமான கேள்வியை எழுப்ப வேண்டியுள்ளது. இவர்கள் தொடர்பாகப் பல மாதங்களாக புலனாய்வுப் பிரிவினரால் தகவல் திரட்டப்பட்டிருந்தால் ஏன் அந்தந்த நேரங்களில் அவர்கள் கைதுசெய்யப்படாமல் பல்கலைக்கழகப் பிரச்சினை இடம்பெறும்போது கைது செய்யப்படுகின்றனர்? இந்த 45 பேரும் ஏன் சுதந்திரமாக உலவ விடப்பட்டனர்? இவர்கள் தலைமறைவாக இருந்திருந்தால் ஏன் இப்போது மட்டும் வெளிவந்தனர்?

இப்படியான கேள்விகளுக்கு எவரும் பதிலளிக்கமாட்டார்கள். ஏனெனில் அவர்களிடம் இவற்றுக்கான பதில் இல்லை. இப்படியான நிலையில் ஏதோ ஒரு உள்நோக்கத்தை வைத்துக் கொண்டு பல்கலைக்கழகச் சம்பவங்களைச் சாட்டாக வைத்து ஒரு பெரும் சதி வலை பின்னப்படுவதாகவே கருத வேண்டியுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கை அரசு பலவிதமான நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. குறிப்பாக நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவது தொடர்பாகப் பலவிதமான கேள்விகள் எழுப்பப்பட்டு சிக்கல்களை ஏற்படுத்தும். அதில் வடக்கு, கிழக்கில் இராணுவப் பிரசன்னத்தைக் குறைப்பதும் முக்கியமான ஒன்றாகும். ஆனால் இலங்கை அரசு தமிழர் தாயகப் பகுதிகளில் படைக்குறைப்பை மேற்கொள்ளத் தயாரில்லை.

சிங்களக் குடியேற்றங்களை நிறுவி விரிவுபடுத்துவது, தமிழ் மக்களின் அபகரிக்கப்பட்ட நிலங்களைத் தொடர்ந்தும் வைத்திருப்பது, ஒரு இராணுவக் கட்டுப்பாட்டை அங்கும் நிலைநிறுத்துவது போன்ற விடயங்களைத் தொடரவும் இன ஒடுக்குமுறையைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படவும் இங்கு பெருந்தொகையான படையினர் நிலைநிறுத்தப்பட வேண்டும்.

அப்படியாக இராணுவத்தினரை இங்கு தொடர்ந்து நிலைகொள்ள வைக்க ஒரு காரணம் தேவை. அந்த நோக்கத்தை நிறைவேற்றவே மீண்டும் புலிகள் நடவடிக்கையில் இறங்கிவிட்டனர் என்ற தோற்றப்பாடு இப்படியான கைதுகள் மூலம் உருவாக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இன்னொரு புறம் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்த காணிகளை அபகரித்து இராணுவ முகாம்களை நிறுவுதல், ஊடகவியலாளர்கள் மீதும் ஊடகங்கள் மீதும் மேற்கொள்ளும் அடக்குமுறைகள் மக்களின் இயல்பு வாழ்வுக்கு குழப்பம் விளைவித்தல், ஒவ்வொரு விடயங்களிலுமான இராணுவத் தலையீடு என்பவற்றுக்கு எதிராக தங்கள் ஜனநாயக வழியிலான போராட்டங்களில் இறங்க ஆரம்பித்துவிட்டனர். இது சர்வதேச ரீதியில் இலங்கை அரசின் இனஒடுக்குமுறையை அம்பலப்படுத்துவதுடன் மனித உரிமைகள் பேரவையிலும் நெருக்கடிகளை உருவாக்கும்.

எனவே எந்நேரமும் எவரும் கைது செய்யப்படலாம் என்ற சூழ்நிலையை உருவாக்குவதன் மூலம் மக்கள் அச்சப்பட்டு போராட்டங்களில் கலந்து கொள்ளாத நிலை உருவாகும் என அரசு எதிர்பார்க்கின்றது. எனவே ஒரு புலிப்பூச்சாண்டி மாயையை உருவாக்கி அதன் அடிப்படையில் இம் என்றால் சிறைவாசம். ஏனென்றால் வனவாசம் என்ற பயங்கர நிலைமையைக் கட்டவிழ்த்துவிட்டு அரசு ஒரு வலிந்த அமைதித் தோற்றத்தை ஏற்படுத்த முனைகிறது. அதன் மூலம் முகம் கொடுக்க வேண்டிய தேசிய, சர்வதேசிய நெருக்கடிகளைச் சமாளிக்க முடியும் என்ற அரசின் நம்பிக்கை நிச்சயம் தோல்வியடையும் என்பதே வரலாற்று அனுபவமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கும் இங்கும்...

(சூரியகாந்தி முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோசமான கூட்டுப்பாலியல் குற்றங்கள் தாராளமாக நிகழ்ந்தே இருக்கின்றன. ஆனால் அப்போதெல்லாம் எந்தவொரு அமைப்பும் இப்படி மிகப்பெருமெடுப்பிலான எதிர்ப்பைச் செய்யவில்லை. ஊடகங்களின் பரபரப்புக்கும், பிரபல்யத்துக்கும் தீனி போட்டுவிட்டு, சத்தம் சந்தடியில்லாமல் அந்தக் குற்றங்கள் மறைந்து போவதுதான் இயல்பாக இருக்கிறது. அப்படியானால் இந்த மருத்துவ மாணவியின் மீதான வன்புணர்வால் மட்டும் எப்படி இந்த மகளிர், பொது அமைப்புக்களுக்கு அவற்றின் ரோஷ நரம்புகளின் இருப்பை நினைவூட்ட முடிந்தது?





ஏனெனில் இந்த மாணவி செல்வந்த உயர்வர்க்கத்தை சேர்ந்தவள். சம்பவம் நடைபெற்ற இடம் தலைநகர். டில்லியின் புகழ்பெற்ற மருத்துவக்கல்லூரியின் மாணவி. ஆகவே பணபலமும், சமூக அந்தஸ்தும் இருந்தால் மாத்திரமே நீதிகேட்கும் அமைப்புகளுக்கு விழிப்பு வரும்.

இந்த மாணவி மீதான வன்புணர்வு குறித்து எழுகின்ற இன்னொரு கதையாடலையும் புறந்தள்ள முடியாதிருக்கிறது.

பெண்ணுரிமை, சுதந்திரம் என்று சொல்லிக்கொண்டு, பாதுகாப்பற்ற பகுதிகளில் தனியனாக, நள்ளிரவு வேளையில் பெண்கள் நடமாடாதிருந்தால் இது போன்ற குற்றங்களை தவிர்க்கலாமே என்பது தான் அந்த வாதம். இந்த வாதத்திலும் சில ஆதிக்கச்சிந்தனைகள் இழையோடினாலும், ஒரு நியாயம் இருக்கவே செய்கிறது. இப்படி அந்தக் கருத்துக்கு சாதகமாக சொல்வதன் கருத்திடுவதன் மூலம் இந்தப்பத்தியாளரை இங்குள்ள பெண்ணியவாதிகள் ஆணாதிக்கவாதி என்று முத்திரை குத்தவும் கூடும். வலியச் சென்று வம்பை விலைக்கு வாங்க வேண்டாமே என்பது தான் பலரின் விருப்பு.

★ ★ ★

இந்தியாவில் ஒரு மாணவி, கூட்டாக வன்புணர்வுக்குள்ளாகியதற்கு இந்தியாவும், உலகும் பொங்கியெழுந்திருக்கின்றன. நல்ல விடயம்தான். ஆனால் செம்மணியில் கிருஷாந்தி, வேலணையில் சாரதாம்பாள், முள்ளிவாய்க்காலில் இசைப்பிரியா முதலான பெயர் தெரியாத ஆயிரக் கணக்கான பெண்கள் கூட்டுப்பாலியல் வெறியர்களால் சிதைக்கப்பட்டார்கள். இதோ! இந்தப் பத்தி உருவாகிக் கொண்டிருக்கும் கணத்தில் கூட மண்டைதீவில் 4 வயதுப்பாலகி ஒருத்தி காமப்பேயொன்றால் காவு கொள்ளப்பட்டிருக்கிறாள். ஏதுமே அறியாத பச்சிளம் தளிர் ஒன்றை காமப்பொருளாக பார்க்கும் பேய்கள் இங்கு உருவாகத்தொடங்கியுள்ளன. இனிவரும் காலங்களில் கருவில் இருக்கும் பெண் சிசுக்களைக் கூட இது போன்ற காமப்பேய்கள் தம் பசிக்கு இரையாக்கிவிடக்கூடும். இந்தியாவில் நடைபெற்றதை விடவும் பன்மடங்கு துயரை ஏற்படுத்தக்கூடிய பாலியல் குற்றங்கள் தமிழர் பகுதிகளில் மலிந்துகொண்டே போகின்றன.



பேருந்தில் வைத்து வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு பின்னர் பலியான மருத்துவ மாணவி

இந்தியாவில் இருப்பதைப் போலவே இங்கும் ஏராளமான மகளிர் நலன் பேணுகிறோம் என்ற பெயரில் நிறைய அமைப்புக்கள் இருக்கின்றன. ஆனால் மகளிர் தின விழாக்கள், கருத்தரங்குகள் என்ற ஆக்கபூர்வமான" விடயங்களோடு தம்முடைய செயற்பாடுகளில் திருப்தி அடைந்துவிடுகின்றன. காரைநகரில் மனநலம் பாதிப்புற்ற பெண் மீதான வன்புணர்வின் போது மாத்திரமே இந்த மகளிர் அமைப்புகள் ஓரளவு தம் உறங்குநிலையை மறந்து செயலில் இறங்கியிருந்தன.

இப்போது மண்டைதீவில் காமப்பசிக்கு இரையான 4 வயது சிறுமியின் மரணத்துக்கு நியாயம் கேட்க இந்த அமைப்புகள் முன்வருமா?

வெறுமனே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதால் மாத்திரம் பறிக்கப்பட்ட சிறுமியின் உயிர் திரும்பக் கிடைக்குமா? என்று சிலர் கேட்கலாம். ஆனால் இத்தகைய பாலியல் குற்றங்களுக்கு எதிரான பதிவுகள் அழுத்தமாகப் பதிவு செய்யப்படும் போதே, குற்றவாளிகளைப் பிடிக்கும் எண்ணம் அதிகார இயந்திரத்துக்கு வரும். அத்தகைய நெருக்குதலைக் கொடுத்து குற்றவாளிகளை விரைவாகக் கைது செய்து, தண்டனை பெற்றுக் கொடுப்பதன் மூலமே, இனிவரும் காலங்களில் இத்தகைய பாலியல் குற்றங்கள் இடம்பெறுவதைத் தவிர்க்க முடியும்.

'புலிகள் இருக்கேக்க இப்பிடி ஒரு சின்னப்பிள்ளையை ஆரும் கெடுத்திருந்தால், விடியக்காலமைக்கிடையில, அப்பிடிச்செய்தவன் ஏதாவது கறண்ட் போஸ்டில நெத்தியில ரத்தம் வழிய தொங்கிக்கொண்டிருப்பான். அதுக்குப் பிறகு எவனும் இப்பிடியான எழியவேல செய்ய கனவிலகூட நினைக்கமாட்டான்' மண்டைதீவுச் சிறுமியின் சிதைப்பு பற்றி ஊடகமொன்றில் அறிந்து கொண்ட ஒருவர் இப்படி சொல்கிறார். இத்தகைய பகிரங்க மரணதண்டனைகள் குறித்து பல்வேறு கருத்துக்கள் இருப்பினும், இது போன்ற கொடூரமான பாலியல் குற்றங்கள் புலிகளின் காலத்தில் மிகக்குறைந்த வீதத்திலேயே இருந்தமைக்கு, இவ்வாறான தண்டனைகளே முழுமுதற்காரணம் என்ற கருத்தையும் ஒதுக்கிவிட முடியாது.

# இருட்டறை விளக்கு...

(சூரியகாந்தி 4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்ற வார்த்தைகளுக்குள் அடக்குகின்ற மெல்லவும், துப்பவும் முடிந்திடாத சோகம் சுலபமாக எம்மினத்தை ஆட்கொண்டது. முதல்முறையாக இலங்கையின் மாகாண சபைகளில் மக்களின் அதிகாரத்தின் ஆட்சியுடைய எட்டுமே நூற்றுவீதம் ஆளுங்கட்சியின் "ஆட்டுவித்தால்" ஆரொருவர் ஆடாதாரோ" அகங்காரத்துக்கு முன் முதுகெலும்பு முறிந்து கிடந்தன. பெரிய பிளந்து விடப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களின் தனித்தனிப் பலத்தை நாம் தெரிந்து கொள்ள முன்னமே, பெரிய பெரும்பான்மைக் குடியேற்றங்கள் மூலம், சாதித்து தன் வசப்படுத்தி விட்டவனின் அரசியல் அரங்கில் விரைந்தெழுந்து எம் மூக்கில் ஓங்கி அறைந்ததைப் பெரிதாக எடுத்துக் கொள்ளத் தயாரில்லை நாங்கள். "முதலமைச்சர் பதவி தருகின்றோம், உன் ஓட்டைக் கப்பலில் என்னையும் ஏற்றிக் கொள்" என்று கெஞ்சியவர்களை, 'முந்தைநாள்' பின்னேரக் கருக்கலொன்றில் தான் ஓடவிரட்டினோம் இங்கிருந்து! அங்கேயும் தெரியவில்லை எமக்கு ராஜதந்திரங்கள், எடுபடவில்லை எம் சாணக்கியங்கள் - "இன்னமும் பயிற்சி வேண்டுமோ ?"

அரசியல் பிரதிநிதித்துவம், அதனால் சாத்தியமாகின்ற பேச்சு வார்த்தைகள், இழுபடுகின்ற தெரிவுக்குழு, தீவுக்குள்ளான தீர்வு என்பவற்றில் நம்பிக்கை இழக்கும் நிலையை சாதாரணமாக, இலங்கைக்குள்ளான தமிழர்களிடத்திலும் விதைத்து விட்டு அறுவடைக்காக காத்திருக்கின்றன எம்நாட்காட்டிகளின் கிழிந்த தினத் தாள்கள். இந்த விடயத்தில், தீர்க்க தரிசனமாக, நெடுநாள்களின் முன்பே நம்பிக்கையிழந்து விட்ட புலத்தமிழர்களின், சார்பான முடிவொன்றை விரும்பியோ, விரும்பாமலோ தாமும் எண்ணத் தரவேற்றம் செய்யும் துர்ப்பாக்கியம், முப்பதாண்டு கால விடுதலை இயக்கம் மௌனித்ததன் மூன்றாண்டுக்குள்ளாகவே நிகழ்ந்து போனது.

வடமாகாணத்தில் முடுக்கிவிடப்பட்டுள்ள பெரிய வீதி அபிவிருத்திச் செயற்திட்டங்கள், இந்திய இலங்கை கூட்டுறவுடனான வீடமைப்புத் திட்டங்கள், விரிவாக்கப்படுகின்ற அரச உட்கட்டமைப்புக்கள், அள்ளி இறைக்கப்பட்ட வாக்குறுதிகளுடனான பட்டதாரி பயிலுநர் நியமனங்கள் என்பன, ஆளும் ஆள்வோனை ஓட்டும் கட்சிகளின், பொருளாதார - வாழ்வாதார மேம்பாட்டு அறைகூவல்களாக வாசலுக்கு வாசல் ஏவி விடப்பட்டுள்ளன. "வாங்குவதை வாங்குங்கள், ஆனால் எங்களுக்கே போடுங்கள்" என்கின்ற அறிக்கைப் பிரசாரங்கள், தாக்குப் பிடிக்கும் காலாவதித் திகதியை கண்டறியும் மார்க்கமும், ஏதுமில்லை? அறிவிக்கப்படப்போகும் 'மாகாண சபைத் தேர்தலில்' மக்களிடம் மட்டுமே மீதமிருக்கும் 'தன்மானத்தை' தட்டித்துயிலெழுப்பும் ஏகமும் அநேகமுமாக வழி இன்னமும் எத்தனை காலமோ?

"ஊரே வறண்டிருந்தது! ஒரு சொட்டுத் தண்ணீர் இல்லை, இன்றைக்கு மழை பெய்யாவிடின் நாளைக்கு சாவே விடியல் என்கின்ற இறுக்கத்தினுள், மழை வேண்டி பிரார்த்திக்க மொத்த ஊருமே முன்றலொன்றில் திரண்டிருக்கின்றது. யாவரும் வந்தபின், வானம் பார்த்து கைகூப்பித் தொழத்தொடங்க சற்று முன், ஊரின் எல்லையிலிருந்து மக்கள் கூட்டத்தை நோக்கி ஓடி வருகிறாள் சிறுமி ஒருத்தி ! அத்தனை சோடிக் கண்களும் அவளைச் சூழ்ந்து திரும்புகின்றன. கிட்ட வருகிறாள் - ஓடிவந்த களைப்பு தீர மெல்ல நடக்கிறாள். யாவருமே தெளிவாய்க் காண்கின்றனர் அவளை. அவள் கைகளில் மட்டும் "குடை" உட்கார்ந்திருந்தது.

உலகத் தமிழ் நெஞ்சங்கள் யாவற்றிலுமே, கல்லாலயம் கட்டிக் குடியிருக்கின்ற - 'வீழ்ந்த ஆத்மாக்களே எம் எண்ணங்களுக்கான நம்பிக்கைக் குடைகள். மழை தப்பாது மக்களே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் தீவிரவாதிகளால் அமைதி சீர்குலைகின்றது

## தற்கொலைத் தாக்குதல்கள் தரும் செய்தி

உலக நடப்புகள் ஒரு பார்வை

■ரெங்கன்

- ★ மாகாண அமைச்சர் ஒருவர் அண்மையில் படுகொலை.
- ★ இன்றைய தேர்தல் முறைக்கு இஸ்லாமிய தலைவர் எதிர்ப்பு.
- ★ இஸ்லாமாபாத் நோக்கி ஊர்வலம் செல்ல ஏற்பாடு.
- ★ ஆப்கன் தலிபான்கள் விதித்துள்ள நிபந்தனை.
- ★ சிரிய அமைதிக்கு ஈரான் 6அம்சத் திட்டம்.



பாகிஸ்தானில் அடிக்கடி நடைபெற்று வரும் தீவிரவாதிகளின் தற்கொலை தாக்குதல்களைப் பார்க்கும் போது அங்கு அவர்கள் மீதான கட்டுப்பாடுகளும் நடவடிக்கைகளும் எந்தவித பயனையும் அளித்திருப்பதாகத் தெரியவில்லை. உண்மையில் வெளிப்படையாக ஓர் அரசு மக்களால் தெரிவுசெய்யப்பட்டு செயற்பட்டுக்கொண்டிருக்கும் நிலைமையில் மறைமுகமாக தலிபான்களின் தீவிரவாத அரசு ஒன்றும் செயற்பட்டு வருவதாக நோக்கர்கள் கருதுகிறார்கள்.

கடந்த வாரம் பேஷாவரில் அரசியல் கட்சி ஒன்றின் அலுவலகம் மீது அவர்கள் நடத்திய படுகொலை தாக்குதல் ஒன்றில் எட்டுப் பேருக்கு மேல் கொல்லப்பட்டார்கள். இவர்களில் பிராந்திய அமைச்சர் ஒருவரும் அடங்குவர்.

அண்மையில் பெண் உரிமைக்காக குரல் கொடுத்த சிறுமி மலாலா தலிபான்களால் சுட்டுக் காயமடைந்தார்.

அமைச்சர் பஷீர் பிலவரும் மத்திய அமைச்சரான அவரது சகோதரரும் மற்றும் அவர்களின் குடும்பமும் கூட கைபர் பாக்குஸ் கவ்டா மாகாணத்தில் தலிபான்களுக்கு எதிராக செயற்பட்டு வருபவர்களாகக் கருதப்படுகின்றது. சிவில் சமூகத்துக்குள் தலிபான்கள் பல்வேறு வகைகளில் ஊடுருவல் செய்வதை இவர்கள் கடுமையாக எதிர்த்து வந்துள்ளனர். இந்த சம்பவமானது கடந்த பல ஆண்டுகாலமாக பாகிஸ்தான் அரசு தலிபான்கள் மீது நடவடிக்கை எடுத்து வருவதாகக் கூறப்பட்ட போதிலும் அது எந்த வகையிலும் தலிபான்கள் மீது தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என்பது புலனாகியுள்ளது.

குறித்த அமைச்சர் மீது முன்னரும் பல தடவைகள் தலிபான்கள் கொலை முயற்சிகள் மேற்கொண்டிருந்தார்கள் என்பது தெரிந்திருந்தும் அதிகாரிகள் ஏன் மெத்தனமாக இருந்துள்ளார்கள் என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது. அதுமட்டுமல்ல தற்கொலை மூலம் அமைச்சரை கொலை செய்த தீவிரவாதி பல நாள்களாக அமைச்சரின் கட்சி அலுவலகத்தில் பழகி வந்துள்ளார் என்றும் குறித்த தினத்தில் அமைச்சர் கூட்டத்தில் பேச எழுந்திருந்த போது மிக இலகுவாக தாம் சுமந்து கொண்டிருந்த குண்டை வெடிக்கச் செய்து தம்முடன் பலரையும் சிதறடித்துள்ளார் என்றும் தகவல்கள் கூறுகின்றன.

இது உண்மையானால் அதிகாரிகள் எவ்வளவு அசமந்தமாக இருந்துள்ளார்கள் என்பது மட்டுமல்ல அவர்களின் புலனாய்வுகள் எவ்வளவு பலவீனமாகவுள்ளன என்பதையும் புட்டுக்காட்டுவதாகவுள்ளது.

இராணுவ ஆட்சியிலிருந்து மக்கள் அரசுக்கு மாறிய பாகிஸ்தான் நிர்வாகமானது இந்த நிலைமையை தொடர்ந்தும் நீடிக்கவிட்டால் அந்த நாட்டில் அராஜகம் தலைதூக்கிவிடும் அபாயமுள்ளது.

அங்கு அரச பீடத்திலுள்ளவர்களுக்கும் நீதித்துறைக்குமிடையில் நிலவி வந்த மோதல் போக்கில் அதிகாரிகள் மூழ்கிக் கிடக்கும் சந்தர்ப்பத்தை தலிபான்கள் பயன்படுத்திக்கொள்ள ஆரம்பித்துள்ளார்கள் என்பது தெளிவாகத் தெரிகின்றது. இந்த நிலைமையில் இருந்து மீண்டெழுந்து தீவிரவாதத்துக்கு முடிவு கட்ட வேண்டியது அந்த நாட்டின் ஆட்சியாளர்களின் பொறுப்பாகும். அதனை அமைதியான முறையில் தீவிரவாதிகளுடன் நேரடி தொடர்புகளை ஏற்படுத்தி பேச்சுக்கள் மூலம் செய்து கொள்ளலாம். அல்லது தீவிர இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமும் சாதிக்கலாம். பாகிஸ்தானில் தலைதூக்கிவரும் சமய, இன, குரோத மற்றும் தீவிரவாத செயற்பாடுகள் அங்கு அராஜக நிலை ஒன்றுக்கே இட்டுச் செல்லும். அது அதன் அண்டை நாடுகளையும் பாதிப்பதாய் இருக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

அல்குவைதா மற்றும் தலிபான் இயக்கங்கள் பாகிஸ்தானில் மறைமுகமாக செயற்பட்டு வருவது அங்கு அமைதி வாழ்க்கையைப் பெரிதும் பாதிப்பதாகக் கருதப்படுகின்றது.

ஆப்கானிஸ்தானுடனான பாகிஸ்தான் எல்லைப் பகுதிகளில் இந்த இயக்கங்கள் மறைவாக முகாம்கள் அமைத்து செயற்பட்டு வருவதாக மேற்கு நாடுகள் கருதுகின்றன. அதன் காரணமாகவே அமெரிக்க ஆளில்லா போர் விமானங்கள் அந்தப் பகுதிகளில் தாக்குதல்களை நடத்தி வருகின்றன. அவ்வாறான மறைவிடம் ஒன்றில் வைத்தே அல்குவைதா தலைவர் ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டார் என்பது நினைவு கூரத்தக்கது.

### தேர்தல் முறையில் சீர்திருத்தம் தேவை

பாகிஸ்தானின் தேர்தல் முறையில் இன்னும் மூன்று மாதங்களுக்குள் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும். இதை அரசு செய்யாவிட்டால் பாகிஸ்தான் தலைநகரை நோக்கியே பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்துப் போவதாக அந்த நாட்டில் செல்வாக்குமிக்க முஸ்லிம் அறிஞரான தாஹிர்-உல் காதிரி என்பவர் எச்சரித்துள்ளார். லாகூரில் சுமார் 100 ஆயிரம் பேர் கலந்து கொண்ட கூட்டமொன்றில் அவர் சொற்பொழிவாற்றினார்.

வரும் வசந்த காலத்தில் பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் தேர்தல் முறையில் அர்த்தமுள்ள விதத்தில் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்று அவர் கூறினார். மேன்மையான சுயாதீனமான குழுவொன்றை நியமித்து புதிய தேர்தல் முறையொன்றை தயாரித்து அறிவிப்பதற்கென ஆட்சியாளர்களுக்கு மூன்றுவார கால அவகாசம் ஒன்றை வழங்குகிறேன். அது சுதந்திரமான நீதியான தேர்தல் ஒன்றுக்கு வழிவகுக்க வேண்டும் என்று கூறிய தாஹிரி பாகிஸ்தானின் அரசியல் பொருளாதார அமைப்பானது வீழ்ச்சியடைந்து விட்டது. அதற்கு காரணம் பணக்காரர்கள், நிலசுவான்கள் மற்றும் தொழில் அதிபர்கள் போன்றவர்களை சுற்றியே அது சுழன்று கொண்டிருக்கிறது. அது நேர்மையானவர்கள் நாடாளுமன்றம் செல்வதை தடுத்து வருகின்றது என்றார்.

தாஹிர்-உல் காதிரி மிதவாத இஸ்லாமிய கட்சி ஒன்றுக்கு தலைமை வகித்து வருகிறார். பாகிஸ்தானிலும் உலக நாடுகளிலும் அவருக்கு ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் இருக்கிறார்கள். ஜனவரி 10 ஆம் திகதிக்கு முன்னராக அரசாங்கம் எமது கோரிக்கையை நிறைவேற்றத் தவறுமானால் எமது ஆதரவாளர்கள் தலைநகர் இஸ்லாமாபாத்தை நோக்கி நீண்ட ஊர்வலத்தை ஆரம்பிப்பார்கள். கோரிக்கை நிறைவேறும் வரை அங்கே தங்கியிருப்பார்கள் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் அவர்.

பாகிஸ்தானில் இடம்பெற்று வரும் ஆட்சியில் மக்கள் அதிருப்தி அடைந்து வருகிறார்கள் என்பதையும் மக்களின் பொது வாழ்வில் தீவிரவாதம் இடையூறுகளை ஏற்படுத்தி வருவதையுமே இது காட்டுவதாக கூறப்படுகின்றது.

### பேச்சு நடத்த தலிபான் நிபந்தனை

ஆப்கானிஸ்தானில் கர்சாயி அரசுக்கு எதிராக போராடி வரும் தலிபான் அமைப்பினர் அரசு மேற்கொள்ளவிருக்கும் அமைதிப் பேச்சுக்களில் தாங்கள் கலந்து கொள்வதாயின் புதிய அரசமைப்பொன்றை முதலில் உருவாக்கும்படி முன்னிபந்தனை விதித்துள்ளார்கள்.

தலிபான்களின் பிரதிநிதிகள் பிரான்சில் நடத்திய முக்கிய மாநாட்டின் முடிவில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. பிரெஞ்சு ராஜதந்திரிகளின் முயற்சியில் இந்த கூட்டம் நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது. இந்த கலந்துரையாடல்களில் தலிபான்களின் சார்பில் சிரேஷ்ட தலைவர்கள் ஷஹாபுதீன் திலாவர் மற்றும் நயீம் வர்தாக் ஆகியவர்கள் கலந்து கொண்டார்கள். ஆப்கானிஸ்தானில் தற்போதுள்ள அரசமைப்பு எமக்கு ஒரு பொருட்டல்ல. ஏனென்றால் அது ஆக்கிரமிப்பாளர்களின் குண்டுவீச்சு விமானங்களின் நிழலில் உருவாக்கப்பட்டது என்று அவர்கள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சிரிய அமைதிக்கு புதிய தூதர் முயற்சி

சிரியாவில் அமைதியை ஏற்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ள ஐ.நா.வின் புதிய அமைதித் தூதுவர் லக்தார் பிராஹிமி இப்பொழுது ரஷ்யாவின் ஆதரவை நாடி நிற்கிறார். அதேவேளை சிரிய உள்நாட்டுப் போரில் இறந்தவர்களின் எண்ணிக்கை 45 ஆயிரத்தையும் தாண்டியுள்ளது.

இதற்கிடையில் சிரியாவின் இராணுவப் பொலிஸ் தலைவர் எதிர்த்தரப்புக்கு மாறிவிட்டார் என்ற செய்தி பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் அதேநேரம் வாஷிங்டனில் அரசுத்தரப்பினர் எச்சரிக்கையுடன் அதனை வரவேற்றிருக்கிறார்கள்.

இந்த சம்பவம் எதிர்த்தரப்பினர் மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்தியிருப்பதுடன் அதிபர் அல்-அசாத்தின் நிர்வாகத்துக்கு பெரும் பலவீனத்தை ஏற்படுத்துவதாகவும் இருப்பதாக கருதப்படுகின்றது. சிரிய மனித உரிமை கண்காணிப்பக பணிப்பாளர் வெளியிட்டுள்ள ஒரு கருத்தில் இதுவரை காலமும் தாங்கள் மேற்கொண்டுள்ள கணக்கெடுப்பின்படி உள்நாட்டுப் போரில் 45,048 பேர் கொல்லப்பட்டிருப்பதாகத் தெரிய வந்துள்ளது என்றார்.

### சிரிய சிக்கல் தீர்வுக்கு ஈரானின் 6 அம்சத் திட்டம்

சிரியாவின் எதிர்கால தலைவிதியை ஒருபோதும் வெளியார் தீர்மானிக்க முடியாது. அதற்கு ஒருபோதும் ஈரான் அனுமதிக்காது என்று அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சர் அலிஅக்பர் சாலேஹி கூறியுள்ளார்.

சிரிய எதிர்த்தரப்பினர் சிரிய அரசுதரப்பினருடன் சரிக்குச் சரியாக அமர்ந்து பேசி ஒரு தீர்வுக்கு வர வேண்டும். அது சிரியாவுக்குள்ளேயே தீர்மானிக்கப்பட வேண்டும். சிரியாவின் தலைவிதியை வெளிநாடுகள் முடிவு செய்ய முடியாது என்றார் சாலேஹி.

சிரியாவின் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு ஈரான் 6 அம்ச யோசனை ஒன்றை முன்வைத்துள்ளது. இந்த திட்டத்தின்படி சகல விதமான வன்செயல்களும், ஆயுதமோதல்களும் நிறுத்தப்பட வேண்டும். அதையடுத்து மனிதாபிமான உதவிகள் அங்கு அனுப்பப்பட வேண்டும். சிரியாவுக்கு எதிராக செயற்படுத்தப்பட்ட சகல பொருளாதாரத் தடைகளும் நீக்கப்பட வேண்டும். இடம்பெயர்ந்து சென்றுள்ள சகல சிரிய மக்களும் திரும்பி வருவதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

சிரிய அரசும் எதிர்த்துப் போராடும் சகல தரப்பினரும் சேர்ந்து தேசிய நல்லிணக்க குழுவொன்றை உருவாக்க வேண்டும் என்றும் திட்டத்தில் கோரப்பட்டுள்ளது.

இந்த 6 அம்சத் திட்டத்தின் அடிப்படையில் சிரிய நெருக்கடிக்கு ஒரு தீர்வினை உருவாக்க ஐ.நா.அரபு லீக் தூதுவர் லக்டார் பிராஹிமி மற்றும் நட்பு நாடுகளான எகிப்து, இந்தோனேசியா, மலேசியா மற்றும் பாகிஸ்தான் ஆகியவற்றுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதாக ஈரானிய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1717 FOLLOW US ON www.mobitel.lk

நத்தார் பண்டிகைகாலத்தில் மிகவும் குறைந்த IDD கட்டணம்

கீழுள்ள கட்டணங்கள் செக்கன் அடிப்படையில் அறிவிடப்படும்

| நாடு | கட்டணம் (நிமி. ஒன்றுக்கு) | நாடு | கட்டணம் (நிமி. ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| அவுஸ்திரேலியா | ரூ. 1.80 | ஐக்கிய அரபு இராச்சியம் | ரூ. 14.00 |
| கனடா | ரூ. 1.00 | ஐக்கிய இராச்சியம் | ரூ. 1.00 |
| சவூதி அரேபியா | ரூ. 7.50 | ஐக்கிய அமெரிக்கா | ரூ. 1.00 |

இச் சலுகை 2012 டிசெம்பர் 1-31 வரை மட்டுமே செல்லுபடியாகும்.

விபரங்களுக்கு 433 இனை அழைக்கவும்.

இக்கட்டணங்கள் IDD Buddy மூலம் மாத்திரமே:
உதாரணம்: 100 <தேச குறியீடு>
<அழைப்பவரின் இலக்கம்>
மேற்கூறிய கட்டணங்கள் நிலையான தொலைபேசிகளுக்கு மாத்திரமே.

Sri Lanka Telecom
Mobitel
We Care. Always.




Australian Government

அவுஸ்திரேலியாவுக்கு வீசா இல்லாமல் படகுமூலம் நீங்கள் பயணம் செய்தால்

- உங்களது விண்ணப்பம் அவுஸ்திரேலியாவில் பரிசீலிக்கப்படாது போகலாம்.
- எனவே, நீங்கள் நவுறு, பப்புவா நியூகினி போன்ற வேறொரு நாட்டிற்கு இடமாற்றம் செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம்.
- இலங்கையிலுள்ள உங்களது குடும்பத்தினருக்கு அனுப்பவென நவுறுவிலோ அல்லது பப்புவா நியூகினியிலோ நீங்கள் பணத்தைச் சம்பாதிக்க முடியாது.
- விசேட மனிதாபிமான திட்டத்தின் அடிப்படையில் உங்களது குடும்பத்தை உங்களுடன் இணைத்துக்கொள்ளவென உங்களால் விண்ணப்பிக்க முடியாது.

மேலதிகத் தகவல்களை www.youtube.com/user/notopeoplesmuggling என்ற முகவரியில் 'ஆட்கடத்தலுக்கு மறுப்பு' என்ற யூ டியூப் அலைவரிசை மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

IELTS™

IELTS test in Jaffna on 02 February 2013

We provide FREE IELTS study support for candidates who register with us.

We offer:
- a FREE practice workbook
- a FREE 30 hour online preparation course
- preparation material at the Jaffna public library*

Register before 10 January 2013 and stand a chance to win a FREE IELTS mock test**

You can register by visiting any of our registration centres in the northern reigon: www.britishcouncil.org/srilanka-exams-ielts-registration-centres.htm


For more information please call us on +94 (0)11 7521 521

*Limited collection
**Terms and conditions apply

IELTS British Council Sri Lanka

BRITISH COUNCIL

IELTS is jointly owned by the British Council, IELTS Australia and University of Cambridge ESOL Examinations.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவற்பழம்



நாவல் பழம், நாகப்பழம், நவாப்பழம் என்று வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படும். இந்தப் பழம் மருத்துவக் குணங்கள் நிறைந்தது.

நாவல் பழம் சாப்பிட்டால் நீரிழிவு நோய் கட்டுப்பாட்டில் இருக்கும். கல்லீரல் கோளாறுகள், குடற்புண் போன்றவற்றைப் போக்க வல்லது.

இது ஜூன் மாதம் தொடங்கி ஓகஸ்ட் மாதம் வரைக் கிடைக்கும்.

இதைச் சாப்பிடுவது, உடம்புக்கு மிகவும் நல்லது. ஆனாலும், இன்னமும் பெரியோர்கள், இதை குழந்தைகள் சாப்பிடும் பழமாகத்தான் கருதுகிறார்கள். இதன் துவர்ப்பு ருசியும், இதைச் சாப்பிட்டால் நீண்ட நேரம் நாவில் படிந்துவிடும் நீல நிறமும் காரணங்களாக இருக்கலாம்.

வியாபார நோக்கில், இதை யாரும் பயிரிடாததால், இந்தப் பழங்கள் கிடைப்பது அரிதாகி வருகிறது. அதனால் இதன் விலையும் எக்கச்சக்கமாக இருக்கிறது.

# பவள உயிரி தடுப்புக்கு ஆபத்து

ஆஸ்திரேலியாவின் வடகிழக்குக் கடற்பரப்பில் இருக்கும் பெரும் பவளஉயிரி தடுப்பு ( கிரேட் பேரியர் ரீஃப் ) என்ற இயற்கை அமைப்பு, 1985 இல் இருந்ததைவிட, பவளத் திட்டுகளில் பாதியை இழந்துவிட்டது என்று ஆஸ்திரேலிய ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இந்த பவள உயிரி தடுப்பு இன்னும் பத்து ஆண்டுகளில், தன் வளத்தில் கால் பங்குக்கும் குறைவான அளவையே பெற்றிருக்கும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். உலகின் மிகப்பெரும் பவள உயிரி தொடரான இந்த அமைப்புக்கு ஏற்பட்டுவரும் சேதத்தின் வேகம் 2006 இல் இருந்து அதிகரித்து வருவதாக ஆஸ்திரேலிய கடற்கல்வி கழகம் நடத்திய ஆய்வு ஒன்று கூறுகிறது. மிகவும் கடுமையான புயல்காற்று, நட்சத்திர மீன்களின் தாக்குதல்கள் ஆகியவற்றாலேயே பெரும்பாலான சேதம் விளைந்திருப்பதாகக் கூறும் இந்த ஆய்வு, கடல் வெப்ப நிலை அதிகரித்ததும் இந்த பவள உயிரித் திட்டுகள் அரிக்கப்பட ஒரு காரணமாக இருந்திருப்பதாகக் கூறுகிறது. சுற்றுச் சூழல் மாசடைவதன் காரணமாக, கடல் அமிலத் தன்மை உயர்வதால், இவ்வாறு சேதமடைந்த பவழத் திட்டுகள் புத்துயிர் பெறுவது தடுக்கப்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

மலேசியா

மலேசியாவிலுள்ள பிரபல எண்ணெய் ஆலைக்கு
தொழிலாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர் உடனடி பிரயாணம்.

Hot line-0777228223

தொழில் நிபந்தனை
- உணவு வசதி வழங்கப்படமாட்டாது.
- தங்குமிட வசதி வைத்திய வசதிகள் வழங்கப்படும்.
- சேவைக் காலம் 3 வருடங்கள்.
- வேலை நேரம் நாளொன்றுக்கு 8 மணித்தியாலங்களும் கிழமைக்கு 48 மணித்தியாலங்களும்.
- மேலதிக நேரக்கொடுப்பனவும் உண்டு.
- போக்குவரத்து வசதி செய்துதரப்படும்.

| வேலை | வெற்றிடம் | சம்பளம் |
|---|---|---|
| எண்ணெய் ஆலைத் தொழிலாளர்கள் | 30 | RM 707<br>Rs 28,987/= |

(RM 1 = Rs.41.00)

NIMZA FOREIGN EMPLOYMENT AGENCY
No. 501, 2nd Division Maradana, Colombo 10, Sri Lanka.
Tel: 011-2669489 / 4724481 / 4741303 Fax: 011-2682243
E-mail: nimza1@yahoo.com / mhmohamedniyas@gmail.com
Web: www.nimza.lk

சுயவிபரக்கோவை, கடவுச்சீட்டு(சகலநாட்டுக்குமான, கடவுச்சீட்டுக்குரிய அளவிலான புகைப்படத்துடன் உடனே பதிவு செய்யுங்கள்.

SLBFE APPROVED CHARGES RS 70,202 A/1 752 ADVT 07/12

R S ADVERTISING 0777 633 282

சம்பத் ரண்திரியவின் அடகுத்தொகை மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது..!

கரட் 24 ற்கு 50,250/-

கரட் 22 ற்கு 46,000/-

சம்பத் ரண்திரிய அடகு சேவை

இந்த அடகுத்தொகைக்கான அவகாசம் ஒரு வருடம் மாத்திரமே!

සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
SampathBank

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு




☎ 0215671111
advt@uthayan.com



O/L இன் பின்னர்

# School of Nursing IVA

## ஒரு வருட தாதியர் பயிற்சி பாடநெறி

உள்நாட்டு வெளிநாட்டு தொழில் வேலைவாய்ப்புகள் அதிகளவில் பெற்றுத்தந்த ஒரே தாதிய பாடசாலைக்கு 2013ம் வருடத்திற்கான மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட உள்ளனர்



பயிற்சிநெறியினை சிறந்த முறையில் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு நிறுவனத்தின் மூலம் தொழில் வாய்ப்புகள் பெற்றுத் தரப்படும்.

**நுழைவுக்கான அடிப்படை தகைமைகள்**

இம்முறை O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

க.பொ.த. சா/த 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்
வயதெல்லை : 16–30 இடைப்பட்டிருத்தல்.
உயரம் : 4 அடி 10 அங்குலம் இருத்தல் வேண்டும்.

இலவசமாக சீருடையும் தாதிய சேவைக்கு பொருத்தமான ஆங்கில பாட பயிற்சி நெறியும் தூர பிரதேச மாணவர்களுக்கு பாதுகாப்பான தங்குமிட வசதிகளும் உண்டு

A/L இன் பின்னர்

# Medical Leboratory Technology assistant

## ஆய்வுகூட உதவியாளர் பயற்சி நெறி

நாடு முழுவதிலும் அமைந்துள்ள ஆய்வுகூட உதவியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக
க.பொ.த. உ/த விஞ்ஞான பாடத்திற்கு தோற்றவிருக்கும் நீங்களும் இப்போது ஆய்வுகூட உதவியாளர் ஆகலாம்.



6 மாத நிறுவன மூலமான பயிற்சி நெறியின் பின் தொழில் வாய்ப்புகள் பெற்றுத்தரப்படும்.

விரும்பிய கிளையை தெரிவு செய்து தங்களது விண்ணப்பங்களை ரூபா 40/= பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் அனுப்பவும். (தொலைபேசி இலக்கத்துடன்)

NTS
Reg. No. Rp/40/R/R/02120

Reg. No. Rp/40/R/R/02120
Web : Schoolofnursingiva.com
E-Mail : Manojhewaduwa@yahoo.com

**மட்டக்களப்பு**
அய்வா தாதியர் பாடசாலை,
இல. 61/1,
திருகோணமலை வீதி,
மட்டக்களப்பு.
071 8 722 352/ 071 8 722 353

**வவுனியா**
அய்வா தாதியர் பாடசாலை,
சாந்தி க்ளினிக்
இல. 109,
மன்னார் வீதி, வவுனியா.
071 8 722 351

**யாழ்பாணம்**
புதிய கிளைகளுக்கான விண்ணப்பங்களை மட்டக்களப்பு கிளைக்கு அனுப்பவும்.
நடைபெறும் இடம் பிறகு அறிவிக்கப்படும்
071 8 722 353

**பதுளை**
அய்வா தாதியர் பாடசாலை,
இல. 20 1/1,
ஹாலிகொடுவ வீதி,
பதுளை.
071 8 722 354


## கலாபூஷண விருது மங்கையர்களுக்கு நல்வாழ்த்து




ஸ்ரீமதி பத்மினி செல்வேந்திரகுமார் ஸ்ரீமதி சாந்தினி சிவனேசன்

..கையின் நாதம் சந்தத்தில் கொஞ்சிட
..தியின் ஞானம் கலை நயத்துடன் மின்னிட
யாழ் மண் ஈன்ற நர்த்தகிகள் பத்மினி,சாந்தினிக்கு
கலாபூஷண விருதும் கச்சிதமாய் பொருந்திடவே
வடதிக்கின் நடைபயின்ற
உங்களது கலைப் பயணம்
எண்திக்கும் மணம் பரப்பி தித்திக்கவும்
பார்முழுவதும் பவனி வந்து ஆர்ப்பரிக்கவும்
சீர்பெற்ற வித்துவத்தால் சிறப்புடன் மேலோங்கி
பாங்குடன் பரிணமித்து பல்லாண்டு ஒளிர்கவென
சகல மாணவர்கள்,கலைஞர்கள்,
கலை ஆர்வலர்கள்,கலைஞானிகள்
சார்பாக விழைகின்றேன் மனமுவந்து வாழ்த்துக்கூற
வாழி நீவிர் நீடூழி வாழ்கவென வாழ்த்துவதோடு
கோணமலை தந்த சாரதாவையும்
மீன்பாடும் தேன் நாட்டின் உஷாவையும்
சேர்த்தே நான் மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

திருமதி குகாநந்தினி இராதாகிருஸ்ணன்
(முன்னாள் ஆசிரிய ஆலோசகர்(நடனம்)-
நுவரேலியா வலயம்)

(27315)(5-6)

# வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள்



Srilankan President





M.Pushparajah
J.P. All Island



MINISTER OF CONSTRUCTION SERVICES HOUSING AND COMMON AMENITIES

எங்கள் மதிப்புக்குரிய முருகேசு புஸ்பராஜா J.P. அவர்களுக்கு எங்கள் மதிப்புக்குரிய மாண்பு மிகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் ஆசியுடன் பிரதம அமைச்சர் விமல் வீரவன்ச (Minister of construction services housing and commonamenities) அவர்களினால் கடந்த 25 ஆம் திகதி பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் B.M.I.C.H. இல் அதி உயர் பட்டமாகிய தேசபந்து லங்கா- AÝ] «Ãâ¦D kw! ïÕÃâ| **முருகேசு புஸ்பராஜா** அவர்கள் கௌவிக்கப்பட்டார். திரு.புஸ்பராஜா அவர்களின் நிறுவனங்களான SAGI FILMS, SAGI TRAVELS, PRESTIGE CAR HOUSE, ARUNACHALAM EXPRESS (Luxury Bus Services - Colombo to Jaffna) ஆகியவற்றில் உள்ள அனைவரும் அவரை வாழ்த்துகின்றோம். இவர் மேலும் மேலும் இதுபோன்று பல உதவிகளை நாட்டு மக்களுக்குச் செய்து பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

## கறிவேப்பிலை மணம் வீசாத சமையலறையைக் காண்பது மிகவும் கடினம்



பச்சை இலைகள் சிறிது கசப்பாக இருந்தாலும், எண்ணெய்யில் போட்டு தாளிக்கும்பொழுது அருமையாக மணக்கும். இந்த இலைகளை நாம் வெறும் வாசத்திற்கு மட்டும் தாளிப்பில் சேர்த்து விட்டு, சாப்பிடும் பொழுது ஒதுக்கி விடுகிறோம். ஆனால், கண்டிப்பாக நாம் இவற்றை உணவோடு சேர்த்து உட்கொள்ள வேண்டும். கறிவேப்பிலையைப் பொடி செய்து சோற்றுடன் சேர்த்துச் சாப்பிடலாம். சட்னியாக செய்து தினப்படி சாப்பிட மிகவும் நல்லது. இதில் நார்ச்சத்து, விற்றமின், மினரல் ஆகியவை அடங்கியுள்ளன. மருத்துவ குணங்கள் நிறைந்துள்ள கறிவேப்பிலை செரிமானத்துக்கு மிகவும் உதவும். மேலும், இள நரையை தடுக்கும். சர்க்கரை வியாதியையும் கட்டுப்படுத்த வல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org